# கம்ப ராமாயணக் காட்சிகள்

இலக்கியகலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

1980

முதற் பதிப்பு:
மே 1980

உரிமை நூலாசிரியருக்கே.

**Pageants of**

**KAMBA RAMAYANAM**

by

**Pandithamani**

**S. KANAPATHIPPILLAI D Litt.**

விலை :

சாதாரண பதிப்பு : ரூபா 15/=
நூலகப் பதிப்பு : ரூபா 20/=

Publishers :

MUTHTHAMIZH VELIYEEDDU KAZHAGAM, JAFFNA.

Printers :

ASEERVATHAM PRESS, 50, KANDY ROAD JAFFNA.

# முன்னுரை

இலக்கியகலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

சங்கம் ஒடுங்கிப் பொருண் மரபு குன்றிய காலத்திலே, சீவகசிந்தாமணி முதலிய காவியங்கள் தலையெடுத்தன. கம்பர் உதயமானதும் அவை சவி மடிந்து போயின.

'இன்று போய்ப் போர்க்கு நாளைவா' என்ற கற்பனை இராமசரித்திரமாய் விட்டது. கற்பனையின் பொருத்தம் இருந்தவாறு!

இராமன் வில்லை வளைக்க எழுந்து நடந்தது, சீதை கைவளை திருத்துபு கடைக்கணைப் பயன்படுத்தியது, எந்த இராமாயணத்திலும் காணமுடியாதவை.

இப்பொழுதைய வான்மீகத்தோடு ஒத்துப்போகாத இடங்களனைத்தையும் வான்மீகி சிரக்கம்பஞ்செய்து ஏற்றுக் கொள்வர். வான்மீகி ஏற்றுக்கொள்ளத் தயங்குமிடம் மிக மிக அரிது.

'என் பின்னவன் பெற்ற செல்வம் யான்பெற்ற செல்வமன்றோ!' என்ற இராமன் கூற்றின்பின், தம்பியாகிய இளங்கோவின் இராச லட்சணத்தைப் பொருத சிலப்பதிகாரச் செங்குட்டுவன் நிலை என்னும்!

'எழுகென எழுந்தாய் என் செய்தனை' என்று காட்டு வழியில் நடந்து இளைப்புற்ற கண்ணகிக்கிரங்கி, 'என் கருத்துக்கிணங்காமல், நீ என்னுடன் வர மறுத்திருக்கலாமே' என்கின்றான் கோவலன். 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையே ஞதலின் ஏற் றெழுந்தனன்' என்கின்றாள் இளங்கோவின் கண்ணகி.

காட்டுவழி நடத்த லரிது, 'வழிகள் கல்லரக்குங் கடுமைய.' கற்கள் வெப்ப மிகுதியால் நிலை பெயரும் சுடுகாடு என்கின்றான் ஸ்ரீராமன்

'நின் பிரிவினுஞ் சுடுமோ' உன் பிரிவிலும் பார்க்கச் சுடுவதொன்று உண்டோ என்கின்றாள், கம்பர் தந்த சீதா பிராட்டி.

இருவர் பெண்களையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கி எடை போட்டுக்,

**காமஞ் செப்பாது கண்டது மொழிமோ !**

அண்மையில் அறிஞர் ஒருவர் தமிழின் தனிச்சிறப்பை, 'கதி' என்ற இரண்டெழுத்தாற் குறிப்பிட்டார்.

'கதி' என்பதில் க-கம்பர், தி-திருவள்ளுவர்.

காலப்போக்கை முன்னிட்டு,

தெரிந்தெடுத்த சில செய்யுள்கள் கட்டுரை உருவில், **தினகரன்** வார மஞ்சரியில் வெளிவந்தவை கம்பராமாயணக் காட்சிகள்.

**தினகரன்** ஆசிரியர் அவர்களின் தூண்டுதலே **கம்ப ராமாயணக் காட்சிகளின்** தோற்றரவுக்கு உயிர் நாடி.

**யாழ்ப்பாணம்** முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் காட்சி களைப் புத்தக உருவில் எக்காலத்தும் பயன்படும் வகையில் வெளியிட முன்வந்தது பாராட்டியமையாது.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்

வளர்க,

வாழ்க.

# பதிப்புரை

**க. சொக்கலிங்கம்**
செயலாளர்
முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்


இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. **கணபதிப்பிள்ளை** அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் காலத்திலே நாமும் வாழ்கின்றோம் என்ற பெருமிதமும் இந்தப் பேற்றினைத் தொடர்ந்து எமக்கு வழங்கி வருவதாலே அந்தப் பெருந்தகையாளர் மீது எமக்குள்ள நன்றிக் கடனும் ஒன்று சேர்ந்தமையால் அன்னாரது **கம்பராமாயணக்** கட்டுரைக் குவியலிலிருந்து ஒரு பகுதியினைப் பெற்றுக் **கம்பராமாயணக் காட்சிகள்** என்ற பெயரால் இந்நூலினை முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் நான்காவது வெளியீடாகக் கொணர்கின்றோம்.

பண்டிதமணியவர்களின் எஞ்சிய கட்டுரைகளும் அவர் காலத்திலேயே அவரின் மேற்பார்வையிலேயே வெளிவருமாயின் அவற்றின் வாயிலாக வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை, சுன்னுகம் அ. குமாரசுவாமிப் புலவர், 'பரீட்சை எடாத பண்டிதர்' ம. வே. மகாலிங்கசிவம் முதலான சென்ற தலைமுறையினரின் இலக்கியரசனை உணர்வு பண்டிதமணியவர்களிலே எவ்வாறு ஊற்றெடுத்துப் பாய்ந்து தனித் தன்மை பெற்று விளங்குகின்றது என்பதை இன்றைய தலைமுறையின் இலக்கிய ஆய்வாளர்கள் அறிந்துகொள்ள

வாய்ப்புண்டாகும். காலம், இடம், பொருள் ஆகியன கைகொடுக்குமாஞல் இந்தப் பணியினை முத்தமிழ் வெளியீட்டுக் கழகமே மேற்கொள்ளும் என்பதனையும் இவ்விடத்திற் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே தமது கட்டுரைகளை நூல்வடிவிற் கொணர ஒப்புதல் அளித்தமைக்கும் இனி ஒப்புதல் அளிக்க இருக்கின்றமைக்குமாகப் பண்டிதமணி, இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு எமது கழகச் சார்பிலே வணக்கத்தோடு கூடிய நன்றியினை மிகப் பணிவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கனதியான நான்கு நூல்களை ஈராண்டுகளிலே வெளியிட்டுள்ள முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், தொடர்ந்தும் தனது வெளியீட்டுப் பணியினை நடத்துவதற்கு எல்லாம் வல்ல இறைவனின் பேரருளும் இலக்கிய நயப்பு, ஆய்வு நோக்கு, தாராள மனப்பான்மை கொண்ட நன்னெஞ்சங்களின் ஒத்துழைப்பும் முழுமையாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு

இந்நூல் வெளியீட்டிலே பல கட்டங்களிலும் உறுதுணையாயிருந்து ஒத்துழைத்த முத்தமிழ் வெளியீட்டுக் கழகச் செயற்குழுவினருக்கும் சிறப்பாக இதன் தலைவர் கலாநிதி அ சண்முகதாஸ், பொருளாளர் திரு. இ. அரசரத்தினம், துணைச் செயலாளர் திரு. பி நடராசன், செயற்குழு உறுப்பினரும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் செயலாளருமான திரு அ. பஞ்சாட்சரம், பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை ஆகியோருக்கும் சிறப்புற அச்சேற்றித் தந்த ஆசீர்வாதம் அச்சகத்தினர்க்கும் கழகச்சார்பில் உளங்கனிந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.



இலக்கியகலாநிதி,

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

# ஒரு யுக புருஷன் பண்டிதமாமணி

**கலாநிதி அ. சண்முகதாஸ்**
*தலைவர்*
*முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்*

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஒரு யுகத்தின் புருஷனேயாவார். ஆறுமுகநாவலர்யுகம் என்பது நடைமுறையிலே உள்ளது. அந்த யுகத்தினூடாக வாழ்ந்துகொண்டிருக்கிறவர் எம்முடைய இலக்கிய கலாநிதி பண்டிதரய்யா அவர்கள்.

பண்டிதமணியின் வாழ்க்கை ஒரு பெரிய கதை. என்னாலே அக்கதையைச் சொல்ல முடியுமோ தெரியவில்லை 'பாற்கடலை ஆசையாலே பூசை நக்கியது போல.' என்றானே கம்பன்? என்நிலையும் அதுதான். மூன்றாவது கண்ணாக எங்கள் நாட்டிலே இருந்து வந்த மரபுவழித் தமிழறிஞர் அவர். அவர் பற்றிப் பலர் பலவாறு எழுதியுள்ளனர். எங்கள் முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், அவருடைய கம்பராமாயணக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட வேண்டுமெனத் தீர்மானித்தது. ஒரு யுக புருஷனை வேறெந்த வழியிலே நாம் நினைவுகூர முடியும்?

யாழ்ப்பாண மாவட்டத்திலே சாவகச்சேரித் தேர்தற் றொகுதியைச் சேர்ந்த மட்டுவில் என்னும் கிராமத்திலே 1899 ஆம் ஆண்டு ஆனிமாதம் 27 ஆம் நாள் சதய நட்சத்

திரத்திலே ஒரு குழந்தை பிறந்தது. அக் குழந்தை பின்னர் பண்டிதமணியாகி இலக்கிய கலாநிதியாவது முன்னர் முடிந்த தன்றே! அவ்வாறு பிறந்த குழந்தை தமிழை மாந்திய வரலாற்றை உரையிலே யான் விரிவாக எழுதுவதை விடச் 'சொக்கன்' கவிதையிலே கூறியதை இங்குத் தருகிறேன்.

மட்டுவில் தனிலொரு முகிலெ ழுந்தது
தொட்டிட வாழியிற் றேயு முன்னது
கட்டிய சிறுதுணி யோடு மெங்கணும்
பட்டியைப் போல்விளை யாட லார்ந்ததே.

வித்தகக் கல்வியில் விழைவு தற்கிலை
அத்தனை அறிந்திட வார்வ மொன்றிலை
எத்தனை குறும்புக ளெண்ண லாகுமோ?
அத்தனை புரிந்தத னகவை சென்றதே.

எட்டொடு பத்தெனு மாண்டு மெய்திடக்
கட்டிய வாசைகள் கரைந்து கல்வியி
லிட்டமு முற்றந்த இளைய மாமுகில்
எட்டியே யறிவினை யெய்தவெண் ணிற்றே.

நாவலர் கோனன்று நாட்டும் பள்ளியிற்
காவல ராய்த்தமிழ் கற்ற மேதையர்
ஏவரும் போற்றிட விருந்த பேரினை
மேவியே விருந்தெனத் தமிழை மாந்திற்றே.

அக்காலத்திலே ஈழநாட்டிற் சிறப்புற்று விளங்கிய தமிழ் அறிஞர்களான கைலாசபிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் ஆகியோரிடம் வரன்முறையாகத் தமிழ் பயின்றார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையிலே தேறினார். கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே பயிற்சி பெற்றார். அங்கு அவருக்குப் 'பரீட்சை எடாத பண்டிதர்' மகாலிங்கசிவத்தினுடைய தொடர்பு மீண்டும் ஏற்பட்டது. பின்னர், திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே தமிழ்ப்பேராசானாய் விளங்கிவந்தார்.

சிறுவயதிலே ''இவன் உதவான்'' என்று கூறப்பட்டவர்கள் பிற்காலத்திலே சிறந்து விளங்குவதை நமது நடைமுறை வாழ்விலே காணக்கூடியதாயுள்ளது. பண்டித

மணியின் வாழ்வும் வரலாறும் அப்படித்தான். ''பிற்காலத்திலே தமிழறிஞராய் விளங்கப்போகும் ஒருவரின் பத்தொன்பது வயசுவரையுள்ள பொழுதுபோக்கு இது'' எனச் சொக்கன் பண்டிதமணியின் சிந்தனைக் களஞ்சியத்திலிருந்து பின்வரும் பகுதியினை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

''பத்தாம் வயதில் அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புடன் என் படிப்பு முற்றுப்பெற்றது. அதன்மேல் காகித ஆட்டத்திலும் கவறு விளையாட்டுக்களிலும் என் கவனம் சென்றது. அந்த விளையாட்டுகளுக்கு எனக்குக் குருவாய் அமைந்தவர் பிரசித்தி பெற்ற அற்புத விவேகி லோச் செல்லப்பா என்பவர். அவருக்குத் தினந்தோறும் வழக்குகள் ஆயத்தம் செய்யும் வேலை இருந்துகொண்டிருக்கும் அதைக் கவனித்துக் கொண்டிருப்பது புறம்பானதொரு ரசனை.

என் தந்தையின் ஊர் மட்டுவில்; தாயார் ஊர் தனங்கிளப்பு. அது சிருட்டிக் காலம் தொடக்கம் உலக நாகரிகம் எட்டிப் பாராததொரு கிராமம். எனக்குப் பன்னிரண்டாம் வயசில் தாயார் ஊரில் குடியேற நேர்ந்தது. படிப்பென்ற கதைக்கு அங்கே இடமில்லை. காகித விளையாட்டுக்கு மாத்திரம் அங்கேயும் போதிய வசதி இருந்தது. அதில் நானும் சேர்ந்துகொண்டேன்.''

இவ்வாறு இளம் வயதிலே வசதிகளற்று, வாலிப வயதுக்கேற்றபடி நடந்து திரிந்த இளைஞன் கணபதிப் பிள்ளைதான் காவிய பாடசாலையிலே சேர்ந்து தமிழ்க் கல்வி பயின்றார். காகித விளையாட்டிலும் கவருடலிலும் ஈடுபட்ட இளைஞனுக்குத் தமிழ் சுவையூட்டியது. ''தாரமுங் குருவுந் தலைவிதிப்படி'' என்பார்களே. அவருக்கு நல்ல குரு வாய்த்தார். இலக்கியம் ரசனை ஊட்டியது. பின் வந்தோராகிய நாமெல்லாம் ரசிக்கும் எழுத்துக்களுக்கு அன்றே அத்திவாரம் போடப்பட்டது.

**பண்டிதர் பண்டிதமணியாஞர்**

ஆசிரியத் தொழிலிஞலே நல்ல பயன் உண்டு. எத்தனேயோ உள்ளங்களே நாம் தொடுதற்கு வாய்ப்புண்டு. பண்டிதரய்யா அவர்கள் சாதாரண பண்டிதராய் இருந்து எத்தனேயோ பண்டிதர்களே உருவாக்கியுள்ளார்; எத்தனேயோ இலக்கிய உள்ளங்களே உருவாக்கியுள்ளார்.

வெறுமனே கற்பித்தலில் மாத்திரம் நின்று விடாமல், தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டுமெனப் பல்லாயிரக் கணக்கான சாதாரண மக்களுங் கேட்டு மகிழுஞ் சொற்பொழிவுகளே ஆற்றிஞர். இலக்கியம், சமயம், விமரிசனம் ஆகிய துறைகள் தொடர்பான கட்டுரைகள், நூல்கள் பல எழுதிஞர். அவையெல்லாம் சாதாரண ஒரு பண்டிதரின் நூல்களாக அமையவில்லே. மக்கள் போற்றினர். மாமேதைகள் ரசித்தனர்; அறிவுலகம் அவற்றைக் கொண்டாடியது. இவற்றின் விளேவு: பண்டிதர் பண்டிதமணியாஞர். இன்று கி. வா. ஜகந்நாதனின் கவிதைச் சொற்களிலே,

பழந்தமிழின் ஆழத்தை நனியறிந்து
புதுத்தமிழின் பண்புங் கண்டு
தொழுந்தகைய பெரும்புலமை படைத்துள்ளான்;
நூல்நுட்பம் துணிந்து கண்டு
செழுந்தனிச்சொல் நடையினிலே எடுத்தியம்பும்
தகவுடையான்; சிவன்பால் என்றும்
அழுந்துமனம் உடையவனும் பண்டிதமா
மணியின்சீர் அறியார் யாரே.

அவர் 'பண்டிதமாமணி'யாகிவிட்டார்.

**தமிழுலகம் போற்றியது**

காலத்துக்குக் காலம் எம்மிடையே சிலர் ''புகழொடு தோன்றி'' யுள்ளனர். அவர்கள் தமிழ்கூறு நல்லுலகமெல்லாம் பெயர்பெற்று விளங்கியுள்ளனர். அத்தகையருள்,

இலங்கையிலும் தமிழ்நாட்டில் புலவர்தம்
உலகத்தும் இருகை கூப்பி
நலங்கெழுமத் தொழும்வகையில் மதிப்புற்ற
கணபதிப்பேர் நாவல் லோன்முன்

என்று புகழும்படியாகப் பண்டிதமாமணி அமைந்தார். உலகெலாம் உள்ள தமிழிலக்கிய மாணவர் அவரை அறிந்துள்ளனர். சைவசித்தாந்திகள் எங்கெல்லாம் இருக்கின்றனரோ அவர்கள் அவரை நன்கு அறிவர். அவர், அவர் வழிவந்த மாணவர், அம்மாணவருடைய மாணவர்கள், அன்பர்கள், ஆர்வலர்கள், இரசனையாளர்கள் எனப் பலரும் பலதிசைகளிலும் வாழுகின்றார்கள். பண்டிதமணி என்றவுடன் வாயூறி, வாய்பொத்தி மானசீகமாக அந்தப் பெரியாரை நினைவுகூருபவர் பலரை நான் கண்டிருக்கிறேன். நான் ஒரு சிறியவன். அப்பெரியாரிடம் கற்கும் வாய்ப்புப் பெறுதவன் எனினும் அவரைப் போற்றி வாழும் பலரைக் காணும்போதெல்லாம் எனக்கு வழமையாயுள்ள குருபக்தி இவர்பாலுஞ் சென்றது அன்புக்குமுண்டோ அடைக்குந் தாழ்?

**பண்டிதமணியின் தமிழ்த்தொண்டு**

பாரதியார் வாழ்விலே ஒரு ''கடைச் சங்கம்'' (சங்கக் கடைதான் கடைச்சங்கமாயிற்று) போலப் பண்டிதமணியின் வாழ்விலே ஒரு ''ஈரப்பலாத் தோட்டம்'' அமைந்தது. ''இவரைக் காவிய வகுப்பிலே சேர்த்து விட்ட வே. நடராசா, கல்வி உளவியலிலே கலாநிதிப் பட்டம் பெற்ற கு சிவப்பிரகாசம், பின்னாளிலே பண்டிதமணிக்கு ஞானகுருவாய் அமைந்த பொ. கைலாசபதி ஆகியோர் மாணவ நிலையிலே ஒன்று கூடிக் கலந்து உரையாடும் இடமாக ''ஈரப்பலாத் தோட்டம்'' விளங்கியது. ஆங்கிலக் கல்வியை முறையாகக் கற்றுத் தமிழிலும் ஈடுபாடு கொண்டிருந்த இந்த அறிவாளரின் சேர்க்கை இவரது அறிவு, ஆழத்தோடு அகலமும் பெற உதவியது'' (சொக்கன், கலைமகள், பக். 292). இத்தகைய ஆழ, அகல அறிவு பெற்ற பண்டிதமணி, தமிழுக்கு மாத்திரம் தொண்டு செய்தார் எனக் கூறுதல் தவறாகும். அவர் தமிழியலுக்குத் தொண்டாற்றினார் என்று கூறுதலே பொருத்தம்.

கவிதைகள் பல யாத்தார். சொற்பொழிவுகள் பல ஆற்றினார்; தமது பெயர் என்றென்றும் நிலைக்கும் வண்ணம் நூல்கள் பல எழுதினார். சைவநற்சிந்தனை, இலக்கியவழி, கதிர்காமவேலன் பவனிவருகிறான். பாரத நவமணிகள், சமயக் கட்டுரைகள், நாவலர், கந்தபுராணப் போதனை, கந்தபுராண கலாசாரம், கம்பராமாயணக் காட்சி, சிந்தனைக் களஞ்சியம், ஆறுமுகநாவலர், கோயில் ஆகிய நூல்களை எழுதித் தமிழுலகுக்குத் தம்மாலான தொண்டினை ஆற்றியுள்ளார். தமிழரின் இலக்கியம், சமயம், பண்பாடு, இலக்கிய ரசனை ஆகிய பல துறைகளையும் அவருடைய நூல்கள் சார்ந்திருந்த காரணத்தால், அவர் தமிழியலுக்குத் தொண்டாற்றினார் எனக் கூறமுடியும்.

மூன்றாவது கண்

மூன்றாவது கண் நெற்றிக்கண். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமேயென்று காமஞ் செப்பாது கண்டது மொழியும் பண்பினையே அது சுட்டி நிற்கின்றது. பழந்தமிழ்ப் பாடலாக இருந்தாலும் அதிற் குறை கண்ட வழி குறைத்துக் கூறியும் நிறைகண்டவழி வாயாரப் புகழ்ந்தும் பாடஞ் சொல்லி வந்தவர் பண்டிதமணி

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்

என்னும் வள்ளுவனின் குறளுக்கேற்பப் பண்டிதமணியின் தகைமையை அவரது எச்சமெனக் கருதக்கூடிய மாணவர் ஒருவரின் கூற்றிலிருந்து அறியலாம் :

"மாதிரிப் பாடம் என்ற கண்டன பாடம் ஒன்றில் ஒரு மாணவ ஆசிரியன் "மணங்கமழ் குழலாய்! நின் மைந்தனை அரவு தீண்டி" என்ற பாடலை அழகாகப் படித்து இதமாகப் பாடத்தை நடத்தினான் பாடம் முடிந்தது. எல்லாச் சக மாணவர்களும் "நயப்புரை" கூறிப் பாடத்தைப் பாராட்டினர்.

கனம் பண்டிதமணி அவர்கள் என்னை அழைத்தார். 'பாட்டு ஒரே சீராக, தொணதொணப்பாக அமைந்

திருந்தது' என்று தொடங்கி அக்குவேறு ஆணிவேருகக் கண்டித்த யான் ஈற்றில் 'பாடத்தெரிவு படுபிழை' என்று சாடினேன்.

'வாசனையுடைய கூந்தலையுடைய பெண்ணே' என்று விளித்து, 'உன் மகனைப் பாம்பு தீண்டிற்று' என்று எந்த மூடன் பாடுவான்.''

(ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம்,
"நேர்முகப் பரீட்சை நடக்கிறது",
பாராட்டு விழா மலர், 1978, பக். 29).

மாணவனின் நக்கீரக் கண் ஆசிரியராகிய பண்டிதமணியின் பயிற்சியினுலே உண்டாயது எனக் கூறவும் வேண்டுமோ? பண்டிதமணியின் மூன்ருவது கண்ணின் நோக்குக்குப் பல உதாரணங்களைக் கொடுக்கலாம். இலக்கியவழி (பக். 102) என்னும் நூலிலே 'கவிஞர்கள்' என்னுங் கட்டுரையில் விமரிசகர்கள் பற்றி அவர் கூறுவதை இங்குத் தருகிறோம்.

''கவிதைகள் புத்தக வடிவத்திலும் பத்திரிகைகளிலும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன; கவிதை விமரிசனங்களும் நடக்கின்றன மேலைத் தேசத்திலே ஒருவர் ஒன்று செய்தால் அதற்கு நூறு விமரிசனம் வந்து விடுமென்றும், இங்கே அவ்வளவு தூரம் அந்தத் துறை விரியவில்லை யென்றும் ஒரு விமரிசகர் அழுகின்ருர்; பாவம்! அவர் இனிக் கண்ணீர் வடிக்கவேண்டா. தினசரிப் பத்திரிகைகளிற்கூட ஒரு பகுதி. கவிதை விமரிசனத்துக்கென்றே ஒதுக்கப்படுகின்றது விமரிசனம் இதோ பெருகிவிடும். பயம் வேண்டா. ஆனுல் உண்மைக் கவிதை ஏனைய வரிசையிலிருந்து உயிர்தப்புமோ என்றுதான் அச்சம் வருகின்றது. கவிதைப் பெருக்கும் விமரிசனப் போக்கும் மாற்றுயர்ந்த பொன்னையும் காக்காய்ப் பொன்னையும் ஒன்று செய்து விடுமோ என்றுதான் எச்சரிக்கை எடுக்க வேண்டியவர்களாய் இருக்கிருேம்.''

அந்த மூன்ருவது கண் பெரிய கவிராட்சதர்களையும் சுட்டெரிக்கத் தவறவில்லை. துளசியினையும் காளிதாஸனையும் கம்பனுடன் ஒப்பிடுகிருர் பண்டிதமணி:

> "இந்தியா தேசத்திலே எத்தனையோ இராமாயணங்கள் எத்தனையோ மொழிகளில் அவ்வம் மொழிகளில் வல்ல கவிஞர்களாற் செய்யப்பட்டிருக்கின்றன. நன்கு கொண்டாடப்படுகின்றன. இந்தக் கம்பன் செய்த வப்பு எந்த இராமாயணத்தோடும் ஒத்துப் போவதாயில்லை. துளசி இராமாயணத்தை உருகியுருகிக் கண்ணீர் இறைத்து இறைத்துப் பாராயணஞ் செய்கிறார்கள் இந்திமொழியாளர். துளசியின் பாலகாண்டம் தமிழிலும் வந்திருக்கிறது. துளசியிலே இராமனைக் கொண்டு வில்லு வளைப்பிப்பதிலும், கல்லிலே நார் உரிப்பது சுலபம். இராமன் அந்தப் பொல்லாத வில்லை வளைத்துத் தொலைத்துத் தாலியைக் கட்டிவிட வேண்டுமென்று, விசுவாமித்திரரும் சீதையும் நேர்ந்த நேர்த்திக் கடன்களுக்கும் பிரார்த்தனைகளுக்கும் அளவேயில்லை; சீதை அழுதும் விட்டாள். கம்பன் இந்த வில்லு வளைப்பில் ஓர் அரைக்கண நாடகம் நடத்தியிருக்கிறான். சகுந்தலை நாடகம் அதற்குப் பிரையிடவும் போதாது."

(இலக்கியவழி, பக். 77)

அறிஞர் பெருமக்கள் சிலரையும் அக்கண் பார்க்கத் தவறவில்லை. தாமோதரம்பிள்ளையின் பதிப்பு முயற்சியுடன் போட்டியிட்டுப் பிள்ளையினை முந்துதற்கு எண்ணிக் "களவுப் பதிப்பை" வெளியிட்ட ஒரு வித்துவானுட்படப் பலர் அக்கண்ணுலே சுடப்பட்டார்கள். நாவலருக்குக் 'குறைவு' ஏற்படுத்த டாக்டர் சாமிநாதையர் நாவலர் பெயராற் புனைந்து விட்ட கடிதம் பண்டிதமணியின் சீற்றத்திற்குள்ளாகின்றது

> "அருவருக்கத்தக்க இரப்புரைக் கடிதமொன்றை, நாவலர் பெயராற் புனைந்து விட்டார்கள் ஐயர் அவர்கள் அக் கடித நடை மாணுபரணரான நாவலரால் எழுதப்படாதது என்பதைக் காட்டிக் கொடுத்து விட்டது.
>
> சம்பவ காலம் ஐயருக்கு ஐந்து வயசு நிரம்பாத காலமாயினும், பொய்ம்மையும் பிடிகொடாமற் புனைந்திருக்க வேண்டும். ஆசை வெட்கம் அறியாது!"

(ஆறுமுகநாவலர், பக். 117)

# கம்ப ராமாயணக் காட்சிகள்

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்
யாழ்ப்பாணம்.

ஆழமான, அகலமான அறிவு எதையும் எடை போடுதற்கு உறுதுணையாய் இருந்தது; மூன்றாவது கண்ணுக்கு ஒளி நல்கியது கனக. செந்திநாதன் அத்தகைய மூன்றாவது கண்ணையே தரிசித்தார்.

இளநகை ததும்பும் விமரிசனம்

விமர்சகர்களை இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். எடுத்துக்கொண்ட விடயத்தை நறுக்கெனக் கூறிவிடுபவர்கள் ஒரு சாரார். குறைகாணுமிடத்து நகைச்சுவையுடன், ஆனால் ஆழமாகத் தைக்கும்படி கூறிவிடுவர் இன்னொருசாரார். பண்டிதமணியிலே இவ்விரு பண்புகளையுங் காணலாம். அவ்விரண்டினுள், இரண்டாவது பண்பு இங்கு விதந்து கூறப்படவேண்டியது. பண்டிதமணியின் நகைச்சுவை கைதட்டி ஆரவாரித்துக் கொல்லென்று சிரிக்க வைப்பதன்று. ''கொடும்புக்குள் சிரித்தல்'' என்னுந் தொடரே அவருடைய அச்சுவையை விளக்க ஏற்றதென எண்ணுகிறேன். **பாரத நவமணிகள் (பக். 85-86)** என்னும் நூலிலே சஞ்சயன் தூது விமரிசிக்கப்படுகிறது. சஞ்சயரின் ஞானோபதேசம் அங்கு எடுபடவில்லை. வீமனும் அவரை ''பிடர்க்கணே மதியான கண்ணிலி'' எனக் கூறி விடுகிறான். இச் சந்தர்ப்பத்தைக் குறிக்கும் பண்டிதமணி :

> ''தருமசந்தர்ப்பத்தில், ஞானம் சொல்லப்போன சஞ்சயருக்கு யார்தான், என்னதான் சொல்லார்கள். மடைத்தொழில் வல்ல வீமனும், வேதம் வல்ல சஞ்சயருக்கு முன் கதை எடுத்தான்.
>
> இச் சம்பவங்களைக் கண்ணெதிரில் கண்டுகொண்டிருந்த கண்ணன் கையமர்த்தி வீமனை இருத்திவிட்டு, ''சுவாமிகாள்'' என்று விளித்துச் சஞ்சயருக்குச் சொல்லுகின்றான் ; சுவாமி இந்த மண்ணவர்கள், இந்த மண்ணைக் கவ்வட்டும் ; அந்த விண்ணவர்கள் அந்த விண்ணைக் கவ்வட்டும் ; பன்றிகளுக்கு முன்னே முத்துக்களை விதைக்க ஒண்ணாது சுவாமீ.''

இவ்வாறு கூறுகின்றார். குறிப்பிட்ட பகுதி முழுவதுமே அறிவும் இளநகையும் சேர்ந்ததாகவே அமைந்துள்ளது.

யான் இட்ட தடித்த எழுத்துப் பகுதிகளாகிய **மடைத் தொழில், மண்ணார்கள்** என்பன விசேடமாய்க் கவனிக்கப்பட வேண்டியவை.

1942 ஆம் வருடத்தின் பின் தமிழிலக்கியங்களுள்ளே திளைத்து வந்த பண்டிதமணியின் "நெஞ்சிலே இறைவன் மீது முறுகிய அன்பும் தத்துவ விசாரமும் குடி கொண்டன." அப்படி யமைந்தபோதிலும் தமிழ் இலக்கியத்திலே அவருக் குள்ள ஆராக் காதல் அடங்கவில்லை. அண்மையில் தமிழ் நாட்டிலிருந்து வந்து அவரைத் தரிசிக்கச் சென்ற சோ. சிவ பாதசுந்தரம் அண்மைக்காலத்திலேற்பட்ட தமிழ் இலக்கிய வளர்ச்சியினைக் கூறியபோது, "நான் அக்காலத்திலே வாழ வில்லையேயெனக் கழிவிரக்கப்படுகிறேன்" என்று பண்டித மணி கூறியதைக் கேட்டபோது, போர்க்களத்திலே கன்ன னுடைய தர்மத்தைப் பெறச் சென்ற கண்ணனிடம்,

> "பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
> பக்குவந் தன்னில்வந் திலையால்"

என்று கன்னன் கூறிய சொற்கள்தாம் என் மனத்திலே நினைவுக்கு வந்தன. கடவுள் பக்தி, தத்துவ விசாரம் பற்றி யனவாய் அவருடைய எழுத்துக்கள் பிற்காலத்திலே அமைந்தபோதிலும், அவற்றுள்ளும் அவருடைய வழமை யான "இளநகை" இழையோடிக் கொண்டேயிருக்கிறது.

**இலக்கிய நடையும் தத்துவவிசார நடையும்**

பண்டிதமணி தமிழிலக்கியங்களிலே மூழ்கியிருந்தபோது அதற்கேற்ற ஒரு நடை அவருக்குக் கைவரப்பெற்றிருந்தது. இலக்கியப் பாடல்களை விளக்க முற்படும்போது கண்ணப் பன் தான் சுவைத்துப் பார்த்துச் சிவனுக்கு இறைச்சியைப் படைத்தது போல, பண்டிதமணியும் அப்பாடற் சொற்கள் ஒவ்வொன்றையும் தாம் சுவைத்துச் சுவைத்தே எமக்கும் வழங்குவார். கதை கூறுவதுபோல அமைவது அவரது நடை. **இலக்கிய வழி, பாரத நவமணிகள்** போன்ற நூல் **களிலே** காணப்படும் எந்தப் பகுதியினை எடுத்து நோக்கி னாலும் இவ்வுண்மை விளங்கும்.

''சொற்கள் சொட்டுச் சொட்டாக வரும்; பொட்டுப் பொட்டாகவும் வரும். திலகமிட்ட நுதல் பொலிந்து பேரழகுடன் விளங்குதல் போல் பண்டித மணியின் வசன நடையும் துலங்கும் சொட்டுச் சொட்டான சொற்களினூடே பொட்டுமிட்டுப் பொடியும் வைப்பார். ஊடுருவி வாசித்தால் உண்மை விளங்கும்.''

இது வித்துவான் F. X. C. நடராசா, பண்டிதமணியின் நடைபற்றிக் கூறிய கூற்றாகும்

அவருடைய தத்துவ விசார நடை இறுக்கியிறுக்கி அமைக்கப்பட்ட தொன்றாகும்; உபநிடத நடையை நினை வூட்டும். வினாவும் விடையும் தொடர்ந்து கொண்டே வரும். சில வினாக்கள் விடையின்றியே அமையும். அண்மையில் இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாக இந்துமன்றத்தினரின் இந்து நெறியிலே (1978) ''வேதாந்தத் தெளிவு சைவ சித்தாந்தமே'' என்னுங் கட்டுரையினைப் பண்டிதமணி எழுதியிருந்தார்கள். அதிலிருந்து ஒரு பகுதி :

''நாம் ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாடு கின்றோம் 'நான்' 'நான்' என்று அடிக்கடி பேசு கின்றோம் இந்த 'நான்' யார்?

'நான்' என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொருளை யாராவது கண்டதுண்டா? கேட்டதுண்டா? விஞ் ஞான கூடங்களில் பரிசோதனஞ் செய்து கண்டுபிடிக்க இயலாதா? நான் என்பது யாது?''

இது போன்ற நடைதான் இப்பொழுது பண்டிதமணியின் எழுத்துக்களிலே இடம்பெறுகின்றது. அவரைக் கவர்ந்த ''அந்த மகான்'' திரு. பொ. கைலாசபதி தம்முடைய எழுத்து நடையினையும் அவரிடங் கொடுத்துவிட்டார் போலிருக்கிறது

**இலக்கிய கலாநிதிப் பட்டம் தேடி வந்தது.**

பண்டிதர் பண்டிதமணியாகி இலக்கிய கலாநிதியாகிய கதை பற்றிப் பலர் பலவாறு அருமையாக எழுதியுள்ளனர். நான் ஏற்கனவே, அவருக்கு எங்கள் பல்கலைக் கழகத்திலே

எடுத்த பாராட்டு விழாவிலே, கூறிய கதையினை மாத்திரம் இங்கு தருகிறேன். இறையனார் அகப்பொருள் உரைகாரர் ஓரிடத்திலே பின்வருமாறு கூறுகின்றார் :

> "ஏறுதி மோதிரம் செறித்தற்றிருவுடையான் ஒருவன், ஏறுதி மோதிரம் செறிக்கும் அத்திரு அவன் செறிக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது அரசு வீற்றிருந்த திருவுடையான் ஒருவன் அரசு வீற்றிருக்கும் அத்திரு அரசு வீற்றிருக்கின்ற பொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது. அது பின்னை ஒரு காலத்து, ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும்."

பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தினைச் செறிக்குமபடி மாண்புமிகு வேந்தரைப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பட்டமளிப்பு விழாவிலே வேண்டிய பொழுது எனக்குக் களவியலுரைகாரரின் மேற்படி கூற்றுக்களே நினைவுக்கு வந்தன இலங்கைப் பல்கலைக் கழகம் வழங்கவிருந்த கௌரவப் பட்டங்களுக்குத் தகுதியானவர்கள் பெயர்கள் மூன்றினை எங்கள் வளாக ஆளுநர் சபை தீர்மானித்து அனுப்பியது. அவற்றுள் பண்டிதமணியின் பெயரே இறுதியில் தெரியப்படலாயிற்று இது துணைக்காரணமாக அமைய, அவரிடம் முற்கொண்டு செறிந்திருந்த திரு, இவ்விலக்கிய கலாநிதிப் பட்டத்தை அவரிடம் தேடிவரவைத்தது. நாமெல்லாம் கலாநிதிப் பட்டத்தினைத் தேடி இங்கிலாந்து வரை செல்ல வேண்டியதாயிற்று ஆனால், பண்டிதமணிக்கோ இலக்கிய கலாநிதிப் பட்டம் அவரைத் தேடித் திருநெல்வேலிக்கே வந்துவிட்டது. திருநெல்வேலி திருநல்வேலியாயிற்று அவ்வாறு அப்பட்டம் தேடி வந்ததற்கான காரணம் யாது? அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவிலே அதற்கான காரணங் கூறப்பட்டது. இங்குஞ் சில கூறப்பட்டுள்ளன. ஆம். ஒரு யுக புருசனைப் பல்கலைக் கழகம் கௌரவித்துத் தனக்குங் கௌரவத்தைத் தேடிக் கொண்டது.

# காப்பு

உலகம் யாவையுந் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அகில லாவினை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணுங்களே.

உலகத்தைக் கடவுள் படைத்தார்; காக்கின்றார்; ஒரு நாளைக்கு அழிப்பார். மூன்று வேறு காலங்களில் மூன்று வேறு தொழில்களைச் செய்கின்றார் கடவுள்.

இவ்வாறு உலகம் முத்தொழிற்படுவதையும் அத் தொழில்களுக்குக் கருத்தாவாகிய கடவுள் உண்மையையும் பரம்பரையிற் சொல்லி வருகின்றார்கள்; நாம் ஒப்புக் கொண்டு வருகின்றோம்.

குயவன் ஒரு பானையைப் பண்ணுகின்றான். அது நிலை செய்து காக்கப்படுகின்றது. ஆனால், அது ஒரு நாள் அழிவு எய்தி, மண்ணோடு மண்ணாகின்றது. இந்தச் சம்பவங்களை நேரே காணுகின்ற நமக்கு, உலகம் முத்தொழிற் படுவதிலும் அத்தொழிலுக்கு ஒரு கருத்தா உண்டு என்பதிலும் எவ்வித வியப்பும் உண்டாவதில்லை. மிக மிகப் பழைய சம்பவங் களாக அவைகளை ஒப்புக்கொள்கின்றோம்.

* * *

இப்படிப்பட்ட பழைமை மனிதர்களாகிய நாங்கள் ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும் ஆகிய முத்தொழில் களையும் - ஒரே காலத்தில் ஒருங்கே நிகழ்கின்றதொரு

திருவிளையாட்டென்றும் - முத்தொழில்களுள்ளும் ஒரு தொழில்தானும் ஒரு கணமேனும் நீங்கலாகாததொரு விளையாட்டென்றுங் கேள்விப்பட்டாலோ! அந்தப் புதுமையை வியக்காமலிருப்பதெப்படி!

உயிர்களை அறியாமையாகிய அழுக்கு விழுங்கியிருக்கின்றது. அந்த அழுக்குச் சிறிதே பக்குவம் எய்தும்போது உலகம் தோன்றுகின்றது. அழுக்குப் பூரண பக்குவம் அடையும்வரை உலகம் நிலைக்கின்றது. பூரண பக்குவம் அடைந்ததும் உலகம் மறைகின்றது. காந்தம் இருந்தபடி இருக்க இரும்பு அசைவதுபோலக் கடவுள் இருந்தபடி இருக்க, முத்தொழிலாகிய மூன்று சம்பவங்களும் கடவுள் சந்நிதியில் நடைபெறுகின்றன.

உயிர்களின் பக்குவம் ஒரு வகையாய் அமைவதில்லை, அதனாலே சில உயிர்களுக்கு உலகந் தோன்றிக் கொண்டிருக்கும். அதே சமயத்தில் சில உயிர்களுக்கு உலகம் நிலைத்திருக்கும் அவ்வாறே பக்குவம் அடைந்த வேறுசில உயிர்களுக்கு அதே சமயத்தில் உலகம் இல்லையாம். ஆகவே, முத்தொழில்களும் ஒரே சமயத்தில் நடைபெறுகின்றன.

* * *

முத்தொழில்கள் நடைபெறுகின்றன; ஒருங்கு நடைபெறுகின்றன. அப்படித் தொழில்கள் நடக்கவும் கருத்தா ஆகிய கடவுள், விகாரம் அடைவதில்லை. அவை அவருக்கு விளையாட்டு. சுகதேகியான ஒரு குழந்தைக்கு விளையாடாமல் இருக்கமாட்டாமை, அதன் இயற்கை. விளையாடாமல் இருப்பதுதான் அதற்கு விகாரம்; நோய். கடவுள் சந்நிதியில் உலகம் முத்தொழிற்படுவது, கடவுளின் சந்நிதி விசேஷம்; கடவுளின் இயற்கை. இது, தத்துவ ஞானிகள் கண்ட உண்மைத் தத்துவம்; சாத்திர முடிபு.

* * *

இந்தத் தத்துவ சாத்திர முடிபு, 'ஆக்கலும், நிலைபெறுதலும், நீக்கலும் ஆகிய முத்தொழில்களில், ஒன்றுதானும் ஒரு கணமேனும் நீங்கலாகாத விளையாட்டுப்

புதியதொரு விளையாட்டு! இந்தப் புதிய விளையாட்டுக்கு இன்றியமையாத சத்தி விசேஷம் உடையார் எவரோ, அவரே கடவுள்'.

என்ற கருத்தைக் கருக்கொண்டு, இக்காப்புச் செய்யுள் காட்டுமாஞல், இது இலக்கியமாகிய இராமாயணக் காப்பா! தத்துவ சாத்திரக் காப்பா! இது என்ன வம்பு!!

இது இவ்வளவில் இருக்கட்டும்.

இனி, விளையாட்டு இரண்டு வகைப்படும். ஒன்று, அலகிலா விளையாட்டு; மற்றது, அலகு உள்ள விளையாட்டு, (அலகு - எல்லை)

சில உத்தியோக தெய்வங்களுக்கு முத்தொழில்களாகிய விளையாட்டுக்களில், ஒவ்வோர் விளையாட்டுக் கைவரும். அந்த விளையாட்டும் எல்லைப்படுத்தப்பட்டதாயிருக்கும். உதாரணமாக, ஒரு தெய்வத்துக்கு உலகத்தைச் சிருட்டிக்கும் விளையாட்டுக் கைவருமாயின், குறித்த சில உலகங்களை மாத்திரம் சிருட்டிக்குந் தொழிலாகவே அது இருக்கும். எல்லா உலகங்களையுஞ் சிருட்டிக்கிற விளையாட்டாக அது இருக்காது அப்படியே மற்றொரு தெய்வத்துக்குக் காக்கிற விளையாட்டு எல்லைப்படுத்தப் பட்டிருக்கும். அவ்வாறே அழிக்கிற விளையாட்டும் வேறொரு தெய்வத்துக்கு எல்லைப் படுத்தப் பட்டிருக்கும்.

சந்திரனுக்குத் தன் ஒளியைச் சூரியன் நல்குவது போலத் தெய்வங்களுக்கெல்லாம் சிருட்டியாதி விளையாட்டுக்களை உத்தியோகமாகக் கொடுக்குந் தெய்வம் எதுவோ;

எல்லா உலகங்களும் தன் சந்நிதியிலே தோன்றி நின்று ஒடுங்கத் தான் விகாரமின்றி, முத்தொழில்களையும் இயற்ருமலே இயற்றுந் தெய்வம் எதுவோ,

அதுவே தலைமையாகிய தெய்வம்.

மூன்று விளையாட்டுக்களிலும் அழிப்புத் தொழிலாகிய சங்காரமே உயர்ந்தது எந்தக் கடவுளைக் கண்டவழித் தோன்றி நின்ற உலகம் இல்லையாகின்றதோ, அந்தக்

கடவுளே சங்காரக் கடவுள்! தலையாய கடவுள். எந்த ஒளியைக் கண்டவழி, உலகிருள் யாவையுஞ் சூனியம் ஆகின்றதோ, அதுவே பேரொளி; சூரிய ஒளி.

ஒளிகளுக்குள்ளே சூரிய ஒளி போல, கடவுளர்களுக் குள்ளே சங்காரக் கடவுளே தலைமைக் கடவுள். சங்கா ரமாகிய விளையாட்டுத்தான், ஆன்மாக்களுக்குப் பரிபூரண சுத்தியாகிய வீடுபேற்றை நல்குவது

'ஆதலினாலே, வீடுபேற்றை நல்குகின்ற தலைமைக் கடவுள் எவரோ, அவரை, ஆன்மாக்களாகிய நாமெல்லாம் சரண் அடைவோமாக.

ஐயாநீயாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெலாம் உய்ந்தொழிந்தோம்.

* * *

நீல மேனி வாலிழை பாகத்
தொருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன முறையே.

இது மிக மிகப் பழைய சங்கக் காப்பு. அதற்கு உறவு முறையானதொரு புத்தப்புதிய காப்புக் கம்பர் செய்த இந்தக்காப்பு.

* * *

# துமி

புளுகன் ஒருவன் தன் மகன் புளுகுவது போதாதென்று அவனை அடித்துத் தெருவோரத்தில் உள்ள கிணறு ஒன்றில் தள்ளிவிட்டான். அந்த மகன் புளுகன் பெருங் குரலெடுத்துக் கதறினான். தெருவிலே சென்றவர்கள் அவனை எடுத்து வெளியேற்றிவிட்டார்கள்.

அவன் வீட்டுக்குச் சென்றான் வீட்டார் 'எப்படி வெளியேறினாய்' என்று கேட்டார்கள் 'மழை துமித்ததை நீங்கள் கவனிக்கவில்லையா? ஒரு துமியைப் பற்றிக்கொண்டு, கிணற்றிலிருந்து வெளியேறினேன்' என்றான் அந்தச் சின்னஞ்சிறிய புளுகன்.

இந்தப் புளுகு கதை ஒரு மழைத்துமியிலிருந்து வழங்குகின்றது. அதுபோலவேதான் கம்பராமாயணப் பிரபாவம் மற்றொரு 'துமி'யிலிருந்து பெருகியிருக்கின்றது. அந்தத் துமி இது.

குமுத னிட்ட குலவரை கூத்தரின்
திமித மிட்டுத் திரியுந் திரைக்கடல்
'துமி'தம் ஊர்புக வானவர் துள்ளினர்
அமுதம் இன்னும் எழும்எனும் ஆசையால்.

குமுதன் என்ற வானரம் எறிந்த குலவரைகள், திரை பொருந்திய கடலின்கண்ணே, கூத்தர்களைப் போலத் 'திமிதம்' என்னும் ஒலிக்குறிப்பைச் செய்துகொண்டு திரிகையினாலே உண்டாகிய,

துமி

மேலெழுந்து, வானமாகிய தமது ஊரின்கட் புக, அதுகண்டு, மற்றொரு முறையும் அமுதம் எழக்கூடும் என்ற ஆசை மிகுதியினாலே வானவர்கள் துள்ளினார்கள்.

வானரம் ஒன்றன் சேட்டையினாலே வானவர்கள் துள்ளிக் குதித்தார்கள். சேட்டை, குலவரைகளைக் கடலிற் போகட்டமை. போகடுதல் - போக விடுதல், எறிதல்.

'குமுதன்' என்ற பாட்டு, ஆறாவது காண்டமான யுத்த காண்டத்திலே, சேதுபந்தனப் படலத்தில் உள்ளது. அந்தப் பாட்டின் மூன்றாவது அடியிலே துமி வருகிறது. இந்தத் துமி கடலிலிருந்து வருகிறது. புளுகன் கதையில் முகிலிலிருந்து வருகிறது இப்படிப்பட்ட துமி வானத்திலே பெருகி வழங்குகின்றது; நூல்களில் அருகி வழங்குகின்றது முதன் முதல் கம்பராமாயணத்திலேதான் அந்தத் 'துமி' நூல் வழக்கில் துமித்ததுபோலும். அதனைக் கண்டதுங் கற்பனையாளர்கள் சும்மா இருப்பார்களா! வாளா மெல்லுகிற வாய்க்குச் சற்றே பொரிமாவுங் கிடைத்து விட்டாலோ!

கற்பனாசக்திமான்கள் கம்பரிலே வந்த 'துமி'யை இறுகப் பிடித்துக்கொண்டு, மிக் நீண்ட கதை கட்டி நடத்தியிருக்கிறார்கள். அநுமானின் வால்போல நீளமானது அவர்கள் கட்டிய கதை. புளுகுச் சிறுவன் விழுந்த கிணற்றிலிருந்து, சரஸ்வதி தேவி வசிக்கின்ற பிரம்மலோகம்வரை 'துமி'க் கதை வளர்ந்திருக்கிறது. இடையிலே மகா கவீந்திரரான ஒட்டக்கூத்தரையும் இந்தத் துமியிலே நனையச் செய்திருக்கின்றார்கள். [நனைத்ததும் 'துமி' போன்றதொரு வழக்குச் சொல்லே]

இனிக் கற்பனைக்கதை வருமாறு:

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரைக்கொண்டு தமிழிலே இராமாயணம் பாடுவிக்க வேண்டுமென்பது குலோத்துங்க சோழ மகாராசாவின் விருப்பம். ஒருநாள் சோழமகாராசா தமது விருப்பத்தைக் கம்பருக்குத் தெரிவித்து, 'இராமா

யணம் பாடித்தரவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். கம்பர் அதற்கு உடன்பட்டார். மகாராஜாவுக்கு மகா சந்தோஷம். இராசாவுடைய சந்தோஷத்துக்குக் கம்பர் இடையூறு செய்யவில்லை. இராசா சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்; கம்பர் இராமாயணம் பாடுகிறார் என்று நம்பிக்கொண்டிருக்கிறார். ஆனால், கம்பர் இன்னுந் தொடங்கவேயில்லை; காப்புக்கூடப் பாடவில்லை; மறந்தவர்போல் இருந்து வருகிறார்.

இதற்கு என்ன செய்வது! இராசாவுக்குப் பெரிய கவலை உண்டானது. ஒரு நாள் கம்பருடைய அன்ன தாதாவான சடையப்ப வள்ளலையும், மந்திரிமார்களையும் அழைத்து ஆலோசனை செய்தார் மகாராஜா. பிறகு ஒரு முடிபுக்கு வந்தார்கள். அது ஒரு 'போட்டி' முடிபு. அதன் பயனாகக் கம்பரையும் ஒட்டக்கூத்தரையும் தனித்தனி இராமாயணம் பாடுதல் வேண்டுமென்று வேண்டுதல் செய்யப்பட்டது.

ஒட்டக்கூத்தர் அன்றைக்கே ஓலை தேடி - எழுத்தாணி தேடி - ஆள் ஒய்ந்திருக்கும் மூலை தேடி - இராமாயணம் பாடத் தொடங்கிவிட்டார். கம்பர் ஓலை தேடவுமில்லை; எழுத்தாணி தேடவுமில்லை. மூலை தேடவுமில்லை; வழக்கம் போல் இருந்து வருகிறார். இதனை அறிந்து இராசாவுக்கு ஏக்கம் உண்டாகிறது; சிறிய அளவில் கோபமும் வருகிறது. ஒரு நாள், ஒரு சபை கூட்டி, இருவர் புலவரையும் அழைத்து 'எவ்வளவில் இராமாயணம் நடந்துகொண்டிருக்கிறது' என்று விசாரித்தார். ஒட்டக்கூத்தர் ஆறாவது காண்டமான யுத்த காண்டத்திலே, கடல் காண்படலம் நடக்கிறது என்றார். கம்பர் அதற்கு அப்பாலே 'சேது பந்தனம்' நடக்கிறது என்றார். அப்பொழுது இராசா சற்றே சடுகடுப்புடன் 'சேதுபந்தனத்தில் ஒரு பாடல் சொல்லும்' என்றார். கம்பர் எவ்வித சலனமுமின்றி, முன்னே பாடிவைத்த பாடலைப் படித்துக் காட்டுபவர்போல,

'குமுதனிட்ட' என்று தொடங்குகின்ற 'தூமி' ப் பாட்டைப் பாடிக் காட்டினார். கம்பர் அதனைப் படிக்கும் போதே, 'கவி அமிர்தம்' என்று சொல்லிக் கொண்டே

iv

சபையோரும் இராசாவும் குதூகலித்தார்கள்; கம்பரை மேலும் மேலும் உயர்த்தி உபசரித்தார்கள். கம்பராமாயணத்தை முதலிலிருந்தே முழுவதையுங் கேட்க ஆசைப்பட்டார்கள் இந்தச் சமயத்திலே பாவம்! ஒட்டக்கூத்தருடைய யாகாக்கினியிலே, அந்தத் துமி, ஒரு நெய்த் துமியாய்த் துமித்ததென்று, கற்பனையாளர்கள், மேலுங் கதை கட்டி நீட்டியிருக்கிறார்கள். அது, சரஸ்வதி தேவி வரை நீண்டு போர்த் துமியிற் போய் முடிகிறது. கதை கட்டுகிறவர்களை நாம் தடுக்க முடியாது. அவர்கள் ஒருபாவமும் அறியாத அந்த ஒட்டக்கூத்தரை நினைத்தது நல்லதன்று. ஆனால், கதை கற்பனையாயினும், அதில் ஒரு உயிர் துடித்துக் கொண்டேயிருக்கிறது. அந்தத் துடிப்பாகிய உண்மைதான் இரசிக்க வேண்டியது. அதுதான் யாதோ!

கம்பரில் எங்கேயாவது ஒரு 'துமி' பட்டு நனைந்தவர்கள் உளராயின், அவர்களை அப்படியே விட்டுவைக்காமல், மற்றப் பாகங்களை ஒரே மூச்சிற் பாடி, முழுக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டே தீரும். இராம கதையின் இரகசியம் இது. ஆகர்ஷண சக்தி வாய்ந்தது அது.

அதனாலேதான்,

எழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடிய தெழுநூறே.

* * *

இராம கதையின் ஆகர்ஷண வேகம் இராம பாணத்தினும் மிக்கது என்பதே கதையின் கரு

* *

அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

என்று, இராமகதை தொடங்குவோமேயானால், அது, எவ்வித வருணனையாலும் இடைமடங்காது.

கண்டனன் கற்பினுக் கணியை

என்று அநுமன் இராமனுக்குத் தேறுதல் கூறும்வரை,

ஓயாது ஓடிக்

கடலை நோக்கிய கங்கையின் பிரவாகம் போல மகா வேகத்திற் பாய்ந்து,

சேதுபந்தனத்தை அணுகும்போதுதான்,

சற்றே இளைப்பாறி, ஒரு மூச்சு விட்டு, விபீஷணனோடு சல்லாபஞ் செய்யத்தக்கதாயிருக்கு

* *

சீதாகல்யாணத்தைத் தரிசித்த நாம், அந்தக் கண்ணாலே, அயோதிமாநகரத்திலே, ஒரு கூனியையுங்காண நேருமே யானால், பிறகு நமக்கு ஆறுதல் ஏது! மதுரையிற் கால் வைத்த கண்ணகிகளாய் விடுவோம் நாம். அப்பால், இராமனுஞ் சீதையும் இலட்சுமணனும் நாங்கள் தாமே! நமது ஆத்ம வேகம் இப்படி ஆகுமானால், அக்கதையைக் கவி செய்த, கவிச்சக்கரவர்த்தியின் கற்பனாவேகம் எப்படி இருக்குமோ!

* * *

கவிகள் சும்மா இருந்தால் இருப்பார்கள்; தூங்கிக் கொண்டிருப்பார்கள். ஒரு ஆகர்ஷண கதையைக் கவி செய்ய எழுந்தார்களேயானால்; பிறகு, அவர்கள் பெருங் காளமேகங்களே! தடைகளைத் தடைபண்ணும் பிரவாகங்களே!

கவிஞனைக் கவி செய்யத் தொடங்குவது எவ்வளவு கஷ்டமோ; அதனினும் மகா கஷ்டம், அது தொடங்கிய பின் அவனை அதனைத் தடை செய்து மடக்குவது

கவிகளின் கவிதாவேகம் நமது அநுபவத்துக் கெட்டாதது. எட்டாததை எட்ட முயல்கின்றதுதான்,

'தூமி'க்கின்ற அந்தப் பாட்டு முன்னுக்குப் பிறந்த கதை.

கற்பனாலோகத்திலே, வெகு தூரத்திலே 'தூமி' வந்ததாயினும், 'குமுதனிட்ட' கவி, காப்புக்கு மூப்பு எய்தியது;

வேகம் இருந்தபடி! ★

# 1 அவையடக்கம்

**அ**வை-சபை. அடக்கம்-அடங்குதல் என்றும் அடக்குதல் என்றும் இரு பொருள் படும்.

சபைக்கு அடங்கும் முகமும் ஒருவாறு சபையை அடக்கும் முகமும் ஆகிய இரு முகங்கொண்டது, கம்பராமாயண அவையடக்கம். இரு முகங்களுள் அவைக்கு அடங்கும் முகம் பின்வருமாறு :

ஓசை பெற்றுயர் பாற்கட லுற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி யறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ.

பாற்சமுத்திரம் ஓசையால் உயர்ந்தது; அதிர்கின்ற பெருமுழக்கோடு அலைபுரண் டெழுவது. இவ்வாறான பாற்சமுத்திரம் எங்கே ! அற்பப் பூசை எங்கே ! பூசை-பூனை; சாதாரண வார்த்தையிற் சொல்லுகிறதானால் பூனை அடுக்களையிற் பதுங்குகின்ற பூனைக்கும், ஆதிசேஷன் மீதே அலைகள் மோகரித்து மோத ஸ்ரீமந் நாராயணமூர்த்தி அறிதுயில் புரிகின்ற பாற்கடலுக்கும் என்ன சம்பந்தம் ! எளிய சிறிய பூனை - அக்கடலலையில் தெறிக்கின்ற ஒரு 'துமி'க்குத்தானும் பாத்திரமாகாத பூனை - பாற்கடல் முழுவதையும் பற்றற நக்குவதென்று புக்கதாயின் அதன் அறியாமைக்கு அளவு ஏது !

ஸ்ரீராம சரிதம் பரிசுத்த சமுத்திரம்; காசில்லாத சமுத்திரம். காசு - மாசு; மறு. பஃறலைப்பட்ட அலைகள்

ஆறுகள் மடங்கி அடங்குஞ் சங்கமம் ஸ்ரீ ராம சரிதம். உலகம் அலைலக் கவலைகளைக் கழுவி ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் புண்ணிய தீர்த்தம், 'காசில் கொற்றத் திராமன் கதை'.

கொற்றம்-வென்றி. ஸ்ரீ ராமனுடைய கொற்றம் வான் மீகி வசிட்டர் போதாயனர் முதலிய முனிபுங்கவர்களால் ஆராயப்பட்டது. இராமன் மனந் தூயன். இராமனுடைய அந்தக்கரணங்கள் நல்வழிப் பட்டவை; வேதநெறி பிறழாதவை. அந்தக்கரணங்களைத் தூண்டுந் தெய்வங்கள் எவைகளோ அவற்றின் தூண்டுதல்களை ஒரோர் சமயத்தில் உணர்ந்தவன் இராமன்.

மகாபாரதத்தில் ஒருமுறை குந்திதேவியின் வாக்கு வியாசரால் ஆராய்ந்து வேத நெறியென்று கொள்ளப் பட்டது.

'பிள்ளைகாள், நீவிர் பெற்ற அருங்கனியை, ஐவீரும் ஒருவீராய்ப் பகிர்ந்து நுகர்மின்' என்பது அந்தக் குந்தி தேவியின் வாக்கு; மறைவிலிருந்து வந்த வாக்கு; மறை வாக்கு.

இவ்வாறே இராமாயணத்தில் வாலிக்கு மறைவில் ஒரு சம்பவம் நிகழுகின்றது. வாலி எதிர்பாராத சமயத்தில் இராமபாணம் அவன் மார்பைப் பிளக்கின்றது. உலகந் திகைக்கின்றது மநு வகுத்த தர்மம் ஓர் இராமனால் திரிவு பட்டதோ என்று ஏக்கம் உண்டாகின்றது. இராமனை ஏச வருகின்றது ஆசைப் பூசைகள் வாலி மூலம் இராமனை ஏச முயல்கின்றன; ஏசியும் விட்டன.

ஆனல், அறிவுக்கடலான வாலியோ, 'ஓ ராம, உனது பாணத்தின் நுதியிலேதான் தருமங் குடியிருப்பது' என்கின்றான்; இராமனைச் சரணாகதி யடைகின்றான்.

புரமெலாம் எரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலாம் உருவியென் வசையிலா வலிமைசால்
உரமெலாம் உருவியென் உயிரெலா நுகருநின்
சரமலாற் பிறிதுவே றுளதரோ தருமமே

'தருமம் என்று சொல்லப்படுவது ஸ்ரீராம பாணமே' என்பது வாலியின் வாக்கு.

'செயலிற் செயலின்மையையும் செயலின்மையிற் செயலை யுங் காணுகின்றவன் எவனோ, அவனே அறிஞன்; யோகி' என்கின்றது கீதை.

வாலி விஷயத்தில், இராமன் செயல், செயலிற் செய லின்மை போலும். அத்தியாத்ம இராமாயணந் தெரிந்த முனிவர்களே ஸ்ரீ ராமனின் அகத்தூண்டுதல்களை அறிய வல்லவர்கள்.

'நானோ ஆசைப் பூசை. ஆசை - மாசு. ஆசை வெட்கம் அறியாது அல்லவா. ஆசை பற்றி யறையலுற்றேன். அதனால் காசற்ற அவன் கொற்றம், எத்துணை மாசுற்றிருக்குமோ! 'நான் ஒரு பூனை என்னை மன்னியுங்கள்' என்று சபைக்கு அடங்கித் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு வாய்புதைத்து நின்றார் கம்பர்.

அம்மட்டேயோ!

நொய்தின் நொய்யசொல் நூற்கலுற் றேன்எனை
வைத வைவின் மராமரம் ஏழ்தொளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே.

ஸ்ரீராம கதையோ மாக்கதை, மகாகதை; மகிமைவாய்ந்த கதை.

அக்கதையை முதன் முதல் செய்தவன் வான்மீகி. அந்த மகா முனிவனின் வாக்குக்கள் இன்றும் நின்று நிலவு கின்ற தேயம் பாரத தேயம். இப்படிப்பட்ட பாரத தேயத்திலே,

'நொய்தில் நொய்யசொல் நூற்கலுற்றேன்'

எளிதினும் எளிதாய வெள்ளைச் சொல்லினால் நானும் ஒரு இராமாயணம் பாடத் தொடங்கிவிட்டேன்.

எ(ன்)னை? என் அறியாமை இருந்தபடி என்னே? கொல்ல தெருவிலே ஊசி விற்கிற செயல், என் செயல்!

வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி என்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னயான் பேச லுற்றேன்.

வான்மீகி செய்த தித்திக்கின்ற கவிகளை இந்த உலகத்தவர்களேயன்றித் தேவர்களுஞ் செவிகளாரப் பருகி இனிக்கின்றார்கள். நானோ ஆராமை என்கின்ற நறவை நிறையப் பருகி மதிமயங்கி உளறியிருக்கின்றேன்.

வான்மீகியின் பாடல் திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளையின் இனிய நாதசுரம்; தேவ கானம். எனது பாடல் சாதாரண ஊமைக் குழல்; மதுபானம்.

என்றிங்ஙனம் அவைக்கு அடங்குமுகங் காட்டுகின்றார் கம்பர், பாவம் !

இனி, அடக்குமுகம் வருமாறு :

**தேவ பாடையின் இக்கதை செய்தவர்**
**மூவர் ஆனவர் தம்முளும் முந்திய**
**நாவி னார்உரை யின்படி நான்தமிழ்ப்**
**பாவி னாலிஃது ணர்த்திய பண்பரோ.**

தேவபாடை ஆரியம். அது சம்ஸ்கிருதம் எனவும் வடமொழி எனவும் படும். ஆரிய பாஷையிலே ஸ்ரீ ராம கதை செய்தவர்கள் வான்மீகி வசிட்டர் போதாயனர் என மூவர் முனிவர்கள். மூன்று வேறு முகமாக மூன்று வேறு இராமாயணம் மூன்று வேறு முனிவர்களால் எழுந்திருத்தல் சாலும். ஸ்ரீ ராமனுடைய அந்தக்கரண எழுச்சிகளை அந்தர்முகமாக ஆராய்ந்தது அத்தியாத்ம ராமாயணம் ஆகலாம். மூன்று முனிவர்களுள்ளும் 'முந்திய நாவினார்' – முதன் முதல் இராமாயணம் பாடியவர், வான்மீகி.

நான் தமிழிலே, விருத்தப் பாவிலே இந்த இராமாணத்தைப் பாடியது, வான்மீகியினுடைய உரையின்படியே யாம் இந்தத் தமிழ் இராமாயணப் பண்பு வான்மீகி இராமாயணப் பண்பே.

ஆகவே, தமிழ் இராமாயணப் பண்பாட்டில் யாதுங் குற்றம் நிகழுமாயின் அது என் குற்றமன்று, வான்மீகியின் குற்றமே.

'நான் தமிழ்ப் பாவினால் இஃதுணர்த்திய பண்பு முந்திய நாவினார் உரையின் படி.'

இது அவையை அடக்கு முகம்.

இரு முகமுமான அவையடக்கம் முற்றும்.

# 2 சிறப்புப் பாயிரம்

'நான் தமிழ்ப் பாவினால் இஃது உணர்த்திய பண்பு முந்திய நாவினார் உரையின்படி'

'நான் தமிழிலே இராமாயணம் பாடியது, வான்மீகி இராமாயணப்படி. ஒரு அக்ஷரத்துக்குக் கூட நான் பொறுப்பு நிற்க முடியாது. அக்ஷரந் தவறாமல் வான்மீகி சொன்னபடி நான் சொல்லியிருக்கிறேன், கிளிப்பிள்ளைப் பாடம் ஒப்பித்திருக்கிறேன்', என்றிங்ஙனஞ் சத்தியஞ் செய்து தப்பிக் கொள்கிறார் கம்பர். தமிழுலகம் அதனை அப்படியே ஒப்புக் கொண்டு வந்திருக்கின்றது. கவிச்சக்கரவர்த்தி பொய் சொல்லுவாரா ?

ஆனால், இப்பொழுது நிலைமை மாறுகின்றது. கம்பரிலுஞ் சந்தேகிக்கின்ற காலம் வந்துவிட்டது. அதற்குக் காரணம் வான்மீகி ராமாயணம் அப்படியே தமிழிற் பெயர்க்கப்பட்டுவிட்டது தனித் தமிழ் உலகுக்குக் கம்பரையும் வான்மீகியையும் ஒருங்கு வைத்து ஒப்பு நோக்கும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது ஒருவர் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங் காலம் மலையேறிவிட்டது.

கம்பர் வர்ணனைப் பகுதிகளில் வான்மீகியோடு மாறுபட்டால் அதனைக் கவியுலகம் மன்னிக்கும்; பாராட்டும். உயிரான கதைச் சந்தர்ப்பங்களிற் கைவைத்தால் அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும் ? ஓரிடம் ஈரிடம் மாத்திரமா எத்தனையோ பல இடங்களில் - உயிரான இடங்களில் - கம்பர் மாறுபட்டு நடக்கின்றாரே !

இராமாயணத்தில் இராமன்தானே விசேட பாத்திரம். அவன் காட்டுக்குப் போகிறதுதானே இராமன் கதையில் உயிர் துடிக்கிற சந்தர்ப்பம். இந்த ஒரு சந்தர்ப்பத்தை எடுத்துக்கொண்டு வான்மீகியையுங் கம்பரையும் ஒப்பு நோக்குவோமானால் கம்பரின் மெய்ம்மை பொய்ம்மைகள் வெளிப்படுதற்கு அந்த ஒன்றுமே போதுமானதாயிருக்கும்.

கைகேயி தசரதன் முன்னிலையில் ஸ்ரீ ராமனை நோக்கித் தான் வரம்பெற்ற சம்பவங்களைத் தெரிவித்து, வரத்தின் படி இராமனைக் காட்டுக்கு ஏவுகின்றாள். இராமன், 'நீ சொல்லி நான் போவதில்லை' என்று மறுக்கிறான். அன்றித் தனது அம்பு போன்ற கடுஞ்சொற்களினாலே அவளைச் சுடுகின்றான். 'உன் வஞ்சகங்களை இன்று நேற்று அன்று, நெடுங்காலமாக அறிவேன்' என்கின்றான். இது இப்பொழுதுள்ள வான்மீகம்.

இராமன் இவ்வாறு தசரதன் முன்னிலையில் கைகேயியின் இருதயமாகிய மராமரங்களைச் சொல்லம்புகளால் துளை செய்வானேயாயின், அதனைக் கண்ட - கேட்ட மாத்திரத்திலேயே தசரதன், வாலி போலே உயிர் தரியாது மாண்டிருப்பானே! பெற்று வளர்த்த இராமனிருக்கக் கைகேயி என்ற பெயரில் ஒரு மறலி தசரதனுக்கு வேண்டியதில்லையே 'கைகேயியினால் தசரதன் மாளவில்லை; இராமன் கைகேயியை மறுத்து வைத வைவினாலேயே தசரதன் மாண்டான்' என்றிங்ஙனம் வான்மீகி ராமாயணத்தை நடத்தி முடிக்கலாம் போலத் தோன்றுகின்றது.

தந்தையின் கட்டளை என்று ஒரு சிறியதாய் கூற அதனைக் கண்ணுக்கு நேரே மறுக்கின்ற ஒரு இராமனுக்கு, ஒரு இராமாயணம் - அதுவும் ஆதி காவியம் - ஒப்பற்ற ஒரு முனிவர் பெருமானால், செய்யத்தான் வேண்டுமா!

சிலப்பதிகாரத்தைக் கையிலெடுத்ததும், தம்பியின் இராச லக்ஷணத்தைப் பொறாதே சீறுகின்ற ஒரு தமையன் வருகின்றான். அந்தச் சிலப்பதிகாரத் தமையனுக்கு ஒரு அண்ணனாய் வருவான்போன்று தானே, வான்மீகி ராமன் தோன்றுகின்றான்.

இந்த வான்மீகி ராமனை - இதே சந்தர்ப்பத்தில், - 'வான்மீகிப்படி, நான் தமிழ் செய்கின்றேன்' என்று சத்தியஞ் செய்கின்ற அந்தக் கம்பன் என்ன வம்பு செய்திருக்கின்ருன் என்று சற்றே எட்டிப் பாருங்கள் :

தசரதன் முன் வாக்குப் பண்ணியவாறு வரத்தைக் கொடுத்துவிட்டு ஆவி சோருகின்ருன். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கே நடந்ததொன்றும் அறியாத சுமந்திரன் மூலம், கைகேயி இராமனை அழைக்கின்ருள். சுமந்திரன், 'முடிசூட்டு முகூர்த்தம் அணுகுகின்றது. அதனுல் சிற்றன்னை உன்னை அழைக்கின்ருள்' என்று சொல்லி, இராமனை அழைத்துச் செல்கின்ருன். தூரத்தே இராமன் வருவதைக் கைகேயி காணுகின்ருள். கண்டதும் இராமனைத் தசரதன் முன்னிலையை அணுகவொட்டாமல், அவ்விடத்தினின்றுந் தானே புறப்பட்டு,

நாயகன் உரையான் வாயால் நான்இது பகர்வன் என்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

கைகேயி இராமன் இருவரும் இடைவழியிற் சந்திக்கின்ருர்கள்.

அந்திவந் தடைந்த தாயைக் கண்ட ஆன் கன்று

போலே இராமன் குதூகலித்துக்கொண்டு, ஒதுங்கி, வணங்கி வாய்புதைத்து நிற்கின்ருன். அந்தக் கைகேயி, 'ஒரு வார்த்தை, உனக்கு உன் தந்தை சொல்லும்படி என்னிடஞ் சொன்னுர்' என்ற முகவுரையுடன் உலகங் கண்ணீர் வடிக்கின்ற வரங்களைக் கூறி இராமனைக் காட்டுக்கு ஏவுகின்ருள்.

அவ்வாறு அவள் ஏவிய அப்பொழுது ஸ்ரீராமனுடைய முகம்,

அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது

அலர்ந்த செந்தாமரையில் வண்டு படிவதுபோல ஒரே யொரு குறை மாத்திரம் ஸ்ரீ ராமன் முகத்தில் தோன்றியது. அது,

மன்னவன் பணியன்ருகில் நும்பணி மறுப்பனே

'அப்பா சொன்னார் என்று சொல்ல வேண்டுமா? தாங்கள் காலாற் காட்டுவதை நான் தலையாற் செய்யேனோ' என்பது.

அந்தக் குறைதானும்,

**பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ**

என்ற குதூகலத்தால், தோன்றிய அந்தக்ஷணமே மறைந்தது. வண்டு வீழா மலர்போல் அவன் முகம் விகசித்தது.

வான்மீகியின் வடுப்பட்ட இராமன் எங்கே! கம்பன் செய்த இந்த வம்பு இராமன் எங்கே!

இருவர் இராமர்கள் இருவேறு முகப்பட்டு இருக்க வைத்துக்கொண்டே,

கம்பன்

'வான்மீகி உரைத்த உரையின்படி, நான் தமிழ் செய்தேன்' என்கின்றானே! இது என்ன வம்பு!

இந்த வம்பான இராமாயணத்தை 'வான்மீகிப்படி' என்று சமாதானஞ் செய்துவைக்கத்தான் போலும், பின் வருஞ் சிறப்புப்பாயிரம் எழுந்திருக்கின்றது.

**கழுந்த ராயுன கழல்பணி யாதவர் கதிர்மணி முடிமீதே**
**அழுந்த வாளிகள் தொடுசிலை ராகவ அபிநவ கவிநாதன்**
**விழுந்த ஞாயிறு எழுவதன் முன்மறை வேதிய ருடனாராய்ந்**
**தெழுந்த ஞாயிறு விழுவதன் முன்கவி பாடினா தெழுநூறே**

என்பது சிறப்புப் பாயிரம்.

இதில் கம்பருக்கு ஒரு பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. அப்பெயர் 'அபிநவ கவிநாதன்'. நவம் என்பதற்குப் பொருள் புதுமை. வம்பு எனினும் அமையும். அபிநவம் - மிகவம்பு. நாதன் - சக்கரவர்த்தி. மிக வம்பான கவிச்சக்கரவர்த்தி கம்பன். அவன், 'விழுந்த ஞாயிறு எழுவதன் முன் மறை வேதியருடன் ஆராய்ந்து' கதையை நிச்சயஞ்செய்து கொண்டுதான், பகற்காலங்களில் வெகு வேகமாகப் பாடி முடித்தான்.

வடமொழி வான்மீகம் காலந்தோறும் வளர்ந்து, கதை கண்டுபிடிக்க முடியாமல் பிறழ்ந்து, முரண்பட்டுக் கிடந்தது. அதையறிந்த கம்பன் மறை வல்ல அந்தணர்களை வைத்துக் கொண்டு வான்மீகத்தில் மறைந்து இடையிடையே தோன்று கின்ற கதையை ஆராய்ந்து முதலிற் கண்டுபிடித்தான். கம்பனுக்கு இராமாயணம் பாடியது ஒரு காரியம் அன்று; கதை கண்டுபிடிப்பதே பெரிய காரியம்.

வான்மீகியே நம்பமுடியாத பிரகாரம், அப்பொழுதைய வான்மீகம் பிறழ்ந்து கிடந்தது. அதை ஆராய்ந்து, வான் மீகி கண்ட கதையைக் - கதாபாத்திரங்களைச் - சந்தர்ப்பங் களைக் - கற்பனை செய்து கண்டதுதான், கம்பன் செய்த வம்பு.

ஆகவே, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் தமிழ் செய்தது,

முந்திய நாவினுர்

ஆகிய வான்மீகி உரைத்த உரையின்படியேயாம்.

# 3 கம்பன் அபர பிரமன்

**கம்ப நாடன் கவிதையிற்போற் கற்ருேர்க் கிதயங் களியாதே**

இது கம்பருக்கு ஒரு விமர்சனம். இரசிகர்களின் ரசனை முடிபு.

சங்கத்துச் சான்ருேர்கள், ஒன்றுசெய்கின்ற தூய அன்பு எதுவோ அதனை ஆழ்ந்து சிந்தித்து அஃது இருந்தபடியை ஏற்ற இடத்தில் - ஏற்ற காலத்தில் - பொருத்தமான கருப் பொருட் செய்திகளுக்கூடே கற்பனை செய்து கண்டு களிப் புற்றவைகளே சங்கத்துப் பழைய அகப்பாடல்கள். காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்குதற்கு உபகாரமான உலகக் காதல் எதுவோ அந்தக் காதலின் கனிகளே அகப்பாடல்கள். தூய்மையானதும் அருமையானதும் ஆன ஓர் உணர்ச்சியை எந்தக் கால தேயங்களில் எவைகளில் வைத்து எங்ஙனம் வளர்க்க வேண்டும் என்பதை உள்ளவாறுணர்ந்தவர்கள் சங்கப் புலவர்கள்; வளர்த்துக்கொண்டிருந்தவர்கள் அவர்கள் அவர்களைத் தொடர்ந்து எதனை எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு அமைக்கவேண்டுமென்பதைப் பிறப்பிலேதானே அறிந்தவன் கம்பன். அவன் ஒன்றைத் தொட்டால் அவன் அறியாமலே அது எவ்வாறு அமைய வேண்டுமோ அவ்வாறு அமையும். அது அவனுக்குக் கொடை; தனி உரிமை அவ்விஷயத்தில் அவன் சக்கரவர்த்தி. அவன் தொட்டதொன்றை அவ்வாறே அநுவதிக்கக்கூட ஏனைய கவிஞர்களுக்கு ஏலாது. அவன் தொட்டதொன்றை உதாரணத்துக்கு எடுத்துத் தொட்டுப்பார்ப்போம்.

**பேராண்மை யென்ப தறுகண்ஒன் றுற்றக்கால்**
**ஊராண்மை மற்றதன் எஃகு.**

(பகைவர்மேற் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர் மிக்க ஆண்டன்மை யென்று சொல்லுவர்; அவர்க்கு ஒரு தாழ்வு வந்ததாயிற் கண்ணோடி அது தீர்த்துக் கோடற் பொருட்டு ஊராண்மை செய்தலே அதற்குக் கூர்மை என்று சொல்லுவர் கண்ணோடுதல் - தாட்சண்ணியம். ஊராண்மை உபகாரியாந்தன்மை. இதனைத் தழிஞ்சி என்று கூறும் புறப்பொருளிலக்கணம் தழிஞ்சி-தழுவுதல்; தோற்றவர்மேற் போர்க்குச் செல்லாமை.)

பகைவர்களைக் கண்ணோடாது கொன்று குவிக்கும் வீரன், அப்பகைவனுக்கு நினையாப்பிரகாரம் ஒன்று நேர்ந்த சமயத்தில் ஒரு கணமுந் தரியாது தானே உபகாரியாய் மாறுகின்றான். இது வீர சிகரம். இந்த அருமந்த முத்துத் திருவள்ளுவராகிய மகாசமுத்திரத்தின் அடியில் கடல்படு திரவியங்களுள், தானும் ஒன்றாய்க் கிடந்துவந்தது.

**சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை**
**நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்**

என்கின்றது கற்றறிந்தார் ஏத்துங் கலித்தொகை. திருவள்ளுவராகிய பெரிய நீருக்குள்ளே வீர சிகரமாகிய அந்த வெண்முத்தம் விளங்காமலே வாளா கிடந்துவருகின்றது. ஒருநாள் அந்தச் சமுத்திரத்தில் முழுகிய கம்பர் இந்த வீரசிகர முத்தை உற்று நோக்கினார். அது அவர் இருதயத்தில் ஊறியது. உணர்ச்சி வீறிட்டது. அந்த முத்தை எந்த ஆரத்திற் பதிப்பது? அந்த ஆரத்தை எந்த மார்பு தரிப்பது? அதற்குக் காலம் எங்கே? இடம் எங்கே? கவிச்சக்கரவர்த்திகளின் உள்ளத்தில் ஒன்று அரும்புமானால், அக்கணமே அது கனிந்துவிடுமே! கனியவேண்டுமே!

ஆனால்,

இதோ கனிந்துவிட்டது. இலங்கையர்கோன்,

**நிறங் கரிந்திட நிலம்விரல் கிளைத்திட**

நிற்கின்றான்; இராமன் எதிரில் நிராயுதபாணியாய் நிற்கின்றான்; கைலாச கிரியைப் பெயர்த்தவன்-தசக்கிரீவன்-கால் விரலினாலே நிலத்தைக் கிளைத்துக்கொண்டு நிற்கின்றான். மாமியர் மருங்கிற் சென்ற மருமகனாய்விட்டான் இராவணன். சீதைக்குத் தந்தை போன்றவன், இராமனுக்கு மருமகனாய் விட்டான். இராமன் மாமி.

மாமிக்குத் தவித்த முயல்' அடிக்க இயலவில்லை. தாட்சண்ணியந் தலைதூக்குகின்றது; தழிஞ்சி தழுவுகின்றது. இராமன் ஊராண்மை செய்கின்றான். திருவள்ளுவரில் விளைந்த வீரசிகர வெண்முத்தம் ஸ்ரீராமனது ஆரந் தாழ்ந்த மணிமார்பில் வில்லிட்டுப் பிரகாசிக்கின்றது.

ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்

தாயை மகள் வென்றாள்; புக்க அகம் பிரகாசிக்கின்றது. 'பேராண்மை என்ப தறுகண்' என்ற வள்ளுவர் தாய்; 'வள்ளல்' என்று முடிகிற கம்பர் மகள். தாயை மறந்தே போனோம். மகள் எல்லார் மனசிலுங் குடியிருக்கின்றாள் அதனால் அவள் மாசுபடவில்லை. அவள் தீண்டாத கற்புடைய செழுந்திரு

வள்ளுவர்கண்ட வீரசிகரம் உரிய சந்தர்ப்பத்தில் பொருத்தமான பாத்திரத்தில் பதிக்கப்பட்டு உயிர் துடிக்கின்றது. இதனைக் கண்டு வள்ளுவர் பெருமானுக்கு அகங் குளிராதா? கம்பரை வான்மீகி ஆசீர்வதிக்காரா? 'இன்று போய் நாளை வா' என்ற வார்த்தையை இடமறிந்து உபயோகிக்க வேறு யாரால் முடியும்?

* * *

மகாபாரதத்தில் பதினாறும் போர். வள்ளலாகிய கன்னன் சேனாதிபதி. யுத்த முனையில் உலாவருகின்றான். எதிரிகளின் புயபலங்களைப் பரிசோதனஞ் செய்துகொண்டு வருகின்றான் அவனை எதிர்ப்பட்ட நகுலன் தளர்கின்றான்.

அவனை விட்டு அப்பால் நடக்கின்றான் கன்னன். இரு கண்ணார்கள் எதிர்ப்படுகின்றார்கள். கண்ணார்கள் கிருஷ்ணார்ச்சுனர்கள். அருச்சுனன் நிறத்தாற் கரியன். அதனால், அவனுங் கண்ணனே. கண்ணன் என்பது கிருஷ்ணன் என்ற சொல்லின் சிதைவு. கிருஷ்ணம் - கருமை. கன்னன் சில பகழிகளை இரு கண்ணார் மார்பிலும் விடுத்து, 'இவர்கள் வர்ணத்தாலும் பெயராலும் பிறிவில்லாதவர்கள். அன்றி, மனசும் ஒருமைப்பாடுடையவர்கள். இவர்கள் பிரிவது அரிதுபோலும்' என்று சொல்லி யௌவனந் ததும்புகின்ற வெண்ணிறமான நகை செய்துகொண்டே அப்பாற் போகின்றான்; கண்ணார்களின் கூட்டுறவைக் கண்டு கண்களைக் குளிர் செய்துகொண்டே போகின்றான்; போர்த்தினவைப் போக்குவதற்குப் பொருத்தமானவர்கள் என்று வாயூறிக்கொண்டே போகின்றான்; இப்பொழுது இவர்களோடு வினைக்கெடச் சந்தர்ப்பம் இல்லையே என்ற முறையிற் போகின்றான்; சேனாபதி அதிகாரத்திற் போகின்றான்; அருச்சுனனின் கைக்கெட்டியது அவன் வாய்க்கெட்டவில்லையே என்ற வகையிற் போகின்றான்; அருமையான யுத்தமொன்று நிகழ்வதற்குக் கொடுத்துவைக்கவில்லையே என்ற வரிசையிற் போகின்றான்; 'என் பின்னவன் பெற்ற செல்வம் யான் பெற்ற செல்வம் அன்றோ' என்ற களிப்பும் கன்னனுக்கிருக்கலாம் போலும்.

அருண வெங்கதிர் ஆயி ரத்தவன் அன்பினா லுதவுங்
கருண னுஞ்சில பகழி யோரிரு கண்ணர் மார்பில்விடா
வருண மும்பெய ரும்பி றிந்திலர் மனனுமொன் றெனவே
தருண வாணில வெழந கைத்துரை தந்து போயினனே.

[கருணன்-கன்னன்; வருணம்-நிறம்; தருணம்-இளமை]

இப்படிச் சொல்லுகின்ற கன்னனை விளித்து,

நீ, இன்று போய் இனி நாளை வா

என்று, மகா வீரனும் கண்ணனின் தோழனுமான அருச்சுனனைக் கொண்டு சொல்லுவிக்கிறான் வில்லி. கம்பர் ஒரு இராமனைக் கொண்டு சொல்லுவித்தால், அதே வார்த்தையை அந்த இராமனையொத்த அருச்சுனனைக்கொண்டு, ஏன் நான்

சொல்லுவிக்கலாகாது என்று வில்லி கருதியிருக்கலாம் போலும்! அப்படிக் கருதினுல், கான மயிலாட என்ற பாடலைத்தான் ஞாபகஞ் செய்ய நேருமே!

கன்னன் அருச்சுனன் எதிரில் நிராயுத பாணியாய், நாணித் தலை குனிந்து இராவணன் நிலையை எய்தவில்லையே. ஒரு இராமனைப்போல் எதிரிக்கு ஊராண்மை செய்தற்கு அருச்சுனனுக்குச் சந்தர்ப்பம் ஏது? அருச்சுனன் ஊராண்மை செய்யத்தக்கவன்; அதில் ஐயம் இல்லை. அதற்குச் சந்தர்ப்பம் வேண்டாவா?

> அன்று போர்புரி சேனை யின்பதி யான வீரனை நீ
> இன்று போயினி நாளை வாவென இனிதி யம்பினுல்
> வென்றி கூர்வரி வின்மை யாலடல் வெவ்வ ரக்கரைமுன்
> கொன்ற காளையை யொத்த பேரிசை கொண்ட
> வாண்மையினுன்.

[சேனையின் பதியான வீரன் - கன்னன். அரக்கரைக் கொன்ற காளை - இராமன். ஆண்மையினுன் - அர்ச்சுனன்.]

இந்தப் பாட்டு வில்லிபாரதத்தில் நின்று வற்றுகின்றது. இரசிகர்க்கு இதயத்திற் களிப்பு உதவவில்லை. யாருங் கண்டு அதனைக் களித்ததில்லை. கழித்தனர் போலும்!

கம்பர் தொட்டதைக்கூடத் தொடுவதற்கு இந்த உலகத்தில் யாருக்கு உரிமை இருக்கிறது!

> இதனை இதனுல் இவன்முடிக்கு மென்றுய்ந்
> ததனை யவன்கண் விடல்

* * *

> இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம்
> எய்தி யரசாண் டிருந்தாலும்
> உம்பர் நாட்டிற் கற்பகக்கா
> ஓங்கு நீழல் இருந்தாலும்
> செம்பொன் மேரு அனையபுயத்
> திறல்சேர் இராமன் திருக்கதையிற்
> கம்ப நாடன் கவிதையிற்போற்
> கற்றோர்க் கிதயங் களியாதே.

# 4 எய்திய மாக்கதை

இராம கதை மாக்கதை; பெருமை பொருந்திய கதை. அதன் மகிமை அவ்வளவில் அமையவில்லை; அக்கதை எய்திய கதை; அஃதாவது, தற்செயலாகச் சம்பவித்த கதை. 'தற்செயல்' என்பதில் நிலைமொழி, 'தத்' என்றுங் கொள்ள லாம். அப்படிக் கொண்டால், 'தத்' என்பதற்கு 'அது' என்று பொருள். அது-இறைவன். ஆகவே இறைவன் செயலாக உற்பத்தியான கதை இராமகதை.

'நொய்தில் நொய்ய சொல்' என்ற பாட்டில் வருகின்றது 'எய்திய மாக்கதை' என்ற தொடர்.

இராம கதை இராமன் பிறக்க வெகுகாலத்துக்கு முன்னமே, இந்தப் பூவுலகத்தில் எய்தியது. இராமனிலும் இராமகதை மூத்தது. அங்ஙனமாயது 'தத் செயல்'. அந்த விசேஷத்தினாலே அது இயற்கை வனப்பு வாய்ந்தது; முயன்று கனிவிக்காது தானே கனிந்தது; என்றும் இளமை யானது; எவரையும் வசீகரிப்பது.

ஒருநாள் ஒரு காரணமுமின்றிச் சர்வலோக சஞ்சாரியா கிய நாரத மகாமுனிவருக்குச் சத்திய லோகத்துக்குப் போக வேண்டும் என்கின்ற ஒரு எண்ணம் உள்ளத்தில் உதித்தது. உடனே அவர் அங்கே போனார். பிரமதேவர் தேவர்களுக்குக் கதை பண்ணிக்கொண்டிருக்கின்றார். இதுவரை யாருங் கேளாத கதை அந்தக் கதை. இனி அவதரிக்கும் இராம கதை, அவர் சொல்லிக்கொண்டிருந்த கதை. அதனை நாரதருங் கேட்டார். கேட்கக் கேட்க உடம்பு பூரித்து,

இருவிலாக்களும் புடைக்கத் தொடங்கிவிட்டது நாரதருக்கு. இன்னுஞ் சற்று வேளையில் வயிறு வெடித்துவிடும். உடனே நாரதர் பூலோகத்தை நோக்கிக் கீழே இறங்கினார். ஒரு காட்டுக்குள்ளே ஒரு புற்றின்மீது இறங்கினார் நாரதர். அவருக்கு அப்பாலே இப்பாலே அசையமுடியவில்லை. 'ஓ புற்றே கேள்' என்று இராமாயணங் கதைபண்ணத் தொடங்கினார் நாரதர். சில தினங்களிற் கதைபண்ணி முடித்து விட்டார். முடித்ததும் உடம்பு இலகுவானது. நாரதர் மேலெழுந்து போய்விட்டார். புற்றுக்கு உபதேசித்த இராம கதை வீண்போகவில்லை. அதற்குள்ளே ஒரு முனிவர் தவஞ் செய்துகொண்டிருந்தவர்; அவருடைய செவிவழியே சென்று, அவர் புத்தியில் அக்கதை இருந்தது. காலங் கழியக் கழியத் தம் புத்தியில் அக்கதை இருந்ததை அப்புற்று முனிவர் மறந்தேபோனார். புற்றுக்கு வன்மீகம் என்று பெயர். அதனால். அந்தப் புற்று மூடிய முனிவருக்கு வான்மீகி என்று பெயர்

வெகுகாலத்துக்குப் பிறகு ஒரு நாள் வான்மீகி மத்தியான நேரத்தில் உச்சிக்காலக் கடன் செய்தற்பொருட்டு அயலில் உள்ள தமசை நதிக் கரைக்குச் சென்றார். சென்றவர் அந்த நதிக்கரையில் உள்ள ஒரு மரத்தில் இணைபிரியாத இரு அன்றில்கள் கூடிக் குலாவிக் களிப்பதைக் கண்டார். கண்ட அந்த க்ஷணமே மறைவிற் பதுங்கியிருந்த ஒரு வேடன் விட்ட அம்பு ஆண் அன்றிலைக் கொன்று வீழ்த்தியது. பெண் அன்றில் அதனைச் சகிக்காது உயிர் தரிக்காது பதறியது. அந்த நிலையை வான்மீகியும் அடைந்தார் அடைந்தவர், 'வேடனே, நீ க்ரௌஞ்ச மிதுனத்தில் காம மயக்கங் கொண்ட ஆண்பறவையைக் கொன்றதனால் என்றும் நற்கதியை அடையமாட்டாய்' என்ற வாக்கியத்தைச் சொன்னார். அது ஒரு சுலோகமாய் அமைந்தது. பிறகு, அநுட்டானத்தை முடித்துக்கொண்டு, வான்மீகி தமது ஆச்சிரமத்துக்குச் சென்றார். அவருடைய மனத்தை விட்டு அன்றில்கள் அகலவில்லை. அதனாலே, வேடனை நோக்கித் தான் சொன்ன அந்தச் சுலோகம் இருதயத்தில் தோன்றி நின்றது. அதன் கருத்தைச் சிந்தித்தார். சிந்தித்த போது பண்டொருநாள் புற்றின் வாயில் தமது வாயை

வைத்து நாரதர் உபதேசித்த இராமகதை அச்சுலோகத்தின் கருத்தாய்த் தோன்றியது. அந்த இராமன் யார்? அப்படி ஒரு இராமன் இன்னும் பூமிக்கு வரவில்லையே. வருங்காலத்தை நோக்கியவாறு வான்மீகி சுலோகத்தை நோக்கினார்.

'இலக்குமியை மார்பிற் கொண்டிருப்பவனே, க்ரௌஞ்ச மிதுனம் போன்ற இராவணன், மந்தோதரி என்ற இருவரில் காமமோஹிதனான அவனை (இராவணனை)க் கொன்றாய்; ஆதலால், நீ பல்லாண்டு பெரும்புகழ் பெறுவாய்'

என்ற கருத்து அந்தச் சுலோகத்தில் முளைத்தது.

'குமுத விட்ட குலவரை' என்ற பாட்டுக் கம்பராமாயணம் குதித்தற்குக் கால் கொண்டதுபோல வான்மீகம் பிறத்தற்கு அந்தச் சுலோகம் கால்கோளானது. வான்மீகி தங்குதடையின்றி வான்மீகத்தைச் செய்து முடித்தார். அவருடைய இருதயத்தினின்றும் அன்றில்கள் பறந்தன. அமைதி ஏற்பட்டது. வான்மீகி பழையபடி தவத்தில் அமர்ந்தார். காலங்கள் கழிந்தன.

ஒரு தினம் வான்மீகியின் ஆச்சிரமத்துக்கு அருகில், ஒரு இரக்கக் குரல் கேட்டது; பெண் குரல். தவங் கலைந்தது வான்மீகி அந்த இடத்தை அணுகினார். பூரண கர்ப்பவதியான சீதை தன்னந்தனியே புலம்பிக் கொண்டிருக்கிறாள், வான்மீகத்திற் சொன்ன பிரகாரம். வான்மீகி சீதாபிராட்டியைத் தமது ஆச்சிரமத்துக்கு அழைத்து வந்தார் அங்கே சீதை இரட்டைகளான இரு ஆண் குழந்தைகளைப் பிரசவித்தாள். மூத்தவன் குசன், இளையவன் லவன். குழந்தைகளாகிய குசலவர்கள் வளர்ந்து வருகின்றார்கள். ஒரு நாள் வித்தியாரம்பம் நடந்தது. வான்மீகி அவர்களுக்குத் தாம் பாடி வைத்திருந்த வான்மீகத்தைப் படிப்பித்து வருகின்றார். நிலாக்காலங்களிலே விசேஷ தினங்களில் வேறு ஆச்சிரமத்துப் பிள்ளைகளையுஞ் சேர்த்து இராம நாடகம் நடத்துவதுண்டு. குசலவர்கள் நன்றாக நடிப்பார்கள். முனிவர்கள் கண்டு களித்து ஆசீர்வதிப்பார்கள். நாடக ஆசிரியராகிய வான்மீகி குதூகலிப்பார்.

ஒரு முறை ஸ்ரீராமர் அயோத்திமாநகரத்திலே அசுவமேத யாகம் ஒன்று செய்யும்பொருட்டுத் தமது பெயரைப் பொறித்துத் திக்கு விஜயஞ் செய்து வருமாறு விட்ட யாகக்குதிரை, தன்னைப் பிடித்து அடக்கிக் கட்டுவார் இந்த நிலவுலகத்திலே யாரும் இல்லை - இராமனே ஏக வீரன் - என்ற இறுமாப்போடு அந்த வனத்திற் பிரவேசித்தது. அநுமான் முதலியவர்கள் அதனைத் தொடர்ந்து ஸ்ரீ ராமனின் ஏக வீரத்தைப் பிரசித்தஞ் செய்துகொண்டு வந்தார்கள். அப்பொழுது வில்வித்தை பயின்றுகொண்டு நின்ற குசலவர்கள் அந்தக் குதிரையைக் கண்டார்கள். கண்டதுஞ் சிங்கேறுகள் போல் துள்ளிக் குதித்துக் குதிரையைப் பிடித்து அடக்கிக் கட்டி, அதன்மேல் ஏறிச் சவாரி செய்யவுந் தொடங்கிவிட்டார்கள் மாறி மாறி ஏறி ஓயாது சவாரி செய்ததினால் குதிரை இளைத்துக் களைத்துப்போய் விட்டது. பாதுகாப்புக்கு வந்த குரங்குகளை அடித்துத் துரத்திவிட்டார்கள். அநுமானுதியர்கள் வந்தார்கள். அவர்களையும் அடித்து விழுத்திவிட்டார்கள் சத்துருக்கன் இலட்சுமணன் பரதன் யாவரும் எதிர்த்து மூர்ச்சித்து விழுந்துவிட்டார்கள். இறுதியில் இராமனும் எதிர்த்து மாண்டவன் போலானான். எதிர்ப்பாரின்றி வாகை சூடிய இரு வீரர்களும், 'யாவராயினும் உயிர் தப்பினார் உளரோ' என்று. போர்க்களத்தை ஒரு பார்வை பார்த்தார்கள். தூரத்தே ஒரு குரங்கு. சற்றே தலை உயர்த்தித் தம்மை உற்று நோக்குவதைக் கண்டார்கள். கண்டவுடன் அவ்விடத்துக்கு ஓடிப்போய், 'அடே இந்தக் குரங்கு சாகவில்லை' என்று சொல்லிக் கொண்டு, அதனை வாலிற் பிடித்து, இழுத்துக்கொண்டு வந்து, ஆச்சிரம வாய்தலில் உள்ள ஒரு மரத்திற் கட்டி, இது வான்மீகத்திலே, கடல்கடந்து சீதையைத் தேடின குரங்குபோன்ற குரங்கடா' என்று சொல்லி விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாவம்! மகாவீரனான அநுமான், அந்தக் குழந்தைகளின் வீரத்துக்கு மடங்கி, அவர்கள் சொல்லியபடியெல்லாம் செய்துகொண்டு அந்த ஆச்சிரம வாய்தலில் இருக்கின்றான் அப்படி அநுமான் இருக்கும் போது குசலவர்களில் ஒருவன், அம்மா, 'இராமாயணத்துக் குரங்கு போன்ற ஒரு குரங்கம்மா, வந்து பாரம்மா', என்று

சத்தமிட்டான். அப்பொழுது சீதாபிராட்டி உள்ளே யிருந்து வெளியே வந்தாள். குசலவர்கள் துள்ளிக் குதித்து, 'அநுமான் போன்ற குரங்கம்மா', என்று அநுமானைச் சுட்டிக்காட்டிக் கூத்தாடினார்கள் பிராட்டி அநுமானை நோக்கினாள்; நோக்கியதுதான், அறிவு மயங்கி, 'என்னப்பா செய்தீர்கள்; அதே அநுமான் தானே' என்று சொல்லிக் கொண்டு நிலத்தில் விழுந்து புரண்டாள் அநுமான் பிராட்டி யின் பாதங்களைச் சிரமேற் சூட்டி அழுதான்; குழந்தை களின் வீரத்தை மெச்சி உச்சி குளிர்ந்தான்; கூத்தாடினான்; பிராட்டியைத் தேற்றினான். அச்சமயத்தில் வான்மீகி வந்தார். சீதை அவர் காலடிகளில் வீழ்ந்து புலம்பினாள். வான்மீகி மந்திர வலியால் அந்த யுத்தத்தில் இறந்தவர்களை-மயங்கி மூர்ச்சித்தவர்களை-யெல்லாம் எழுப்பினார் இராமனுந் தம்பிமாரும் வான்மீகியை வணங்கினார்கள். பிராட்டி இராமனடியில் வீழ்ந்தாள். இராமனுந் தம்பிமாரும் குச லவர்களை மாறி மாறிக் கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீரால் முழுக்காட்டினார்கள்.

வான்மீகியின் ஆசீர்வாதத்துடன் எல்லாரும் புஷ்பக விமானத்தில் இவர்ந்து அயோத்திக்குச் சென்றார்கள் குசலவர்கள் வான்மீகியைப் பிரார்த்தித்து ஆச்சிரமத்தி லிருந்த வான்மீகத்தை அயோத்திக்குக் கொண்டுவந்தார்கள் அது காலங் கழியக் கழிய மனிதர்களின் அறியாமை வசப்பட்டுப் பிறழ்ந்தது. தென்னாடு செய்த புண்ணிய விசேஷத்தால், வான்மீகிக்கு இராமாயணம் பாடுகிற சந்தர்ப்பம் 'தத் செயல்' ஆக வந்தெய்தியது போல, கம்பனுக்கும ஒரு சந்தர்ப்பம் எய்தியது கவிதை வலியினாலே கற்பனுலோகம் ஒன்றைச் சிருஷ்டி செய்து, அதிலிருந்து கொண்டு உண்மை வான்மீகத்தை ஞாபகஞ் செய்யு முகமாக-குசலவர் படித்த இராமாயணத்தை ஒருவாறு பார்க்கும் முகமாக-வம்பு இராமாயணம் ஆகிய கம்பராமாயணத்தைக் கம்பன் தந்தான்.

**தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை**
**சடையன் வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே**

என்று கம்பன் சொல்லுவது செய்ந்நன்றியறிதலாகிய வெறும் உபசாரம். உண்மையிற் கம்பன் இருந்து பாடிய உலகம் கற்பனை உலகம். அவன் பாடிய கதை வெறுந் 'தோமறு மாக்கதை' மாத்திரமன்று; எய்திய மாக்கதை. 'தத் செயல்' ஆகப் பாடச் சந்தித்த கதை. அதனாலேதான், வான்மீகிக்குக் காப்புப் பாட்டுக்கு முந்தி அன்றிற் பாட்டு எய்தியதுபோல, கம்பனுக்கும் காப்புக்கு முந்திக் 'குமுதனிட்ட' குரங்குக் கவி எய்தியது.

எந்தக் காவியம் தத்செயலாய் எய்துகின்றதோ அந்தக் காவியம் உயிர்பெற்று வாழுகின்றது. அது செந்தழலால் வேவாது; சுடச் சுடரும்.

# 5 ஆறு

காவியங்களின் தொடக்கத்திலே மழை பெய்து ஆறு பெருகுவது பரம்பரை வழக்கம். அந்த வழக்கப் பிரகாரம் கம்பரிலும் ஒரு ஆறு பெருகுகின்றது. அந்த ஆற்றின் பெயர் சரயு.

அதன் பெருக்கம் இது:

இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது;
சரயு என்பது; தாய்முலை அன்னது; இவ்
வுரவு நீர்நிலத் தோங்கும் உயிர்க்கெலாம்.

சூரிய குலத்திலே உலகப் பிரசித்தர்களான எத்தனையோ பல வேந்தர்கள் உதித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒழுக்கங்கள் பரவு நல் ஒழுக்குக்கள்; உலகம் துதித்து உச்சி மேற் கொள்ளும் ஒழுக்கங்கள்.

சரயு என்பது - சரயு என்று பெயர்கூறப்படும் இந்த ஆறு, இரவி குலத்து வேந்தர்தம் பரவு நல்லொழுக்கு இன் படி பூண்டது - சூரிய குலத்திற் பிறந்த அரசர்களின் உயர்ந்த நல்லொழுக்கங்கள் தன்பாலெடுத்த பிரதிருபங்களாகத் தான் அந்த நல்லொழுக்குப் பிரதிருபங்களுக்கு மூலருபமாய் அமைந்தது.

* * *

ஆரூரர், சிவபெருமாளுகிய பிராமணர் கையி லிருந்த ஓலையைப் பறித்துக் கிழித்தபோது அந்தச் சிவப்பிராமணர்,

'இவன் கிழித்த ஓலை மூல ஓலையைப் பார்த்து எழுதிய படி ஓலை மூல ஓலையோ என்னிடத்தில் இருக் கிறது' என்றார்

* * *

சூரிய குலத்துப் பிறந்த அரசர்களின் நல்லொழுக்கங்கள் படியோலைகள். சரயு அந்த ஒழுக்கப் படிகளின் மூல ஓலை

இரவி குலத்து வேந்தர்களின் நல்லொழுக்கங்கள் இனிய படியோலைகளாய்த் தன்னை அலங்கரிக்க அவற்றைத் தனக்கு அணிகலங்களாகப் பூண்டு விளங்குகின்றது சரயு.

இரவி குல திலகங்கள் சரயுவின் நன்மக்கட்பேறுகள்; சரயுவின் நன்கலங்கள் அந்த நன்கலங்களைப் பூண்டு மங்கலமான மனைமாட்சி நடாத்துகின்றது சரயு.

**மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு**

ஒரு இராமன் பிறன்கடை நின்ற பேதைகளிற் பேதை யான ஒரு இராவணன் நிராயுதபாணியாயினது கண்டு இளகி,

**இன்று போய்ப் போர்க்கு நாளைவா**

என்றால் அதில் நூதனம் இல்லை. இராமனின் ஒழுக லாறு சரயுவின் படியாறு

**ஆரரூர் மூழ்கியும் ஆக்கம் இழந்தும்**
**வாரி சுருங்கியும் வாய்மை நிறுத்தித்**
**தாரணி ஆள்அரிச் சந்திரன்**

என்று கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் உருகிக் கண்ணீர் வடிக்கின்ற அரிச்சந்திரன்,

'கதியிழக்கினுங் கட்டுரை இழக்கிலேன்' என்றால், அது சரயுவின் விசேஷமே. அரிச்சந்திரனுடைய சத்திய ஒழுக்கமும் சரயுவினின்றும் உதித்த இனியதொரு படியோலையே. அரிச்சந்திரன் இரவி குலத்தில் உதித்தவன். அவனையும் அவன் பெற்றோரையும் வளர்த்தெடுத்தது சரயு நதியே

சிபி புறவுக்கிரங்கினான் அவனும் சரயுவின் புதல்வனே.

**ஆதித்தன் குலமுதல்வன் மநு**

இரவி குலத்து முதல் அரசன் மநு நீதிகளை வகுத்துத் தர்மசாத்திரஞ் செய்தவன் அவன்

**எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்**
**செப்பிய வள்ளுவர்தாம் செப்பவரு - முப்பாற்குப்**
**பாரதஞ்சீ ராம கதைமநுப் பண்டைமறை**
**நேர்வனமற் றில்லை நிகர்.**

முப்பால் திருவள்ளுவர் குறள். அதற்கு இந்த நிலவுலகத்திலே 'நிகர் மற்று இல்லை' - திருக்குறளுக்கு உவமையாகச் சொல்லுதற்கு வேறு நூல் இல்லை. நேர்வன பாரதம், சீராமகதை, மநு, பண்டைமறை - திருக்குறளுக்கு ஒப்பாகச் சொல்லக்கூடியவை மகாபாரதம், இராமாயணம், மநுஸ்மிருதி, பழைய வேதங்கள் என்னும் இவைகள் மாத்திரமே என்கிறார் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆகிய சங்கத்துச் சான்றோர். திருவள்ளுவ தேவருக்கு உவமையாக ஒருவரைச் சொல்லுவதானால், அவர்,

**மநு**

என்கின்றார் அந்தப் புலவர். திருவள்ளுவர் மனிதர்களின் பொதுத் தர்மங்களைச் சொன்னார். இருவர் ஒரே குற்றஞ் செய்யலாம். தண்டனை அவரவர் தகுதிக்கேற்ப மாறுபடும். நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை போதும் உலக்கையே போதாப் பெண்டாட்டியும் உண்டு. 'கூறாமற் சந்நியாசங் கொள்' என்று ஔவையாரும் அருளியிருக்கின்றார். மநுச் செய்தது ஒரு குலத்துக்கு ஒரு நீதி. குலம்

இரண்டு. 'நீதி வழுவா நெறி முறையில் இட்டார் பெரியோர். இடாதார் இழிகுலத்தோர்' நீதியில் தன் வாழ்க்கையை இட்டுக்கொள்ளுகிறவர்கள் உயர்குலம், அவ் வாறு இட்டுக்கொள்ளாதவர்கள் இழிகுலம் என்கிறார் ஔவையார்.

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்க ணையப் படும்

என்பது வள்ளுவர் வாக்கு.

'குலநலமுடையவனாய் வருகின்றவன்கண்ணே ஈர மின்மை உளதாயின், அவனை அக்குலப்பிறப்பின்கண்ணே ஐயப்படும் உலகம்', என்பது பரிமேலழகர் உரை. நார்-ஈரம். ஈரமாவது அன்பு. 'குலத்தளவே யாகுங் குணம்' என்பது இங்கே சிந்திக்கத்தக்கது. நீதிக் குலம் உயர் குலம். அநீதிக் குலம் தாழ்குலம் இவை முறையே வைதிகம் அவைதிகம் எனப்படும் வைதிகர்களுக்கே நூல் செய்வது. மனித வர்க்கத்திலே விலங்கு வர்க்கமும் உண்டு. அந்த வர்க்கம் அவைதிகம் அவைதிகத்துக்கு நூல் செய்வதில்லை அந்தப் பிறப்பே பாழ். 'கதிப்பாற் செல்ல ஏது நெறி' என்று விசாரிக்கக் கூடியவர்களுக்கே நூல் பயன்படும். 'காணாதாற் காட்டுவான் தான் காணான்'. வள்ளுவர் வைதிக உலகத் துக்குப் பொது நூல் செய்தார். மநு அந்த உலகத்திலே பலவேறு படித்தரங்கள் கண்டு சிறப்பு நூல் செய்தார் விதிகளுட் சிறப்புவிதி நுண்ணிது. மநுவின் நுண்மையை மதிக்க வல்லவர் ஒருவர் இருந்தால் அவர் வள்ளுவரே

அரக்கரோர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மநுநெறி கூறிற் றுண்டோ

என்று மநு நெறியைப் போற்றுகின்றான் வாலி. வள்ளுவ ருக்கு உவமை பேசுகின்ற மநு நெறியைத் தந்த அந்த மநுவை இங்ஙனம் வளர்த்ததுஞ் சரயுவின் நீரே.

தாய் முலை அன்னது

'உரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்' - பரந்த கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்து உயிர்வர்க்கங்களுக்குக் கூடத் 'தாய்முலை யன்னது'; பரவு நல்லொழுக்கங்களை வருவிப்பது.

மாந்தாதா சூரியகுலத் துதித்த திலகம். அவன் ஆண்ட காலத்திலே, பசுவும் புலியும் ஓர் துறையில் நீர் பருகின. சரயு உலா வருகின்ற நாட்டில் இது ஒரு நூதனமா!

சரயு,

தாதுகு சோலை தோறும் சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்க டோறும்
ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே.

சரயு உயிர்களுக் குயிராய் உலாவருகின்றது. சரயு என்ற வார்த்தை மானச சரசுவில் தோன்றியது என்னும் பொருளுடையது. மானச சரசு கைலாச கிரியிலே குபேர வனத்தில் உள்ளதொரு வாவி. அது, பிரமாவின் மனத்தில் உதித்தமையால், 'மானசம்' எனப்படுகின்றது. கைலாசத்திற் பிறந்த சரயு, இமயத்திற் பிறந்த கங்கையினும் மகிமை வாய்ந்தது.

உலகை நேர்செய்ய அவதரித்த நேரு உதித்த நாடு சரயு பெருகிய நாடு;

நாகிளங் கமுகில் வாளை தாவுறு கோசல நாடு.

# 6 குலஞ்சுரக்கும் ஒழுக்கம்

ஆறில்லா வூருக்கு அழகு பாழ்.

நாடு நாடாயிருப்பதற்கு இன்றியமையாதது ஆறு. ஆற்று வளம் படைத்த நாடு,

நாடா வளத்தது

அஃதாவது, தன்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பால் தானே சென்றடையுஞ் செல்வத்தை உடையதா யிருப்பது. நாட்டைப்பற்றி இந்தக் கருத்து ஔவையாருக்கும் திருவள்ளுவருக்கும் ஒத்த கருத்து. ஔவையாருந் திருவள்ளுவருந் தாமே உலகத்தின் இரு கண்கள் அந்த இரண்டு கண்களும் ஒத்துப் பார்த்து முடிபு கட்டின கருத்து மேற்குறித்த நாட்டைப் பற்றிய கருத்து. ஆகவே, இந்தக் கருத்து அருமந்த கருத்து. இந்த அருமந்த கருத்திலும் கைவைத்துவிட்டான் கம்பன். புதுவதொரு நாட்டுவளம் பேசுகின்றான் அவன். 'ஆறில்லா வூருக் கழகு பாழ்' என்ற ஔவை வாக்கைச் சிரமேற் கொள்கிறான் கம்பன். அனால் நாம் சொல்லுகிற ஆறு அன்று, அவன் சொல்லுகிற ஆறு. அந்தப் புதுவது ஆறு,

'ஒழுகலாறு'.

ஔவையாருடைய ஆறு, சில சமயத்தில், 'பெருக்கற்று அடி சுடும்.' ஆனால், வேண்டும்போது, 'ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும்'.

கம்பனுடைய ஆறும் நல்குரவால் நலிந்து பெருக்கு அற்றுப் பார்ப்பவர் கண்களைச் சுடும். ஆனால், சற்றே அணுகி ஒன்று வேண்டிப்பார்த்தால் ஊற்றுச் சுரந்து இடையறா தொழுகி உலகத்தை உருக்கிக் கண்ணீர் ஆறாகச் செய்யும்.

ஒரு நாள்,

**அந்தநாள் வந்திலே அருந்தமிழ்ப் புலவ**

என்று தமது கண்ணீர் ஆறாகும்படி, ஒரு வள்ளலின் வாக்கிற் சுரந்து, இன்றைக்கும் ஒழுகிக்கொண்டிருப்பதும், கம்பன் வர்ணிக்கின்ற ஒழுகலாறே.

'வருபுனலும் வாய்ந்த மலையும் நாட்டிற்கு உறுப்பு' என்கின்றார் தெய்வப்புலவர். இடையறா தொழுகி வருகின்ற ஆறும் அந்த ஆறு சுரப்பதற்கு வாய்ப்பான மலையும் நாட்டுக்குச் சிறந்த அவயவம் என்பது அவர் கருத்து

கம்பனுந் தனது ஒழுகலாறு சுரப்பதற்கு வாய்ப்பான மலை வேண்டுமென்கிறான். அந்த மலை சாதாரண மலையன்று. மிக உந்நதமான மலை அது குல மலை; நற்குலமாகிய மலை; குடிப்பிறப்பாகிய மலை.

இனிக் கம்பனுடைய ஒழுகலாறு நல்ல குலமலை சுரந்து இடையறா தொழுகிப் பெருக்கெடுக்கட்டும் அது சுரந்து பெருகுமாறு பின்வருமாறு :

**கலஞ்சு ரக்கும் நிதியங் கணக்கிலா**
**நிலஞ்சு ரக்கும் நிறைவளம் நன்மணி**
**பிலஞ்சு ரக்கும் பெறுதற் கரியதங்**
**குலஞ்சு ரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்**

கம்பனுடைய நாட்டிலே உள்ள குடிகளுக்குக் கணக்கில்லாத நிதியங்களை மரக்கலங்கள் சுரக்கின்றன; நிறைந்த வளத்தை நிலஞ் சுரக்கின்றது; நல்ல மணிகளைப் பிலம் (சுரங்கம்) சுரக்கின்றது; உயிரினும் ஓம்பப்படுவதாகிய ஒழுகலாற்றைப் பெறுதற்கரிய தூய குலமாகிய மலை சுரக்கின்றது.

பெறுதற் கரியதங்
குலஞ்சு ரக்கும் ஒழுக்கங் குடிக்கெலாம்

என்று குல மலையும் அதிற் சுரக்கின்ற ஒழுகலாறும் பேச வந்த கம்பன் மேலும் மூன்று சுரப்புக்கள் பேசிப்பாட்டைப் பூர்த்திசெய்திருக்கிருன்

'பருமரத்தைப் பற்றிய பல்லியும் பாழ்போகாது' என்பது பழமொழி. குலச்சுரப்பாகிய பருமரத்தைப் பற்றிக் கொண்டு ஏனைய சுரப்புக்களாகிய மூன்று பல்லிகளும் உயிர்வாழ்கின்றன. ஏனைய சுரப்புக்கள் குலச்சுரப்போடு கூடாதவழி வெகு சிறப்படையலாம் இங்கே, குலச்சுரப் புக்கு எதிரில் ஏனைய சுரப்புக்கள் எம்மாத்திரம்!

நெடியோன் பெருமையின் பெருமையைக் குறியோர் குறுமைகளின் அயலில் வைத்துக் காட்டுவது கவி மரபு. கலமும் நிலமும் பிலமும் குலச்சுரப்பின் நெடுமையைக் கவியில் முன்னணியில் காட்ட பெருகிக்கொண்டிருக்கின்றன. அவ்வாற்ருல் அவையும் அக்கவியிற் சுரப்பனவாகுக

ஒழுகலாற்றைச் சுரக்கின்ற குலமலைப் பெருமை ஒப்புயர் வில்லாதது. ஆறுகள் பெருகுகின்ற சாதாரண நில மலைக ளினும் ஒழுகலாறு பெருகுகின்ற குலமலை மிக் மிக உயர்ந் ததுதான் என்பதைத் திருவள்ளுவ தேவரும் ஒப்புக்கொண் டிருக்கின்ருர்.

இலமென்னு மெவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே உள.

என்பது வள்ளுவர் ஒப்புக்கொண்ட வாக்கு.

யான் இப்பொழுது வறிஞன் ஆயினேன் என்கின்ற துன்பந்தரு மொழியைக் கூருமலே கொடுத்தல், குடிப்பிறந் தான் கண்ணே தான் உண்டு. எவ்வம்-துன்பம். 'இலன் என்னும் எவ்வம்' - பெருக்கற்ற நிலை. ஆறு பெருக்கற்ற நிலையில் அடியைச் சுடும். ஆனுல், சிறிதே மணலைத் தொட்ட வழி ஊற்றுப் பெருக்கால் உலகை ஊட்டும்.

குடிப்பிறப்புப் பெருக்கற்ற நிலையிலும் அணுகுவாரைச் சுடுவதில்லை. இரப்பாரையோ விருந்தினரையோ முகந்திரியச் செய்வதில்லை. அவர்கள் தமது எவ்வத்தைக் கூருமலே

தூரத்தே வரும்போதே, அவர்களைக் கண்ட அந்த க்ஷணமே குடிப்பிறப்புத் தன் எவ்வத்தை மறைத்துக்கொண்டே சுரக்கத் தொடங்கிவிடும். பெருக்கற்று அடியைச் சுடுகின்ற ஆறு - மண்ணைத் தொட்ட வழிச் சுரக்கின்ற ஆறு, அச் செயல்கள் இல்லாமலே குடிப்பிறப்புச் சுரக்கின்ற ஒழுக லாற்றுக்கு எம்மாத்திரம்!

இந்த ஒழுகலாறு பெரிய புராணத்திலே, இளையான் குடிமாற நாயனார் மனையிலே ஒரு நாள் அர்த்த யாமத்தில் மழை பொழியும் வேளையில் 'எவ்வமாகிய வறுமையே' குடியிருந்த அந்தக் குடிசையில் விருந்தொன்றைக் கண்ட சமயத்தில் சுரக்கத் தொடங்கியது; இன்றும் பெருகிக்கொண்டேயிருக்கின்றது. அது என்றும் பெருகுவதாக.

இப்படிப்பட்ட ஒழுகலாறு சுரக்கும் நாட்டில் விளை புலங்களுக்கு வித்தும் இட வேண்டுங்கொல்லோ!

அந்த நாட்டிலே,

**வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்**
**விருந்து மன்றி விளைவன யாவையே**

விருந்தோம்பலும் வறியார்க் கீதலுமே அந்த நாட்டு விளைவுகள்

ஈதலும் விருந்துமாகிய விளைவு மிக்க நாட்டிலே குடிப் பிறப்பாகிய குலமலையில் ஒழுகலாறு சுரந்துகொண்டிருக்கு மாயின்,

வில்லேருழவன் ஒருவன், 'இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா' என்ற குரல், சுரம் பெருகுந்தானே. அம்மட்டோ, அவன்,

**என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ**

என்பான். ஒரு தாய் தன் மகனைப் பார்த்து, "உன்னிலும் பார்க்க உன் சிறியதாயின் மகன்தான் 'நிறை குணத்தவன்'; நின்னினும் நல்லன்; குறைவிலன்; அவன் அரசு புரிவது நாட்டுக்கு நலன்" என்பாள். ஒரு சிறிய தாயை ஒரு கூனி

கண்டு, ஒருவனைக் குறை கூறினால் அந்த ஒருவன் தான் பெறாதவனே யாயினும், அவனைச் சுட்டி, அந்தச் சிறிய தாய். 'இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ' என்பாள்; கூனியை உறுக்குவாள்.

மற்றொரு சிறிய தாய் தன் மகனை நோக்கி அவனுக்கு அவன் அண்ணனைக் காட்டி,

'மகனே இவன் பின் செல்; தம்பி என்னும் படியன்று; அடியாரின் ஏவல் செய்தி; மன்னும் நகர்க்கு இவன் வந்திடின் வா; அது அன்றேல், முன்னம் முடி', என்பாள்; என்று சொல்லும்போது முலைசுரப்பாள்.

'ஸ்ரீ ராமனுக்குத் தம்பி யென்ற முறையில் அவனைத் தொடர்ந்து செல்லாதே; அவனுக்கு ஏவலன் என்ற கருத்தில் அவனுடன் செல்; அந்த இராமனுக்குச் சொல்லால் சொல்ல ஒண்ணாதது ஒன்று நிகழ்ந்தால், அதைத் தடுக்க உன்னால் இயலாது போனால், அந்த ராமன் முடிய முன்னமே, உன் முடிபு என் செவியிற் கேட்க வேண்டும்' என்று இலக்குவனுக்குக் கட்டளையிட்டவள் சுமித்திரை; அப்படி அவள் கட்டளையிடும்போது அவள் மார்பு பால் சுரந்தது. கண்ணைப் பற்றிப் பேசுவது மிகை.

இப்படிப்பட்ட தாய்களைத் தம்பியைத் தமையனைத் தருகின்ற நாட்டிலே,

**பெறுதற் கரியதங் குலஞ்சுரக்கும் ஒழுக்கங் குடிக்கெலாம்.**

# 7 செவி நுகர் கனிகள்

ஆற்று வளம் படைத்த நாட்டிலே, கனிதரும் மரங்களும் 'கவின் தரும் புஷ்பச் செடிகளும் கொடிகளும்' உயர்ந்து வானத்தை அடக்குகின்ற பெரிய விருட்சங்களும் என்றும் விருந்துகளாய்ச் செழித்து வளர்ந்து கண்களைக் குளிர் செய்யும்.

சீவக சிந்தாமணியிலே ஒரு வளநாடு வருகின்றது. அதற்குப் பெயர் ஏமாங்கதம். அங்கே ஒரு தெங்கம் பழம் விழுகின்றது. அதற்கு எத்துணை வரவேற்புக்கள் நடக்கின்றன! பின் வருகின்ற பா அந்தத் தெங்கம்பழம் இந்த நிலவுலகத்தை நோக்கியபோது அதனை வரவேற்ற வரவேற்புப் பா.

> **காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகினெற்றிப்**
> **பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து**
> **தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்**
> **ஏமாங் கதமென்று இசையால் திசைபோய துண்டே.**

*[காய்மாண்ட தெங்கு - காய்மயமான தென்னை; தொடை - கமுகந்தாறு; தேன் - கண்ணுக்கினிமை; வருக்கை - பலா.]*

தெங்கின் பழம் ஒன்று கீழே விழத் தொடங்குகின்றது. அந்த அதிர்ச்சியிலே இனிய கமுகந்தாறு கீறுகின்றது பலாப் பழங்கள் போழுகின்றன. தேமாங்கனிகள் சிதறுகின்றன. வாழைப் பழங்கள் சிந்துகின்றன. இந்த விசேஷத்தினாலே ஏமாங்கத நாட்டின் இசை அட்டதிசையினும் பரவாநின்றது. இனித் தமிழ்நாட்டை நோக்குவோம். அது ஏமாங்கதத்துக்குச் சற்றேனும் இளைத்ததன்று. அதுதான்,

**பங்கப் பழனத் துழுமுழவர் பலாவின் கனியைப் பறித்த**
**தென்று**
**சங்கிட் டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந்**
**தமிழ்நாடு.**

*உழவர்கள் வயலில் ஊருகின்ற சங்குகளைத் தாக சாந்தியை முன்னிட்டுப் பலாக்கனியைப் பறித்ததென்று சாட்டுவைத்துக் குரங்குக் கெறிகின்றார்கள். குரங்குகள் இளநீரைப் பறித்தெறிந்து உழவர்கள் கருத்தைச் சாந்தி செய்கின்றன. ஏமாங்கதத்தில் தெங்கம்பழம் தேடுவாரற்றுத் தானே விழுகின்றது. தமிழ்நாட்டின் இளநீரைக் குரங்குகள் பறித்தெறிகின்றன. அவை தாகசாந்திசெய்து பயன்படு கின்றன.*

*இனி நமது நாட்டுக்கு வருவோம்.*

**அஞ்ச ரோருகப் பள்ளியின் மீமிசை**
**அன்ன வன்னக் குழாம்விளை யாடும்**
**துஞ்சு மேதி சுறுக்களைச் சீறச்**
**சுறுக்க ளோடிப் பலாக்கனி கீறி**
**இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்**
**ஈழ மண்டல நாடெங்கள் நாடே.**

*தமிழ் நாட்டிலே பலாக்கனியைப் பறித்ததென்று குரங்கு வாளா குற்றஞ் சாட்டப்படுகின்றது. ஈழநாட்டிலே வெள் ளத்துள் எதிரேறுஞ் சுறு மீன்கள், பலாக்கனிகளைக் கீறு கின்றன; மேதிகள் சீறிய கோபத்தைப் பலாக்கனியில் தீர்க் கின்றன.*

*இந்த நாடுகளைப் பார்த்த நாம் இனிக் கம்பநாட்டுக்குச் செல்வோம். அது,*

**நாகினங் கமுகில் வாளை தாவுறு கோசல நாடு.**

*கோசலநாட்டிலே,*

**தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்**
**கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்து**
**நோக்கத்**
**தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்**
**வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ.**

தண்ணிய சோலைகளிலே மயில்கள் தோகை விரித்து ஆடுகின்றன. தாமரைகள் விளக்குகளை ஏந்துகின்றன. முகில்கள் முழவம் ஒலிக்கின்றன. குவளைகள் கண்களை விழித்து அக்காட்சிகளை நோக்குகின்றன. தெள்ளிய நீர்த் திரை காட்சிகளை மாற்றி மாற்றித் திரையிடுகின்றது. வண்டுகள் தேனிசை பிழிந்து மகரயாழ் செய்கின்றன. இந்த வைபவங்களுக்கு நடுநாயகமாக மருதம் என்கின்ற இளவரசி கொலுவிருக்கின்றாள்.

சேலுண்ட வொண்க ணாரிற் றிரிகின்ற செங்கா லன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும் பண்ணை

தடாகங்க்ளிலே தாமரைப் பள்ளிகளில் அன்னப் பிள்ளைகள் கண்வளர்கின்றன. சேற்றிலே கால்புதையுண்ட மேதிகள் கரையேறுமலே தங்கன்றுகளை நினைக்குந்தோறும் பால் சோருகின்றன. சோர்ந்த பால் திரையிடுகையினலே அன்னப்பிள்ளைகள் நீர்நீக்கிப் பருகுகின்றன. பருகிய பிள்ளைகள் துயில் கூடும்படி பச்சைத் தேரைகள் இலை மயமாயிருந்து தாலாட்டுகின்றன. அன்னத் தாய்கள் செல்வச் சீமாட்டிகள் போலே தம்வயமாய் உலாவிப் பொழுது போக்குகின்றன.

பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வா யொக்கும் களையலாற் களையி லாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகிலா துலோமி நிற்பர்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர்
பெற்றால்

கோசல நாட்டு வயல்களிலே ஒரேயொரு குறை. வயல்களிலே களைகள் களைவதில்லை. களை களைபவர்கள், 'உண்கள் வார் கடைவாய் மள்ளர்'-உண்ட கள் மள்ளர்கள் வயிற்றை நிரப்பிக் கடைவாய் வழியே ஒழுகுகின்றது. அதனலே, களைகளாகிய குவளைக்ள் கமலங்கள் ஆம்பல்கள் கடைசியர்களாகிய தங்காதலிகளின் கண் கை கால் முகம் வாய் முதலிய உறுப்புக்களாய்க் காட்சியளிக்கின்றன. காதலர்க

ளாகிய மள்ளர்களால் காதலிகளின் உறுப்புக்களை எப்படிக் களைய முடியும்! களையாமலே உலோபஞ்செய்து காலங்கழிக் கின்றார்கள் அவர்கள். நவீன காதல் நாடகங்கள் கோசல நாட்டு வயல்களிலும் வரம்புகளிலும் உற்பத்தியாகின்றன.

பெண்கள்பால் வைத்த நேயம்
பிழைப்பரோ சிறியோர் பெற்றால்

கீழோர்களுக்குப் பெண்ணென்றால் போதும்! பிறகு அவர்கள் தப்பிப் பிழைப்பது அரிது களை களையாமை பெரிய குற்றமன்று. அற்ப காதற் கதைகளாகிய களைகளை எழுதிக் குவித்துவிடுகின்றார்களே, அதுதான் உய்தியில் குற்றம் அது நிற்க.

ஏமாங்கதம் முதலிய காவிய நாடுகளுக்குச் சற்றேனும் எடை விடாது நிற்கின்றது கோசல நாடு. ஆனால், இது கம்பர் காட்டிய மேற்புற நாடு; வெளி நாடு.

மனத்தை அடிமனம் என்றும் மேல்மனம் என்றும் இரண்டாக வகுப்பார்கள் உளநூல் வல்லவர்கள் அவ்வாறே கம்பரும் வெளிநாடு உள்நாடு என்று நாட்டை இரண்டு படுத்தியிருக்கின்றார் போலும்! மனத்தில் அடிமனமே பெரிதும் ஆராயற்பாலது. அது போல, நாட்டில் உள்நாட்டிரகசியமே பெரிதும் இரசிக்கற்பாலது.

கம்பருடைய உண்ணாட்டிலேதான், உயிரினுஞ் சிறந்த ஒழுகலாறுகள் குடிப்பிறப்பாகிய குல மலைகளிலே பெருக் கெடுத்தோடுகின்றன. அந்த ஆறுகளின் கரையோரங்களில் மற்றெக் காவியங்களினுங் காணமுடியாத கனிதரும் மரங் களைக் கம்பர் நாட்டியிருக்கின்றார். அந்த மரங்களின் கனிகள் மனசுக்கினியவைகள்; செவிகளால் நுகரப்படு பவைகள்; என்றைக்கும் இனிப்பானவைகள். இப்படிப் பட்ட கனிகளைத் தரும் மரங்கள், பின்வரும் பாட்டில், பின்வரும் அடியில் வளர்கின்றன. அப்பாட்டு இது :

கோதைகள் சொரிவன குளிரிள நறவம்
பாதைகள் சொரிவன பனுமணி கனகம்
ஊதைகள் சொரிவன உயிருறு மமுதம்
காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்

கோதைகளாகிய மாலைகள் தேனைச் சொரிகின்றன பாதைகளாகிய மரக்கலங்கள் மணியும் பொன்னுஞ் சொரிகின்றன. ஊதைகளாகிய காற்றுக்கள் உயிருக்கு அமுதஞ் சொரிகின்றன. இந்தக் கோதைகள் பாதைகள் ஊதைகள் எந்தக் காவியங்களிலேயும் சொரியவேண்டியவைகளைச் சொரியலாம்; நூதனம் இல்லை. செவிகளால் நுகரப்படுங் கனிகளைக் காதைகளாகிய தருக்கள் சொரிந்துகொண்டு நிற்கின்றனவே, அங்ஙனஞ் சொரிய வைத்தது, கம்பரின் காவிய சித்திரம்; தனிச் சித்திரம் !

பாரத நாட்டுப் பழம் பெருமைகள் பழுத்துத் தொங்கும் கற்பகதருக்கள், அந்த நாட்டுக் காதைகளே.

'கேளும் ஜனமேஜய மகாராஜாவே' என்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கிய காதை பாரத நாட்டின் உயிர்ச்சுவாசமாய் இன்றும் நின்று நிலவுகின்றது.

'கேளுங்கள் நைமிசாரணிய வாசிகளே' என்று சூதமா முனிவர் பாரத நாட்டுக் காடுகளிலே சொல்லிய காதைகள் பதினெண் புராணங்களாய்ப் பரந்து கிடக்கின்றன.

கங்கைக் கரைகளிலும் இமாலயக் குகைகளிலும் பிறந்த எண்ணில்லாத வேதக் கதைகள் உலகம் முழுவதிலும் ஒலித்துக்கொண்டே யிருக்கின்றன

இராமாயணமாகிய இனிக்கிற இந்தக் காதை, வன்மீகமாகிய ஒரு புற்றைப் பிளந்துகொண்டு வந்தது. பெரிய கதை

காடாறுமாதம் நாடாறுமாதம் வருகின்ற விக்கிரமாதித்தன் கதை, சங்கிலித் தொடர்பாய் வருகின்ற பஞ்சதந்திரக் கதை, சிறியவருஞ் சிரிக்கின்ற தென்னாலிராமன் கதை - இவைகள் பாரத நாட்டுச் சின்னஞ் சிறிய செடி கொடிகள்.

இவையெல்லாஞ் சொரிவன,

செவி நுகர் கனிகள்

இக்கனிகளின் வித்துக்கள், அங்கும் இங்கும் பரந்து, சின்னஞ் சிறிய கதைகளாய் இன்றும் முளை கொள்கின்றன. கால விசேஷத்தால் இன்றைய முளைகள் முண் முளைகளாய் மாறுவதுமுண்டு. அப்படியானால், அவை களைகள்.

# 8 நகரும் அரசும்

## 'இல்லாத' நகர்

இனி,

'நாடு கூறினும் நகரங் கூறுவாம்'

பழைய பாரதத்திலே காடுதான் விசேஷித்த இடம். அது முனிவர்கள் உறைவிடம்; தர்மம் வருமிடம். அடுத்த படியில் விசேஷித்தது நாடு. அங்கே பெரியதொரு விசேஷம் உண்மையில்லாமை. அதற்குக் காரணம் பொய்யுரை இல்லாமை. பொய் என்று ஒரு பண்டத்தை அந்நாட்டு மக்கள் அறியார்கள். பொய் இல்லாமையால் உண்மை என்ற வார்த்தையும் இல்லை. உண்மைபோலவே அந்த நாட்டில் வண்மை என்றும் ஒன்று இல்லை. வண்மை கொடை. வண்மை இல்லாமைக்குக் காரணம் வறுமை அங்கே கிடையாதது. இப்படிப்பட் நாட்டிலே நகரம் என்பதொன்று வேண்டாதது ஆயினும், காவியங்களிலே வழக்கமாக வருகின்ற நகரம் கம்பரிலும் வருகின்றது. நகரத்தின் பெருமை கல்வி செல்வங்களைப் பொறுத்தது; அந்த இரண்டையும் பார்த்தால், நகரம் முழுவதையும் பார்த்ததாயிருக்கும்.

அவை வருமாறு:

கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவைவல்ல ரல்லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை யுடையார்களு மில்லை மாதோ.

கம்பருடைய அயோத்திமா நகரத்திலே கல்வி முற்ற வல்லாரு மில்லே. கல்வியைக் கரைகண்டவர் என்று ஒருவர் இல்லே; அதற்குக் காரணம், வல்லார் அல்லாரும் இல்லே, அந்நகரத்தில் கல்வியைக் கரைகாணுதவர்களே இல்லாமை.

இங்ஙனமே,

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லே உடையார்களும் இல்லே.

இது கம்பர் நாட்டிய புதிய நகரம்; கம்பநகரம்

## இனிய அரசு

இல்லாரும், கல்வி வல்லர் அல்லாரும் இல்லாத அந் நகரத்திலே.

எய்யென எழுபகை எங்கும் இன்மையால்
மொய்பெருத் தினவுறு முழவுத் தோளினுன்
வையக முழுவதும் வறிஞ ஞேம்புமோர்
செய்யெனக் காத்தினிது அரசு செய்கின்ருன்.

'வறிஞன்' என்கின்ற வார்த்தையை உச்சரிக்க நேரு மாளுல் அந்நகரில் அரசு வீற்றிருக்கின்ற அரசனைக் குறிப் பிடும் போதுதான் உச்சரிக்க நேரும்.

உழவன் ஒருவன் மிக வறிஞன். அவனுக்குள்ளது ஒரேயொரு செய் செய்-வயல்; விளைநிலம்.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

என்கின்றது திருவள்ளுவர். உழவன் கிழவன்; விளைநில மகளின் காதலன். அவன் தன் காதலியை ஒரு தினந்தானுங் கண்ணுலே காணுமலிருக்கமாட்டான் கனவிலும் அவள் நினைவு அவன் மனசில் குடிகொண்டிருக்கும். விளைபுல மகளின் ஒவ்வோர் அவயவமும் நித்திரையிலும் அவன் நினைவில் இருக்கும். அவன் ஏகபத்தினி விரதன். அவன்

ஒரு கணம் பிரிந்தாலும் நிலமகள் ஊடிப் புலந்துவிடுவாள் அவளுடைய அக முக நகையை அவன் பெற்றுக்கொண் டிருப்பானுயின், அவன் வாழ்வில்,

**இல்லது என்?**

> இலம்என் றசைஇ இருப்பாரைக் காணின்
> நிலம்என்னும் நல்லாள் நகும்.

சோம்பர்களுக்கும் நிலமகளுக்கும் வெகு தூரம். 'ஆதித் தன் அஸ்தமியாத நிலப்பரப்புடையோம்' என்று இறுமாந்து சோம்பியிருப்போரைக் காணின் அவள் நாணித் தலே குனிகின்ருள். 'அன்னே, நீயே தஞ்சம்' என்பாரை நில மகள் கைதூக்கித் தலேமேல் வைத்துச் சுமக்கின்ருள். ஒரேயொரு செய் படைத்த வறிஞனுக்கு அந்தச் செய்யே தஞ்சம். அது அவன் இதயத்தில் வாழுகின்றது. அவன் அச்செய்யிற் கண்ணுங் கருத்துமாயே இருப்பான் அப்படிப் பட்ட ஒரு வறிஞன்,

**அயோத்திமா நகர அரசன்.**

அந்த வறிஞனுகிய அயோத்தியரசனுக்கு இந்த வையகம் முழுவதும் அவன் உழவு செய்கின்ற ஒரே ஒரு செய் அந்தப் பண்பட்ட செய்யிலே ஒரு களேதானும் முளேகொள்வ தில்லே; ஊருகிற எறும்புக்கும் ஒரு ஊறு நிகழ்வதில்லே. அதனுலே, 'எய்' என்று எழுகின்ற பகையாகிய களேகளே அவன் அறியான் அவனுக்கு ஒரேயொரு குறை. அவன் தோள்கள் தினவுகொண்டிருக்கின்றன; பேரைப் பெருமற் சோம்பிக்கிடக்கின்றன. தோள்கள் தினவு கொண்ட, போர்வறிஞனை அந்த அரசன், சராசரமனேத்திலுங் கண்ணுங் கருத்துமாய் அவற்றை இனிது காத்து அரசு செய்கின்ருன்

> வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசியர்
> உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்
> தள்ளரும் பெரும்புகழ்த் தயர தப்பெயர்
> வள்ளல்வள் ளுறையவின் மன்னர் மன்னனே.

அவனுடைய இராச்சியத்திலே பலவழிப்படுபவைகள் எல்லாம் ஒருவழிப்பட்டுக் கிடக்கின்றன.

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

என்ற வள்ளுவருக்கு அங்கே இடமில்லை. கெடுப்பது இல்லாத போழ்து எடுப்பது எப்படி ?

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

என்ற வள்ளுவருக்குத்தான் அஃது இடம். பெயல்-மழை. அங்கே வேண்டுங் காலத்துப் பெயல் தப்பாமையினால், ஆற்றொழுக்குக் குடிப்பிறந்தார் ஒழுக்லாறுகள் போல் அடிப் பட்ட வழியிற் சென்றுகொண்டிருக்கின்றன. அதனாலே வெள்ளங்கள் நெறி தவறுவதில்லை, வெள்ளம் ஒருவழி ஓடுகின்றது. பறவைகள் விலங்குகள் வழக்கமான வழிகளில் தமக்கு உணவு பெருகுகின்றமையின் கலாம் விளைக்காமல் தத்தம் வழிகளிற் செல்லுகின்றன; ஒரு வழி ஓடுகின்றன.

சங்க இலக்கியங்களிலே இல்லக் கிழத்தியே அன்றிக் காமக்கிழத்தி என்றும் இற்பரத்தை காதற் பரத்தை சேரிப் பரத்தை என்றும் ஒருவனைப் பற்றி இருப்போர் பலர். அந்த ஒருவனை. 'ஊருணி' என்கின்றது சிற்றம்பலக் கோவை. ஊருணி - ஊராரால் உண்ணப்படுவது. அந்த ஒருவன் சர்வான்ம நாயகன். அதனால், அவன் ஊருணி. கற்புடை மகளிர்கள் ஒருவனைப் பற்றி ஓரகத்தில் இருப்பவர்கள் இரண் டகம் இல்லாதவர்கள். 'தீண்டாத கற்புடைய செழுந்திரு' ஒருத்தி, ஒரு பிறப்பில் ஐவர்களுக்கூடாக ஒருவனைப் பற்றி ஓரகத் திருந்தாள் என்று ஐந்தாவது வேதம் பேசியிருக் கின்றது. இல்லக் கிழத்தியே யன்றிக் காமக் கிழத்திகள் பரத்தைகள் ஆகிய அவர்களும் இரண்டகம் இன்றி ஓரகத்தில் ஒருவனைப் பற்றி இருப்பவர்களே. காமக் கிழத்திகள் பரத்தைகள் ஒவ்வோர் குறைபாட்டால் இவ்வாறு இருப் பவர்கள். ஆனால், கற்பையே கடைப்பிடிப்பவர்கள்;

மற்ருருவனை மனத்தில் வைக்காதவர்கள். இல்லக் கிழத்தி குறைபாடுகள் நீங்கினவள்; அவள் 'மறுவில் கற்பின் வாணுதல்'; வீட்டுக்காரி

முருகன் வள்ளியைக் களவுசெய்த ஞான்று, அவனை 'ஊருணி' என்றுணர்ந்து, மறுவில் கற்பின் வாணுதலாகிய தெய்வதயானை,

**இன்ருேர் பாங்கிவந் துற்றவாறு நன்றெனப் பரிவு கூர்ந்தாள்**

அயோத்திமா நகர அரசனின் செங்கோல் விசேஷத்தினுலே அவன் பரிபாலனத்தில் பொய்ம்மை முயச்கினர் ஆகிய பொருட்பெண்டிர் வர்க்கத்தினராக வேண்டியவர்களுட காமக்கிழத்தியர் பரத்தையர் நிலையினராய் ஒருவனைப் பற்றி ஓரகம் உடையர் ஆயினுர்கள். அதனுலே, வேசியர் உள்ளமும் ஒரு வழி ஓடாநின்றது

இனி அவனை அரசன் என்று சொல்வது சாலாது. அவன் அரசர்க்கரசன்; சக்கரவர்த்தி. அவன் புகழ் 'தள்ளரும் பெரும்புகழ்'. தசரதச் சக்கரவர்த்தி புலவர் பாடும் புகழுடையோன் அவன் புகழ் பெரும்புகழ்; உலகங் கொண்டாடும் புகழ். 'தோன்றிற் புகமொடு தோன்றுக' என்ருர் தேவர் அவ்வாறே தோன்றினவன் தசரதச்சக்கரவர்த்தி. அவன் சக்கரவர்த்தியேயாயினும் பெரிய வள்ளல்; இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈபவன்; 'தருகை நீண்ட தயரதன்' அவனுடைய தோளில் போர்த்தினவு குடியிருப்பது போல, அவனுடைய அயிலிலேயும் ஒரு குறை உண்டு. அயில் - வேல். அது துருப்பிடித்துப் பகைவரின் மையால் வள்ளுறையில் துயில்புரிகின்றது. வள்ளுறை - தோலுறை. தசரதச் சக்கரவர்த்தி அரசு வீற்றிருக்கின்ற மாளிகை வாய்தல், போரரு வாய்தல். பொருவாரின்மையால் போரை அறியாத வாய்தல்

> செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
> வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
> பொருநர்த் தேய்த்த போரரு வாய்தல்,

என்று புகழ்தற்கியைந்த வாய்தல் தசரதச் சக்கரவர்த்தியின் திருவோலக்கக் கோயில் வாய்தல்.

# 9 அறிவறிந்த மக்கட்பேறு

ஆயவன் ஒருபகல் அயனை யேறிகர்
தூயமா முனிவரற் றெழுது தொல்குலத்
தாயருந் தந்தையுந் தவமும் அன்பினுல்
மேயவான் கடவுளும் பிறவும் வேறுமீநீ.

*ஒருநாள் தசரதச் சக்கரவர்த்தி தனது குலகுருவாகிய வசிட்ட முனிவரை அணுகி மேற்குறிப்பிட்டவாறு பிரார்த்திக்கின்றுன்.*

*சுவாமீ, தேவரீரின் திருவருளினுல் சூரியகுலத்தரசர்கள் தமது குலம் விளங்கும்படி இந்தப் பூமியைப் பரிபாலனஞ் செய்து வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து அடியேனும் தங்கள் திருவருளினுலே அறுபதினுயிர வருடகாலம் ஒருவித குறைவுமின்றி இந்த உலகை ஒருவாறு ஓம்பினேன். முனிவர்களும் அந்தணர்களுந் தவ விரதங்களில் தலைப்பட்டார்கள். தேவர்கள் பிரீதி எய்தினுர்கள் வையகம் வாழ்வாங்கு வாழ்ந்தது.*

அறுபதி னுயிர மாண்டு மாண்டுற
உறுபகை யொடுக்கியிவ் வுலகை ஓம்பினேன்
பிறிதொரு குறையிலை என்பின் வையகம்
மறுகுறும் என்பதோர் மறுக்கம் உண்டரோ

*எனக்குப் பின் இவ்வையகத்தின் செல்கதியை எண்ணி என் மனம் துண்ணென்கின்றது.*

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

என்கின்றார் தேவர். இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயப்பதாகிய மக்கட்பேற்றை என்மனம் அவாவுகின்றது.

என்றிங்ஙனம் தசரதச் சக்கரவர்த்தி முறையிட்டபோது. அதனைக் கேட்ட வசிட்ட மகாமுனிவர் கண்மூடி மௌனியாய்ச் சிறிது நேரஞ் சும்மாவிருந்தார் ஐம்பொறிகள் ஒருவழிப்பட்டன. மனஞ் சலனமற்று நின்றது. ஆத்ம சிற்சக்தி அலைகள் அலைப்ப ஆதிசேஷன் மீது நாராயண மூர்த்தி அறிதுயில் புரிகின்ற பாற்சமுத்திர பரியந்தஞ் செல்லாநின்றது. திரு நாராயணன் திருவருள் ஸ்ரீ ராமாவதாரமாய்ப் பூமிக்கு இறங்கவிருப்பதைத் தமது யோகத்தில் வசிட்ட மகாமுனிவர் உணர்ந்தார். அவருடைய இருதய கமலத்திலே,

கருமுகில் தாமரைக் காடு பூத்துநீடு
இருசுடர் இருபுறத் தேந்தி ஏடலர்த்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

நாராயண மூர்த்தி.

பச்சைப் பசிய முகில் பசிய இலைகள் விரிந்த தடாகம் போலே தாமரைகளைப் புஷ்பித்துக்கொண்டு இரண்டு பக்கங்களிலும் சூரிய சந்திரர்கள் உதயமாக இதழ் விண்டலருகின்ற தன் இருதய கமலத்திலே திருமகள் வீற்றிருப்ப வெள்ளிச் சிகரம் படைத்த ஒரு செம்பொன் மலையின்மீது அம்மலையோடூர்ந்து வருவதுபோல, ஸ்ரீமந் நாராயண மூர்த்தி தமது பச்சைத் திருமேனியில் கண் வாய் முகம் கரம் கொப்பூழ் முதலிய தாமரைகள் புஷ்பிக்கச் சங்கு சக்கர தாரியாய்த் திருமறு மார்பில் திருமகள் கொலு இருக்க, வெள்ளியை முகந்த செம்பொன் மயமான கலுழன் மீது வசிட்ட முனிவருக்குக் காட்சியளித்தருளினான் வசிட்ட முனிவருடைய முகமண்டலம் மலர்ந்து பிரகாசித்தது கண்களை விழித்தார். தசரதனைக் கருணைததும்பத் திருக்கண் சாத்தினார். தசரதன் தளிர்த்தான்.

வசிட்டர் வாய்மலர்ந்து,

மாதிரம் பொருத திண்டோள் மன்ன!நீ வருந்தல் ஏழேழ்
பூதலம் முழுதுங் காக்கும் புதல்வரை அளிக்கும் வேள்வி
தீதற முயலின் ஐய சிந்தைநோய் தீரும் என்றார்

இனித் தசரதன் நிலை வருணித்தற்கு அரியது. முன் ஒருமுறை இந்தத் தசரதன் யானை வேட்டைமேற் சென்றவன். முனி புத்திரன் ஒருவன் ஆற்றில் நீர் முகக்கும் அரவத்தைக் கேட்டு யானை நீர் பருகுகின்றதென்றெண்ணிப் பாணப் பிரயோகஞ் செய்ய, அப்புதல்வன் உயிர் துறந்தான். அவன் பெற்றோர்கள் புத்திர சோகத்தால் வாடி மன்னிப்பு வேண்டி நின்ற தசரதனை 'நீயும் எம்மைப்போலப் புத்திர சோகத்தால் வாடி மாளக்கடவாய்' என்று சாபஞ் செய்து மாண்டார்கள். அந்தச் சாப வசனத்திலே 'புத்திர என்றதைக் கேட்ட மாத்திரமே சாபத்தையும் மறந்து புத்திரர்களைப் பெற்றவன் போலத் தளிர்த்தவன் தசரதன் சாப வசனத்திற் புத்திரப் பேறு பெற்ற அவன்,

புதல்வரை அளிக்கும் வேள்வி
தீதற முயலின் ஐய, சிந்தைநோய் தீரும்

என்ற அநுக்கிரக வசனத்தை, அதுவும் வசிட்டமுனிவரின் திருவாயிலிருந்து கேட்டபோது எப்படித் தளிர்த்திருப்பான்? வருணிக்க முடியுமா? அவன் உவகை மேலெழுந்து கற்பக தருவைச் சேர்ந்து தளிர்விட்டது புத்திரகாமேஷ்டி ஆரம்பமானது. (இஷ்டி-யாகம்) புத்திரப் பேற்றை விரும்பிச் செய்யும் யாகம். வசிட்டர் விரும்பியவாறு கலைக்கோட்டு மகா முனிவரால் யாகம் பூர்த்தியானது. தசரதச் சக்கரவர்த்தியின் மனைவியர் மூவருங் கருப்பவதிகளாய் நான்கு புதல்வர்களைப் பயந்தார்கள்

அமிர்துகு குதலையொடு அணிநடை பயிலாத்
திமிரம தறவரு தினகரன் எனவும்
தமரம துடன்வளர் சதுமறை எனவும்
குமரர்கள் நிலமகள் குறைவற வளர்நாள்

அமிர்தஞ் சொரிகின்ற மழலைமொழி பயின்று தளர் நடை நடக்கின்றார்கள் குழந்தைகள். அவர்களுடைய சிறிய அடிகள் தீண்டுந்தோறும் நிலமகள் குறைகள் நீங்கிக் குளிர் கின்றாள். அதனாலே அவர்கள் நான்கு வேதம் போலே வளர்கின்றார்கள். அவர்கள் வளர உலகிருள் நீங்க ஞான 'தினகரன்' உதயம் ஆகின்றது.

காவியும் ஒளிர்தரு கமலமும் எனவே
ஓவிய எழிலுடை ஒருவனை அலதுஓர்
ஆவியும் உடலமும் இலதென அருளின்
மேவினன் உலகுடை வேந்தர்தம் வேந்தன்

(காவி - நீலோற்பலம்)

நீலோற்பலத்தைத் திருமேனியாகக் கொண்டு அந்தத் திருமேனியில் கமலங்கள் மலர்ந்து பிரகாசிக்க உயிர் ஓவியம் ஒன்று எழில் செய்வதுண்டாயின் அந்த ஓவியமே ஸ்ரீராமன். இராமன் ஒருவன்; ஒப்பாரில்லாதவன். அவன் சக்கர வர்த்திக்கு ஆவி. சக்கரவர்த்தி அந்த ஆவியை இன்றி யமையாத உடல். அருள் அன்புக் கனி; அது 'அன்பு ஈன் குழவி'

தசரதன் தனதாவியாகிய ஸ்ரீராமனைப் பெற்ற பிறகு அன்பு கனிந்து அருளாய்விட்டான். 'வேந்தர்தம் வேந்தன் அருளின்மேவினன்' தசரதன் இயல்பு இங்ஙனம் ஆக,

ஐயனும் இளவலும் அணிநில மகள்தன்
செய்தவ முடைமைகள் தெரிதர நதியும்
மைதவழ் பொழில்களும் வாவியும் மருவி
நெய்குழல் உறுமிழை எனநிலை திரிவார்

(ஐயன்-ஸ்ரீராமன்; இளவல்-இலக்குமணன்.)

இருவருந் தமது கூட்டரவு நிலை திரியாதே அங்கும் இங்கும் உலாவித் திரிகின்றார்கள்; நிலமகளின் தவ விசேஷங்களைத் தரிசிப்பவர்கள் போல, நதிகளையும் முகில் தவழுகின்ற பொழில்களையும் தாமரை வாவிகளையும் மருவி விளையாடிக் களிக்கின்றார்கள்.

இராம இலக்குமணர்கள் போலவே பரத சத்துருக்கர்களும் ஒருவரையொருவர் இன்றியமையாது மருவி விளையாடிக் களிக்கின்றார்கள்.

இங்ஙனம் இருவேறு குழுவினராயினும் நால்வர் புதல்வர்களும் ஒருவரை ஒருவர் இன்றியமையாதவர்களே. அவர்களுள்ளே ஸ்ரீராமன் ஏனை மூவர்க்கும் தந்தைக்கும் தாயர் மூவர்க்கும் உயிராய் விளங்குகின்றான்.

கதைகளில் வருகிற பிரகாரம் நால்வர் புதல்வர்களும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வருகின்றார்கள்.

# 10

## வளர்த்தானும் வசிட்டன் காண்

ஒருநாள், 'கேளும் ஜனக மகாராஜாவே' என்று பின் வருமாறு சொல்லத் தொடங்கினார் விசுவாமித்திரர்.

திறையோடும் அரசிறைஞ்சுஞ் செறிகழற்கால் தசரதனும்
பொறையோடுந் தொடர்மனத்தான் புதல்வரெனும்
பெயரேகாண்
உறையோடும் நெடுவேலாய் உபநயன விதிமுடித்து
மறையோது வித்திவரை வளர்த்தானும் வசிட்டன்காண்.

'உறையோடு நெடுவேலாய்' ஓ ஜனகமகாராசனே, 'கோக்கள் வைகும் முற்றத்தான்' என்று பாராட்டப்படுபவன் - பொறை முதலிய சற்குணங்களுக்கு இருப்பிடமானவன் - தசரதச் சக்கரவர்த்தி. இதோ வீற்றிருக்கின்ற இராம லக்குமணர்களே அந்தத் தசரதனுடைய புதல்வர்களென்று உலகம் கொண்டாடுகின்றது. உண்மையாக நோக்குமிடத்து, அந்தத் தசரதன் பெயரளவிலேதான் இவர்களுக்குத் தந்தை. தந்தையாயுங் குருவாயுந் தெய்வமாயும் இருந்தவர். இப்பொழுதும் இருக்கின்றவர் தவசிரேஷ்டராகிய வசிஷ்ட முனிவரே. வசிஷ்டருடைய ஆச்சிரமத்திலேதான் இவர்கள் வளர்ந்தவர்கள். இவர்களுக்கு உபநயனச் சடங்கும் ஆச்சிரமத்திலேதான் நடந்திருக்கிறது. வேதாத்தியயனமும் வசிஷ்டரிடத்திலேதான் இவர்கள் பயின்றார்கள். வில்வித்தை முதலிய சமஸ்த வேத வித்தைகளும்

அங்கேதான் இவர்களுக்குப் பூரணம் எய்தியது. உலக சர்வ கலாசாலைக் கல்விகளெல்லாஞ் சென்று முற்றுப்புள்ளி எய்தும் இடம் வசிஷ்டருடைய ஆச்சிரமம்.

இவ்வாறு இராமலக்குமணர்களின் முடிந்த கல்வியின் பூரணம் விசுவாமித்திர மகா முனிவராற் பேசப்பட்டது. முடிந்த கல்வி இங்ஙனம் வசிஷ்டருடைய ஆச்சிரமத்திற் சென்று முற்றுமானல் அதன் ஆரம்பம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்கின்முர் கம்பர். கம்பருடைய இருதயம் பாலர் கல்வி இருந்தபடியை நாடுகின்றது; திடீர் திடீர் என்று திட்டம் வகுத்து உதாரணந் தருகின்றது இனி வருவது கம்பர் வகுத்த பாலர் கல்வித் திட்டம்.

இராம லக்ஷ்மண பரத சத்துருக்கர்கள் பச்சைப் பசும் பாலர்கள்; அவர்கள் பாதங்கள் அனிச்சப்பூவினும் மிருது வானவைகள் அவர்களுடைய மழலை மொழியைச் செவி மடுத்த பிறகுதான்,

> குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
> மழலைச்சொற் கேளா தவர்

என்ற பாட்டு வந்தது இப்படிப்பட்ட மிருதுவான மழலைப் பிள்ளைகளைப் - பாலரு ளாயர்களைப் - பள்ளிக்கு அனுப்பிவைக்கிறுர் கம்பர் - பெரிய பாவம்! அரண்மனையில் வளர்ந்த அந்தக் குழந்தைகளைப் பள்ளிக்கு நடந்து போக வைக்கிறுர் கம்பர். கம்பருடைய இந்தக் கொடுமையை நினைக்கும்போது, 'கெடுக சிந்தை கடிதிவள துணிவே' என்கின்ற புறநானூறுதான் முன்னுக்கு நிற்கின்றது.

இராமனுதியர்கள் நகரங் கடந்து நாடு கடந்து கரடு முரடான காட்டுக்குட் பிரவேசிக்கின்முர்கள். அங்கே கட்டட மில்லை, கதவுகள் இல்லை; நவீன உபகரணங்கள் அத்தனையும் இல்லை மரங்கள் கொடிகள் செடிகள் ஆகிய இயற்கைகளேயன்றிச் செயற்கைகள் எவையும் இல்லை. அங்கும் இங்கும் அடர்ந்து படர்ந்த மரநீழல்களிலே, புலித்தோலாசனங்களில் முனிவர்கள் நிமிர்ந்து நிட்டை கூடுகின்முர்கள். அவர்கள் முன்னிலையில் நெய்யோடு கூடிய ஓமாக்கினி நாவை நீட்டுகின்றது இராமன் போன்றவர்கள்,

பால கிருஷ்ணர்கள் - கைகளிலே சமித்துக்களை ஏந்தி நின்று பணிவிடை செய்கின்றார்கள். இடையிடையே பாடம் நடக்கின்றது. இரு என இருந்து, ஏடு அவிழ் என அவிழ்த்துப் பாடம் நடந்த பிறகு, பாலர்கள் தத்தம் வீடு திரும்புகின்றார்கள். அவர்கள் படித்த பாடங்களுக்கு ஒரு பரீக்ஷை போலே, பாலர்கள் வரும் வழியில் அந்தப் பாலர்களை எதிர்ப்படுபவர்களின் முகங்கள் ஒளிவிடுகின்றன. இவ்வாறான அருஞ் சந்தர்ப்பங்களைக் கவிதை செய்வதில் கம்பர் தவறுவதேயில்லை.

> வீரனும் இளைஞரும் வெறிபொழில் களின்வாய்
> ஈரமொ டுறைதரும் முனிவர ரிடைபோய்ச்
> சோர்பொழு தணிநகர் துறுகுவர் எதிர்வார்
> கார்வர அலர்பயிர் பொருகுவர் களியால்

(வீரன் - இராமன். இளைஞர் - தம்பிமார். வெறி பொழில்கள் - அவர்கள் பாடம் படிக்கிற புஷ்பச் சோலைகள். முனிவரர் - பாலர் வகுப்பு உபாத்தியாயர்கள். 'ஈரம்'-அந்த உபாத்தியாயர்களின் தராதரம்; அவர்களுடைய நெஞ்சு ஈர நெஞ்சு. ஈரம் அன்புக் குளிர்; தண்ணளி.)

சோர் பொழுது அணிநகர் துறுகுவர்

இராமன் முதலிய நால்வர் புதல்வர்களும், பகல் முழுவதும் பணிவிடை செய்து பாடங்கள் படித்துவிட்டு, மாலைக்காலத்தில் தமது அழகிய நகரை நோக்கி வருகின்றார்கள்.

எதிர்வார்

காட்டிலேயும் நாட்டிலேயும் நகர வீதிகளிலேயும் அந்தப் பச்சைப் பாலர்கள். பள்ளியிலிருந்து நடந்து வரும்போதெல்லாம், ஆங்காங்குள்ளவர்கள் தாந்தாம் செய்துகொண்டிருக்குங் கருமங்களுக்கெல்லாந் தவணை வைத்துவிட்டு, அந்தப் பாலர்களின் பாலொழுகும் முகங்களைப் பார்த்துப் பார்த்துப் பருகும் ஆசைமேலீட்டினால், அவர்களை எதிர்முகஞ் செய்து செல்லுகின்றார்கள் முன்னொருமுறை எதிர்முகஞ் செய்து சென்றவர்கள். மற்றொரு வழியால் மீண்டு,

பின்னரும் அடிக்கடி எதிர்முகஞ் செய்வார்கள்; அந்தப் பாலர்களைக் காணுந்தோறும் காணுந்தோறுங் காரைக்கண்டு தழைக்கும் பயிர்கள் போலே, மழையைக் கண்டு செழிக்கும் மயில்கள் போலே, தளிர்க்கின்றார்கள், குளிர்ந்து களிக்கின்றார்கள்

ஒருவர்தாமே தன்னைப் பலமுறை எதிர்கொண்ட போதும், சற்றேனுஞ் சலிக்காது, புணர்ந்தாற் புணருந்தோறும் பத்தம்புதிதாய், எதிர்வருபவர்களுக்கு விருந்து செய்கின்றது, ஸ்ரீராமனுடைய பரிபூரண மதிமுகம்

அம்மட்டோ ,

> எதிர்வரு மவர்களை எமையுடை இறைவன்
> முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா
> எதுவினை; இடரிலை; இனிதுநும் மனையும்;
> மதிதரு குமரரும் வலியர்கொல்; எனவே.

( எமையுடை இறைவன் - ஸ்ரீ ராமன் ) அவனுடைய முகமாகிய தாமரை, எதிரில் வருகின்றவர்களைக் காணுந்தோறும், காணுந்தோறும் கணவனாகிய சூரியனைக் கண்டது போலே, கருணை முதிர்ந்து ததும்பி ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது அவனுடைய திருவாய் மலர்ந்து,

எதிரில் வருகின்ற ஒவ்வொருவரையும்,
(எது வினை) எப்படி உங்கள் முயற்சிகள்
(இடர் இலை) க்ஷேமந் தானே

(இனிது நும் மனையும்) உங்கள் உங்கள் வாழ்க்கைத் துணைநலங்கள் இனியவை தாமே. (மதிதரு குமரரும் வலியர்கொல்) புத்தி கூரிய - நன்மதிப்புக்குரிய - நல்ல புதல்வர்க ளெல்லாம், ஆண்மையிலும் கல்வியினும் வலிபடைத்தவர்களா யிருப்பார்களே என்றிங்ஙனம் பள்ளியிலிருந்து வரும்போது, வழியில் எதிர்வருகின்ற குடிசனங்களின் சுக க்ஷேமங்களை விசாரிக்கின்றான் பால ராமன்.

முனிவர்களிடம் பயிலுகின்ற பாலர் கல்வியின் பரமப் பிரயோசனத்தைப் பராமுகஞ் செய்பவன்போற் பத்தி பண்ணிக் காட்டுகிறான் கம்பன் 'இளமையிற் கல்வி சிலையில்

எழுத்து'. பாலர்கள் உள்ளம் சுத்தப் பளிங்கு. குருவின் குண விசேஷங்கள் அந்தப் பளிங்கில் அப்படியே பிரதி பிம்பிக்கும் அதனாலே, பச்சைப் பாலரைப் பயிற்றுதற் குரியவர்கள், ஈரமொ டுறைதரும் முனிவர்களே!

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு**
**ஐந்துசால் பூன்றிய தூண்.**

என்ற அருமைத் திருக்குறள், முனிவர்களாகிய சான்றோர்களின் இலக்கணம். சான்றோர்களாகிய முனிவர்களே எழுத்தறிவிக்கவல்ல இறைவர்கள். அவர்கள் மத்தியிலேயே குழந்தைகள் வளரவேண்டும்.

**சான்றோ ரினத்திரு**

என்பது ஔவையின் வேதவாக்கு. சான்றோரினத்திருந்து பயின்ற குழந்தைகளை எங்கேயும் எறிந்து விடலாம். எந்தக் குப்பையிலும் மாணிக்கம் மாணிக்கமே மாணிக்கத்தைக் குப்பை செய்யக்கடவ தொன்றுமில்லை. அப்படிப் பட்ட மாணிக்கம் எந்த ஊரிலும் வாழலாம் அந்த மனித மாணிக்கத்துக்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்.'

சான்றோரினத்திருந்து வளர்ந்த மாணிக்கங்களுக்கு, 'நன்றுந் தீதும் பிறர்தர வாரா' என்பது நன்கு தெரிந்தது. அதனாலேதான், 'யாதும் ஊரே யாவருங் கேளிர்.'

சான்றோரினத்திருந்து வளராத ஒருவர், தமக்கு, 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று புலம்புவது, புலமற்ற புலம்பல்.

ஆச்சிரமத்தில் வளர்ந்த இராமனுக்கு, யாதும் ஊரே யாவரும் கேளிர். அவன் சொற்றிறம்பாத சீதைக்கு, இராக்ஷத இலங்கை செய்ததொன்றும் இல்லை. அவளுக்கும் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்'

இராம லக்குமண பரத சத்துருக்கர்களின், பாலர் கல்விப் பயன் இருந்தபடி இங்ஙனமாக, அவர்களை அணுகி எதிர்கொள்ளுகின்றவர்களின் இயல்பை இன்னுஞ் சிறிது நோக்குவோம்.

# 11

# நடந்துபோய் நடந்து வருகிறார்கள்

இராம லட்சுமண பரத சத்துருக்கர்கள் முனிவர்களின் ஆச்சிரமங்களுக்குப் படிக்கப் போய் வருகின்றார்கள். வரும் வழியில் சனங்கள் எதிர்ப்படுகின்றார்கள்.

ஸ்ரீராமன்,

'முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிரா' கருணை குடியிருந்து கனிந்து முதிர்கின்ற, தனது இனிமையாகிய திருமுக மலர் மலர்ந்து ஒளிகால, ஒவ்வொருவரையும் பின்வருமாறு வினவுகின்றான்.

1. எதுவினை
2. இடரிலை
3. இனிது நும் மனையும்
4. மதிதரு குமரரும் வலியர்கொல்

அ. எப்படி முயற்சிகள்

ஆ. க்ஷேமந்தானே

இ. வாழ்க்கைத் துணைநலம் இனிதாய் இருக்குமே

ஈ. மக்கள் கல்வியும் ஆற்றலும் படைத்தவர்களாய் இருப்பார்களே

* * *

ஸ்ரீராமன் இவ்வாறு வினவுவது ஒருவர் இருவரையன்று; எதிர் வருபவர் அத்தனை பேரையுமே தனித்தனி க்ஷேமம் விசாரிக்கின்றான். அப்பட்டோ! ஒருவர் தாமே, அந்த அழகனை அடிக்கடி தரிசிக்கும ஆசைமேலீட்டினால் பலமுறை எதிர்வருவார். ஆயினும், அந்த இராமன் பழகியதனால் புளிப்படையாது, தன்னைப் புணர்ந்தாரைப் புணருந்தோறும் புத்தம் புதியராகவே பாவித்து, 'எது வினை. இடரிலை' என்றிங்ஙனம் விசாரித்துக்கொண்டே செல்கின்றான். இந்தக் கல்யாண குணத்துக்கு 'விருந்து' என்று பெயர். விருந்து-புதுமை. விருந்தினர்கள் அடிக்கடி வந்தாலும், அவர்கள் முகங் குழையாமல் அவர்களைப் புத்தம் புதியராக வரவேற்குங் குணம் விருந்து. விருந்துக்கு வேளாண்மை என்பது மற்றொரு பெயர்.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

என்கிறார் திருவள்ளுவர். இல்வாழ்வான் இன்றியமையாது அநுட்டிக்கவேண்டுவதொரு விரதம் விருந்தோம்பல். விருந்தினர்களை அடிக்கடி கண்டால் சற்றேனுஞ் சலிக்காமல் காணுந்தோறுங் காணுந்தோறும் அவர்களைப் புத்தம் புதியராக வரவேற்றல் வேளாண்மைக் குணம்.

வள்ளலாகிய வேள் பாரியிடம், விருந்தாகிய வேளாண்மைக் குணம் குடியிருந்ததனால், ஔவையார் அடிக்கடி பாரியிடஞ் சென்று,

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்புமோர் ஏஎர் உடைத்து

என்ற அருமைத் திருக்குறளை அந்த வள்ளலின் முகத்திற் கண்டு அநுபவித்து வருவாராயினர்.

ஔவையார் பாரியின் முகத்தில் வேளாண்மை விளைவை அநுபவிப்பது போலவே, ஸ்ரீராமனைக் காணுகிறவர் அவன் எதிர் சென்று, அவன் முகமலரில் விருந்தாகிய வேளாண்மை விளைவை அநுபவிப்பவர்கள் ஆயினர்கள். பகல் முழுவதும்

ஆச்சிரமங்களில் ஏவியது செய்து, மாலைக்காலத்தில் அரண்மனை நோக்கி வரும் வழியிலேயும் அவன் முகமலர் விருந்து செய்து கொண்டு வருகின்றது.

காலை யரும்பி மாலையிற் கூம்புகின்ற கமல மலர், ஸ்ரீ ராமன் முகமலருக்கு எம்மாத்திரம்! ஸ்ரீ ராமனுடைய முகத்தை முகமலர் என்று இனியுஞ் சொல்லுவதே அதற்கு இழுக்குச் செய்வதாகும்

ஸ்ரீராமனாதியர்கள் முனிவர்களின் ஆச்சிரமங்களில் என்ன கற்றார்கள் என்ற கேள்விக்குக்

கற்க வேண்டியவைகளைக் கற்றார்கள்; கசடு அறக் கற்றார்கள்; அவ்வளவோ! கற்றவழி நிற்கின்றார்கள்; என்ற பதிலை,

ஸ்ரீராமனுடைய முகம், பள்ளியிலிருந்து வரும்போதே, குடியான சனங்களை எதிருந்தோறும் எதிருந்தோறும், விருந்து செய்வதன் மூலம், தெளியவைத்துக்கொண்டே செல்கின்றது.

அக்ஷராரம்பங்கூட அறிவான் ஆன்ற சான்றோர்களே செய்துவைக்க வேண்டுமென்பது ஸ்மிருதி. குருவின் குண விசேஷங்கள் பிரதிபிம்பிக்குஞ் சுத்தப் பளிங்கு, சீடர்களின் இருதயம்

'ஈரமொ டுறைதரும் முனிவர்க ளிடைபோய்ச் சோர் பொழுது அணிநகர்' நோக்கி வருகின்ற ஸ்ரீராமனுடைய இருதயப் பளிங்கு இருந்தபடியை, அவனுடைய முகத் தாமரையும், அதிலிருந்து ஒழுகுகின்ற இனிய வசனத்தேனும் அப்படியே எடுத்துப் பேசுகின்றன

இனி, ஸ்ரீராமனுடைய ஆச்சிரமப் படிப்புக்கு வருடாந்தப் பரீக்ஷை, தவணைப் பரீக்ஷைகள் வேண்டியதில்லை. அவன் கற்ற கல்வியின் பெறுபேறு, அவன் பள்ளியிலிருந்து வரும்போதே, எதிர் வருபவர்களின் அகத்திலும் முகத்திலும் எழுதியிருக்கின்றது இதுதான் ஆச்சிரமக் கல்வியின் தலைசிறந்த பரீக்ஷை. 'எதிர்வார், கார் வர அலர் பயிர் பொருவுவர் களியால்' என்று, பரீக்ஷை முடிபை வெளியிடுகின்றார் கம்பர்.

கம்பர் ஒரு தவறு செய்துவிட்டார். ஸ்ரீராமன் படிக்கத் தொடங்கும்போதே பரீக்ஷை முடிவை வெளியிட்டு விட்டார். இது பெரிய தவறு. ஆனால், அதனால், ஸ்ரீராமன் படிப்பை இனி அமையும் என்று நிறுத்தவில்லை; படித்துக்கொண்டே வருகிறான். வருகிற வழியில் வழக்கம்போலவே குடிகளின் க்ஷேமங்களைப் புதிது புதிதாக விசாரித்துக் கொண்டே வருகின்றான். இதனால், குடிகளிடம் ஒரு கவலை உண்டா கின்றது. 'இந்தப் பச்சைக் குழந்தையை நாள்தோறும் பாராமல் இருக்க நம்மால் முடிவதேயில்லை; பார்க்கச் சென்றாலோ, ஒருமுறை இரு முறை பார்த்து மனம் அமைவதே யில்லை; அடிக்கடி பார்க்க நேருகின்றது. அப்படிப் பார்க்குந் தோறும், செவியில் தேன் சொட்டுகின்ற மழலை மொழியில், அந்தப் பச்சை ஒரு முறை இருமுறையா நூறு முறை க்ஷேமம் விசாரிக்கின்றதே. விசாரிக்க விசாரிக்க நமக்கு இனிப்பு மிகுகின்றது. ஆயினும், அந்தோ ! குழந்தைக்கு வாய்மலர் நோகுமே ! பவள இதழ் கன்றுமே ! அந்தப் பாலகன் பாலொழுகும் வாயால், இதுகாறும், க்ஷேமம் விசாரித்தது அமையாதா ?'

இதுதான் குடிசனங்களின் கவலை இதனாலே ஒருநாள் குடிகளெல்லாம் ஒன்றுபட்டு ஸ்ரீராமனை எதிர்கொண்டு ஒன்று சொல்லி வைக்கின்றார்கள் அது இது :

அஃதைய நினைமை தரசென உடையோம்
இஃதொரு பொருளல எமதுயி ருடனேழ்
மகிதலம் முழுதையும் உறுகலும் மலரோன்
உகுபகல் அளவென உரைநனி புரிவார்.

('ஐய' - இள அரசே; 'அஃது' - அப்படியே.)

எவ்வாறு க்ஷேமமாக நாம் வாழவேண்டுமென்று, நீ கருதுகின்றாயோ, அவ்வாறே நாம் க்ஷேமமாகவே வாழுகின் றோம் 'இஃது ஒரு பொருள் அல'-இப்படி அடிக்கடி க்ஷேமம் விசாரிப்பது ஒரு காரியம் அன்று.

'நீ இளவரசாயிருக்கச் சக்கரவர்த்தியின் ஆஞ்ஞை நடக் கின்ற நாட்டிலே, கஷ்டமென்பது, இன்னதென்றே நமக்குத் தெரியாது. வாய்மலர் நோவ, இதழ் கன்ற அடிக்கடி க்ஷேமம்

விசாரிப்பதே நமக்குக் கஷ்டமாயிருக்கின்றது. இனி விசாரிப்ப தில்லை என்று நமக்கு ஒரு வரந்தரவேண்டும். நாம் கண்டு களிக்கக் காட்சி தருவதொன்றே நமக்கு அமையும்'

என்றிங்ஙனம் வேண்டுதல் செய்து 'இம்மலரோன் உகு பகல் அளவு' - இந்தப் பிரம கற்பம் வரை,

'எமதுயிருடன், ஏழ் மகிதலம் முழுதையும்' - எமது உயிரும், ஏழு பிரிவினதாகிய பூமி முழுவதும்,

'உறுக' - உனது பாத காணிக்கையாகப் பொருந்துவ தாக, என்று வாழ்த்தி,

'உரை நனி புரிவார்' - ஸ்ரீராமனோடுந் தம்பிமாரோடும் பெரிதும் உரையாடி மகிழ்வார்கள் குடிசனங்கள்.

ஏழையர் அனைவரும் இவர்தட முலைதோய்
கேழ்கிளர் மதுகையர் கிளைகளும் இனையர்
வாழிய எனஅவர் மனனுறு கடவுட்
டாழ்குவர் கவுசலை தயரதனெனவே.

ஸ்ரீராமனாதியரைக் காணுந்தோறும், ஆடவரும் மக ளிரும் தசரதனுங் கோசலையுமாய் விடுகின்றார்கள். அவர்கள் மனசு அக் குழந்தைகளின் நல்வாழ்வையே வேண்டி, அவர்கள் அறியாமலே வரங்கிடக்கின்றது. அவர்கள் வாய், இக் குழந்தைகள் நீடூழி வாழவேண்டுமென்று தத்தங் குலதெய் வங்களைப் பிரார்த்திக்கின்றது, இங்ஙனமாக,

இராமனும் இளைஞரும் குடிகளின் வாழ்த்துக்களால் உடலும் ஆச்சிரமக் கல்வியால் உளமும் வளர் பிறையாய், வளர்ந்துவருகின்றார்கள்.

# 12 பெரிய பரீக்ஷை

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

*அறிய வேண்டியவைகளையெல்லாம் அறிதற்குரிய மக்களைப் பெறுதலே பெறக்கடவ பேறுகளுக்குள்ளே தலை சிறந்த பேறு முன்னமே எல்லாப் பேறுகளையும் பெற்று, இப்பொழுது நன்மக்கட் பேற்றையும் பெற்ற தசரதச் சக்கரவர்த்தியின் களிப்புக்கு இனிக் கரை செய்வது அரிது. கற்பகதரு நீழலிலே அரசு வீற்றிருக்கின்ற இந்திரன் போலே, அயோத்திமா நகரத்திலே பூலோக இந்திரனாய் அரசு வீற்றிருக்கின்றான் தசரதச் சக்கரவர்த்தி; முனிவர்களின் ஆசியினாலும், குடிகளின் வாழ்த்துக்களினாலும் அவன் புயங்கள் பூரிக்கின்றன; பகையின்மையினாலே அவைகள் தினவு கொண்டிருக்கின்றன களங்கமற்ற சந்திரன் போல் அவன் முகம் பிரகாசிக்கின்றது மந்திரிகள் தானைத் தலைவர்கள் அவன் அடிக்கு வணக்கஞ் செய்து, அவன் பக்கலில் அமர்ந்திருக்கின்றார்கள். செஞ்ஞாயிற்றின் செவ்விய குலத்துக்குச் செம்மை செய்வதொரு செம்பொன் விளக்குப் போல, சிங்கஞ் சுமந்த நவரத்தின ஆசனத்தின்மீது, தசரதச் சக்கரவர்த்தி பிரகாசிக்கின்றான். அவன் முடியிற் பஞ்ச தருக்கள் புஷ்பங்களை வருஷிக்கின்றன. அவன் அடியை அரசர்களின் முடிமாலைகள் அலங்கரிக்கின்றன. இவ்வாறு, அரசர்க் கரசனான தசரதச் சக்கரவர்த்தி, அரசுவீற்றிருக்கும் போது,*

ஒரு நாள்

ஒரு பெரிய பரீக்ஷை ஆரம்பிக்கின்றது.

முனிவர்களுக்குள்ளே முனிவதிலே தலைசிறந்த முனிவர்கள் இருவர் ஒருவர் துருவாசர்; மற்றவர் விசுவாமித்திரர். முனிவு-கோபம். 'கோபமே மிக மிகு கொடிய முனிவன் துருவாசன்' என்பது மகாபாரதம். 'கோபம் மிகுதலாலே தவம் மிகுகின்ற கொடிய முனிவன் துருவாசன்' என்பது வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் வியாக்கியானம். உருத்திரமூர்த்தியே உமது கோபத்துக்கு நமஸ்காரம் என்கிறது வேத மந்திரம் ஆன்று அமைந்து அடங்கிய மகா முனிவர்களின் கோபம், கொடுமைக்குக் கொடுமை செய்யுங் கோபம். கோபத்துக்கு இலக்கானவர்களைச் சுட்டுச் சுடர்விடச் செய்கின்ற கோபம் அந்த முனிவர்களின் கோபம். அதனாலே தவத்தை மிகுவிக்கின்ற கோபம் அவர்களின் கோபம். அப்படிப்பட்ட கோபத்திலே தலைசிறந்த முனிவர் துருவாச முனிவர். அவ்விஷயத்திலே துருவாசருக்குக் குறையாது, அவரோடு ஒப்பிட்டுக் கூறக் கூடிய ஒரே ஒரு முனி விசுவாமித்திர முனி

திரிசங்கு தம் புதல்வனாகிய அரிச்சந்திரனை இந்த விசுவாமித்திர முனிவரிடந்தான் ஒப்பித்துவிட்டுச் சுவர்க்கஞ் சென்றார். விசுவாமித்திரர், தமது முனித்துவ விசேஷத்தினாலே, எத்தனையோ பரீக்ஷைகள் நடத்தி, அரிச்சந்திர மகாராஜனைச் சுடச் சுடரும் பொன்போல் ஒளி விடச் செய்தது உலகப் பிரசித்தம். 'சொல்லுக் கரிச்சந்திரன்' என்ற தொடரை இந்த நிலவுலகத்தில் என்றும் நின்று நிலவச் செய்த மகாமுனிவர் விசுவாமித்திர முனிவர் இப்படிப்பட்ட உலகமறிந்த விசுவாமித்திர முனிவர். அயோத்திமா நகரத்தை நோக்கி வருகின்றார்; தசரதச் சக்கரவர்த்தியை நாடி வருகின்றார். காட்டுக்குள்ளே தவ வேள்விகள் செய்துகொண்டிருந்த விசுவாமித்திர முனிவர், திடீரென்று எழுந்து, தேவர்கள் செய்த தவ விசேஷத்தினாலே போலும், தமது இருதயத்திலே ஒரு தூண்டுதல் உண்டாக அயோத்தி நகரத்தை நோக்கி நடக்கின்றார். இந்திரனுடைய

மகாசபைக்குப் பிரமதேவர் எழுந்தருளுவதுபோலத் தசரதச் சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு விசுவாமித்திர முனிவர் எழுந்தருளுகின்றார். தூரத்தில் வரும்போதே அவருடைய மனக் கண்கள் தசரதனுடைய சிறப்புக்களைக் கண்டு களிக்கின்றன. அவருடைய திருமுகமண்டலம், குளிர்ந்த சந்திரிகைகளைக் காலுகின்றது. முனிவர் பெருமான் எழுந்தருளுகின்றார்.

வெகு தூரத்திலே விசுவாமித்திர மகா முனிவர் எழுந்தருளுவதைத் தசரதச் சக்கரவர்த்தி தன்னிரு கண்களாற் கண்டான். கண்ட அந்தக் கணமே தன் அரச செல்வங்கள் அனைத்தையும் மறந்தான். முனிவரின் வருகையாகிய செல்வத்துக்கு முன் அரச செல்வம் எம்மாத்திரம்! குசேலரைக் கண்ட கண்ணன்போலே தசரதன் சிங்காசனத்தினின்றுங் குதித்தான்; எதிரே விரைந்து சென்றான். விசுவாமித்திரரின் திருவடியைத் தன் தலைக்கு முடி செய்தான். பிரமாவை எதிர்கொள்ளுகின்ற இந்திரன் போல எதிர்கொண்டு அடிபணிகின்றான் தசரதச் சக்கரவர்த்தி விசுவாமித்திர முனிவர் தமது கரங்களுந் திருவாயும் அமைதி செய்து ஆசீர்வதிக்க, நவரத்தினம் இழைத்த ஒரு சிறந்த ஆசனத்தின்மீது, தசரதச் சக்கரவர்த்தியின் ஆராமையிலே அமர்வதுபோல அமர்ந்தருளுகின்றார் அவருடைய திருக்கண்கள் கருணைக் கிரணங்களை அச்சபை முழுவதும் பரப்புகின்றன அந்தச் சந்தர்ப்பத்தில் சக்கரவர்த்தி, முனிவரின் அடிகளுக்கு அபிஷேகஞ் செய்து, அருச்சித்துத் தூப தீப உபசாரங்கள் அத்தனையுஞ் செய்து, விழுந்து வணங்கிப் புஷ்பாஞ்சலியுடன் எழுந்து நின்று, தன் அதிர்ஷ்டத்தை மகிழ்ந்து பின்வருமாறு துதிக்கின்றான் :

**நிலஞ்செய்தவம் என்றுணரின் அன்று;நெடி யோய்என்**
**நலஞ்செய்வினை யுண்டெனினு மன்று;நகர் நீயான்**
**வலஞ்செய்துவ ணங்கஎளி வந்தஇது, முந்தென்**
**குலஞ்செய்தவம்; என்றினிது கூற,முனி கூறும்.**

* * *

'நீ யான் வலஞ்செய்து வணங்க, நகர் எளிவந்த இது'-

ஒப்புயர்வில்லாத தவ சிரேட்டராகிய தேவரீர், ஒன்றுக்கும் பற்ருத சிறியோனாகிய யான், வலஞ்செய்து வணங்கி உய்யும்பொருட்டு, எளிவந்ததாகிய இது சாதாரணம் அன்று.

அசாதாரணமானதும் கிடைத்தற்கரியதுமான தங்கள் வருகைக்குக் காரணமாயிருந்தது,

'நிலம் செய் தவம் என்று உணரின்'-இந்தப் பூவுலகஞ் செய்த புண்ணியமாயிருக்கலாம் என்று சிந்திப்பதுண்டானல்

'அன்று'

அந்தச் சிந்தனை பொருந்தாது; தங்கள் வருகை எங்கே! பூவுலக புண்ணியம் எங்கே! போதியதாகாது.

'நெடியோய்'

தவத்தால் நீண்ட மகாத்மாவே,

'என் நலஞ்செய் வினை உண்டு எனினும் அன்று'

பூவுலக புண்ணியம் ஒரு புறம் இருக்க, எளியேன் செய்த நன்மைப்பாடுகளுஞ் சிறிதே இருக்கலாமே என்றாலும், அது தங்கள் வருகைக்கு எம்மாத்திரம்!

ஆகவே. தங்கள் அருமந்த வருகைக்குச் சிறந்த காரணமாய் அமையக்கூடியது, ஒன்றேயொன்றுதான் எஞ்சியிருக்கின்றது. அது,

'முந்து என் குலம் செய் தவம்'

ஆதித்தன் குல முதல்வன் மநு; மநுவின் வழியில் வந்த தவசிரேஷ்டன் மாந்தாதா; அவன் வழியில் வந்தவன் சிபி. எத்தனை தவக்கடல்கள் சூரிய குலத்தில் உதித்தார்கள். அவர்கள் செய்து வைத்த தவங்கள் ஒரு சிறிதும் வீண் போகவில்லை. அவை ஒருங்கு திரண்டு இன்று பலித்திருக்கின்றன. என்குல முதல்வர்கள் செய்த தவத்தால் என்

னகரம் புனிதம் எய்தியது. என்றிங்ஙனம் இனியவும் நல்லவுமான உபசார மொழிகளை எடுத்துக் கூறிப் பணிவு தலைக் கொண்டு நிற்கின்றான் தசரதச் சக்கரவர்த்தி.

முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானும்
இன்சொ லினதே அறம்.

*    *    *

'இனிது கூற முனி கூறும்.'

தசரதச் சக்கரவர்த்தி இனிய வார்த்தைகளினாலே, விசுவாமித்திரரின் தவப் பெருமைகளை எடுத்துச் சொல்லச் சொல்ல முனிவருக்கு உள்ளங்காலிலிருந்து உச்சிவரை குளிர்ந்து, தசரதன்பால் ஆராமை பொங்குகிறது. முனிவருடைய சரங்கள் அமையும்! அமையும்! என்று அமைதியைப் புலப்படுத்துகின்றன. முனிவர் ஆனந்தத்தை அடக்க முடியாமல் தசரதனைத் திருநோக்கஞ் செய்து வாய்மலருகின்றார்.

என்னனைய முனிவரரும் இமையவரும்
இடையூறொன் றுடைய ரானால்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகரும் கற்பகநாட் டணிநகரு
மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
இகல்கடந்த புலவு வேலோய்.

*    *    *

'இகல் கடந்த புலவு வேலோய்'

பத்துத் திசைகளிலும் இசைகளை நிறுவிய தசரதச் சக்கரவர்த்தியே,

முனிசிரேட்டர்களுக்கும் தேவர்களுக்கும் ஏதாவதொரு இடையூறு சம்பவிக்குமானால், அவர்கள் திருக்கைலாசத்தை நாடுவதுதான் புராண சம்பிரதாயம்; திருப்பாற்கடலுக்குச்

செல்லுவது, சத்திய உலகத்துக்குச் சுவர்க்கத்துக்குப் போவது இதிகாச சம்மதம். இதிகாசங்கள் மகத்துவம் பொருந்திய புராணங்களுள்ளே அடங்கும் இந்தப் புராணேதிகாச சம்பவங்கள் மேலுலக சம்பவங்கள். இந்தப் பூலோகத்திலே, பூமியிலே, முனிவர்கள் தேவர்களுக்கு ஒரு புகலிடம் இருந்தால், அந்தப் புகலிடம் ஒன்றேயொன்றுதான்; அந்த ஒன்ருன புகலிடம்,

மணிமாட அயோத்தி என்னும் பொன்னகர்

அது பூலோக சுவர்க்கம். அந்தப் பூலோக சுவர்க்கமாகிய, அயோத்திமா நகரத்திலன்றி, இந்நிலவுலகத்தில் மற்ருெரு நகரத்துக்கு என்போன்றவர்கள்,

'புகலுண்டோ'

காலெடுத்தும் வைப்போமா !

* * *

தசரதச் சக்கரவர்த்தி ஆனந்த மேலீட்டிஞல், அந்தரத்திலே திரிசங்குபோலத் தலைகீழ் ஆகாமல், திருக்கைலாசபதி, நாராயண மூர்த்தி, பிரமதேவர், இந்திரன் என்ற வரிசையில் வீற்றிருக்கும்படி செய்து விட்டார் அபர பிரமாவாகிய விசுவாமித்திரர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

'வாழ்வாங்கு வாழ்பவன் வையத்து வாழும் மகன் அல்லன்; அவன் வானுலகத் தேவருள் ஒருவன்' என்கின்றனர் பரிமேலழகர்

திரிசங்கு சுவர்க்கஞ் சிருட்டித்த விசுவாமித்திரர், அயோத்திமா நகரத்தை மேலே எடுத்துத் திருக்கைலாச வரிசையில், கற்பக நாட்டு அணிநகரை அடுத்து, அதனே அமர்த்தி, அதற்கு அமரத்துவம் அளித்திருக்கின்ருர்.

* * *

ஓய்ந்து தவம்புரி வோருள் உவன்போல்
மாய்ந்தவ ரில்லை மறத்தொடு நோற்றே
ஆய்ந்திடு முக்கணெம் ஐயனும் இன்றேற்கு
ஈந்தது போற்பிறர்க் கீந்தது மின்றால்.

சூரனைப்போலக் கடுங் கொடுந் தவஞ் செய்தவர்களு மில்லை; சூரனுக்குக் கொடுத்ததுபோற் சுவாமி பிறருக்குக் கொடுத்ததுமில்லை என்கின்றார், கந்தபுராணத்திலே வீரவாகு தேவர்

சூரனைப்போலத் தசரதனுங் கடுங் கொடுந் தவஞ் செய்தவன் என்று சொல்லுவது அடாது. ஆனால், விசுவாமித்திரர் தசரதனை எடுத்துப் புகழ்ந்தது போல வேறெவரையும் புகழ்ந்ததில்லை என்று மாத்திரந் துணிந்து சொல்லலாம்

மகா பாரதத்திலே ஒருநாள் விதுரன், தேன் சொட்டச் சொட்டக் கண்ணனை வரவேற்றுப் புகழ்ந்து பாராட்டிய துண்டு. அந்தப் பாராட்டுப் புதிது புணர்ந்து வெகு பிரசித்தமானது. அது இது ;

முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நான்மறைச் சுருதியோ கருதிநீ வருதற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில் என்றான்.

இந்த ஒப்புயர்வில்லாத பாராட்டு, 'என்னனைய முனிவரு' என்று தொடங்கிய விசுவாமித்திரரிடம், கம்பர் மூலம், வில்லி கடன்பட்டு, விதுரருக்குக் கொடுத்த பாராட்டு. கடன் பாராட்டு, 'என்னனைய' என்ற பாராட்டுக் கடன் படாத பாராட்டு; கம்பருடைய முதுசொமான பாராட்டு; அது விசுவாமித்திர முனிவரின் திருவாய்மலரில் திருமணஞ் செய்து, என்றும் நின்று புதுமணங் கமழ்கின்றது.

# 13 புதிய முறையிற் புகழ்மாலை

பாரி பாரி என்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே.

* * *

*'பாரி ஒருவனும் அல்லன்'*

*உலகம் முழுவதையும் புரந்து, அதற்கு வரக்கடவ நன்மைகளையெல்லாம் வருவிப்பவன், பாரி ஒரே யொருவனுந் தானு !*

*'மாரியும் உண்டு!'*

*மாரி என்று ஒரு பண்டம் இருக்கின்றது ! அதுவும் உலகந் தோன்றிய நாட்டொட்டுக் கைம்மாறு வேண்டாது இந்த உலகத்தைப் புரந்து வருகின்றதே !*

*ஈண்டு இந்த உலகத்தைப் புரத்தலைச் செய்வது, பாரியும் பாரியைப் போல மாரியும் ஆயிருக்க,*

*'செந்நாப் புலவர்'*

*அறமே கரைதலினுல் செம்மைப்பட்ட நாவினையுடைய சான்றோர்களாகிய புலவர்க ளெல்லாம்,*

*'பாரி பாரி என்று பல ஏத்தி ஒருவற் புகழ்வர்'*

பாரி பாரி என்று நாத்தழும்பேற ஒருவன் நாமத்தையே அடிக்கடி உச்சரித்து, இந்த உலகத்தைப் புரப்பவன் அவன் ஒருவனுமே யல்லனு யிருப்பவும் அவனையே பாடிப் பாடிப் போற்றிப் புகழுகின்றூர்கள்.

பாரியைச் சிந்திக்குந்தோறும் மாரியைச் சிறிதேயாயினுஞ் சிந்திக்கின்றூர்களில்லை. இந்த அடிப்பட்ட சான்றேர்கள் பாரிக்கே அடிமைப்பட்டு விட்டார்களே. அவன் வள்ளன் மைக்கு வெகுதூரத்திலாயினும் மாரிக்கு ஒரு ஒதுக்கிடந் தானும் இல்லையா! புலவர்களின் நன்றிக் கேடு இருந்தபடி என்னே!

என்றிங்ஙனம் மாரிக்கு இரங்கிக் கண்ணீர் சொரியும் முகமாகப் பாரியை உயர்த்துப் பாடுகின்றூர், பாட்டுக்கு உரிமை பூண்ட கபிலர்.

வள்ளலைப் புகழும்போது மழைபோல வழங்குகின் றூர்கள்; அவர்கள் கை மழைக்கை என்று, பாரி போன்ற வள்ளல்களை மாரியோடு ஒப்பிட்டுப் பேசுவது மரபு. அந்த மரபில், மாரிக்கு உவமையிடமும் பாரிக்கு உவமேய இடமும் வழங்கப்படும். உவமேயம் புகழ்தற்கு எடுத்துக் கொண்ட பொருள். உவமை உவமேயத்தினும் உயர்ந்தது; பிரசித்தமானது. உவமானம் சந்தன மரம் போன்றது; உவமேயம் சாதாரண மரம் போன்றது. உவமானத்தைச் சார்தலினுலே உயர்ச்சியடைவது உவமேயம். உபமாண உபமேய நடையில் உயர்ந்தது உபமானமே.

உபமான இயல்பு இங்ஙன மாதலின், உவமேயம் மிக உயர்ந்த பொருளாயிருக்குமாஞல், அப்படிப்பட்ட பொரு ளுக்கு உவமானஞ் சொல்லுவதில்லை. உயர்ந்த பொரு ளுக்கு உவமை சொன்னுல், அதனை உவமானத்துக்கு அடுத்தபடியான இரண்டாவதொரு பொருளாக எண்ண வைப்பதாயிருக்கும். அது மரபாகாது.

உபமான உபமேயங்கள் உயர்வு தாழ்வு இன்றி ஒத்த சமத்துவ முடையனவாயின், 'உலகத்தைப் புரக்கும் பொருள்கள் இரண்டு; ஒன்று பாரி; மற்றது மாரி.' என்று சொல்லுவதொரு நடையிருக்கின்றது. இது உவமை நடை

யினும் உயர்ந்தது; உவமேயப் பொருளை எடுத்து, உவமான வரிசையில் வைப்பது. இந்த நடைக்கு 'ஒப்புமைக் கூட்டம்' என்று பெயர்.

பாரிக்கு மேலே உபமானமாக மாரியை வைக்க உடன்படாத, பாரியின் நண்பரான கபிலர், ஒப்புமைக் கூட்ட நடையை ஆண்டு, தமது பாரியை மாரியின் வரிசையில் வைத்துப் போற்றலாம். ஆனால், கபிலர் தமது பாரி விஷயத்தில், அந்த ஒப்புமைக்கூட்ட நடையையும் ஒப்புக் கொள்ளவில்லை.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் எடுப்பதூஉம் ஆய மாரி எங்கே! கெடுப்பதையே அறியாத பாரி எங்கே! பாரி வரிசையில் மாரிக்கும் இடமா என்ற முறையில்,

ஒப்புமைக் கூட்டத்துக்கு மேலே, ஒப்புமைக்கூட்ட மறுமலர்ச்சியாக ஒரு புதுவது நடையைக் கபிலர் ஆண்டிருக்கின்றார். இந்த மறுமலர்ச்சி நடை, வழக்கமான உபமேயத்தை உவமானமாகவும், உபமானத்தை உவமேயமாகவுங் கொண்டு, 'முகம்போலச் சந்திரனும் பிரகாசிக்க முயல்கின்றது' என்று கூறுவது ஆகிய உவமை மறுமலர்ச்சியை ஒத்தது.

'பாரி போல மாரியும் வழங்கப் பயில்கின்றது' என்றால் உவமை மறுமலர்ச்சியாய் இருக்கும். இது ஆளக்கூடியதாயினும், மிகப்பழைமைபட்ட நடை; பலரும் ஆண்டு புளிப்பு எய்திய நடை, விருந்தினரை எத்தனை முறை பழகியபோதும் அதனாற் புளிப்பு அடையாது, விருந்தினரைக் காணுந்தோறுங் காணுந்தோறும் புதிது புதிதாக அன்றலருகின்ற பாரியைப் பழைய நடையிற் பாராட்டாது, ஒப்புமைக்கூட்டத்தை மறுமலர்ச்சி செய்து புதியதொரு நடையாற் பாராட்டியது கபிலரது பாட்டு.

* * *

மகாபாரதத்திலே வருகின்ற,

முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலேயோ
சொன்ன நான்மறைச் சுருதியோ கருதிநீ வருதற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில் என்றான்

என்ற வில்லியின் பாட்டும் ஒப்புமைக்கூட்ட மறுமலர்ச்சி என்று சொல்லப்படுகின்றது. ஆனால், மலர்ச்சி இரண்டுந் தம்முள் வேறுபாடானவை ஒரு ஆற்றங்கரையில் வானத்தை அளாவியதொரு பெருமரம் நிற்கின்றது அம்மரத்தின் நுனி கீழே ஆற்றினுள்ளும் மேலே ஆகாயத்திலுந் தோன்று கின்றது இரு நுனிகளும் அம்மரத்தின் நுனியே. ஆகாயத்தில் தோன்றும் மர நுனியின் சாயல் ஆற்றில் தோன்றும் மரநுனி. 'மாரியும் உண்டு' என்று, மாரிக்கு மேலே பாரியை உயர்த்துக் கூறுகின்ற பாரிப்பாட்டு, ஆகாயத்தை அளாவு கின்ற மரநுனி போன்றது. அம்மர நுனியின் சாயலாய் ஆற்றின் ஆழத்தில் தோன்றும் நிழல் போன்றது 'என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடில்' என்று, குடிலைப் பயோததி முதலியவற்றினின்றுங் கீழே தாழ்த்துகிறது வில்லியின் பாட்டு பாரி மாரிக்கு மேலே தோன்றுகின்றான். விதுரனின் குடில், பயோததி முதலியவற்றுக்குக் கீழே தோன்றுகின்றது. ஆகவே, கபிலரது பாட்டின் சாயல் வில்லியின் பாட்டு. ஒப்புமைக் கூட்ட மறுமலர்ச்சி பாரிப்பாட்டு. அதன் மறுமலர்ச்சி குடிற்பாட்டு. அது மறுமலர்ச்சியின் மறுமலர்ச்சி; தாழ்த்தும் முகமாக உயர்த்துவது பாரியும் சிறு குடிலும் ஒரு நேர் இரேகையின் இரண்டு அந்தங்கள்.

கம்பருக்கு முந்தியவர் கபிலர்; பிந்தியவர் வில்லி. கபிலரும் வில்லியும் ஒரு பாரியையும் சிறியதொரு குடிசையையும் எடுத்துக்கொண்டு, ஒப்புமைக் கூட்டத்தை மறுமலர்ச்சி செய்து, தாம் எடுத்துக்கொண்டவற்றைப் புகழ்ந்திருக்கின்றார்கள். அவ்விரு புலவரும் ஒப்புமைக் கூட்ட நடை பழையதாய்க் கழிய, அதன் மலர்ச்சியாய புதியதொரு நடையை மேற்கொண்டிருக்கின்றனர்.

கம்பர், 'என்னனைய முனிவரரும்' என்ற பாட்டில், திருக் கைலாசபதி திருமால் பிரமா இந்திரன் என்கின்ற வரிசையில் தசரதனை வைத்துப் புகழ்ந்தவர், தமக்கு முந்திய கபிலர் நடையைப் பின்பற்றி மாரிக்கு மேலே பாரியை வைத்தது போலத் திருக்கைலாசபதி முதலியவர்களுக்கு மேலே தசரதனை எடுத்துப் பாராட்டியிருக்கலாம். இன்றேல் தசரதன், விசுவாமித்திரரைப் பாராட்டும் முறையில், 'என்னனைய' என்ற பாட்டைத் தசரதன் கூற்றாக மாற்றி, விதுரர் கூற்றான 'முன்னமே துயின் றருளிய முதுபயோ ததியோ' என்ற பாட்டின் நடையைக் கம்பர் தாமே முந்தி யாண்டு வில்லிக்கு முந்திக்கொள்ளவும் இல்லை; முந்திய கபிலரைப் பின்பற்றவும் இல்லை கம்பர் தமது கவித்துவ சாமர்த்தியத்தினாலே பழையதாய்க் கழிந்து கொண்டிருந்த, ஒப்புமைக் கூட்ட நடைக்கே தசரதனைப் பாராட்டு முகமாகப் புத்துயிர் அளித்திருக்கின்றார். அதனால் 'நடைகள் ஆகிய அணிகள் எடுத்துக்கொண்ட பொருளால் தாமும் பிரகாசிக்கின்றன: நடையால் மாத்திரம் பொருள் பிரகாசிப்பதில்லை' என்ற ஒரு அரிய உண்மையையுங் காட்டியிருக்கின்றார். அதன் விளக்கம் பின்வருமாறு:

மாரிக்கு மேலே பாரியை வைத்த நடையில், திருக் கைலாசபதிக்கு மேலே திருமாலுக்கு மேலே, தசரதனை வைத்துக் காட்டுவதனால், அது எடுத்துக்கொண்ட பாத்திரத்துக்கு இழுக்குத் தேடியதாகும். எது எந்த இடத்திற் பிரகாசிக்குமோ, அதை அந்த இடத்தில் வைத்துக் காட்டுவதே பொருத்தம். அதனால் அந்த இடமும் பிரகாசிக்கும். ஆகவே, கபிலரது நடை தசரதனைப் பாராட்டுதற் கேலாமை கண்ட கம்பர், எடுத்த பாத்திரம் பிரகாசித்தற்கேற்ற ஒப்புமைக் கூட்ட நடையையே ஆண்டார். அதனை ஆளும் போதும், திருக்கைலாசபதி திருமால் முதலியவர்களின் வரிசையில், தசரதனுக்கு முதலிடங் கொடாது இறுதியிடத்தையே கொடுத்திருக்கின்றார். முதலிடங் கொடுப்பாராயின் அதுவும் எடுத்த பாத்திரத்துக்கு இழுக்குத் தேடியதாய், இடமும் இழுக்குப் படும் பாத்திரத்தின் இயல் பறிந்து அதனை இருத்தவேண்டிய இடத்தில் இருத்த அறிந்தவர் கம்பர். தசரதனைப் பழைய நடையில் இருத்தி அந்

நடைக்கே புதுமை செய்திருக்கின்றார். தசரதனை உயர்த்துவதாக எண்ணிக் கபிலர் நடையை ஆண்டால், சும்மா இருந்த தசரதனை அர்த்த இராத்திரியில் குடைவிரிக்கச் செய்ததாய் அருமந்த நடையும் பழிக்கப்படும். கம்பர் கவித்துவம், தம்மையடைந்த பாத்திரங்களைக் கைம்மை செய்யாது; நடையைப் பழுது பண்ணாது.

* * *

'என்னனைய' என்ற பாட்டில் 'பன்னகமும் நகு வெள்ளிப் பனிவரை' யாகிய திருக்கைலாச வரிசையில் இறுதியிலுள்ள 'கற்பகநாட் டணிநகர்' ஆகிய சுவர்க்கத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு அயோத்தியை அதனோடு ஒப்பிட்டுப் புகழ்வதனால் மாரிக்கு மேல் பாரியை இருத்தியதுபோல, சுவர்க்கத்துக்கு மேலே அயோத்தியை இருத்திக் கபிலர் நடையைக் கொண்டிருப்பார் கம்பர் அதனைப் புலமை யுலகு ஒப்புக்கொண்டிருக்கும்

* * *

'முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ' என்ற பாட்டு கிருஷ்ணபகவானை விதுரர் வரவேற்றுப் பாராட்டியது. 'என்னனைய முனிவரரும்' என்ற பாட்டு தம்மை வரவேற்ற தசரதரை விசுவாமித்திரர் பாராட்டியது. விசுவாமித்திரர் பாராட்டு, தசரதன் வாய்வழி வரும் சந்தர்ப்பம் நேர்ந்தால் 'முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ' என்ற நடை முன்னமே கம்பரால் ஆளப்பட்டிருக்கும். அன்றி விதுரர் பாராட்டு கிருஷ்ணன் திருவாய்வழி வரும் சந்தர்ப்பம் நேர்ந்தால், 'என்னனைய முனிவரரும்' என்ற கம்பர் நடையை வில்லி பின்தொடர்ந்திருப்பார்.

# 14

# கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி.

இன்றளிர்க்கற் பகநறுந்தேன் இடைதுளிக்கும்
நிழலிருக்கை இழந்து போந்து
நின்றளிக்குந் தனிக்குடையின் நிழல்ஒதுங்கிக்
குறையிரந்து நிற்ப நோக்கிக்
குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக்
குலத்தோடுந் தொலைத்து நீகொண்
டன்றளித்த அரசன்றே புரந்தரனின்
றாள்கின்ற தரச வென்றான்.

*தசரதனுடைய உபசாரத்தால் விசுவாமித்திரரின் உச்சி குளிர்மிகுகின்றது; உள்ளந் துள்ளுகின்றது. திருக்கைலாச வரிசையில் சுவர்க்கத்துக்குப் பக்கத்தில், அயோத்தியைத் தூக்கி வைத்தும், முனிவரின் ஆராமை அமையவில்லை. அதனாலே, அரசனே கேட்குதி, என்று பழைய காலக் கதை ஒன்றைப் புதிது செய்கின்றார் விசுவாமித்திரர் :*

பொன் தளிர்க்கின்ற கற்பக தருவின் கீழே, தண்ணிய நறிய தேன் சொட்டுகின்ற நிழலிலே, காமதேனுவும் சங்கநிதி பதுமநிதிகளும் ஏவல் செய்ய விண்ணுலகில் அரசு வீற்றிருக்கின்றான் இந்திரன். அப்படிப்பட்ட இந்திரன் ஒருநாள், மண்ணுலகத்துக்கு இறங்கித் தண்ணளியே செய்வதும், ஒன்றேயொன்றானதும் ஆன, வெண்கொற்றக் குடையொன்றன் நிழலிலே, இந்திரன்தானோ இவன் என்று அறியக் கூடாத நிலையில், ஒதுங்கி, இரு கைகளையும் எடுத்து, அந்தக்

குடையைக் குறையிரந்து நின்றுக, அந்தக் குடை இரங்கி, இந்திரனைக் கடைக்கணித்து, அவன் அரசைக் கவர்ந்த சம்பராசுரனைத் துரந்து, அவன் சென்ற சென்ற பத்துத திசைகளிலும், இரதத்தைக் கடவி, அவன் வலியைத் தொலைத்து, அதனுல், 'தசரதன்' என்கின்ற பெயரைத் தரித்து, அவன் பற்றிய அரசைத் தான் பற்றி, இந்திரனுக்கு ஈதலைச் செய்ய, அவ்விந்திரன் பெற்றுத் தான் பெற்ற அந்தப் பிச்சைக்குச் 'சுவர்க்கம்' என்று பெயரிட்டு, இன்றைக்கு இமையவர்கள் போற்ற அரசு வீற்றிருக்கின்றுன்.

இது விசுவாமித்திரர் புதுக்கிய பழங்கதை. 'என்னனைய முனிவரும்' என்று தொடங்கித் திருக்கைலாச வரிசையில், சுவர்க்கத்துக்கு அருகில் அயோத்தியை எடுத்து வைத்த விசுவாமித்திரருக்கு, இந்திரனுக்குப் பக்கத்தில், தமது கதாநாயகனுகிய தசரதனை இருத்திப்பார்க்க மனஞ் சகிக்கவில்லை. கபிலர் 'பாரி பாரி' என்ற பாட்டில், பாரிக்குக் கீழே மாரியை இருத்தி மன அமைதி அடைந்ததுபோலத் தசரதன் குடை நீழலிலே இந்திரனை ஒதுங்கச் செய்து, அந்தத் தசரதனிடம் அவ்விந்திரனைப் பிச்சை வாங்க வைத்த பிறகுதான், விசுவாமித்திரரின் மகிழ்ச்சிப் பிரவாகம் ஒருவாறு அடங்கியது.

விசுவாமித்திரரின் திருவாயிலிருந்து இதனைக் கேட்கக் கேட்கத் தசரதச் சக்கரவர்த்திக்குத் தான் நிற்பது பூலோகமா மேலுலகமா என்று சந்தேகமே வந்துவிட்டது. கைகேயி பத்துத் திசையிலும் இரதத்தைச் செலுத்தச் சம்பரனைத் தானே தனிநின்று வென்றது, கண்முன் தோன்றி மறைகின்றது. இந்திரனுக்குத் தான் வழங்கியதை மாத்திரம் தசரதனுற் கேட்க முடியவில்லை; நாணந் தலைக்கேறுகின்றது. வலக்கை வழங்குவதை இடக்கை அறியாதவன் தசரதன்.

முனிவரின் புகழ்மாலை மேலும் நீளுகின்றது. தசரதச் சக்கரவர்த்தி அதனை அளவு செய்பவன் போன்று,

'கரங்கள் கூப்பி, அரசு எய்தி இருந்த பயன் எய்தினன்,'

இனி, 'என் கடன் பணி செய்து கிடப்பதே'. பணித்தருளல் வேண்டும் என்ற முறையில், முனிவர் பெருமானைப் பிரார்த்தித்துத் தலைபணிந்து நிற்கின்றுன்.

இந்த நிலையில் விசுவாமித்திரர், நம்பருடைய கற்பனை யுலகினின்றுங் கீழிறங்கி, இந்த நிலவுலகத்திலே சொந்தமான நிலையிலிருந்துகொண்டு, தசரதனை நோக்கிக் கூறுகின்றார் :

தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக்
கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென உயிரீர்க்குங்
கொடுங்கூற்றின் உளையச் சொன்னான்.

தவஞ்செய்பவர்களுக்கு இடையூறு செய்பவைகள் காம வெகுளிகள். ஆனால் என்னுடைய தவவேள்விகளில் அவை தலைகாட்டுவதில்லை. அவற்றின் பிரதிநிதிகள் போன்று, இராக்கத கணத்தவர்களே எனக்குப் பெரிய இடையூறு செய்து வருகின்றார்கள் அவர்களுடைய தொல்லைகளால் நான் தொடங்கி இடையிற் கைவிட்ட வேள்விகள் பல. இனி, அப்படியாகாமல், அவர்களைப் பொருது வேள்வியைப் பாதுகாப்பாயாக என்று பணித்து, உன் சிறுவர்களுக்குள்ளே ஸ்ரீராமன் ஒருவனை மாத்திரம் என்னிடம் ஒப்பித்துவிடு. அவன் ஒருவனே அவர்களுக்கு விடை சொல்லப் போது மானவன்.

என்றிங்ஙனம் தாம் வந்த காரியத்தை விசுவாமித்திரர் கூறினார். அவருடைய கூற்றுக்களைக் கேட்டதும், சுவர்க்கத் துக்கு மேலே, இந்திரனுக்கு வரங்கொடுக்கு முறையில் உயர்ந்து நின்ற தசரதன், மெல்ல மெல்ல மண்ணுலகத் துக்கு இறங்கி, அங்கேயுந் தங்காமல் பாதாள உலகத்தில் விழுந்து உயிர் துடிக்கின்றான். முனிவர் கூற்றுக்கள் கூற்று வனைத் தசரதனுயிரைச் சிறிது சிறிதாக ஈர்ந்து வதைக் கின்றன முனிவர் வார்த்தைக்கு எதிர்வார்த்தை அறியாமல் உடல் பதறுகின்றது.

கண்ணிலான் பெற்றிழந்தான் எனவுழந்தான்
கடுந்துயரம் கால வேலான்

பிறவிக்குருடன் ஒருவன், இடையிற் கண்பெற்று, அதனாற் கழிமகிழ்வு எய்தியிருந்தவன், சடுதியில் அந்தக் கண்ணை இழப்பானாயின், அவன் அநுபவிக்குங் கடுந் துயரம் எங்ஙனம் அளவு படுத்த இயலாததோ, அங்ஙனம் அளவுபடுத்த இயலா தவகையில், துயரக் கடலில் முழுகுகின்றான் தசரதன். கையி லிருந்த பணத்தை இழந்தவன், தரையிலிருந்து கிணற்றுள் வீழுகின்றான். குதிரைப் பந்தயத்திற் கிடைத்த பணத்தை இழக்கிறவன் துலா நுனியிலிருந்து கிணற்றுள் வீழுகின்றான். இந்த உண்மை நெடுங்காலம் மக்கட்பேறின்றியிருந்து, அருந்தவங்கள் புரிந்து, மகப்பெற்ற தசரதனுக்கு அன்று அநுபவத்துக்கு வருகின்றது; வந்துவிட்டது ஒருவன், கையைப் பெற்றிழக்கலாம்; காலைப் பெற்றிழக்கலாம்; அந்த இழப்புக்களைச் சகிக்கலாம். கண்ணையும் பெற்றிழப்பது சாதாரணமா! சகிக்கத் தக்கதா! தசரதனுக்குக் கண் ஸ்ரீராமன்! அவனைப் பிரிவதென்பது உயிரைப் பிரிவது!

நூற்றெட் டுகம் ஆயிரத்தெட் டண்டங்களை அரசு செய்தவன் சூரபத்மன். அந்தச் சூரபத்மன் ஒரு நாள் தனது அருமந்த புதல்வனாகிய பாநுகோபனை இழக்கின்றான். அப் பொழுது அவன் வாயிலிருந்து வந்த வார்த்தை இது;

'இனியும் புத்திமான்கள், தவத்தைச் செய்து நல்ல புதல்வர்களைப் பெறுவார்களா?'

இந்த வார்த்தை அன்று தசரதன் வாயிலிருந்தும் வந் திருக்கலாம்

திருவள்ளுவர், இதனை அநுவதிப்பவர் போன்று,

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்

என்கின்றார். பேதைகளோடு உறவு பூண்டாற் பிரிகிற காலத்திலே எவ்வளவு சுகமாயிருக்கும். நோயாளிக்கு நோய் நீங்குஞ் சுகமும், பேதைகளோடு உறவு பூண்டான் பேதை களைப் பிரியுஞ் சுகமும் ஒன்றே. பாநுகோபன் இந்திரசித்து ஸ்ரீராமன் போன்ற புதல்வரைப் பெறுகின்றவர்கள், தங்கண் முன் தம் புதல்வரைப்பிரிய நேர்ந்தால், 'பெரிதினிது பேதையார் கேண்மை' என்ற திருக்குறளைச் சொல்லியே தீருவார்கள்

தசரதன் உயிர் ஊசல் ஆடுகிறது.

# 15 முனிவோ டெழுந்தனன் முனி

எண்ணுதற் காக்கரிது இரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன்

ஒரு சமயம் திரிசங்கு மன்னனை விண்ணுலகில் நிறுத்தும் பொருட்டுப் புதிதாக ஒரு சுவர்க்கத்தைச் சிருட்டி செய்யத் தொடங்கினவர் விசுவாமித்திரர். அதனைக் கண்டு அஞ்சி வேண்டுதல் செய்த விண்ணவர்கள் பொருட்டு, இரண்டும் மூன்றும் ஆகிய ஐந்து நட்சத்திரங்களின் நிலைகளை மாத்திரம் மாற்றியமைத்துத் தமது வேகந் தணிந்தவர் விசுவாமித்திரர். அவருடைய தவ வலி நினைத்தற்கு அரியது; செய்து கொள்ளுதற்கு இயலாதது, அபர பிரமா என்று ஒருவரைச் சொல்லுகிறதானால், அந்தப் பிரமா விசுவாமித்திரர். இப்படிப்பட்ட ஒரு விசுவாமித்திரர் ஒரு வேள்வி செய்ய வேண்டுமானால், அதற்கு இடையூறு நிகழுமானால், அந்த இடையூற்றைப் போக்கி, வேள்வியைக் காப்பதற்கு, அவர் கண்ட மந்திரங்களுள் ஒரு வேத மந்திரமே போதுமானது. விசுவாமித்திரர் ஒரு மந்திரத்தை எண்ணுவாராயின், எண்ணிய எண்ணியாங் கெய்தும். அப்படிப்பட்ட விசுவாமித்திரர். ஒரு வேள்வியைக் காப்பதற்கு ஒரு இராமனை வேண்டி வந்தால், 'இராமன் பொருட்டு வேள்வியா, வேள்விப் பொருட்டு இராமனா' என்பது பெரிதுஞ் சிந்திக்கவேண்டியது. அது வேதநெறிப்பட்டவர்களாற் சிந்திக்கற்பாலது. தேவர்கள் முனிவர்கள் செய்ததவமும், அரக்கர்கள் செய்த பாவமும் முதிர்ந்து, ஒரு நாள் ஸ்ரீ ராமாவதாரத்தின் நோக்கத்தை விசுவாமித்திர முனிவரின் இருதய எழுச்சி சிந்திக்கச் செய்தன. அந்தச் சிந்தனையின் வெளிப்பாடுதான்,

நின்சிறுவர் நால்வரினுங் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி

என்ற அருமந்த வார்த்தை அப்படி ஒரு வார்த்தை கிடைக்கப்பெற்றது ஸ்ரீ ராம அவதார விசேஷம் என்பதைப் புத்திரவாத்சல்யத்தால் விழுங்குண்டு கிடந்த தசரதனுற் சிறிதுஞ் சிந்திக்க முடியவில்லை. அவன் அறிவை இழந்தான். முனிவரின் சந்நிதி விசேஷத்தை மறந்தான். பித்துப் பிடித்தவர்போலானுன். தன்னையும் மறந்து தசரதன் பிதற்றினுன். அவன் பிதற்றல் இது ;

தொடையூற்றுந் தேன்றுளிக்கு நறுந்தாரான்
ஒருவண்ணந் துயர நீங்கிப்
படையூற்றம் இலன்சிறியன் அவர்பெரியர்
பணியிதுவேற் பனிநீர்க் கங்கை
புடையூற்றுஞ் சடையானும் நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக் கிடையூருய் யான்காப்பன்
பெருவேள்விக் கெழுக என்றுன்.

இப்படிப் பிதற்றல்களுக்குச் சந்நிதி விரோதம் என்று பெயர். பெரியோர்கள் முன்னிலையில் அவர்களின் குறிப் பறியாது, அறிய முயற்சி செய்யாது, அறிந்தும் அறியாதது போன்று பேசுவது சந்நிதி விரோதம்

படையூற்றம் இலன்; சிறியன்.

தசரதன் இராமனைச் சுட்டிக்காட்டிச் சொல்லுகின்றுன். மகானே, இந்த இராமன், 'சிறியன்'; பச்சைப் பசிய பாலன். படை ஊற்றம் இலன் - வில்வித்தை முதலிய படைக்கலப் பயிற்சி இவன்பால் இன்னும் ஊற்றெடுக்கவில்லை பயிற்சி போதாது.

அவர் பெரியர்

அந்த இராக்கதர்களோ பெருவலி படைத்தவர்கள். அவர்கள் முன் இந்தப் பாலன் எம்மாத்திரம்! வேள்வி ஒரு புறம் இருக்க, அந்த இராக்கதர்களிடமிருந்து இந்தக் குழந் தையைத்தான் பாதுகாத்தல் நேரும். வேள்விப் பாதுகாப் பெங்கே! இந்த விளையாட்டுக் குழந்தை எங்கே!

பணி இதுவேல்

தங்களுக்குச் செய்து வைக்கவேண்டிய பணி, வேள்வியயைப் பாதுகாத்துப் பூர்த்தி செய்து வைக்கின்ற அவ்வளவுதானே! இதனைப் பரிபூரணஞ் செய்து வைப்பதற்கு, இராமனிலும் பன்னூறு மடங்கு திறல் படைத்த யான் இருக்கின்றேனே! யான் இருக்க இந்தச் சிறிய இராமன் எதற்கு! இராக்கதர்கள் மாத்திரமா, மும்மூர்த்திகள் இடையூறு செய்யினுஞ் செய்க. யான் ஒருவன் மாத்திரமே, வரக்கடவ இடையூறுகளுக்கெல்லாம், இடையூறு செய்து, வேள்வியைப் பாதுகாப்பேன் சுவாமி சந்தேகம் வேண்டாம்; தாமதம் வேண்டாம். பெருமை பொருந்திய அந்த வேள்வியைச் செய்யும் பொருட்டு,

'இதோ எழுந்தருளுக'

என்றான் தசரதன்.

முனிவர் கரிய செம்மல் ஒருவனைத் தருதி என்றார் தசரதன் வேள்வி செய்ய வருதி என்கின்றான். தான் பெரிய உதவி செய்து வைக்க வல்லவன் என்கின்றான் முனிவரை யாசிக்கும் நிலையில் வைக்கின்றான்.

வரிசை அறிதலோ அரிதே

என்கின்றார் கபிலர். விசுவாமித்திரர் எப்படிப்பட்ட வரிசையில் உள்ளவர் என்பதைத் தசரதனால் அறிய முடியவில்லை. தசரதன் மனநிலை பெரிதும் இரங்கத்தக்கது.

'பணி இதுவேல், பெருவேள்விக்கு எழுக என்றான்.' என்ற அவ்வளவே. 'என்றனன் என்று' இன்னுந் தசரதன் வாய்மூடவில்லை.

என்றனன்என் றலும்முனிவோ டெழுந்தனன்மண்
படைத்தமுனி இறுதிக் காலம்
அன்றெனஆ மெனஇமையோர் அயிர்த்தனர்மேல்
வெயில்கரந்த தங்கு மிங்கும்
நின்றனவுந் திரிந்தனமீ நிவந்தகொழுங்
கடைப்புருவம் நெற்றி முற்றச்
சென்றனவந் ததுநகையுஞ் சிவந்தனகண்
ணிருண்டனபோய்த் திசைகள் எல்லாம்.

'மண் படைத்த முனி'

ஒரு காலத்திலே தசரதச் சக்கரவர்த்தியின் முன்னோன் ஆன, திரிசங்கு மகாராசாவின் பொருட்டு, உலகத்தை ஒரு நாள் படைக்கத் தொடங்கின முனி,

அன்று, 'என்றனன், என்றலும்' எழுந்தது! முனிக்கு முன் முனிவு எழுந்தது!!

முனிவர் முனிவோடு உடன் எழுந்தார்! முனிவரை மூடி முனிவு எழுந்தது!

தேவர்கள், உலக முடிவு ஆகிய ஊழிக்காலம், அன்றைக்குத்தான் என்றும், 'ஆம்'; அதினுஞ் சந்தேகமா? என்றுஞ் சந்தேகித்தார்கள்.

தசரதனின் குல முதல்வனாகிய ஆதித்தன், வெட்கத்தினாலும், முனிவரின் முனிவு ஆகிய சுடர்விட்டெழுகின்ற கோபாக்கினிச் சுவாலைகளின் எதிர்நிற்கலாற்றாமையினாலும், ஒளிக்கிரணங்களை மறைத்துக் கொண்டான். கோபாக்கினிப் புகைத் திரள்களினால் திக்குக்கள் இருண்டன. நிலையியற் பொருள்களே, கோப தாபத்துக்கு ஆற்றாது, அங்கும் இங்குந் திரிந்து, இயங்கியற் பொருள்களாயின. முனிவரின் நெற்றிப் புருவங்கள் நெற்றி முழுவதையும் விழுங்கிக் கடைப்புருவங்கள் அப்பாலும் மேலே சென்றன. கண்கள் அக்கினிக் கண்கள் ஆயின. ஒரு நாள் திரிபுர சங்காரத்தில் உருத்திர மூர்த்திக்கு வந்த புன்னகை, இன்று விசுவாமித்திரருக்கு வந்தது. 'அப்படியுமா! ஒரு விசுவாமித்திரன் வேள்வி செய்யத் தசரதன் என்று ஒருவன் உதவத்தான் வேண்டுமா! நன்று! நன்று! கெட்டி! கெட்டி!!' என்றுதான் அந்தப் புன்னகை வெளிவந்தது.

குணமென்னுங் குன்றேறி நின்றார்
வெகுளியை
ஒரு கண நேரந்தானும்
இந்த உலகம்

தரிக்குந் தகையதா! முனிவர் வெகுளியைத் தடுத்து ஒரு கண நேரமாயினுந் தன்னைப் பாதுகாக்கும் வல்லமை இந்த உலகுக்கும் உண்டா!

குணமென்னுங் குன்றேறி நின்றார் என்ற வள்ளுவரிலே,

கணமேனும்

என்ற வார்த்தைக்கு இனியாயினும், விசுவாமித்திரரின் வெகுளியைப் பார்த்த பிறகாயினும், பரிமேலழகர் உரையைச் சற்றே திருத்தஞ் செய்யல் வேண்டாமா!

குணமென்னுங் குன்றேறிய முனிவர்கள் வெகுளியை அறியார்கள்; அவர்கள் அறியாமலே அவர்கள்பால் வெகுளி மூளுமாயின், அந்த வெகுளியை இந்த உலகு, ஒரு கணத்தைக் கோடி கூறிட்ட அற்ப நேரந்தானுந் தாங்கி எதிர்நிற்க வல்லதா!

விசுவாமித்திர முனி
கறுக்கின்றது.
இனித் தசரதன் நிலை, என்னும்!

# 16

## வசிட்டர் பாதுகாத் தருளுகின்றார்

ஆற்றுப் பெருக்கற்று அடி சுடும்.

ஆனால், வெப்பம் மிகும் அந்தக் காலத்திலேயும், ஊற்றுப் பெருக்கால் உலகை ஊட்டும். வரண்டு புல் பூண்டுகள் மடிகின்ற காலத்திலே, மருத நிலம் பாலை நிலமாய் மாறுகின்ற நேரத்திலே, எங்கேயோ ஒரு மூலையிலிருந்து, தினையாப் பிரகாரம் ஒரு ஊற்றுக் கிளம்பி, ஆற்றின் பெருமையைப் பேணும்.

ஒருவன் பூர்வ சென்மங்களிற் செய்துவைத்த தவம் ஒருபோதும் வீண்போவதில்லை. தீய புத்திகளாலே அவன் மாண்டு மடிகின்ற நேரத்திலே, அந்தத் தவத்தின் பயன் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஓடி வந்து அவனுக்குக் கைகொடுக்கும். ஆற்றிலே தவம் செய்துவைக்க, அது மற்றொரு குளத்துக்குள்ளே ஏற்ற ஒரு சந்தர்ப்பத்திலே தலை நீட்டும். தவம் இருந்தபடி இது.

> வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
> ஈண்டு முயலப் படும்

* * *

தசரதச் சக்கரவர்த்தி புத்திர வாத்சல்யத்தால் புத்தி தடுமாறி வேதங் கைவந்த விசுவாமித்திர முனிவர் எதிரில் சந்நிதி விரோதஞ் செய்துவிட்டான். உரைக்கலாகாத உரை அவன் வாயில் வந்துவிட்டது.

**பணி இதுவேல் இடையூற்றுக் கிடையூறாய் யான் காப்பன்,**

**எழுக**

என்றது மகா தப்பு

தன் குலஞ் செய்த தவத்தினாலே, ஸ்ரீராம அவதார மகிமையாலே, தேவர்கள் முனிவர்கள் பெற்ற வரத்தினாலே இந்த உலகம் உய்யும் பொருட்டு, ஒரு விசுவாமித்திரர், அங்கு எழுந்தருளிய கருத்தைத் தசரதனால் அறிந்துகொள்ள முடியவில்லை. முனிவர் பணியை வரையறுத்தற்குத் தசரதன் ஆர்! 'இடை யூற்றுக் கிடையூறாய் யான் காப்பன்' என்று 'மண் படைத்த முனி'யாகிய விசுவாமித்திரர் முன்னிலையிலா கூறுவது! ஒரு மகானை, இதோ,

**எழுக**

என்று சொல்லவும் நா எழுவதா!

**யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்காற்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு**

நினைத்தற்கும் சொல்லுதற்கும் முடியாத ஒரு தப்பைத் தசரதன் செய்துவிட்டான்.

**குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயுங் காத்த லரிது.**

தசரதனுடைய அருமந்த இராச்சியம், முனிவரின் கோபத்தினாலே, பொடிப் பொடியாய்ப் போகப் போகின்றது! ஆனால், தசரதன் பண்டு செய்து வைத்த தவம் ஓடி வருகின்றது! ஆற்றுப் பெருக்கற்ற காலத்திலே ஊற்றுப் பெருகுவது போலே, தசரதன் தவப் பயன் பெருகுகின்றது. ஒரு வசிட்டர் அந்தச் சந்தர்ப்பத்தில் நினையாப் பிர காரம் பிரசன்னமாகின்றார். தசரதன் தவங் கைகொடுக் கின்றது. இனிப், பட்டுப்போன மரஞ் சற்றே தளிர் விடலாம்.

**கறுத்த மாமுனி கருத்தை உன்னிநீ**
**பொறுத்தி என்றவற் புகன்று; நின்மகற்கு**
**உறுத்த லாகலா உறுதி எய்துநாள்**
**மறுத்தி யோஎனு வசிட்டன் கூறினான்.**

* * *

**கறுத்த மாமுனி கருத்தை உன்னி**

தசரதனுடைய தவறுதலினாலே கறுத்த மகா முனிவராகிய விசுவாமித்திரரின் திருவுள்ளம் இருந்தபடியை உள்ளவாறே உணருகின்றார், உணரவல்ல வசிட்ட மகாமுனிவர் அங்ஙனம் உணர்ந்த வசிட்டர்,

**அவற் புகன்று**

அந்த விசுவாமித்திரர், தசரதனுடைய மகா தப்புக்கு ஒரு சாப வார்த்தையுஞ் செப்பாது பொறுத்தமைக்கு, அவரைப் பெரிதும் பாராட்டுகின்றார். அங்ஙனம் பாராட்டிய வசிட்டர், மேலும் சற்றே, பொறுத்தி என்று விசுவாமித்திரரை வேண்டுதலுஞ் செய்கின்றார். இப்படி வேண்டுதல் செய்து, முனிவோடு எழுந்த முனியை முனிவு தணித்துச் சிறிதே சாந்தி செய்து இருக்கவைத்துவிட்டு, அதன்மேல், தமது சீடர் பக்கந் திரும்பி இயல்பான தமது சாந்த நிலையைக் கடினப்படுத்திக்கொண்டு, பெரிதும் இடித்துரைக்கின்றார்.

**மறுத்தியோ**

அப்பனே, நீ என் நினைந்து என் செய்தாய்!
இராமாவதாரத்திலே, இன்றைய நாள்,

**உறுத்த லாகலா உறுதி யெய்து நாள்**

ஸ்ரீ ராமனுக்குப் பிறரெவராலும் உறுத்த இயலாத உறுதிப் பொருள் கைகூடுதற்கு உரியதொரு சுபதினம், இன்றைய தினம்! நின் மகனுக்கு உறுத்தலாகாத உறுதி கைகூடுகின்ற இந்தச் சுமங்கல தினத்திலே, வலிந்து வந்த ஸ்ரீதேவியை, என்னப்பா செய்தாய்! என்கிறார் வசிட்டர்.

பட்ட மரத்திலே, கண்ணீர் பெருகுகின்றது; அடி சுடுகின்ற மணலிலே ஊற்றுப் பெருகுவது போலத் தசரத மரத்திலே கண்ணீர் ஊறுகின்றது; ஊற்றெடுத்து ஓடுகின்றது. அதனாலே, முனி எடுத்த சீற்றம் மெல்ல மெல்லத் தணிகின்றது.

குருவின் வாசகங் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின்

என்கிறான் தசரதன் விசுவாமித்திரர் பக்கந் திரும்பாமலே, திரும்புதற்கு நேரம் இல்லாமலே, நீத்தாராகிய குலகுருவின் மந்திர மொழியைச் சிரமேற் கொண்டு, சிறிதுந் தாமதிக்காமலே,

ஸ்ரீ ராமனை

அழைக்கின்றான்; வழி தவறியவன் வழிக்கு வருகின்றான்; வந்துவிட்டான்.

திருவள்ளுவரிலே அரசியலில் தொடங்குகின்ற பொருட்பாலுக்குப் பாயிரம் நீத்தார் பெருமை என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அதனைத் தசரதச் சக்கரவர்த்தி தக்க சமயத்தில் உணருகின்றான்.

* * *

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

சுவை முதலிய ஐந்தின் வகையை உள்ளவாறு தெரிந்த நீத்தோர்கண்ணதே உலகம். விசுவாமித்திரரால் ஒரு சமயம் திருக்கைலாச வரிசையில் வைத்துப் பாராட்டப்பட்ட அயோத்திமாநகர அரசியல், வசிட்டர் கண்ணதா? தசரதன் கண்ணதா? இந்தச் சந்தர்ப்பத்தில் இது சிந்திக்கற்பாலது. ஒரு நாள் விசுவாமித்திரர் அரிச்சந்திரனுடைய அரசியலைத் தம்வசப் படுத்திக்கொண்டு, பிறகு அவன்பால் ஈந்தார். நீத்தார்கண்ணதே உலகம். அவர் வழிப்பட்டோனே அரசன். அரசன் நாடோறும் இருதய பாராயணம் பண்ணவேண்டிய அருமறைகள் இவை.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்

* * *

உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்

* * *

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்

* * *

தேர்ந்து கொளல்
பேணிக் கொளல்
தமராக் கொளல்

இந்தக் கொளல்கள் எல்லாம், அரசன் தலைக்கண்ணவாதலினுற் போலும், அடுத்த திருக்குறள்,

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாந் தலை.

என்று முடிகின்றது. இந்தத் கொளல்களை எல்லாந் தசரதன் தலைக்கொண்டு. கொற்றவன் ஆயினுன். அதனைக் கண்ட கம்பர், சந்தர்ப்பத்தைப் பயன் செய்து, அருமந்த நான்கு திருக்குறள்களையுந் தாமே தலைக்கொண்டு, அதன் பேருகக்

குருவின் வாசகம் (தலைக்) கொண்டு கொற்றவன்

என்ற வள்ளுவர் வழிவந்த விளைவுத் தொடரைத் தந்து, புவிச்சக்கரவர்த்தி போலத் தாமுங் கவிச்சக்கரவர்த்தி யாயினுர்.

வள்ளுவர் உபயோகித்த 'கொளல்' என்ற வார்த்தைகள் எந்தக் 'கொள்' என்ற வினையடியிலிருந்து பிறந்தனவோ, அந்தக் 'கொள்' என்ற வினையடியிலிருந்துதான்,

'குருவின் வாசகங் கொண்டு'

என்ற தொடரில், 'கொண்டு' என்ற வார்த்தை பிறந்திருக்கிறது.

* * *

தசரதன், தன்னிற் பெரியாராகிய குலகுருவின் வாசகத்தைத் தலைக்கொண்டு, தவறுதலினின்றுந் தப்பினான்.

**பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதுஇன்றேல்,**
**மண்புக்கு மாய்வது மன்.**

'பண்புடையார் கண்ணே படுதலால் உலகியல் எஞ்ஞான்றும் உண்டாய் வாராநின்றது. ஆண்டுப் படுதல் இல்லையாயின், அது மண்ணின்கண் புக்குமாய்ந்து போவதாம்' என்கின்றனர் பரிமேலழகர்.

பண்புடையராகிய வசிட்டர் உரிய சந்தர்ப்பத்தில் தலைப்பட்டதனால், தசரதன் அரசியல் மண்புக்கு மாயாமல் தப்பியது. அதனால் தசரதன் வாக்குத் தூயனாய் 'திருவின் கேள்வனைக் கொணர்மின்' என்றான். என்றதும்,

**வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்**
**முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநற்**
**றந்தை நீதனித் தாயு நீஇவர்க்கு**
**எந்தை தந்தனன் இயைந்த செய்கென்றான்**

ஸ்ரீராமனோடு இணைபிரியாதவன் இலட்சுமணன். இருவர் குழந்தைகளையும் முனிவர் முன்னிலையில் நிறுத்தி 'எம்பெருமானே! இந்தக் குழந்தைகளுக்கு அப்பனும் நீ, அம்மையும் நீ, அம்மட்டோ, என்னுடைய அன்னை தந்தையும் நீரே! நான் வேறு பிரகாரம் எண்ணித் தவறு செய்ததைப் பொறுத்தருளவேண்டும். இனி இக் குழந்தைகளைப் பற்றிச் சொல்வதற்கு எவ்வித உரிமையும் எனக்கில்லை' என்று வேண்டுதல் செய்து நின்றான், சற்று முன்னர் எழுக என்று தொடங்கிய தசரதன்.

# 17 ஏழும் ஏற ஆறும் ஏறினர்

கொடுத்த மைந்தரைக் கொண்டு சிந்தைழுந்து
எடுத்த சீற்றம்விட்டு இனிது வாழ்த்திமேல்
அடுத்த வேள்விபோய் முடித்தும் நாம்என
நடத்தன் மேயினன் நவைக்கண் நீங்கினன்.

*நவைக்கண் நீங்கினன் - விசுவாமித்திரர், நடத்தன் மேயினன் - தசரதன் கொடுத்த புதல்வர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு நடப்பாராயினர். நவை - குற்றம். அவை, தவஞ்செய்வோர்கள் வெருவர, அவர்களைச் சென்று அடைகின்ற காம வெகுளி மயக்கங்கள், அவ்வகையான குற்றங்களை முன்னமே நீங்கித் தூய்மை எய்தியவர் விசுவாமித்திரர். இப்பொழுது தசரதன் முன்னிலையில் எழுந்த வெகுளி சிந்தை கலங்கி எழுந்த வெகுளி அன்று. நல்லோனாகிய தசரதன்பால் நவை உளதாவது கண்டு, அவனைத் தூய்மை செய்ய எழுந்த வெகுளி, அந்த வெகுளி. தசரதன் பண்டு செய்து வைத்த தவவிசேஷத்தால் விசுவாமித்திரர்பால் எழுந்த வெகுளி அந்த வெகுளி. தசரதன் தன்னை விற்றாயினும் கொள்ளத்தக்க வெகுளி. விற்றுக்கோட்டக்க துடைத்து*

* * *

**எடுத்த சீற்றம்!**

*தசரதனைத் தூய்மை செய்தற்பொருட்டு எழுந்த அந்த வெகுளி, விசுவாமித்திரரிடம் இயல்பால் அமைந்த புதிய தொரு வெகுளியன்று. ஆதலின் எடுத்த சீற்றம் எனப் பட்டது. அது முதன்மையாகிய முந்து சீற்றமுமாம்.*

தன்பாலில்லாத தொன்றைத் தேடி எடுப்பதுபோல் விசுவா மித்திரரால் எடுக்கப்பட்ட தாகலால், எடுத்த சீற்றம் ஆயிற்று.

ஒரு நாள் சீதாபிராட்டிக்கு ஒரு சீற்றம் அத்தியாவ சியகமாய்விட்டது. ஸ்ரீராமன் நாடு துறந்து காட்டுக்குப் போகவேண்டியவன் ஆகின்ருன் அதனைச் சீதை அறியாள். அறியாத அவளுக்கு, எவருங் காத்திராத அந்தச் சம்ப வத்தைப் புதியதொரு முறையில் அறிவிக்க முயல்கின்ருன் இராமன். அறிவிக்க முயன்ற அவன், அறிவிக்கிற அவ்வ ளவில் அமையாமல், அவள் தன்னுடன் போக்குச் செய் வதற்கு உடன்படாதவன் போன்று, அவள் மென்மை கருதி, அவளுக்கு நன்மையென்று ஒன்று சொல்லத் தொடங்கு கின்ருன்.

**நடத்தலரி தாகுநெறி நாள்கள்சில தாயர்க்**
**கடுத்தபணி செய்திவண் இருத்தினை லோடும்**

காட்டு நெறி வெகு வெப்பமானது; முட்கள் கற்கள் நிறைந்தது. அவ்வழியில் உன்ஞல் நடத்தல் கூடாது. அவ் வளவு கஷ்டப்பட்டு நடந்தபோதும், அங்கே தங்குதற்குரிய நாள்கள்தாம் எத்தனை! 'பத்து நான்கு பகல் அல்லவோ.' இதோ நான் போய்வந்து விடுகின்றேன் என் தாயர்க்கு வேண்டுவன செய்துகொண்டு, அவர்களோடு இங்கேதானே 'இருத்தி' என்கின்ருன் இராமன். உயிர் உடலை நோக்கி, 'உடனே நீ இங்கே சற்றே இருந்து கொள்வாயாக; நான் இதோ போய் வந்துவிடுகிறேன்' என்று சொல்லுவ துண்டாஞல், அதுபோலச் சொல்லுகின்ருன் இராமன். உடல் உயிரைப் பிரிந்திருப்ப தெப்படி!

சீதாபிராட்டி,

**உடுத்ததுகி லோடும்உயிர் உக்கஉட லோடும்**
**எடுத்தமுனி வோடும் அயல் நின்றதும் இசைப்பாய்.**

புதியதொரு இடத்துக்குப் புறப்படுகின்றவர்கள், உடுத்த துகிலை மாற்றி மற்ருென்றை உடுத்திக் கொள்வார்கள். அது வழக்கம். பிராட்டி அன்று அவ்வழக்கத்தைச் செய்யவில்லை

அதற்குக் காலம் இல்லை. பிராட்டியின் உயிர் அதற்கு முன்னமே, உடலினீங்கிக் காட்டை நோக்கிவிட்டது உடல் மாத்திரம், ஸ்ரீராமனுக்குப் பின்னேகூட நில்லாமல், அவன் நிழல்போல் அவனைத் தொடர்தற்கு எவ்வித தடையுமின்றிப் பக்கத்தில் நிற்கின்றது. அவ்வுடலில் உயிர் இல்லை. அதற்குள் ஒரு முனிவு இருக்கின்றது. அவள் உடலில் அப்படி ஒரு முனிவு முன் பின் குடியிருந்ததில்லை. அன்று மாத்திரம் எங்கிருந்தோ வந்து, அவள் உடலிற் குடியேறியிருக்கின்றது. அது. அத்தியாவசியக தேவையை முன்னிட்டு அவள் உயிர் அவள் உடலைப்பிரிந்து, அலைந்து தேடி எடுத்த முனிவு அந்த முனிவு. அதனாலே, சீதாபிராட்டிக்கு அன்று வந்த முனிவுக்கு 'எடுத்த முனிவு' என்று பெயர். முனிவு சீற்றம் இந்த எடுத்த முனிவுக்கு இனமானதொரு முனிவு தான், அன்று விசுவாமித்திரருக்கு வந்த எடுத்த சீற்றம். எடுத்த சீற்றம் ஆண், எடுத்த முனிவு பெண் இவ்வளவுதான் வேறுபாடு. இயல்பால் அமையாமை இரண்டுக்கும் பொது சீதை எடுத்த முனிவும், விசுவாமித்திரர் எடுத்த சீற்றமும் மூலவேர் இல்லாதவைகள். எந்தநேரமும் விட்டு விலகக்கூடியவைகள், அதனாலே, எடுத்த சீற்றம் விட்டு, நவைக்கண் நீங்கிய விசுவாமித்திரர், இனிது வாழ்த்தி நடத்தன்மேயினார்.

* * *

'எடுத்த சீற்றம் விட்டு' என்பதில், விட்டு என்பதற்குப் பொழுதுபட்டு என்பதில் பட்டு என்பதற்குப் 'பட' என்று பொருள் உரைப்பதுபோல, 'விட' என்று பொருள் உரைக்கலாம் எடுத்த சீற்றமானது, அதனால் சித்திக்க வேண்டியது சித்தித்த பிறது, அங்கே குடியிருக்க வழியின்றித், தானே விட்டுவிலக என்றவாறு. இருள் விலக ஒளி குடியேறுவது போல, விசுவாமித்திர முனிவரின் இருதயத்திலும் நாவிலும் எடுத்த சீற்றம் விலக, அவ்விடங்களில் இனிதும் வாழ்த்துங் குடியேறுவனவாயின அதனால் அவர் காயம் மாசின்றி விளங்கியது. தசரதனை நோக்கி வந்தபோது எவ்வாறு நடந்து வந்தாரோ, அவ்வாறே மனத்தில் மறுவின்றி மகிழ்வு பொங்கத் தசரதனை ஆசீர்வதித்துவிட்டு விசுவாமித்திரர் நடப்பாராயினார்.

* * *

'சீரைதைஇய' என்று தொடங்குகின்ற, திருமுருகாற்றுப் டையின் மூன்றாவது படைவீடு, முனிவர்களைத் 'துனியில் காட்சி முனிவர்' என்கின்றது. துனி வெறுப்பு. முனிவர்களுக்கு இந்த உலகத்திலே எப்படி விருப்பு இல்லையோ, அப்படியே அதில் வெறுப்பும் இல்லை. மேன்மைகொள் சைவ நீதி என்ற உலகத்தில் வசிப்பவர்கள் முனிவர்கள். அவர்கள் முனிவு துனியில்லாதது நீதியை நேர் செய்வது மேன்மை கொண்டது நவையற்றது.

* * *

துனியில் காட்சி முனிவர்களின் வர்க்கத்தைச் சேர்ந்தவராகிய விசுவாமித்திரர், எடுத்த சீற்றம் விட்டு, இனிது வாழ்த்தி, முன்னமே நவைக்கண்ணீங்கி நடப்பாராயினர். அந்தப் பேருபகாரத்தாலே, தசரதச் சக்கரவர்த்தியும் நவைக்கண் நீங்கினன்

'நவைக்கண் ணீங்கினன்'

என்ற தொடர் விசுவாமித்திரருக்கும் தசரதனுக்கும் பொது. நவைக்கண்ணீங்கினனாகிய விசுவாமித்திரர் இனிது வாழ்த்தி நடக்கத், தசரதனும் நவைக்கண்ணீங்கினன் என்றவாறு.

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

'காத்தற்கருமையான தவவிரதங்கள் உடையார் வெகுள்வாராயின், அவராற்றலான் இந்திரனும் இடையே தன் பதம் இழந்து கெடும்.'

ஏந்திய கொள்கையார் முனிவர். வேந்தன் - இந்திரன்.

'நகுடன் என்பான் இந்திரன் பதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான், அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய்ய, அதனால் சாபம் எய்தி அப்பதம் இடையே இழந்தான்.'

**வகைமாண்ட வாழ்க்கையும வான்பொருளு மென்னும்**
**தகைமாண்ட தக்கார் செறின்:**

* * *

**கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு**
**ஆற்றாதார் இன்னா செயல்**

தகைமாண்ட தக்காராவார் - (தவவிரதங்களை) ஆற்றுவாராவார் - விசுவாமித்திரர் போல்வார்.

**'துறவிக்கு வேந்தன் துரும்பு'**

தசரதன் எரிக்குமுன் எதிர்ப்பட்ட சிறு துரும்பாகாமல் விசுவாமித்திரர் எடுத்த சீற்றம், அவரை விட்டுத் தானே விலகியதனால், தசரதன் உய்ந்தான்; அவன் குலம் உய்ந்தது. ஸ்ரீராம லக்குமணர்கள் விசுவாமித்திரருடன் நடக்கின்றார்கள்.

**தாழு மாமழை தழுவு நெற்றியால்**
**சூழி யானைபோற் றோன்று மால்வரைப்**
**பாழி மாமுகட் டுச்சிப் பச்சைமா**
**ஏழு மேறப்போய் ஆறும் ஏறினார்.**

முனிவர் முன்னே நடக்கின்றார்; மூவரும் நடக்கின்றார்கள். ஸ்ரீராமனின் குல முதல்வனாகிய சூரிய பகவானின் தேரில் பூட்டிய பச்சைக் குதிரைகள் ஏழும், முக படாம் அணிந்த யானைகளின் மத்தகத்திற் கால்வைத்து நிமிர்வதுபோல முகில்கள் படிந்த உதயகிரிச் சிகரங்களில் ஏறி எட்டிப்பார்க்க, அதே சமயத்தில், சூரியகுல ஒழுக லாறாகிய சரயு ஆற்றைக் கடந்து இராமனை உள்ளிட்ட மூவரும் கரையேறினார்கள்.

'உச்சிப் பச்சைமா

ஏழு மேற ஆறும் ஏறினார்.'

இருள் விடிந்தது. தசரதனைக் கவிந்த இருளும் விடிந்தது. இராக்கத இருளும் விடியப்போகின்றது. ஒளிக்கும் இருளுக்கும் இடமான உலகம் ஒளியையே பெற்று உய்தி தலைக் கூடப்போகின்றது. கரையேறப்போகின்றது.

# 18 வழியிற் சிறுகதை

தேவு மாதவற் றெழுது தேவர்தம்
நாவு ளாகுதி நயக்கும் வேள்விவாய்
தாவு மாபுகை தழுவு சோலைகண்
டியாவ தீதென்று னெவர்க்கு மேனின்றான்.

உச்சிப் பச்சைமா ஏழு மேறப் போய் ஆறுமேறி, உதய காலத்திலே தருக்கள் நிறைந்த வனமாகிய தவவனத்தை நோக்கி விசுவாமித்திரர் நடக்கின்றார். இராம லட்சுமணர்கள் அம் முனிவருடைய அடி நிழல்போல அவரைத் தொடர்கின்றார்கள். அப்படிச் செல்கின்றபோது, சரயு நதியுங் கங்கையுஞ் சங்கமிக்கின்ற சங்கமத்துக்கு அருகே, செழித்து வளர்ந்ததொரு சோலை, யாகாக்கினிகளிலிருந்து அடர்ந்தெழுகின்ற புகைப்படலங்களால் மேகமண்டலத்தைத் தொட்டுக்கொண்டு அக்கினி மலையாகிய அருணாசலத்துக்கு எதிரானதொரு புகைமலையாய், தேவர்கள் நாவில் நெய் முதலிய ஆகுதிகளை விருந்து செய்வதாய், எதிர்ப்பட்டுத் தோன்றியது அந்த அற்புதத்தைக் கண்டபோது, இந்த உலகத்திலே எப்படிப்பட்டவர்களுக்கும் மேலானவன் என்று எண்ணப்படுபவனாகிய ஸ்ரீ ராமன் தெய்வத்தன்மை பொருந்திய மகாமுனிவராகிய விசுவாமித்திரரை வணங்கி,

ஆற்றங்கரையினிலே,
கடந்து செல்லும் வழியினிலே,
யாவது ஈது
என்று வினவுவானாயினான்.

* * *

குழந்தைகளுக்குப் பாட்டி கதை சொல்வது வழக்கம். பாட்டிக் கதையிலிருந்து வளர்ந்து மேலெழுந்து மணிமுடி சூடிய கதைகள்தாம், 'கேளுங்கள் நைமிசாரணிய வாசிகளே' என்று ஆரணியங்களிலே சூதமகாமுனிவர் அடிக்கடி சொல்லத் தொடங்குகின்ற கதைகள் எல்லாம். சின்னஞ் சிறிய குழந்தைகளைப் புத்தம் புதிய இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றவர்கள் எப்படிப்பட்ட பென்னம் பெரியவர்களா யினும், அந்தக் குழந்தைகள் அவர்களைச் சும்மா விடமாட் டார்கள். புதுமைகளைக் காணுந்தோறுங் காணுந்தோறுங் குழந்தைகளுக்கு வாயூறிக்கொண்டே யிருக்கும்; வாய் சும்மா கிடவாது 'அது என்ன?' 'இது என்ன?' 'ஏன் அப்படி?' என்று வினுவிக்கொண்டேயிருக்கும். புதுவதாகப் பூலோகத் துக்கு இறங்கிய குழந்தைகள் புதுமைகளை வினவாமலிருப்ப தெப்படி! வினவாமலிருக்க மாட்டாமையினுலே குழந்தை கள் வினுவுவதைக் குழந்தையுள்ளம் படைத்த பாட்டிகள் குழப்புவதில்லை குழந்தை ளின் வினுக்களை மேலும் வளர்த்துப் பாட்டிகள் கதை சொல்லிக்கொண்டே யிருப் பார்கள். பாட்டிகள் கதா பொக்கிஷங்கள்: கதைகளின் ஊற்றுக்கள்; வற்ருத கிணறுகள்.

* * *

விசுவாமித்திரர் ஸ்ரீராம லட்சுமணர்களாகிய குழந் தைகளை ஆற்றங் கரையினிலே, அழகொழுகுகின்ற சோலை களுக்கு எதிரினிலே, அழைத்துச் சென்ற குற்றத்துக்காகப் பெரிய இராஜ ரிஷியா யிருந்துங் கதை சொல்லுகிற பழைய பாட்டியார் ஆயினர். ஸ்ரீ ராமனை நோக்கி விசுவா மித்திரர் அவன் வினவிய சோலையைப் பற்றிக் கதை சொல் லுகின்ருர். சிறு கதை.

பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா லுணர்வுமேன் முடுகினு ரறிவுசென்று
உற்றவா னவனிருந்து யோகுசெய் தனனெனிற்
சொற்றவா மளவதோ மற்றிதன் தூய்மையே.

பற்று அவா வேரொடும் பசை அற

பற்றுக்கள் என்றும் அவாக்கள் என்றும் சொல்லப்படும் மயக்கங்கள் இருந்த இடமுந் தெரியாமல் பசையின்றி வேரோடும் அற்றுப் போகவும்;

**பிறவி போய் முற்ற**

புல்லாகிப் பூடாய்ச் செல்லாநின்ற பிறப்புக்கள் முற்றுப் பெறவும்;

**வாலுணர்வு மேன் மூடுகின்றார்**

மெய்யுணர்வு மேலிட்டுத் திருவருளை அணுகியவர்கள் தத்துவ ஞானிகள். அப்படிப்பட்ட தத்துவ ஞானிகள்;

**அறிவு சென்று உற்ற வானவன்**

சிவபெருமான் தத்துவ ஞானிகளின் அறிவுகள் சென்று ஒரு முகப்பட்டு முடிகின்ற முடிந்த இடமான தேவாதி தேவன்; மகாதேவன்; சிவபெருமான் அப்படிப்பட்ட தத்துவாதீதனான மகாதேவன் ஒரு காலத்திலே, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, இந்தச் சோலையிலே யோகஞ் செய்து கொண்டிருந்தவன். மகாதேவன் யோகு செய்திருப்பதற்கு இடமாதலாகிய பெறற்கரும் பேற்றைப் பெற்றது இந்தச் சோலை அதனாலே, இச்சோலையின் தூய்மை வெறுஞ் சொற்களாற் சொல்லுந் தரமுடையதன்று, ஸ்தாணுவாகிய சிவபெருமான் யோகத் தமர்ந்தருளினமையால் இந்தச்சோலை ஸ்தாணு ஆச்சிரமம் என வழங்குகின்றது; என்றிங்ஙனம் சிவபெருமானை முன்னிட்டுக்கொண்டு வழிப்பயணத்துக்கு உறுதுணையாக, பாலர் பயிற்சியும் ஒன்றுசேரச் சிறுகதை ஆரம்பிக்கிறார் விசுவாமித்திர மகா முனிவர்.

* *

'ஸ்ரீ ராமனே கேட்பாயாக. இந்தச் சோலை மிகவும் பரிசுத்தமானது. பரமசிவன் ஒரு காலத்திலே இந்தச் சோலையிலே யோகஞ் செய்துகொண்டிருந்தார். அதனாலே புல் முதல் தேவர் இறுதியான ஆன்ம வர்க்கங்கள் போகமின்றி இருந்தன. போக தெய்வமான மன்மதன் உலகப் போக்கைக் கண்டு அஞ்சி அதனை மேன்மேலும் விருத்தி செய்யக் கருதித் தனது தென்றலாகிய இரதத்திலேறிக் குயில்கள் எக்காளஞ் செய்யச் சந்திரவட்டக் குடை நிழற்றக்

கரும்பு வில்லையும் புஷ்ப பாணங்களையும் கையில் ஏந்தி இந்தச் சோலையுட் புகுந்து மகாதேவரின் யோக நிலையைக் குலைக்க முயற்சி செய்தான். அப்பொழுது மகாதேவரின் திருநெற்றியில் ஒரு அக்கினிக் கண் தோன்றி, அந்த மன்மதனைச் சாம்பர் செய்தது. மன்மதன் அன்று தொட்டு அநங்கன் ஆயினன். அநங்கன் அங்கம் இல்லாதவன். அங்கம் சரீரம். அங்கனாயிருந்த மன்மதன் அன்று தொடக்கம் அநங்கன் ஆயினன்.

அநங்கன் ஆன மன்மதனின் அங்கம் நீறுபட்ட காரணத்தினாலே, இந்த இடம் அங்க நாடு என்று வழங்குகின்றது. இடம் அங்கநாடு ஆக, இந்த இடத்திலிருந்த தாணு ஆக்சிரமமும் பின் காமனாச்சிரமம் என்று பெயர் வேறுபட்டு வழங்குகின்றது. காமன் என்பது மன்மதனுக்கு மற்றொரு பெயர்.'

என்று சிறுகதை சொல்லிக்கொண்டு, எந்தச் சோலையைப் பற்றிக் கதை தொடங்கியதோ, அந்தச் சோலையை நோக்கி நடக்கின்றார் விசுவாமித்திரர் இராமலட்சுமணர்கள் கதையிலே சுவைபிறந்து, கதையில் நடக்கின்றார்கள் கதையும் முடிந்தது சோலையும் அணுகியது. செவியாற் பருகிய சோலையை நேரே கண்ணாற் பருகுகின்றார்கள். இன்னுஞ் சோலையுட் பிரவேசிக்கவில்லை அந்தச் சோலையில் தவஞ்செய்துகொண்டிருந்த முனிவர்கள், விசுவாமித்திர முனிவர் இராஜ குமாரர்களுடன் வருவதை அறிந்து, சோலை வாய்தலில் எதிர்கொண்டு, சோலைக்குள்ளே அழைத்துச் சென்று, தங்கள் தங்கள் ஆச்சிரமங்களில் ஏற்ற ஏற்ற உபசாரங்கள் செய்து, அளவளாவுகின்றார்கள். இராமலட்சுமணர்கள் வியப்புச் சுவையில் முழுகித் திளைக்கின்றார்கள். அன்றிரவு, ஸ்தாணு ஆச்சிரமமாய்ப் பின் காமனாச்சிரமமான சோலையிலே, முனிவர்களுக்கு மத்தியிலே கழிகின்றது.

> அன்றுறைந் தலர்கதிர்ப் பரிதிமண் டிலமகன்
> குன்றினின் றிவரவோர் சுடுசுரங் குறுகினர்.

அடுத்தநாட் காலையில் சூரியன் உதயமாக,

'ஓர் சுடுசுரம்'

குறுகினர். சுடுசுரம் பாலை நிலம்.

# 19 கடுங்கொடும் பாலை

விஞ்சுவான் மழையின்மே லம்பும்வே லும்படச்
செஞ்செவே செருமுகத் தமர்செயுந் திறனிலா
வஞ்சர்தீ வினையினால் மானமா மணியிழந்
தஞ்சினார் நெஞ்சுபோ லென்றுமா றுதரோ.

இராம இலட்சுமணர்களும் விசுவாமித்திரரும் - சோலையினின்றும் நீங்கியவர்கள் அப்பால் ஒரு பாலையை அணுகினார்கள். ஐவகை நிலங்களில் வெப்பத்துக்கு இருப்பிடமான சுடுசுரம் பாலை. உலக பந்தங்களை விடுவதும், ஒரு உண்மையை அறிந்தும் அதனைத் தொடர முடியாது வாளா இருப்பதும், எத்துணை வெப்பமோ அத்துணை வெப்பத்தைத் தன்பாற் கொண்டது பாலை. உண்மையைத் தொடர்வதே உடன்போக்கு. ஒருவனை ஒருத்தி தொடர்வதில் வைத்தே உடன்போக்கு உரைக்கப்படுவது. வேத உண்மையாகிய விசுவாமித்திரரைத் தொடர்கின்றான் ஸ்ரீ ராமன். தொடராமலிருக்க முடியாமல் தொடர்கின்றான் ஸ்ரீராமன். அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்துத் தொடர்கின்றான் ஸ்ரீ ராமன். அவ்வாறே ஸ்ரீ ராமனைத் தொடராமல் இருக்க மாட்டாமையாற் றொடர்கின்றான் மற்றொருவன். அவன் இலட்சுமணன். இரு உடன்போக்குக்கள் ஒருங்கு நடக்கின்றன. மூவர்கள் ஒருவழிப்பட்டு நடக்கின்றார்கள்.

* * *

சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர்

பெருகுவது உலக தொந்தம். உலக தொந்தமாகிய பந்தங்கள் வடவாமுகாக்கினி போன்றவைகள் ஒருவன் உள்ளத்தைச் சுட்டு எரிப்பவைகள். உலக வெப்பங்களுள், பந்தங்களைப் பிரிய இயலாத வெப்பமே கடுங்கொடும் வெப்பம். ஒரு தசரதன் உள்ளத்தில் ஒருநாள்,

மருமத்தில் எறிவேல் பாய்ந்த, புண்ணில்ஆம்
பெரும் புழையில் கனல் நுழைந்தா லென்ன

நுழைந்து, அவன் உயிரை ஊசலாடச் செய்த வெப்பம் அந்த வெப்பம். மற்றொருநாள் தசரதன் உயிரை உண்டு ஏப்பம் இட்டதும் அந்த உலகபந்த வெப்பமே

அசுவத்தாமா என்ற குதிரைதான் இறந்தது. துரோணர் செவியில் 'அசுவத்தாமா இறந்தது' என்ற வார்த்தைகளே புகுந்தன. 'இறந்தது' என்ற வார்த்தை அஃறிணை ஒன்றன் பால் என்பதனைக் கூடத் துரோணரின் செவிகள் சிந்திக்க வில்லை. அவர் உயிர் ஊசலாடக்கூட நேரமின்றி உடலைப் பிரிந்தது. உலக பந்த வெப்பம் இருந்தபடி இது. உலக தொந்த பந்த வெப்பங்களை வென்றவர்களே, உடன்போக்கிற் குரிய உண்மைப் பாலையைத் தொடர முடியும்.

* * *

விசுவாமித்திரரை இராமன் தொடர, இராமனை இலட்சுமணன் தொடருகின்றான். வெப்பம் மிகுந்த பாலை சுடுமூச்சு விடுகின்றது. ஆலகாலமும் அணுகலாகாது கொதிக்கின்றது அந்தப் பாலை. சாதாரண பாலை வெப்பங்களைப் பரணிகளிற் படித்து ஒருவாறு வருணித்துப் பார்க்கலாம். ஆனால், விசுவாமித்திரர் பச்சைக் குழந்தைகளை அழைத்துச் செல்லு கின்ற, இந்தப் பாலையின்.

வெம்மையைப் பகரினும் பகருநா முடிய வேம்.

அதில் வேவாதன எவையும் இல்லை. அது,

என்றும் ஆறுதரோ

* * *

இந்தப் பெரிய மகாபாரதத்திலே அபிமந்யு வீர சிகரம்; ஏக வீரன். அபிமந்யுவுக்கு நிகர் அபிமந்யுவே. அந்த ஏக வீர தீர சிரோரத்தினத்தை எதிர்நின்று பொர ஆற்ருத வஞ்சகர்கள், அந்த மானமாமணியைச் சிதைப்பதற்கு, அன்றொருநாள் இந்தப் பாரத பூமியில் அநியாயமான வஞ்சச் சூழ்ச்சி செய்தார்கள். விரத நெறி கடவாத கவரிமா ஆன அந்த அபிமந்யுவின் நெஞ்சம், அற்பர்களின் சூழ்ச்சி கண்டு கொதித்தது அந்தக் கொதிப்பு, அந்தப் பச்சிளங் குழவியின் குதலை வாய் வழியே சங்க நாதமாய்ப் பாரத மூலை செவிடு பட எழுந்து ஒலித்தது; அந்த வெப்ப ஒலி இன்னும் பாரதம் முழுவதும் ஒலித்துக்கொண்டேயிருக் கின்றது. அந்த ஒலியின் வெப்பம் கருங்கல் மனத்தை உருக்கி நெகிழ்க்கின்றது. கலி ஐயாயிரத்துக்குப் பிறகு கண்ணீர் வடிப்பிக்கின்றது. இருதயத்தை வெதுப்புகின்றது.

அபிமந்யுவின் சங்க நாத ஒலி வெப்பமே, இன்றும் நின்று, இன்றுபோல் என்றும் நின்று மனித இதயங்களை வெதுப்புமே யாளுல்,

அந்தச் சந்தர்ப்பத்தில் கூண்டிலடைக்கப்பட்ட அந்த மகா வீரசிம்மமான அபிமந்யுவின் இருதய வெப்பம் எப்படி இருக்குமோ! அந்த வெப்பத்தை யார் கற்பனை செய்ய முடியும்! அதனை ஒருவாறு கற்பனை செய்ய முடியுமாளுல், இராம இலட்சுமணர்கள் அணுகுகின்ற, இந்தப்பாலை,

அபிமந்யுவின்,

நெஞ்சு போல் என்றும் ஆறுதரோ

என்று ஒரு அளவுக்குச்சொல்லி அமையலாம்

* * *

விஞ்சு வான் மழை - ஒருகாலைக் கொருகால் அதிகரித்துப் பொழிகின்ற சோணு மாரி. அந்தச் சோணுமாரி போலத் தன்மேல் அம்புகளும் வேல்களும் பாய, அவற்றைப் பொருள் செய்யாது, கண்ணைக்கூட இமைக்காது,

செஞ்செவே செருமுகத் தமர்செயுந்திறமே

திறம். புறங்கொடாது செருவை எதிரேற்றுப் பொரும் வீரமே வீரம். அப்படிப்பட்ட வீரமில்லாத, பேடிகளான

வஞ்சகர்கள் ஆனை அடி சறுக்குவது போன்ற - கொன்றை மாலையைக் கடவாதிருப்பது போன்ற - ஒன்றனைத் துணைக் கொண்டு, தீவினைகளான சூழ்ச்சிகளால், வீரசிம்மங்களைப் பொறிவைத்து வெல்வதுமுண்டு. அதனாலே, அஞ்சாமலே அஞ்சி, மானமாகிய மேதக்க மணியை இழவாமலே இழந்து, நெஞ்சு கொதிப்பதும் இந்த உலகத்தில் உள்ளதே. அப்படிப் பட்ட நெஞ்சு போலத்தான், இந்தப் பாலை நிலமும் இரவும் பகலும் ஓயாது கொதித்துக்கொண்டே யிருக்கின்றது; இந்தப் பாலை தன்னைச் சூழ்ச்சி செய்து யாரும் வெல்லாமலே கொதித்துக்கொண்டே யிருக்கின்றது; இயற்கையாகவே கொதிக்கின்றது. இப்படி இது கொதித்துக்கொண்டிருக்கு மேயானால்,

> பாரும்ஓ டாதுநீ டாதெனும் பாலதே;
> சூரும்ஓ டாதுகூ டாதரோ; சூரியன்
> தேரும்ஓ டாதுமா மாகமீ; தேரினோர்
> காரும்ஓ டாது;நீள் காலுமோ டாதரோ

இந்தப் பூமி ஒரு இடத்தில் நீடித்து நில்லாது; நில் என்ற அடியில் வந்த 'நிலம்' என்ற பெயரை வைத்துக் கொண்டே ஓடி உருண்டு புரளுவதன் காரணத்தை அறிதல் இனி எளிது இந்தப் பாலைநில வெப்பத்தினாலேதான் பாவம்! இந்தப் பார் ஓடாமலிருக்கமாட்டாமல் ஓடுகின்றது. ஓடாமலிருக்குமானால், அது நீடாது; நீடித்திருக்க மாட்டாது. மிக முன்னமே இறந்துபட்டிருக்கும். சூர் வெப்ப தேவதை அது பேய்த் தேரில் ஏறி, ஓடிக்கொண்டே யிருக்கின்றது. அதன் தேர் நிறுத்தாத தேர். வெப்ப மிகுதியினாலே, ஓடாமலிருத்தல் கூடாது. சூர், பார் போலவே, ஓடாமலிருத்தல் கைகூடாமல் ஓடிக்கொண்டே யிருக்கின்றது சூரியன் தேர், சூரும் பாரும் போலாகாமல், பாலை நிலத்துக்கு மேலே போவதையே நிறுத்திக் கொண்டது; அவ்வாறே அந்தப் பாலையைக் கார் எட்டியும் பார்ப்பதில்லை பார்க்குமேயானால், வேண்டுஞ் சமயங்களிற் கண்ணீர் விடவும் முடியாமல் வரண்டு சுருண்டுபோம். கால் அந்தக்பக்கம் வருவதேயில்லை. வெப்ப மிகுதியால் விரிந்து இல்லையாய்விட்டது; கால் இருந்தாலல்லவோ ஓடுவது! நீண்ட காலே இல்லையாய்விட்டது. கால்-காற்று.

எரிந்தெழு கொடுஞ்சுரம் இனைய தெய்தலும்
அருந்தவன் இவர்பெரி தளவி லாற்றலைப்
பொருந்தினர் ஆயினும் பூவின் மெல்லியர்
வருந்துவர் சிறிதென மனத்தில் நோக்கினன்.

வடவாமுகாக்கினி கொழுந்துவிட் டெரிவது போல, நெருப்பெரிகின்றது அந்தப் பாலை நிலம். அதை அணுக முன்னமே அதன் வெப்பம் வரவேற்கின்றது. தவ வெப்பத்தால் மிக்க அருந்தவராகிய விசுவாமித்திரருக்கு அந்தப் பாலை வெப்பம் மின்மினி மாத்திரையா யிருக்கலாம். ஆனால், இராம இலட்சுமணர்கள் மிக்க ஆற்றல் படைத்தவராயினும் மிக மிருதுவானவர்கள்; பச்சிளங் குழந்தைகள்; பூவின் மெல்லியர். அவர்கள் அந்த வெப்பத்தை எப்படித் தாங்க முடியும்!

'நின் பிரிவினுஞ் சுடுமோ பெருங்காடு' என்று ஒரு நாள் பிராட்டி சொன்னவள். இதனைக் கம்பர் சொல்லுதற்கு மிக முன்னமே, புறநானூற்றில் ஒரு பெண், சககமனஞ் செய்கின்றவள், பெருந்தோட் கணவன் பிரிந்தானாக, அவன் உடலைத் தகிக்கும் அழலும், தாமரைத் தடாகத்துக் குளிர்ந்த சலமும் ஒன்று என்றவள். அந்தப் பெண்களுக்குப் போலவே, இராம இலட்சுமணர்களுக்கும் உடன்போக்கு விசேஷத்தால், அப்பாலை வெப்பந் தோன்றாதாயினும், விசுவாமித்திரர், அவர்கள் மிக இளைஞர் ஆதலாலே,

வருந்துவார் சிறிதென மனத்தில் நோக்குவார்

ஆயினர். தம்மைத் தொடரும் குழந்தைகளைப்பற்றிச் சிந்திப்பாராயினர்.

# 20 மந்திர சக்தி

நோக்கினன் அவர்முகம் நோக்க நோக்குடைக்
கோக்கும ரனுமடி குறுக நான்முகன்
ஆக்கிய விஞ்சைகள் இரண்டும் அவ்வழி
ஊக்கினன் அவை அவர் உள்ளத் துள்ளினுர்.

*நோக்குடைக குமரர் - இராஜ குமாரர்களாகிய இராம இலட்சுமணர்கள் பெரியோர்களின் குறிப்புக்களைக் கூருமலே அறியும் ஆற்றல் படைத்த புதல்வர்கள் அவர்கள். 'அறிவறிந்த மக்கள்' என்று வள்ளுவராற் பாராட்டப்பட்ட மக்கள் இராம இலட்சுமணர்கள்.*

கூருமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாருநீர் வையக் கணி.

*  *  *

ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

*  *  *

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.

*  *  *

குறித்தது கூருமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு.

*  *  *

குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்ததோ கண்.

* * *

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.

கம்பராமாயணத்திலே ஸ்ரீ ராமனை விசுவாமித்திரர் நோக்குகிற சந்தர்ப்பம் பல இடங்களில் வரும். அந்த இடங்களில் எல்லாம், ஸ்ரீ ராமனது முகத்தை விசுவாமித்திர முனிவர், ஒரு கணம் என்று குறிக்க முடியாதவாறு, நோக்குவதுண்டு. நோக்கி நிற்பதில்லை ஒருவர் ஒன்று வேண்டிநிற்பதைத் தரியாத முதல் வள்ளலாகிய நளமகாராஜனின் வள்ளன்மை வாய்க்கப் பெற்றவன் ஸ்ரீராமன் நோக்குவார் நோக்க முன்னமே, நோக்குவார் குறிப் புணர்ந்து, அவருக்கு ஆவன நோக்குபவன் ஸ்ரீராமன். அப் படிப்பட்ட ஸ்ரீராமனுடைய, முகம் நோக்கி யாரும் நிற்க வேண்டியதில்லை. நோக்குதல் மாத்திரையே அமையும். இப்படிப்பட்ட ஸ்ரீராமனை ஒரு தட்டிலும் மேற்காட்டிய ஆறு வள்ளுவரையும் மற்றத் தட்டிலும் வைத்து நிறுத்து, எடை காண்பது இலக்கிய இரசிகர் கடன்.

நினைந்தமுனி பகர்ந்தஎலாம் நெறியுன்னி அறிவனுந்தன்
புனைந்தசடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலுமம் மாதவத்தோன்
நினைந்தவெல்லாம் நினைந்தந்த நீள்சிலையை நோக்கினான்

என்று பின்வருந் தேனடை சிறிது தூரத்ததேயாயினும், இரசிகர்கள் இப்பொழுதே அதனை எட்டிப்பார்த்து நாவிற் சுரப்பை வருவித்து ஒரு துளி சொட்டுவாராக.

நோக்கினன் அவர் முகம்:

'இவர் பெரிது அளவில் ஆற்றலைப் பொருந்தினர் ஆயினும் பூவின் மெல்லியர் (வெப்பத்தால்) வருந்துவர் சிறிதென மனத்தில் நோக்கினவர்' ஆகிய விசுவாமித்திர முனிவர், அவர்கள்பாற் சுரந்தெழுந்த கருணை மிகுதியினாலே இராமலட்சுமணர்களின் முகத்தைச் - சென்றுகொண்டிருந் தவர் - திரும்பி நோக்கினார்.

நோக்க:

முனிவர்பிரான் தம்மை நோக்கியது நோக்க முன்னமே,

அடி குறுக:

கோக்குமரர்களாகிய இராமலட்சுமணர்கள், முனிவர் பெருமானின் அடியிணைகளை, உச்சிக்காலத்து நிழல் போலே, விரைந்து சென்று அணுகி ஒதுங்கி நின்றார்கள்.

அவ்வழி: அப்பொழுது

நான்முகன் ஆக்கிய விஞ்சைகள் இரண்டும், ஊக்கினன்.

பிரமதேவர் கண்டு அருளிய இரு வேதமந்திரங்களை விசுவாமித்திர முனிவர் பாலர்களாகிய அவர்களுக்கு உபதேசித்தருளினார். வெப்பக் கடவுளாகிய அக்கினி தேவனைப் பற்றிய மந்திரங்கள் அம் மந்திரங்கள். அவை பலை அதிபலை என்கின்ற வித்தைகள் என்று முதனூலிற் பேசப்பட்டவை.

அவை அவர் உள்ளத்து உள்ளினார்:

அம்மந்திரங்களை அவர்கள் தம் மனத்தில் இருத்திச் சிந்திக்கிற முறையிற் சிந்தித்தார்கள்.

உள்ளிய காலையில் ஊழித் தீயையும்
எள்ளுறு கொழுங்கனல் எரியும் வெஞ்சுரந்
தெள்ளுதண் புனலிடைச் சேற லொத்தது
வள்ளலும் முனிவனை வணங்கிக் கூறுவான்.

இராம இலட்சுமணர்கள் விசுவாமித்திரர் உபதேசித்த மந்திரங்கள் இரண்டையும் சிந்தித்தார்கள். மந்திரம் நினைத்தவனைக் காப்பது என்று பொருள்படுவது அவர்கள் அம்மந்திரங்களைச் சிந்தித்த அக்கணமே, ஊழித்தீப் போன்று கொழுந்துவிட்டெரிகின்ற - கொடிய கடிய - அந்தப் பாலைவனம், தெளிந்த குளிர்ந்த நீர் நிறைந்த தாமரைத் தடாகமாய் அவர்களுக்கு மாறியது. மந்திர விசேஷம் இருந்தபடி இது.

* * *

வேதந் தெரிந்த பிரமதேவர் எந்த மந்திரங்களைச் சொல்லப், பஞ்சபூதங்கள் தோன்றி, இந்த உலகம் உண்டாகின்றதோ, அந்த மந்திரங்களைக் கண்ட, மந்திர திருஷ்டா விசுவாமித்திரர். மந்திரங்களைத் தவமிருந்து காணுகின்ற முனிவர்களுக்கு மந்திர திருஷ்டாக்கள் என்று பெயர். மந்திர திருஷ்டாக்களுள் விசுவாமித்திரர் ஒருவர். அவர் வேத மந்திரங்கள் கண்ட வேதரிஷி எவர்கள் எந்தப் பூதத்துக்குரிய மந்திரங்களைக் காணுகின்றார்களோ, அவர்கள் அந்தப் பூதங்களாற் பாதிக்கப்படுவதில்லை உலக இரகசியங்களை அறிந்தவன், உலகத்தாற் பந்திக்கப்படாதவாறு போல, ஒரு கணிதங் கைவந்தவன், அக்கணிதத்தாற் கலங்குண்ணுதவாறு போல, மந்திரங்களைக் கண்டவர், அம்மந்திரத்துக்குரிய தெய்வங்களின் அருள் கைவந்து, அவ்வத் தெய்வங்களின் அதிகாரத்துக் குட்பட்டவைகளாற் பாதிக்கப்படுவதில்லை. மந்திரங்கள் மறைமொழி; அம்மந்திரங்களுக்குரிய தூய்மையும் வாய்மையும் இல்லாதவர்களுக்கு மறைவான மொழி; அது உலக பரிபாஷைக்கு வேறானதொரு பரிபாஷை கண்டபடி வழங்கும் மொழிகளில் - விளங்கும் மொழிகளில் - வழங்குவதன்று. மந்திரங்களைக் காணுதற்கும் - மந்திரங்களை வழங்குதற்கும் நாம் பாத்திரமாக வேண்டும். அசுத்த பாத்திரங்களுக்கு ஏற்ற வகையில் அது அமைவதன்று. யந்திர இரகசியம் அறியாதவன், அதனோடு ஊடாடுவது அபாயம். அவ்வாறு, மந்திர இரகசியம் அறியாதவன், அதுபற்றி வாய் பிளப்பது வெகு மோசம்.

> யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

* * *

> நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப.

என்பது தொல்காப்பியம்.

நிறைமொழி மாந்தரென்பது, சொல்லிய சொல்லின் பொருளுண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்ற லுடையாரானார் ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்

தார்க்குப் புலனுகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும் என்றவாறு.

அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க

என்பது உரை.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

— வள்ளுவர்

* * *

பல்காற் பழகினுந் தெரியா உளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்

என்பது இலக்கணக்கொத்து. மந்திரம் பற்றித் தொல்காப்பியந் திருவள்ளுவர் முழங்கிய முழக்கம் ஈண்டுக் காட்டப்பட்டது.

ஒரு வேதரிஷி ஒரு மந்திரத்தைக் காண யுகம் யுகம் ஆகத் தவங் கிடக்கலாம். அப்படிக் கிடப்பதற்குப் பயன் உண்டு. உலக வாதனையினின்றும் அவன் தப்புகின்ருன்; தெய்வங்களின் திருவருளுக்கு அவன் பாத்திரம் ஆகின்ருன். தெய்வங்களை முகஞ் செய்கின்ற - திருவருளுக்கு இடஞ் செய்கின்ற - மந்திரங்களுக்கும் நமக்கும் வெகு தூரம்! புழுத்த நாய்க்கும் போர்த்தேங்காய்க்கும் உள்ள தூரம், நமக்கும் மந்திரத்துக்கும் உள்ள தூரம்! மந்த மதிகளாகிய நமக்குமா மந்திரம்! மந்திரம் எங்கே! நாம் எங்கே! மந்திரம் பற்றி நாமாவது! நாம் பேசுவதாவது! புழுத்த நாயினும் கடையேமாகிய, புல்லறிவாளர்களான நாம், மந்திரம் பற்றிக் குரைப்பதனுல் பழைய வைதிக ராச்சியங்களில் நாக்குத் துண்டிக்கப்படும்! இன்றேற் பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கோல் கொண்டு, அப்பால் செய்வன செய்யப் படும்! அதுநிற்க.

* * *

**தெள்ளுதண் புனலிடைச் சேற லொத்தது**
**வள்ளலும் முனிவனை வணங்கிக் கூறுவான்.**

மந்திர விசேஷத்தினுல் பாலைநிலங் குளிர்ந்தது. வெப்ப மிகுதியினுல், மௌனஞ் சாதித்து நடந்த ஸ்ரீ ராமனுக்கு இப்பொழுது குளிர் மிகுவதனுலே, பேசாமல் நடக்க-கதை கேளாமல் நடக்க - மாட்டாமையினுலே, விசுவாமித்திர மகா முனிவரிடம் கதை கேட்டதற்கு வாய் ஊறுதலினுலே முனிவர்பெருமானை வணங்கி ஒரு வினு நிகழ்த்துவானுயினன்:

**சுழிபடு கங்கையந் தொங்கன் மௌலியான்**
**வழிபட வெந்ததோ வேறு தானுண்டோ**
**பழிபடா மன்னவன் படைத்த நாட்டினூங்கு**
**அழிவதென் காரணம் அறிஞ கூறென்றுன்.**

(கங்கையாகிய தொங்கலை யணிந்த மௌலியான் - சிவ பெருமான். விழி - நெற்றிக்கண். பழிபடா மன்னவன் - தச ரதன் படைத்த நாடு - ஆளுகிற நாடு. ஊங்கு - உவ்விடம்.)

அப்பா ஆளுகிற நாட்டிலுமா வெப்பம்? என்பது வினு.

# 21 கோதென் றுண்டிலள்

சூடக வரவுறழ் சூலக் ஸகயினள்
காடுறை வாழ்க்கையள் கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினுய்
தாடகை என்பதச் சழக்கி நாமமே

சோலையை நீங்கிப் பாலையை அணுகும்போது, 'அப்பா ஆளுகிற நாட்டிலுமா வெப்பம்?' என்று வினவிய ஸ்ரீராம னுக்கு, அவளுடைய பெயர்,

தாடகை

என்று கதை தொடங்குகின்றார் முனிவர் தாடகை கதையை ஸ்ரீராமன் கேளாமலே சொல்லத் துடித்துக் கொண்டிருந்த முனிவருக்கு. ஸ்ரீராமன் பாலையை வினவியது ஒரு நல்ல சந்தர்ப்பமாய் வாய்த்துவிட்டது. முன் மருதவள நாடாயிருந்தது, பின் பாலையாகிய வரலாறு கூறுமுகமாகத் தாடகை கதைக்கு வருகின்றார் விசுவாமித்திர முனிவர்.

முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து
நல்லியல் பழிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்.

என்பது சிலப்பதிகாரத்துப் பழைய பாடம். முல்லை காட்டு நிலம் குறிஞ்சி மலை நிலம். முல்லையுங் குறிஞ்சியுந் திரிந்து பாலையாய் மாறுவதுண்டு. மருதந் திரிந்து பாலை யாவது கேள்விப்படாதது. ஆயினும், தாடகையின் கைங் கர்ய விசேஷத்தால், அருமந்த மருத நிலமும் பாலையாய்

விட்டது. அப்படிப்பட்ட பாலை நிலந்தான் தாடகை கதைக்குப் பொருத்தமான நிலம். பாலை நிலத்தைப் பற்றி விசாரிப்பதாயின், அது தாடகை கதையை விசாரிப்பதாயிருக்கும். தாடகையைப் பற்றிக் கதை சொல்வதற்கு வாயூறிக்கொண்டிருந்த விசுவாமித்திர ஆசிரியருக்கு, தாடகையின் வரலாறு வடிவமான பாலையை ஸ்ரீராம மாணவன் வினவியபோது, அந்த வினு, முற்றத் துறந்த அந்த முனிவரைக் களிக்கூத்தாடச் செய்துவிட்டது ஸ்ரீராமனைக் கட்டித் தழுவாதது ஒன்று ஒரு குறை. தலைகால் தெரியாத ஆராமை முனிவரை விழுங்கிவிட்டது. உத்தம மாணவனைக் கண்டால் உத்தம ஆசிரியனுக்கு எப்படியிருக்கும்! விசுவாமித்திர முனிவருக்கு அந்த வினவைச் செவிமடுத்தபோது, ஸ்ரீராமன்மீது ஒரு குறிஞ்சிக் காதலே தலைப்பட்டுவிட்டது. குறிஞ்சி அன்பினைந்திணையுள் ஒன்று. அது காதலர்களின் காதலின் முதலாவது நிலை; தொடக்க நிலை. அந்த நிலை விசுவாமித்திரரை விழுங்கியதனுற் போலும், அவர் ஸ்ரீராமனை விளித்த விளியில் எல்லா வேற்றுமைகளையுங் கடந்த ஒரு காதல் கொப்பளிக்கின்றது.

'அடே ராமா, உன்னை யாராவது தங்கள் கண்களாற் காணும் பேறுடையர்களானல், அவர்கள் ஆடவர்களேயாயினும், மகா தவத்தைத் தொடங்கியவர்களேயாயினும், அந்தத் தவங்களை யெல்லாம் அப்படியே கைவிட்டு எந்த ஒரு பிறப்பிலாவது, உனது தோள்களை அணையும் பொருட்டு ஆண்மை நீங்கி உன்னை அணைதற்குரிய பெண்மையை வேண்டியல்லவா, தவம் புரிவார்கள்.'

என்கின்றார் துறவியான அந்த விசுவாமித்திரர். இந்தக் கருத்து, அவர் இராமனை விளித்த விளிப்பில் அட்சரந் தோறும் வீறிடுகின்றது.

கண்ணிற் காண்பரேல்
ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினய்

என்பது, விசுவாமித்திரர் கதை சொல்லுஞ் சந்தர்ப்பத்தில் ஸ்ரீராமனை விளித்த விளி; இது காதல் விளி.

இங்ஙனம் விளித்த விசுவாமித்திரர், 'தாடகை என்பது அச் சழக்கி நாமம்' என்று, தமது கதாநாயகியின் திருநாமத்தை அப்பால் உச்சரிக்கின்றார். ஸ்ரீ ராமன்பால் விசுவாமித்திரருக்கு எத்துணைக் காதல் கூருகின்றதோ, அத்துணை அதற்கெதிரானதொன்று, தமது கதாநாயகியின் மீது முனிவருக்குக் கூருகின்றது. அது சழக்கி என்ற வார்த்தையிற் பொதிகட்டியிருக்கின்றது. அநீதி, பொய், கொடுமை ஆதிய தீமைகளெல்லாந் தரும் வார்த்தை சழக்கு. அவள் நாமம் தாடகை. அப்பால் அவள் அலங்கரிக்கப் படுகின்றாள் கதாநாயகிகளின் அலங்காரம், கண்ணில் முகத்தில் முறுவலில் தொடங்குவது காதல் வழக்கம். இங்கே கதாநாயகியின் அலங்காரம் கையில் தொடங்கு கின்றது. சூடகம் - கைவளை. அது அரவு; பெரிய மலைப் பாம்பு; விஷப் பாம்பு; இரத்தினக் கல்லோடு கூடியது. அந்தக் கைவளையாகிய அரவோடு உறழ்ந்து சீறிச் சினந்து கொண்டிருப்பதொரு கையணி சூலம். கைவளை விலகினாலும், சூலம் விலகாத கை தாடகையின் கை. அவள் சூலக் கையினள் கை வருணனையோடு நிறுத்திப் பாதாதி கேச வருணனைகளைப் பின்போட்டுவைத்து, அப்பால் எடுத்த விஷயத்தை ஞாபகஞ் செய்து, அதற்கு வருகின்றார் விசுவா மித்திரர். எடுத்த விஷயம் இது:

உளப்பரும் பிணிப்புறு லோபம் ஒன்றுமே
அளப்பருங் குணங்களை அழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய அரக்கி கேடிலா
வளப்பரும் மருதவைப்பு அழித்து மாற்றினாள்.

அந்தச் சண்டாளி,

கோடிலா, வளப்பரும் மருதவைப்பு அழித்து மாற்றினாள்

அருமந்த வளம் மிகுந்த மருத நிலத்தை அழித்து, இந்தக் கடிய கொடிய பாலையாக அதனை மாற்றிவிட்டாள். அவளுக்கு ஒரு உவமை சொல்லுவதானால், உலோப குணத் தைத்தான் சொல்லலாம். ஒருவனிடத்தில் அளவில்லாத நல்ல குணங்கள் இருக்கலாம். ஆனால், அவனிடத்தில் அவைகளோடு உலோபமுங் குடியிருக்குமானால், அந்த உலோப குணம் ஒன்றுமே,

உளப்பரும் பிணிப்பு உறு

அவன் உள்ளத்தைப் பெரிதும் பிணித்தலைச் செய்து, ஏனைய குணங்களை எல்லாம் அழித்துத், தானே மேற்பட்டுத் தலைநீட்டும். அப்படிப்பட்ட உலோபந்தான் தாடகைக்கு உவமம் சொல்லத்தக்கது. இந்த உலகம் எத்தனை நன்மைப் பாடுகளோடு கூடியிருந்தும், இவள் ஒருத்தியை உடைமையால், தன் நன்மைப்பாடுகள் அனைத்தையும் இழந்து ஐயோ வெறும் பாலையாய்க் கிடக்கின்றது. இவளுக்கு உலோபம் என்றே பெயர் வைத்துவிடலாம். இந்த உலோபம் ஒரு மனிதனின் நன்மைப்பாடுகள் எத்தனை உண்டோ, அத்தனையையும் விழுங்கி ஏப்பம் இடுகின்றது. அந்த மனிதனின் மற்றைய நல்ல குணங்களைக் கொண்டாடாது அவனை ஒரு உலோபி என்றே உலோகங் கூறிவிடுகின்றது. உலோபத்தின் ஆற்றல் இருந்தபடி இது.

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று

'பற்றுள்ளம் என்னும் இவறன்மை' - பொருளை விடத் தகும் இடத்து விடாது பற்றுதலைச் செய்யும் உள்ளமாகிய உலோபத்தினது தன்மை; 'எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று' - குற்றத் தன்மைகள் எல்லாவற்றுள்ளும் வைத்து எண்ணப்படுவ தொன்றன்று.

(இவறல் - உலோபம். இவறன்மை-இவறலது தன்மை.) இவறலது தன்மையாவது குணங்கள் எல்லாம் ஒருங்குள வாயினும், அவற்றைக் கீழ்ப்படுத்துத் தான் மேற்படவல்ல இயல்பு ஒழிந்தன (ஏனைய குணங்கள்) அது (மேற்படுதல்) மாட்டாமையின் எற்றுள்ளும் எண்ணப்படுவதொன்றன்று என்றார். எவற்றுள்ளும் என்பது இடைக்குறைந்து நின்றது'.

எல்லாக் குணங்களையுங் கீழ்ப்படுத்தித் தனக்கு நேர் தானேயான உலோபகுணம் ஒன்றுந்தான், கொடுமைக்கு ஓரே ஒருத்தியான தாடகைக்கு உவமை கூறத்தக்கது.

அவள்,

இளப்பு அருங் கொடுமைய அரக்கி

அவளுடைய கொடுமைகள் வார்த்தைகளாற் கிளத்தற் கரியவைகள். அவள் பொல்லாத அரக்கி,

தீதென் றுள்ளவை யாவையுஞ் செய்தமைக்
கோதென் றுண்டிலள் இத்தனை யேகுறை

அந்தப் புண்ணியவதியிடம் யாராவது குறைகாண விரும்பினுல், ஒரேயொரு குறை மாத்திரந்தான் காண முடியும். தீது தீது என்று இதுகாறும் நூலோர் கண்ட தீமைகள் எல்லாம், இந்தப் புண்ணியசீலி மிக முன்னமே தளர்நடை பயிலுங் காலத்திலேயே செய்து கழித்தவைகள். என்போன்ற முனிவர்கள், யாகாக்கினியின் மத்தியில் தசைப் பற்றற்றிருப்பதனுலும் திருமுருகாற்றுப்படையிற் கூறியவாறு, தவவிரதங்களால் நமது யாக்கைகள் 'என்பு எழுந்து இயங்கும் யாக்கைகள்' ஆதலினுலும்,

கோது என்று உண்டிலள்

உள்ளீடற்றுத் தசைப்பற்றுமற்ற வெறுங் கோதுகள் என்று அவள் எம்மைக் கழித்துவிட்டாள். என்போன்ற முனிவர்களை எடுத்துத் தன் திருச் செவிகளினருகே உயர்த்திச் சற்றே குலுக்கிப் பார்ப்பாள். நமது உடம்புகள் எலும்பு கொலுகொலுக்கும். அதனுல், அவள் தன் அருமை நாவின் சுவையைக் கெடுக்காமல் வெறுங் கோதுகளைப் புறமே நீக்குவதுபோல நம்மை எற்றி எறிந்துவிடுவாள். அந்தப் புண்ணிய கைங்கரியத்தினுலேதான் முனிவர்கள் சிலர் உயிர் வாழ்கின்ருர்கள்.

தாடகையின் திவ்விய சரித்திரத்திலே முனிவர்கள் சிலர் உயிர் வாழ நேர்ந்தது ஒரு குறையென்றே சொல்ல வேண்டும். அந்தக் குறையை அவளுடைய சரித்திரத்தில் ஒரு கறை என்றுஞ் சொல்லலாம்.

பூரண சந்திரனுக்கு முயற்கறைபோல, அழகிய நெற்றிக்குக் கரிய திலகம் போலே இந்த ஓரேயொரு கறையுந்தான் நமது கதாநாயகியின் குறை. தீமைகள் தீமைகள் என்று சமயிகளும் ஏனைய அறிஞர்களும் வருணிக்கும் அத்தனையும் முற்றுப்பெற்றவள் தாடகை. குறையில்லாதவரை உலகத்திலே காண்டல் அரிது. அவ்வாறு நமது கதாநாயகிக்கும் ஒரு குறை இருப்பது பெரிய குற்றம் அன்று.

குற்ற மேதெரி வார்குறு மாமுனி
சொற்ற பாவினும் ஓர்குறை காண்பரால்.

* * *

மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்

என்று சீதைக்கும் இராமனுக்கும் குற்றங் கூறுகின்றவர்களும் இருக்கின்றார்கள். சீதைக்கு இடை இல்லையாம்! அவ்வாறே இராமனுக்கும் வசை இல்லையாம். இராமனுக்கும் சீதைக்குமே ஒவ்வோர் குறை இருக்கும்போது, நமது கதாநாயகி முனிவர்களைக் 'கோதுகள்' என்று உண்ணாது கழிந்தமை ஒரு குறையாகுமோ ?

நமது கதாநாயகிக்குத் திட்டிதோஷ பரிகாரமாக அக்குறையாகிய கறை இருக்கட்டும். இனி, விசுவாமித்திரர் மூலம் கதாநாயகியின் திவ்விய கதாமிர்தத்தை ஆரம்பிப்போம்.

# 22 தாடகை சரிதம்

ஸ்ரீ ராமனுடைய நாடு,

நாகிளங் கமுகில் வாளை தாவுறு கோசல நாடு

அந்த நாட்டிலே,

தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக் குவளைகண் விழித்துநோக்கத்
தெண்டிரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ.

ஒரு நாட்டு இளவரசி, அந்த நாட்டு மருத நிலம். அப்படிப்பட்டதொரு மருத நிலத்தை அழிவு செய்து, அதனைப் பாலையாய் மாற்றி அமைத்தவள் தாடகை. அப்படிப்பட்ட கொடிய தாடகையின் கதை, வழிநடைக் கதைகளின் வர்க்கத்தில் வையாது, உயிர்களைப் பாதுகாக்க வழி தேடுங் கதை வர்க்கங்களில் வைத்து விசுவாமித்திரராற் கூறப்படுகின்றது. கதை வருமாறு;

இயக்க குலத்திலே சர்ச்சரன் என்றொருவன் இருந்தான். அவன் மிக்க வலிமை படைத்தவன். பொல்லாத கோபக்காரன். அவனுடைய புதல்வன் சுகேது. சுகேதுவுக்குப் புத்திரப்பேறில்லை. அதனால், அவன் பிரமாவை நோக்கி நெடுங் காலந் தவஞ் செய்தான். பிரமா, 'உனக்கு ஒரு பெண் மகவு பிறக்கும். அவள் மிக அழகியாய் ஆயிரம் மத யானை

களின் வலி படைத்தவளாயிருப்பாள்' என்று அநுக்கிரகித்தார் அவ்வாறே ஒரு பெண் குழந்தை பிறந்து வளர்ந்தது. அந்தக் குழந்தைக்குத்தான் தாடகை பெயர். தாடகையை இயக்கர் குலத் தலைவனாகிய சுந்தன் என்பவன் மணஞ் செய்தான். மாரீசன் சுவாகு எங்கின்ற இரு பிள்ளைகள் தாடகை வயிற்றில் உதயஞ் செய்தார்கள். சுவாகுவைச் சுந்தனின் சகோதரனாகிய உபசுந்தனின் புதல்வன் என்றும், மாரீசனைத் தாடகையின் ஏக புத்திரன் என்றும் கூறுவதும் உண்டு எப்படியாயினும் மாரீசனும் சுவாகுவும் அண்ணன் தம்பிகள். இராம இலக்குமணர்களாகிய உங்களைப்போல் இணை பிரியாதவர்கள். அவர்களுக்குப் படிப்பு வருகிறேன் வருகிறேன் என்று வந்தது. மாய வித்தைகளிற் பெரிய கலைப் புலவர்களாய் விளங்கினார்கள் அவர்கள். பிள்ளைகளின் மேதைமையைக் கண்டதும், தாய்தந்தையர்கள் ஈன்ற பொழுதிலும் பெரிது உவந்து களித்தார்கள்; களியாட்டுக்களை நடத்தினார்கள்.

ஒரு நாள் முன்னறி தெய்வங்களாகிய பெற்றோரும் பிள்ளைகளும் ஒருங்கு சேர்ந்து, அகத்தியருடைய ஆச்சிரமத்துள் நுழைந்து, பெரிய அக்கிரமங்கள் செய்யத் தலைப்பட்டார்கள் சுந்தன், தவஞ் செய்துகொண்டு, தமிழ் வளர்ப்பவராகிய அகத்தியர் எதிரிற் சென்று, அந்த மகா முனிவரின் தவ வெப்பத்தால் வெந்து சாம்பராயினான். அதனைக் கண்ட தாடகையும் புதல்வர்களும் அகத்தியரைச் சீறினார்கள். அப்பொழுது அகத்தியர் அவர்களைக் கோபித்து நீவிர் இராக்கத கணங்களாய், அக்கிரமங்கள் செய்து அழியக் கடவீர்கள் என்று சாபமிட்டார். உடனே தாடகையும் புதல்வர்களும் இராக்கதர்கள் ஆயினார்கள்.

* * *

தாடகையும் புதல்வர்களும் இராக்கதர்களாகச் சாபம் பெற்ற காலத்திலே, இலங்கையிலே இருந்த இராக்கதர்கள் தேவர்களுக்கஞ்சிப் பாதலத்திலே போயிருந்தார்கள். அந்த இராக்கதர்களுக்குத் தலைவன் சுமாலி. இராவணனுடைய தாய் கைகசி; அவளுடைய தந்தை சுமாலி, இராவணனுக்குப் பாட்டன். அந்தச் சுமாலியிடம் தாடகையும் புதல்

வர்களும் போய், உறவுமுறை கொண்டாடித் தம்மை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினார்கள். சுமாலி தாடகையைத் தன் தங்கையாகவும், சுவாகு மாரீசன் இருவரையும் தன் புதல்வர்களாகவும் ஏற்றுக் கொண்டான் அதனால், மாரீசன் இராவணனுக்கு மாமன் ஆயினான். தாடகை பாட்டி

தாடகையும் புதல்வர்களும் பாதலத்தில் சுமாலியுடன் இருக்கிற காலத்திலே, இராவணன் இலங்கைக்கரசன் ஆயினான். இராக்கதர்கள் அங்கே குடியேறினார்கள். அப்பொழுது தாடகையும் புதல்வர்களும் பூமிக்கு வந்து, இராவணனுக்கு உறவு முறை சொல்லிக்கொண்டு, அகத்திய முனிவர்பால் உள்ள கோபத்தை என்போன்ற முனிவர்களிடஞ் சாதிக்க முன்வந்திருக்கின்றார்கள். அவர்கள் இந்தக் காடுகளிற் செய்யுங் கொடுமைக்கு அளவே இல்லை. கொடுமைகள் அனைத்துந் தாடகைக்குப் பழைய பாடங்கள் என் போன்ற முனிவர்களைக் கோதுகள் என்று உண்டிலள். இதுதான் அவள் தப்பித் தவறிச் செய்த மகா புண்ணியம்.

அருமந்த மருத நிலத்தைப் பாலையாக மாற்றினாள். அது பெருங் கொடுமையன்று எத்தனையோ முனிவர்கள் எத்தனையோமுறை தொடங்கிய வேள்விகளை யெல்லாம் பாழ் செய்துவிட்டாள். இதுவேதான் பெருங் கொடுமை. நான் தொடங்கியதொரு வேள்வி அப்படியே குறையாய்க் கிடக்கின்றது.

> இலங்கையர சன்பணி யமைந்தொரிடை யூறாய்
> விலங்கல்வலி கொண்டெனது கேள்விநலி கின்றாள்
> அலங்கல்முகி லேயவளிவ் வங்கநில மெங்கும்
> குலங்களொ டடங்கநனி கொன்றுதிரி கின்றாள்.

அலங்கல் முகிலே,

புஷ்ப ஆரங்களால் அலங்கரிக்கப்பட்டதொரு மேகமே என்று, கதை சொல்லி வந்த விசுவாமித்திரர், ஸ்ரீராமனை விளிக்கின்றார்; கதை முடிவில், தனது வேள்வி இடையூறு பட்டதொரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு விளிக்கின்றார் விசுவாமித்திரர். முன்கதை தொடங்கும்போது,

'ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்', என்று உருகி விளித்த விசுவாமித்திரர். இப்பொழுது அலங்கல் முகிலே என்று விளிக்கலாம். இந்த விளி கண்ணீர் சொட்டும் விளி; கண்ணீர் தாமரை கொள்ளும் விளி. ஸ்ரீராமன் அணிந்த அலங்கலுங் கண்ணீர் சொரியலாம் (கள் நீர் - கண்ணீர். கள் - தேன்) விசுவாமித்திரர் கண்களுங் கண்ணீர் சொரியலாம். அது தாடகையின் கொடுமையால் கலங்கி வந்த கண்ணீரோ, அன்றி ஸ்ரீராமனால் தெளிவடைந்த ஆனந்தக் கண்ணீரோ; ஆரறிவார்! இரண்டும் ஆகலாம் இந்தக் கண்ணீர்களுக்கு மேலே, அந்தக் கதையைக் கேட்ட சந்தர்ப்பத்தில், முனிவர்களின் நிலையைக் கூறுமலே சிந்திக்க வைத்தபோது. ஸ்ரீராமன் வண்ணத்தானன்றி உண்ணெகிழ்வால் கருணை மேகமாய்விட்டான்; கருணை நிரம்பிய அவன் கண்களும் கண்ணீர் பூரித்துச் சொரிந்திருக்கலாம். விசுவாமித்திரர் ஆராமையால் அவனை அள்ளிப் பருகுவார் போன்று,

'முகிலே' என்று விளித்துக் கதையைத் தொடர்ந்து சொல்லுகின்றார்.

'அவள் அங்க நிலமெங்கும், குலங்களொடு அடங்க நுனி கொன்று திரிகின்றாள்.'

அந்தப் புண்ணியவதி, இந்த அங்கநாடு முழுவதிலும் இனி உயிர்வர்க்கங்கள் இல்லையாகும்படி, அவற்றை வேரோடு களைந்து தின்று திரிகின்றாள்.

அப்பனே, இவள் சரித்திரத்தில் ஒரு இரகசியமும் இருக்கின்றது. அந்த இரகசியம் தேவரகசியம். அது என் உள்ளத்தில் உனக்குக் கதை சொல்லி வரும்போது நினையாப் பிரகாரமாய்த் தோன்றுகின்றது; (இனி நடக்கப்போகும் இராவண வதம் ஆகிய இராமாயணத்துக்கு அந்த இரகசியந்தான் வித்து.) அந்த இரகசியத்தை இதோ உனக்குச் சொல்லிவைக்கிறேன்; சொல்ல வருகிறது; சொல்கின்றேன். இதனைச் சிந்தனையுள் வைத்துக்கொள் அது என்னவென்றால் இந்தத் தாடகை இவ்வாறு முனிவர்களுக்கு இடுக்கண் விளைத்தற்குக் காரணம்,

### இலங்கை அரசன் பணி

எய்தவன் இருக்க அம்பை ஏன் நோகவேண்டும். இலங்கையை அரசு புரிந்து கொண்டிருக்கிருன் இராவணன். அவன் திருப்பணிதான் இவள் செய்யுங் கைங்கர்யம். இதில் எனக்குச் சந்தேகம் இல்லே. முன் பின் தெரியாத ஒரு இராவணக் களே ஸ்ரீ ராமனுகிய மருத வள வயலில் சற்றே முளேகொள்கின்றது முனிவர் அந்த முளேயைக் களேயாது அதனே வளர வைத்துவிட்டு அப்பால் தாடகையிடம் வருகின்ருர்.

முன்னுல களித்துமுறை நின்றவுயி ரெல்லாந்
தன்னுயி ரெனக்கருது தன்மையவன் மைந்த
என்னினி யுணர்த்துவது இனிச்சிறிது நாளில்
மன்னுயி ரணேத்தையும் வயிற்றினிடும் என்ருன்

கதைத் தொடக்கத்திலும் நடுவிலும் ஸ்ரீராமனே இரு வேறுவகையில் விளித்த முனிவர், கதைமுடிவில் மற்ருெரு வகையில், காரியப் பாட்டில், மூன்ருவது முறையும் விளிக்கின்ருர்.

'உலக முன் (முறை) அளித்து, முறை நின்ற உயிர் எல்லாம். தன் உயிர் எனக்கருதுந் தன்மையவன் மைந்த'

இந்த நிலவுகத்தை மநு முதலிய சூரியகுல முதல்வர்கள், முன்பாதுகாத்த முறையிற் பாதுகாத்துத் தவங்கள் வேள்விகளால் வேத முறைகளில் நின்ற சந்மார்க்கர்களான உயிர்வர்க்கங்களே யெல்லாந் தன் உயிர் என்று கருதிப் பாதுகாத்து வந்தவன் தசரதச் சக்கரவர்த்தி. ஒரு முறை,

இடையூற்றுக் கிடையூருய் யான் காப்பன் பெருவேள்விக்கு எழுக'

என்று, என் வேள்வியைப் பாதுகாக்க ஆயத்தமாய் நின்றவன் தசரதன். அப்படிப்பட்ட தசரதனுடை மைந்தனே,

இனிச் சிறிது நாளில்
மன்னுயிர் அணேத்தையும் வயிற்றின் இடும்

இந்த அங்க நாட்டு உயிர்களை மாத்திரமா, இந்த உலகத்திலுள்ள உயிர்கள் அனைத்தையுமே, காணவேண்டு மானால் தாடகையின் வயிற்றுக்குள்ளேதான் சென்று காணல் வேண்டும். இது சத்தியம். இனிக் 'கோதுகள்' என்று எங் களையும் விட்டு வைக்காள்

என் இனி உணர்த்துவது

மகனே,

கதையைச் சொல்லி முடித்துவிட்டேன். கதையின் அந் தரங்கங்களைத் தோலை உரித்துக் காட்டுவது கதாசிரியர் களுக்கு மரபே யன்று. அது கதையைக் கொலை செய்வ தாயிருக்கும். தாடகை யாதி இராக்கத கணங்களின் இயல் புகளையும் உன் கடமைகளையும் கதை சொல்லும்போது நான் உரைக்காமலே நீ உணர்ந்துகொண்டாய் உன்போல் வார்க்கு உணர்த்துவது ஏன்? நான் இனி உனக்கு உணர்த்தக் கிடந்தது ஒன்றும் இல்லை. என்றிங்ஙனம், பாலைநில வர லாற்றில் ஆரம்பித்துத் தாடகை கதையில் முடித்து அமை கின்றார் விசுவாமித்திர முனிவர்.

# 23 மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்.

அங்கிறைவன் அப்பரிசு உரைப்பஅது கேளாக்
கொங்குறை நறைக்குல மலர்ச்செனி குலுக்கா
எங்குறைவது இத்தொழில் இயற்றுபவள் என்றான்
சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான்

இறைவன் - விசுவாமித்திரர் எத்தனையோ கதைகளைச் சுருங்கச் சொல்லல் என்னும் அழகுபற்றிச் சொல்லிவந்தவர், தாடகையின் கதையை மாத்திரம் அப்படிச் சுருக்காமல் மிக மிக விளங்க வைத்துத் தாடகை இயக்கியாயிருந்து, பின் அரக்கியானதும், அந்த விசேஷத்தினாலே அருமந்த மருதம் பாலையானதும், முனிவர்கள் வேள்விகள் தொடங்கவும் தொடங்கிய வேள்விகளை முடிக்கவும் இயலாதிருப்பதும், தாடகையென்பாள் கூரியதொரு பாணமேயாக, அவளைப் பிரயோகஞ் செய்யும் வில்லே போல ஒரு இராவணன் பின்னணியாயிருப்பதும் ஆகிய வரலாறுகளையெல்லாம், இனி ஸ்ரீ ராமனின் கடன்மை இன்னதென்று தொனிக்கச் சாங்கோபாங்கமாக விரிக்க வேண்டிய இடங்களை விரித்து எடுத்துரைத்தார் விசுவாமித்திரர்.

விசுவாமித்திர முனிவர், தாம் தாடகை கதை சொல்லும்போது, பாம்பின் கதைகளைக் கேட்கும்போது கீரிக்குப் போல, ஸ்ரீராமனுடைய கண்கள் கனல் கக்கும்; கைகள் வில்லை வளைக்கும்; ஸ்ரீராம பாணங்கள் அந்த அடவியைத் துளைத்துத் தாடகையைத் தேடும்; என்றெல்லாம் எண்ணி

யிருப்பார் ஆனால், அவர் எண்ணியவாறு ஒன்றும் இராமன்பால் நிகழவில்லை. இதிகாசக் கதை சொல்லுவது வைசம்பாயனருக்கு உரியதொன்றாயிருக்க, அந்தக் கதை சொல்லுகிற வித்தையை விசுவாமித்திரர் எடுத்துக்கொண்டதனாலேயோ, அன்றி வேறொரு காரணத்தினாலேயோ ஆர் அறிவார். அந்த இராமனுக்குக் காத்திருந்த உருத்திர மெய்ப்பாடு, ஆசிரியர் விசுவாமித்திரர் எண்ணியிருந்த பிரகாரம் உண்டாகவில்லை. ஆகவே கதைசொல்லும் வித்தை விசுவாமித்திரருக்கு அடாது; அதில் அவர் படுதோல்வி அடைந்துவிட்டார். என்று கொள்ளலாமோ என்றால், அப்படிக் கொள்ளவும் முடியவில்லை. ஏனென்றால், கதை கேட்கக் கேட்க ஸ்ரீராமன்பால் ஒரு மெய்ப்பாடு மெல்ல மெல்லத் தோன்றி, இப்பொழுது அவனை விழுங்கி எல்ல ருங்காண வெளிப்பட்டிருக்கின்றது. அந்த மெய்ப்பாடு காத்திருந்த உருத்திர மெய்ப்பாடு மன்று; முனிக் கதை - பேய்க் கதை - கேட்டால், சிறு குழந்தைக்கு அச்சம் என்கின்ற மெய்ப்பாடு அக்குழந்தைகள் அறியாமலே வருவதுண்டு. முனிகள் பேய்களைக் கோத்துக் கழுத்திற் கட்டிக்கொள்ளவல்ல தாடகையின் கதையைக் கேட்டால் எந்தக் குழந்தைக்கும் அச்சம் அந்தக் குழந்தை அறியாமலே மீதூரும். அப்படியான மெய்ப்பாடு குழந்தையாகிய ஸ்ரீராமன்பால் உதிக்கலாமேயென்றால், ஸ்ரீராமன் அச்சமென்பதைப் பிறப்பிலேயே அறியாதவன்; கீரிப் பறழுக்குப் பாம்பின் கதைபேசி அச்சம் உண்டாகாதவாறுபோல, க்ஷத்திரியக் குழந்தையாகிய ஸ்ரீராமனுக்கு எந்தக் கதை பேசியவழியும் அச்சம் உண்டாகாது. அவன் கைவில் மூவுலகையும் வெல்ல வல்ல வில். அவன் அறியாததொரு பொருள் உண்டு ஆனால் அது அச்சமாயிருக்கும். ஆகவே தாடகை கதையால் அவனுக்குக் கோபமோ அச்சமோ உண்டாகவில்லை. ஆனால் மெய்ப்பாடு ஒன்று வெளிப்பட்டிருக்கின்றது. அது அந்த இரண்டுமல்லாததொரு மெய்ப்பாடு. அதற்கு 'மருட்கை' என்று பெயர் கூறலாம். மருட்கை வியப்பு, அஃதாவது, கேள்விப்படாததொன்றைக் கேள்விப்பட்ட வழி உண்டாகும் ஆச்சரியம். ஆச்சரியமாகிய மருட்கை அந்தக்கதை வழியாக இராமனை விழுங்கி இப்பொழுது தலைக்கு விஞ்சிவிட்டது. ஆதனாலே ஸ்ரீ ராமன் விசுவாமித்திரர் கதை சொல்லுகிறவர் என்பதையும் மறந்து, கோபிகைகளின் மத்தியிலே மயிலிறகு சூடிநிற்கும் ஸ்ரீ கிருஷ்ணனைப் போலே தன்னைப் பாவித்து,

கொங்குறை நறைக்குல மலர்ச் செ(ன்)னி குலுக்கா

கொங்கு - தேன்; வாசனையுமாம். நறிய தேன் சொட்டுகின்ற - நல்ல மணம் வீசுகின்ற - குல மலர்களை அணிந்த உச்சியையுடைய தனது சென்னியை, அக் குலமலர்கள் குலுங்கக் குலுங்க ஒரு குலுக்குக் குலுக்கி, அவ்வளவிலும் மருட்கை அடங்காமல் அப்பாலேயும், அம் மருட்கையின் சேஷமாக அழகிய தன் செம்பவள வாய் ஊறுகின்றான். அந்த வாயூறல்தான்,

எங்குறைவது இத்தொழில் இயற்றுபவள்?

என்ற கேள்வி.

இந்தக் கேள்வி அச்சத்தாலோ வெகுளியாலோ உண்டானது அன்று. ஆசையினாலே உண்டானது. இனித்த தீன் பண்டத்தைப்பற்றிப் பேசுங்கால் குழந்தைக்கு ஊறும் வாயூறல் போன்றது. 'எங்குறைவது இத்தொழில் இயற்றுபவள்' என்ற கேள்வி. ஒரு காமுகனுக்கு ஒரு நடிகையை வருணித்துக் காட்டினால், அவன் வாயூறி, அவள் எந்தப் படத்தில் நடிககின்றாள் என்று கேட்பானே ஆனால் அந்தக் கேள்விக்கு இனமானதொரு கேள்வி, 'எங்குறைவதித் தொழில் இயற்றுபவள்?' என்ற கேள்வி ஆனால், காமுகன் கொண்ட காதற் கேள்வியன்று. ஸ்ரீராமன் கேட்ட கேள்வி. ஸ்ரீராமன் கேள்வி, புதிய சொரூபமான தாடகையைக் காணுகிற ஆசைக் கேள்வி; காணுகிற அளவேயான கேள்வி படம் விரித்தாடுகின்ற பாம்பு எதிர்ப்பட்டால் பச்சைக் குழந்தைகள் அஞ்சுவதில்லை; தாமுஞ் சேர்ந்து விளையாடும்.

தாடகையைப்பற்றி வெகுளியும் அச்சமுந் தோன்ற விசுவாமித்திரர் எவ்வளவு தூரம் வருணித்தபோதும், ஸ்ரீராமனுக்கு அந்த மெய்ப்பாடுகள் உண்டாகவில்லை. திருமாலின் அம்சமாய், க்ஷத்திரிய உதிரம் ஓடுகின்ற அவன் திருமேனியில் அந்த மெய்ப்பாடுகள் தோன்றுவதெப்படி! ஸ்ரீராமன் வேடிக்கை பார்க்கிற ஆசை மேலீட்டினாலே விசுவாமித்திரர் கதை சொல்லச் சொல்லக் கதாநாயகியைக் காணக் கண்ணூறி, 'எங்குறைவ தித்தொழில் இயற்றுபவள்' என்றான். விசுவாமித்திரர் போன்ற மகா முனிவர்களை எடுத்துக் காதருகில் உயர்த்தி ஒரு குலுக்குக் குலுக்கி,

'என்பு எழுந்து இயங்கும் யாக்கைகள்' - உள்ளீடற்ற வெறுங் கோதுகள் - என்று எறிந்து விடுகின்றவள் தாடகையானுல், அந்தக் கதாநாயகியைத் தரிசனஞ் செய்ய ஸ்ரீ ராமனுக்குக் கண்ணும் வாயும் ஊறுந்தானே! சங்குறை கரத்தொரு தனிச்சிலே தரிக்கின்ற ஸ்ரீ ராமனுக்கு அவ்வொருதலில் என்ன நூதனம்!

* * *

'பூனைக்கு விளையாட்டு கண்டெலிக்குச் சீவமோசம்' என்ற பழமொழியை இங்கே ஞாபகஞ் செய்வது, மகா முனிவராகிய விசுவாமித்திரருக்கு அபசாரஞ் செய்வதாயினும், என்ன செய்வது! அந்தப் பழமொழி சொல்வழி கேளாமல் வருகின்றது ஸ்ரீராமன் பூனைக்கு விளையாடுகின்றுன். விசுவாமித்திரரின் நிலையை அவன் நினைக்கிருனில்லே தாடகை என்றுலே முனிவர்களுக்கெல்லாம் ஏக்கம்! அப்படிப்பட்ட தாடகையைக் காட்டும்படி விசுவாமித்திரரைக் கேட்கின்றுன் ஸ்ரீராமன்; ஓந்தியைக் காட்டும்படி மயிலேயா கேட்பது! பார்க்கிற ஆசையினுலே கேட்கின்றுன் அந்தக் குழந்தை பர்வம்! விசுவாமித்திரர் என்ன செய்ய முடியும்! கையை அமர்த்தி, ஸ்ரீராமனை மெல்லப் பேசும்படி செய்து, தாமும் வாய் திறவாமலே திறந்து, ஸ்ரீராமன் செவியில் மந்திரோபதேசஞ் செய்பவர்போல, மெல்லென,

இவ்வரை **இருப்பது அவள்** என்பதனின் முன்பு

அந்தப் பாதகி இருப்பது இந்த மலையிலேதான் என்று இரண்டாம் ஆளான இலக்குவனுக்குங் கேளாமல், வெகு பயபக்தியுடன், கைவிரலை நீட்டிச் சுட்டிக்கூடக் காட்டாமல், ஒருவாறு அந்தச் சீமாட்டியின் உறைவிடத்தை 'உது' என்று கூறி, இன்னமும் வாய் மூடவில்லை. அப்பால் என்னத்தைச் சொல்வது! சொன்ன வாய் சொல்லி மூடமுன்பு,

**ஓர்**
**மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்**

* * *

புலி வேட்டைக்குச் சென்றவர்கள், மறைவுதேடி, அம்மறைவில் இன்னும் பதுங்கவில்லே; ஆயத்தஞ் செய்துகொண்டிருக்கின்றுர்கள். அதற்கிடையில் ஈன்றணித்தான பதினறடி வேங்கை சீறிச் சினந்து அவர்கள் மேல் பாய்ந்து வருகின்றது!

# 24 வந்தாள் ஆர்த்தாள்

**கைவரை யெனத்தகைய காளையுரை கேளா**
**ஐவரை அகத்திடை அடைத்தமுனி ஐய**
**இவ்வரை இருப்பதவள் என்பதனின் முன்புஓர்**
**மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்.**

காளை - இடபம் இடபம் போன்றவன் ஸ்ரீராமன். ஆனால், ஸ்ரீராமனை இடபம் போன்றவன் என்று மாத்திரங் கூறுதல் அமையாது. அவனைக் 'கைவரை எனத்தகைய காளை' என்று சொல்லுதல் வேண்டும். கைவரை - கைம் மலை. கையுள்ள மலை யானை; ஈண்டு இளைய களிற்றியானை. இளங்களிறு என்று சொல்லத்தக்கதொரு காளை உளதாயின் அப்படிப்பட்டதொரு காளை. காளை போன்றவனைக் காளை என்பது கவிமரபு

'கைவரை எனத்தகைய காளை' என்று காளையுலகத்திலே விசேஷித்துப் பேசப்பட்ட இந்தக் காளைக்கு 'இடபம்' என்று மேல் பொருள் உரைக்கப்பட்டது, அதனினுஞ் சிறப்பான பொருள் இருக்கின்றது. அந்தப் பொருள் பூனை. கைவரை எனத்தகைய காளை என்ற்ற பொருள் பூனை. பூனை என்றது ஸ்ரீராமனை. காளை போல்வான் காளை. அவ்வாறே பூனை போல்வான் பூனை. ஆனை போன்ற இராமனையா பூனையாக்குவது! என்று கடாவற்க. கடாயி னூர்க்குத் தாடகை சுண்டெலியாகின்றுளாதலின் ஆண்டைக் கப்பொருள் அமைவுடைத்தாமென்று விடுக்க.

* *

ஐவரை அகத்திடை அடைத்த முனி

முனிவர்கள் ஐம்பொறிகளை ஐம்புலங்கள்மேற் செல்லாமல் அடக்குபவர்கள்; அடக்கியவர்கள். அது அவர்கள் சாதகம். தாடகையின் அரசியலில், சாதகத்துக்கன்றி அவளுக்கு அஞ்சியும் ஐம்புலங்களை அடக்கியிருக்க வேண்டியவர்கள் முனிவர்கள். தாடகைக்கு அடங்கி ஒடுங்கி எப்படிப்பட்டவர்களும் முனிவர்களுக்கு இருக்கவேண்டிய சமயத்தில், இந்த ஸ்ரீராமன், சுண்டெலியைக் கண்ட பூனைபோல் கைவரை எனத்தகைய 'திமிர்' படைத்த ஒரு காளையாய், எவ்வித கூச்சமுமின்றி, வெகு கெம்பீரமாக, 'எவ்வரை இருப்பதவள்' என்று வினவினால், அந்தக் கெம்பீர வினா, ஐவரை அகத்திடை அடைத்த முனிக்குத் - தாடகைக்கு அஞ்சிச் சருகு சத்தஞ் செய்யாமல் அடி பெயர்த்து வைக்கும் முனிக்கு - எப்படியிருக்கும்!

முனி நடுநடுங்கி

ஐய,

என்கின்றது. அப்பா மகனே, காட்டிக்கொடாதே! சத்தத்தின் வழி அவள் வந்துவிடுவாள்! மெல்லப்பேசு! என்று கெஞ்சுகின்றதொரு கொஞ்சு மொழி, அந்த 'ஐய' என்ற மொழி; விளி.

இவ்வாறு ஸ்ரீராமனை அமைதி செய்துகொண்டு, அவன் கேள்விக்கு விடையிறுப்பராய், வெகு இரகசியமாக,

இவ்வரை இருப்பது அவள்

என்று ஒருவாறு சொல்லாமற் சொல்லிக் குறிப்பிட்டார். சம்பவம் அவ்வளவேதான். பாம்புகளைக் கட்செவியென்பார்கள். தாடகைக்குச் செவியே கண்போலும்! இன்னமும் சொன்னது சொல்லி விசுவாமித்திரர் வாய்மூடவில்லை. கனவிலே கண்டாலும் அஞ்சி முனிவர்கள் வாய் குழறுகின்ற அவள் - அந்தத் தாடகை,

ஓர்
மைவரை நெருப்பெரிய வந்தது என,
வந்தாள்.

இராமன் இலக்குமணன் விசுவாமித்திரர் ஆக மூன்றே மூன்று மனிதர்கள், அவர்களுக்கு எதிரிலே, கருநிறம் படைத்ததொரு பருப்பதம் வடவாமுகாக்கினி தன்பால் மூண்டெரிய அடிபெயர்த்து வந்தாற்போல அந்தத் தாடகை எதிர்த்து வந்தாள். அவள் மாத்திரந் தனித்து வரவில்லை. 'நிலைக்கிரிகள் பின் தொடர வந்தாள்.' நிலையான குல மலைகள், அவள் வருகின்ற விசைக்காற்றிலே, சுழல் காற்றுட்பட்ட தூசிகள் போன்று சுழல்கின்றன. வேகம் என்ற சொல்லுக் கிடமில்லாமே அவள் எதிர் வருகின்றாள். அப்படி வருகின்றவள்,

> சிலம்புகள் சிலம்பிடை செறித்தகழ லோடு
> நிலம்புக மிதித்தனள்.

மலைகள் பரல்களாகச் செறிக்கப்பட்ட சிலம்புகள் அணிந்து அழகுசெய்த கால்களால், கோபாக்கினி தாளம் போட, ஒன்றும் அறியாத நிலத்தை ஒரு மிதி மிதித்தாள். அந்த இடங் குழிந்து நீர் கொப்பளித்துச் சமுத்திரமானது. மருதத்தைப் பாலை செய்த தாடகை, அவர்கள் முன்னி லையிற் பாலையை நெய்தல் செய்தாள் அவள் எந்தத் திணை யையும் எப்படியுஞ் செய்வாள்!

> கடங்கலுழ் தடங்களிறு கையொடுகை தெற்ற
> வடங்கொள நுடங்குமிடை யாண்மறுகி வானோர்
> இடங்களு நெடுந்திசையு மேழுலகு மெங்கும்
> அடங்கலு நடுங்கஉரும் அஞ்சநனி ஆர்த்தாள்,

தாடகை பிரசண்ட மாருதத்தை மூக்குத் துளைகளில் இருத்துபவளே யானாலும், அவள் ஒரு மெல்லியலே 'நுடங்கும் இடை' என்று கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பரால் வருணிக்கும் பாக்கியம் படைத்திருக்கின்றாள் தாடகை. அவள் சற்றே நடை பயிலும்போது, 'அவள் அவள்தான்' என்று கண்டோர் சொல்லும்படி, பெண்மையைப் புலப்ப டுத்தி நுடங்குகின்றது, அவளுடைய 'இழையொன் றிரண்டு வகிர் செய்தாலன்ன' நுண்ணிய இடை. ஒரு நூலிழையின் பாதியளவுதானும், இவளுக்கு இடை என்று ஒரு அடை யாளம் உண்டுதானே என்பது கவிகளின் சந்தேகம். கவி களைச் சந்தேகிக்க வைக்காமல், தாடகை ஒரு உபகாரஞ்

செய்திருக்கின்றாள். மதங் காலுகின்ற களிற்றியானைகளைக் கைகளோடு கைகளைப் பிணைத்துத், தன் மார்பின் மீது இரு புறமும் இரு களிறுகள் ஒன்றை ஒன்று முத்தமிட்டுத் தொங்க, ஒரு தலைமாலை செய்து தன்னை அழகுசெய்திருக்கின்றாள். அந்த உபகாரத்தினாலே, அவள் நடக்கும்போது, சற்றே ஒசிவு பிறந்து, அந்த ஓசிவு, 'தாடகைக்கும் இடை இருக்கிறது' என்பதைப் புலஞ்செய்து, 'அவள் அவள்தான்' என்கின்ற பெண்மையைப் புலப்படுத்துகின்றது. இப்படிப் பட்ட அந்த மெல்லியல், சப்த சுரங்களுந் தலை குனியும்படி தனது கீதத்தைச் சுரப்படுத்துவாள் ஆயினாள். அப்பொழுது உருமு அஞ்சியது. உருமு - இடியேறு. 'வானோர் இடங்களும் நெடுந்திசையும் ஏழுலகும் எங்கும் அடங்கலும்' மறுகி நடு நடுங்கின. ஏழுலகு சப்த சுர உலகு போலும்.

இவ்வாறு நாட்டுக் கூத்துக்களிலே கூட, வருகை விருத்தங்கள் படித்தும் வருணிக்க முடியாத பிரகாரம் தோற்றரவு செய்கின்றாள், தாடகை மாதரார். இந்தச் சந்தர்ப்பத்தில் இலக்குமணன் இராமன் விசுவாமித்திரர் என்ற வைப்புக் கிரமப் எப்படி ஆயிற்றோ ஆர் அறிவார். ஆரம் பூண்ட மணி மார்பினனாகிய அந்தப் பச்சைக் குழந்தையும் அவனுக் கிளையவனாகிய இலக்குவனும், நாட்டுக் கூத்தை இமை கொட்டாது பார்க்கும் இளங் குழந்தைகள் போல, வேடிக்கை பார்த்துக்கொண்டும் நிற்கலாம் அந்தப் பாலொழுகுங் குழந்தைகள் விஷயம் இருக்கக் காரியம் அறிந்த முனிவர் நிலையே விசாரிக்கற்பாலது. 'கோதுகள்' என்று முன்னமே தாடகையாற் கழிக்கப்பட்ட முனிவர் வர்க்கத்தைச் சேர்ந்தவரான, விசுவாமித்திர முனியாகிய 'கோது' அந்தப் பிரசண்ட மாருதத்தின் எதிர் எப்படியாகுமோ! தாடகை என்ன சாதாரணம் ஆனவளா! இந்தச் சந்தர்ப் பத்தில் நமது வணக்கத்துக்குப் பாத்திரமான விசுவாமித்திர முனிவரின் கதியைச் சிந்திப்பது நமக்கு நாமே இழுக்குத் தேடுவதாயிருக்கும். முனிவர் பெருமானுக்கு ஆறுதல் செய்து சற்றே காலதாமசம் பண்ணி அவருடைய க்ஷேமத்தை விசாரிப்பதே தகுதி. பெரியோர்களை அஞ்சவைப்பதொரு சம்பவம் நிகழுமானால் அதனை அப்பொழுது நோக்காமல் தலை குனிந்து நாணி நிற்பதே சால்பு. அப்படியே நாமும்

விசுவாமித்திர முனிவருடன் ஒன்றும் பேசாமல் அவருக்குப் பிறகே செல்லும் இருவருடன் நாமும் ஒருவராய்ச் செல்லுவோமாக.

* * *

விசுவாமித்திரர் தொடங்கிய வேள்வியும் முற்றுப் பெற்றுச் சிறிது காலமுங் கழிந்தது தாடகை கதையும் கதைகளோடு கதையாய் மறந்து மறைந்துபோனது. அப்படியான காலத்திலே ஒருநாள், ஜனக மகாராஜாவின் அரண்மனையில், இராம இலக்குமணர்களை மகாராஜாவுக்கு அறிமுகஞ் செய்ய நேர்ந்தபோது, அந்தப் புதல்வர்களின் கதையை ஆதியோடந்தமாகச் சொல்லிவந்த விசுவாமித்திரருக்குத் திடீரென்று நெஞ்சந் திடுக்கிடுகின்ற ஒரு இடம் வந்தது, கதை கேட்டவர்கள்கூட அஞ்சித் திடுக்கிடுகின்ற இடமாயிருந்தது அந்த இடம். அந்த இடத்தைச் சற்றே திடபுத்தியுடன் நோக்குவோமாக

ஈங்கிவரால் என்வேள்விக் கிடையூறு கடிதியற்றுந்
தீங்குடைய கொடியோரைக் கொல்விக்குஞ் சிந்தையனாய்ப்
பூங்கழலார்க் கொண்டுவனம் புக்கேன்பு காமுன்னம்
தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள்.

ஓ ஜனகமகாராஜனே, நான் எனது வேள்வியை முடிக்கும் பொருட்டு, இவர்களையும் அழைத்துக்கொண்டு, நாட்டிலிருந்து காட்டுக்குப் புறப்பட்டேன். இன்னுங் காட்டுக்குள்ளே பிரவேசிக்கவில்லை. ஒரு கால் நாட்டுக்குள் இருந்தபடியே இருக்க, மற்றொரு காலை மெல்லத் தூக்கிக் காட்டுக்குள் வைக்கத் தொடங்கினேன்; ஆனால் அக்காலை அங்கே வைத்தது வைக்குமுன், எந்தக் கொடியவளுக்கு அஞ்சியஞ்சிச் சென்றேனோ, அந்தக் கொடியவளே விழிவிசேஷமானாள்.

பூங்கழலார்க் கொண்டு - இந்தச் சின்னஞ் சிறியவர்களையும் அழைத்துக்கொண்டு. 'வனம் புக்கேன் புகா முன்னம், தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப் பட்டாள்' என்கின்றார் விசுவாமித்திரர். தாடகை இறந்த இடத்தில் புல் பூண்டு செடி ள் கொடிகள் பெரிய மரங்கள் எல்லாம் முளைத்துவிட்டன. ஆயினும், 'தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள்' என்னும்போது, அந்த முற்றத்துறந்த முனிவருக்கு இன்றைக்கும் இருதயத்தில் ஒரு கம்பிதம் இருக்கின்றது.

# 25 பெண்ணென நினைந்தான்

கடக்கருப் வலத்தெனது காவலிதில் யாவும்
கெடக்கரு வறுத்தனொன் இனிச்சுவை கிடக்கும்
விடக்கரி தெனக்கருதி யோவிதி கொ டுந்தப்
படக்கருதி யோபகர்மின் வந்தபரி சென்(ருள்) (றே)

*எவராலும் வெல்லுதற்கரிய வெற்றியினையுடைய, எனது ஆஞ்ஞைக்குட்பட்ட இந்தக்காட்டுக்குள்ளே, அனைத்துயிர் வர்க்கங்களையுங் கெட்டொழியுமாறு கருவறுத்துவிட்டேன். ஆகையினாலே, இனிமேல் சுவை கிடக்கின்ற இனிய மாமிசம் எனக்குக் கிடைக்காதே என்கின்ற இரக்க மிகுதியினாலேயோ, அன்றி, விதியானது பிடர்பிடித்துத் தள்ள, இறந்துபட்டொழியக் கருதியோ, (என் முன்னிலையில் சற்றேனுங் கூசாது) நீவிர் வந்தவாறு எந்த ஆறு கூறுமின்கள்! என்கின்றாள் தாடகை.*

*ஊன் சுவையோடு உருத்திரச் சுவையுமேயன்றி, வேறு சுவை அறியாதவளாகிய தாடகைக்கு இன்றைய தினத்திலே, குறிப்பிட்ட இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு ஹாஸ்யச் சுவை கைவருகின்றது!*

*ஆலகாலம் போலே வாயைத் திறந்துகொண்டு வருகின்றாள் அவள். யமதர்மராசன்கூட அவள் தயையினாலேயே உயிர்வைத்திருக்கின்றான். அப்படிப்பட்ட அவள் எதிரில், சற்றும் அச்சம் இன்றிச் சிறிதுஞ் சலனப்படாமல், சிறுவர் இருவர் கண்டறியாதது கண்டு களித்து நிற்கின்றார்கள்.*

சிங்கம் கரடி புலி யானை முதலிய உயிர்களெல்லாம், உடலுடன் இவள் உதரத்தில் புகுந்து, சிறிது காலம் வாழ்ந்து, பிறகு அவளுடைய உரோமத் துவாரத்தின் வழியாகவோ, அன்றி, மூக்குத் துவாரங்களாகிய பிலத் துவாரங்களின் வழியாகவோ புறப்பட்டுக், காற்ருேடு காற்ருய்க் கலந்து செல்வதை இந்தச் சின்னஞ் சிறுவர்கள் எப்படி யறிவார்கள். அந்தப் பென்னம் பெரிய முனிவர் இந்தத் தாடகையைப் பற்றி எத்தனை முறை எத்தனை சொன்னபோதும், சிறுவர்கள் சிறுவர்களே! பயம் அறியாத பாலகர்கள் அவர்கள்! உலகப் பொருட் காட்சியில் வைத்ததொரு பொருள்போலத் தாடகையைக் கண்டுகளித்து நிற்கின்ருர்கள், ஸ்ரீராம இலக்குமணர்கள். காரியந் தெரியாமல், தன்னைப் பொருட் காட்சிப் பொருள் என்று காண்கின்ருர்களே அந்தச் சிறுவர்கள் என்று தாடகை கருதிஞல், அவளுக்கு ஹாஸ்யம் வராமல், வேறென்ன வரமுடியும்! சின்னஞ்சிறிய பாலர்களெங்கே! மகாமேரு பர்வதமான தாடகை எங்கே! அவளுக்கு அவர்கள் பாகடை; அஃதாவது பாக்கு வெற்றிலை.

* * *

'ஓகோ! பச்சைப் பசிய பாலர்களே, முதிய கோதுமனிதனே, நீவிர், இந்தப் பாட்டிக்கு இனியதும் பாலொழுகுவதுமான பசிய தசைப் பிண்டம் இனிக்கிடைப்பது அரிது என்கின்ற இரக்க மிகுதியிஞலே இவ்விடம் போந்தீர்கொல்லோ! இல்லையேல், உங்கள் ஜாதக விசேஷம் பிடர்தொட்டு உந்தி இவ்வாறு செய்ததேயோ! உங்கள் வரலாற்றை இதோ பகர்மின்!' என்பது தாடகையின் ஹாஸ்ய ரசனை.

* * *

பருவமான பிஞ்சு மாங்காய்ப் பிளவுகளோடு, உப்பையும் அளவாகச் சேர்த்து வாயிலிட்டு ஒருவர் சுவைத்தால் மற்றவர்களுக்கு வாயூறவேண்டும். அப்படி வாயூருவிட்டால், அது பெரிய தவறு: ரசனை விரோதம்!

தாடகையின் ஹாஸ்ய ரசனையிஞல், இராமலக்குமணர்பால், சரீரம் நடுங்க அச்சரசனை தோன்றவேண்டும். அவர்கள்

புத்தி அலமந்து தடுமாறவேண்டும். அப்படி ஒன்றும் அந்தப் பாலகர்கள்பாற் சம்பவியாமை பெரிதும் ரசனு விரோதம் அல்லவா?

* * *

'அவர்களுக்கு அது(வே)சாலும்' என்று நாயனுர் இரங்குகின்ற, அழுக்காற்றுப் பொக்கிடங்களுக்குப் பிறர்பால் ஒரு குற்றமேனுங் காணுதவழி, வெகுளி கொதித்துப் பொங்கி எழுமே. அவ்வாறேதான் தாடகைபால் வெகுளி குதித்துக் கொண்டெழுகின்றது. முத்தமிழின் சிகரமான நாடக உச்சியில் அபிநயம் பிடிக்கிற நிலையில் தாடகை காட்சியளிக்கின்ருள்.

மேகமவை இற்றுக விழித்தனள் புழுங்கா
மாகவரை யற்றுக உதைத்தனள் மதித்திண்
பாகமெனு முற்றெயி றதுக்கியயில் பற்ரு
ஆகமுற உய்த்தெறிவ னென்றெழ அழன்ருள்.

இந்தப் பாட்டுத் தாடகை பிடித்த அபிநயப் பாட்டு. 'இருந்து முகந் திருத்தி' என்ற பாட்டிலே, ஒரு உத்தமிக்கு ஒரு நாள், அவள் பத்தா வேண்டிய சோடசோபசாரங்கள் செய்த பிறகு, அவள் திருச்செவிகளில், 'விருந்து வந்த தென்று விளம்ப,'

இப்படியும் ஓர் ஆணுய்ப்பிறந்தவன் சொல்ல, ஒரு பெண்ணுய்ப் பிறந்தவள் கேட்டுச் சகிப்பதா!

என்று அந்த உத்தமிக்கு எவ்வளவு தூரம் மனம் புழுங்கியதோ, அவ்வளவு தூரத்துக்கு அப்பாலேயும் தாடகையின் திருவுள்ளம் புழுங்கியது. அதனுலே, வெப்பந் தாங்காமல் தாடகையின் முகத்தாமரையில் வசிக்கின்ற விழிக் கயல்கள் பிறழ்ந்து, மேல்நோக்கின. அந்த விசேஷத்தினுலே சூற்கொண்ட மேகங்கள், வரண்டு சுருண்டு பொடிப்பொடியாய்ப் போயின. ஆகாய சம்பவம் அப்படியாகத் தாடகையின் திருவடிகள் நிலத்தை உதைத்த உதைப்பாகிய தாள விசேஷத்தினுலே, நிலத்திலுள்ள குலமலைகள் உடைந்து

தகர்ந்து பொடிபட்டன. கடைவாயிலே ஊன்களை உயிரோடு கிழித்துச் சுவைத்துக்கொண்டிருந்த கோர தந்தங்களுக்குப் பாதி மதிகளை ஒத்திருந்த காரணத்தினுற் போலும், அதுக் கப்பட்டுக் கிரகண தோஷம் ஏற்பட்டது அவள் திருக் கைகளை அலங்கரித்திருந்த சூலப்படை, அந்தப் பாலர் களின் அழகிய மார்புகளைப் பார்த்துப் பார்த்துக் கொட்டாவி விட்டது. அழல் மலையாகிய அருணசலம்போல் நிமிர்ந்து, அவள் அயலில் யாரும் அணுக ஒண்ணுமல் அழன்று கொதித்தாள்

* * *

இப்படியான சந்தர்ப்பத்தில் ஸ்ரீராமனை, விசுவாமித் திரர் ஒருமுறை திரும்பிப் பார்ப்பது வழக்கம். பார்க்கிற அவ்வளவே போதுமானது. இன்று ஸ்ரீராமனை விசுவாமித் திரர் திரும்பிப்பார்க்கவில்லை. இராமன் அந்தச் சந்தர்ப் பத்திற் செய்யவேண்டியதை முன்னமே சாங்கோபாங்க மாகச் சொல்லிவைத்துவிட்டார் விசுவாமித்திரர். அவர் இமை கொட்டாதுதாடகையே பார்த்துக்கொண்டு நிற் கிறுர்; அவள் ஆவி அந்த ஆக்கையை விட்டுப் பிரிவதைப் பார்க்க ஆசைப்பட்டுக்கொண்டு நிற்கின்றுர் முனிவர். ஆனுல்,

அண்ணல்முனி வற்கது கருத்தெனினும் ஆவி
உண்ணென வடிக்கணை தொடுக்கிலன் உயிர்க்கே
துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுள ளேனும்
பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்

விசுவாமித்திரரோ அண்ணல் முனி; பெருமையிற் சிறந்த முனிவர். க்ஷத்திரியராயிருந்து, கடுங் கொடுந் தவத்தால், எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகுகின்ற அந்தணர் ஆனவர் அவர்.

தாடகையோ, 'உயிர்க்கே துண்ணெனும் வினைத்தொழில் தொடங்கியுளள்.' தாடகை வெறும் உடல் வர்க்கத்தைத் தின்னுகிறவள் அல்லள். அவள் உதரத்துக்குப் பிரயாணஞ் செய்த பிறகுதான், உயிர்வர்க்கங்கள் தங்கள் உடல்களை விட்டுப் பிரிவது, இப்பொழுதைய வழக்கமாய்விட்டது.

தாடகை வெறும் உடல்களை நம்பி உலை வைப்பதில்லை; உயிர்களுக்கே உலை வைக்கிறவள் அவள். தாடகை என்றால் உயிர் வர்க்கங்கள் துண்ணென்னும்!

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்

கொடியவர்கள் விஷயத்தில், கொலை தர்மமாய்ப், பைங்கூழுக்குக் களை களைவதாயிருக்கும் என்பது வள்ளுவ நாயனார் கருத்து. பைங்கூழ் - நெற்பயிர். தாடகை விஷயத்தில் அந்தணராகிய விசுவாமித்திரர் கருத்தும், வள்ளுவ நாயனார் கருத்தே. இந்தக் கருத்தை அந்த ராமன் அறியாதவன் அல்லன். அந்தணராகிய முனிவர் கருத்தை நன்கு அறிந்து வைத்துக்கொண்டும்,

ஆவி உண்ணென வடிவக்கணை தொடுக்கிலன்

தாடகையின் ஆவியைப் பருகிக் கொட்டாவி தணிக்கக் காத்துக் கிடக்கின்றது அவன் கைப் பாணம். அப்படிப்பட்ட பாணத்தை, 'அவள் ஆவியை உண்' என்று ஏவினானல்லன்; அவன் அந்தக்கரணஞ் சிறிதாயினுந் தொழிற்படவில்லை.

'பெண்

என மனத்திடை

நினைந்தான்.'

ஐயையோ, பேயும் இரங்குகின்ற பண்டம் அல்லவா எதிரில் நிற்பது. பெண்மைக்குக் கணை தொடுப்பது ஆண்மைக்கு அழகாகுமா? அறமாகுமா? என்றுதான் அவன் மனம் சிந்தித்தது; 'காசில் கொற்றம்' எது? காசுள் கொற்றம்' எது என்றுதான் அவன் மனம் நாடியது. 'தருமம் என்றொரு பொருள் உளது' என்கின்றதே கந்த புராணம். அந்தத் தருமமாகிய பொருள் எது என்றுதான் அவன் மனங் கேட்டது.

இப்படிப்பட்ட மனசு படைத்த ராமனை இனியும் பால ராமன் என்று வைத்துக்கொள்வது அடாது. அவன் முதுக் குறைந்துவிட்டான். ஆண்டில் இளையனாயினும் அறிவில் முதியனாய்விட்டான். இனி அவன்,

* * *

பெருந்தகை

'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்.'

# 26 ஆறி நின்ற தறனன்று

ஈறி னல்லறம் பார்த்திசைத் தேனிவட்
டீறி நின்றிது செப்புகின் றேனலேன்
ஆறி நின்ற தறனன் றரக்கியைக்
கோறி யென்றெதி ரந்தணன் கூறினன்;

ஸ்ரீ ராமனோ 'பெருந்தகை.' 'எண்ணித் துணிக கருமம்' என்பது தெய்வப் புலமை. எதிரில் வருபவள் தாடகையே யாயினும், அவள் ஒரு பெண்ணாயிற்றே என்று, அவன் மனம் எண்ணுகின்றது. அதனால் அவன் திருக்கரம் அம்பைத் தீண்டக் கூசுகின்றது. உட்கரணங்கள் சற்றே தாமசஞ் செய்கின்றன. வெளியிற் புலமாகாது ஒழியினும், ஸ்ரீராமன் ஒரு சிறிது கணம் ஆறி நிற்கின்றான்.

ஆறி நின்றது அறன்

பெருந்தகையாகிய ஸ்ரீராமன், 'பெண்ணென மனத்திடை நினை'ந்து சிறிது ஆறி நின்றது தருமம். அம்மட்டோ,

நன்று

அவ்வாறு செய்தது தரும உச்சம்.

அறன், நன்று - அறனன்று.

பாவகனாகிய ஸ்ரீராமனை நோக்குமிடத்து. அவன் ஆறி நின்றது, அறனாய், அதற்கு மேலே நன்றாய், அமைந்ததே யாயினும், அந்தச் சந்தர்ப்பத்தில் ஆறி நின்றது அறன் அன்று.

அறன், அன்று - அறனன்று.

விசுவாமித்திரரோ 'அந்தணன்'; எவ்வுயிர்க்குஞ் செந் தண்மை பூண்டொழுகுபவர்; அறந் தெரிந்தவர்.

**யாதென் றெண்ணுவ திக்கொடி யானையும்**
**மாதென் றெண்ணுதி யோமணிப் பூணினாய்.**

உயர்திணைப் பெண்பாலுக்கு ஒரு உதாரணங் கேட்டால், தாடகை என்று சொல்லுவது அடாது. தாடகையை ஒரு மாது என்று எண்ணற்க. அந்தக் கொடியாள் மின்னல் முதலிய கொடிவர்க்கத்தைச் சேராதவள். அவள் ஒரு கொடுமைப் பூண்டு. தாடகை பெண்ணே அல்லள்; என் றிங்ஙனம் அந்தணராகிய விசுவாமித்திரர், முன்னமே, தாடகையைப்பற்றி ஸ்ரீராமனுக்குச் செவியறிவுறுத்தியிருக் கின்றார். மேலும் அவள் கொடுமையை வருணித்துக் கொண்டே நிற்கின்றார். அப்படிச் சந்தர்ப்பத்தில், அதுவும் அந்த மகாமுனிவர் எதிரில், சிறுவனாகிய ஸ்ரீராமன், அவள்மேல் அம்பைத் தொடுக்காமல்,

ஆறி நின்றது அறன் அன்று.

ஸ்ரீராமன் செயல் தரும விரோதம்; சந்நிதி விரோதம் இங்கே சந்நிதி அந்தணராகிய விசுவாமித்திரரின் முன்னிலை.

விசுவாமித்திரரோ,

**ஈறி லல்லறம் பார்த்திசைத்தேன்**
என்கின்றார்.

அறம் எல்லையில்லாதது; 'கல்லாலின் கீழிருந்து அறம் உரைத்தான் காணேடி' என்கின்றது திருவாசகம். ஆத்தி சூடியிலிருந்து, கல்லால விருட்சம் வரை நீண்டு கிடக் கின்றது அறம் அறத்தின் நீளம் ஸ்ரீராமனுக்கு எட்டாத தாகலாம். ஒரு கிருஷ்ண அவதாரத்துக்குத்தான் எட்டுவதா யிருக்கலாம். அந்தணரும் முதியவருமான விசுவாமித்திரர், ஈறற்றதும் நீண்டதுமான அறத்தின் நன்மைப்பாடுகளை நன்கு ஆராய்ந்து, கருமத்தை எண்ணித் துணிந்துதான்,

தாடகையின் கொடுமைகளைச் செப்பியிருக்கின்றார். அவர் அந்தணர் ஆதலினால் அவள்பால் அவருக்கு எள்ளளவுங் கோபமில்லை.

**இவட் சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்**

என்பது அவர் கூற்று. இவள், சீறி, - இவட்சீறி என்று வரும். இவளைக் கோபித்து என்று பொருள். இங்ஙனம் ஆகவே,

**ஸ்ரீ ராமன்,**

**ஆறி நின்றது, அறன்; நன்று**

என்று தோன்றினும், ஒரு முனிவருக்கு எதிரில் அவன் அப்படி நின்றது,

**அறன் அன்று**

ஆயிற்று

அப்பால்,

**'அரக்கியைக் கோறி' என்றெதிர் அந்தணன் கூறினான்**

ஸ்ரீராமனது நிலையைக் கண்ணுற்ற விசுவாமித்திரர், இயமதர்ம ராஜாவின் நிலையில் தம்மை மாற்றிக்கொண்டு இயமன் இயம தூதர்களுக்குக் கட்டளையிடும் ஆஞ்ஞை முறையில்,

ஏ ராம,

இதோ 'அரக்கியைக் கோறி' என்று ஆணைமேலிட்டுப் பணிப்பாராயினார்.

சீறி நின்று ஒன்றுஞ் செப்பாத அந்தணருக்குக், 'கோறி' என்ற கொடூர வார்த்தை வாயில் வந்துவிட்டது; கொல்லுதி என்று மெல்லெனச் சொன்னாலே, போதியதாயிருக்கவும், கோறி என்ற கடின வார்த்தை அவர் நாவிற் குதித்து விட்டது. கொல், த், இ - கோறி; கொல்லக்கடவாய் என்று பொருள்; ஏவற் பொருள்.

இனி நிகழுங் கணத்தில் ஸ்ரீராமன் செய்ய வேண்டியது தெளிவாய்விட்டது. ஸ்ரீராமபாணம் தாடகையின் மார்பைப் பிளக்கப் போகின்றது. சிறிது தாமதித்ததினால், வேகம்

பெரிதும் அதிகரித்து, அவள் மார்பை பிளக்கும் அளவில் அமையாமல், அப்பாலே மலை உருவி, மரம் உருவி, மண்ணையும் உருவப்போகின்றது ஸ்ரீராம பாணம். ஆனால், தாமசமின்றித் தாடகையை வதைக்க முந்தி, மற்றொரு தாடகையை வதைக்கவேண்டியவன் ஆகின்றான் ஸ்ரீராமன். அந்தத் தாடகை சந்நிதி விரோதம் என்கின்ற தாடகை. விசுவாமித்திரர் வேதந் தெரிந்தவர்; அந்தணர்; அவர் முன்னிலையில் அவர் கருத்துக்கு வேறாக ஒரு கருத்து வைத்திருப்பதற்கு ஸ்ரீராமன் ஆர்! ஸ்ரீராமனது கருத்து வேற்றுமைதான், அந்தச் சந்நிதி விரோதம் என்கின்ற புதிய தாடகை.

பழைய தாடகைக்குக் கிஞ்சித்தாயினும் ஸ்ரீராமன் அஞ்சினான் அல்லன். ஆனால், விசுவாமித்திரரின் அபிப்பிராயத்தைக் கேட்டதும், புதிய தாடகையைக் கண்டு, அஞ்சி, நடுநடுங்கிச் சரீரம் வெயர்த்து, விளர்த்துவிட்டான் ஸ்ரீராமன். அவன் நாத் தழுதழுக்கின்றது. அந்தத் தழுதழுதழுப்புப் பின்வருகின்றது. இதிகாசம் என்கின்ற முத்து இப்படியான தழுதழுப்பிலேதான் விளைந்து முதிர்ந்து பிரகாசிப்பது. தழுதழுப்பு வருமாறு :

ஐயன் அங்குஅது கேட்டு,அறன் அல்லவும்
எய்தி னால்;அது செய்கஎன்று ஏவினால் ;
மெய்ய, நின்னுரை வேதம் எனக்கொடு
செய்கை அன்றோ அறஞ்செயு மாறு;என்றான்.

ஐயன்-ஸ்ரீராமன்

ஆங்கு அதுகேட்டு

அவ்விடத்திலே. அந்தணராகிய விசுவாமித்திரர் கூறிய கூற்றுக்களைக் கேட்டுத்,

தன் கருத்து வேற்றுமை சந்நிதி விரோதம் என்பதை நன்கு உணர்ந்து,

விசுவாமித்திர முனிவரை வணங்கி ஒரு வேண்டுதல் செய்கின்றான். அந்த வேண்டுதல் இது :

'அறன் அல்லவும் எய்தினால்'
'அது செய்க என்று ஏவினால்'

'மெய்ய'

'நின்னுரை வேதம் எனக்கொடு செய்கை அன்றோ அறஞ் செய்யு மாறு',

அறனல்லாத ஒரு பாவகாரியந்தான் செய்ய நேர்ந் தாலும், மெய்ம்மையை உணர்ந்த தேவரீர் அந்தக் காரியத் தைச் செய், என்று கட்டளையிட்டால், அந்தக் கட்டளையை வேதவிதி என்று சிரமேற்கொண்டு' செய்வது தானே அறத்தைச் செய்வது.

**கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனோடு நேர்.**

* * *

**பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கு மெனின்.**

''மெய்ம்மை யுணர்ந்த தேவரீரே யன்றிப், 'புரைதீர்ந்த நன்மையை' அறிதற்கு நான் ஆர்! என்னை மன்னிக்க வேண்டும்'' என்கின்றான் ஸ்ரீ ராமன்.

தாடகையைக் கொல்லுவதால் ஒரு பழி வருமானால், அந்தப்பழி, வேதந்தெரிந்த ஒரு அந்தணனின் சிந்தனைக்கு மாறாகச் சிந்தித்த பழிக்கு எம்மாத்திரம்! தாடகையைக் கொல்லும் பழி அணுவானால், அந்தணன் கருத்தைக் கொல்லும் பழி மகாமேரு.

இதிகாசத்திலே, ஆலகாலம்போற் சீறி வருகின்ற தாடகையையோ ஒரு இராவணனையோ கொன்று குவிப்பது பெரிய காரியம் அன்று. அறமாகிய வரம்பைப் பாதுகாத்து அதில் நிலை நிற்பதே பெரிய காரியம்.

விசுவாமித்திரர் ஸ்ரீராமனைத் தரும்படி தசரதரைக் கேட்டபோது, தசரதர் அறவரம்பை விலகித் தடுமாறினார். அப்பொழுது ஒரு வசிட்டர் பாதுகாத்தார். இப்பொழுது ஒரு வசிட்டர் இன்றியே, வசிட்டருடைய ஞான புத்திரனை, ஸ்ரீராமன், விசுவாமித்திரர் முன்னிலையில், அறவரம் பினின்றும் விலகாமல், ஒரு கண நேரத்துக்குள் தன்னைத் தானே பாதுகாத்துக்கொண்டான். தன் கதையை வெறுஞ் சரித்திரம் ஆக்காமல், அற வரம்பாகிய இதிகாசம் ஆக்கிக் கொண்டான்.

# 27 அரிசிப்பொரியோடு திருவாரூர்

மாலும அக்கணம் வாளியைத் தொட்டதுங்
கோல விற்கால் குனித்ததுங் கண்டிலர்
கால னைப்பறித் தக்கடி யாள்விட்ட
சூல மற்றன துண்டங்கள் கண்டனர்.

ஒருநாள் தமது எண்ணத்துக்கு மாறாகத் தசரதன் ஒன்று சொன்னபோது கறுத்த மாமுனிவர் விசுவாமித்திர முனிவர். அவ்வாறே இன்றைக்குந் தமது எண்ணத்துக்கு மாறாக ஸ்ரீராமன் சற்றே ஆறி நின்றபோது, கறுத்திருக்க வேண்டியவர் விசுவாமித்திரர். ஆனால் அப்படி ஒன்றும் நிகழவில்லை. கறுக்கவேண்டிய முனிவர் கருக்கொண்டதொரு கருணைமேகமாய்க் கசிந்துருகவேண்டியதொரு நிலை சம்ப வித்துவிட்டது.

'மெய்யனே! வேதந் தெரிந்த முனிவர் பெருமானே! தேவரீர் பணித்த பணி அறமேயாக அறப்புறமேயாக, அப் பணியை வேத விதியாகச் சிரமேற் கொண்டு செய்வதன்றோ, என்போன்றார்க்கு அறஞ்செய்யும் ஆறு'

என்று ஸ்ரீராமன் அறத்தை வரம்பு செய்வானேயானால், கறுக்கிற முனிவர் கறுக்கிற தெப்படி! காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்காமல் இருக்க எந்த முனிக்குத்தான் முடியும்!

விசுவாமித்திர முனிவரும் ஸ்ரீராமனின் வீரத்தைத் தரிசிக்கக்கூடிய ஆகாய வாசிகளும், தாடகை வதத்தை மறந்து, தருமத்தின் வேலியாய் ஸ்ரீராமன் நின்ற நிலையை

வியந்து கொண்டாடுவாராயினர். அதனாலேதான்போலும், அந்தச் சந்தர்ப்பத்தில், ஸ்ரீராமன் வில் வளைத்ததையும் அம்பு தொடுத்ததையும் எவருங் கண்டிலர்.

**காலனைப்பறித்து அக்கடி யாள்விட்ட**
**சூலம் அற்றன துண்டங்கள் கண்டனர்.**

* * *

அக் கடியாள் விட்ட சூலம்: அந்தத் தாடகை ஸ்ரீராமன் மேல் ஏவிய சூலத்தைச் சூலம் என்று சொல்லுதல் தகாது. அதனைக் காலனைப் பறித்து விட்ட சூலம் என்றே சொல்லல் வேண்டும். காலனாகிய இயமனை நிலைபெயர்த்துச் சூல வடிவில் அமைத்ததுதான், தாடகை ஏவிய சூலம். அந்த வனத்தை அணுகியவர்களின் ஆயுட்கால வரையறை அந்தச் சூலத்திலேதான் தங்கியுள்ளது. அது கால சூலம். அப்படிப் பட்ட சூலம் பல்வேறு துண்டுகளாயினதை அங்கே நின்றவர்கள் கண்டார்கள். இராமன் வில்லு வளைத்ததும், அம்பு தொடுத்ததுங் கண்ணிமைப்பவர்கள் இமைக்கத் தொடங்கும் போது நடந்திருக்கவேண்டும்.

**சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரங் கரிய செம்மல்**
**அல்லொக்கு நிறத்தி னாண்மேல் விடுதலும் வயிரக் குன்றக்**
**கல்லொக்கு நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்**
**புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்**
**றன்றே.**

ஸ்ரீராமபாணம்,

'சொல்லொக்குங் கடிய வேச் சுடுசரம்'. சரம்-பாணம். இராம பாணம் சுடுகின்ற பாணம். பாவங்களை நீறு செய்கின்ற பாணம். அவ் விஷயத்தில் அதன் வேகம், கடிய வேகம். அந்த வேகத்துக்குக் கண்ணிமை முதலியவைகளில் காலக் கணிதஞ் செய்தல் முடியாது. அப்படிப்பட்ட அதிவேகம் படைத்த ஸ்ரீராம பாணத்துக்கு ஒரு உவமை சொல்லுவதானல், சொல்லொக்கும் என்றுதான் சொல்ல வேண்டும். சொல், முனிவர் சபிக்கின்ற சாபமொழி. முனிவர்கள் சாபமொழி எங்ஙனங் குறி தவருதோ, அங்ஙனங்

குறி தவறாத பாணம் ஸ்ரீராமபாணம். கரிய செம்மல் - ஸ்ரீராமன். அல்லொக்கும் நிறத்தினள் - இருள் வடிவமான தாடகை அவளுடைய நெஞ்சு, வைரக் குன்றக் கல். தாடகையின் மார்பு வைர ரத்தின மலையாற் செய்யப் பட்டது. அப்படிப்பட்ட வைர நெஞ்சிலே சிறிதேனுந் தங்குதடையின்றிக் கனிந்த வாழைப்பழத்திலே ஊசி ஏறுவது போல ஸ்ரீ ராமபாணம் தாடகை மார்பை ஊடுருவி அப்பாற் கழன்றுபோனது.

'பாட்டும் உரையும் பயிலாதன இரண்டு ஓட்டைச் செவிகளிலே' அருமந்த மந்திரோபதேசம் எவ்வாறு தங்கு தடையின்றிக் கழிந்து செல்லுகின்றதோ, அவ்வாறே கழிந்து சென்றது ஸ்ரீ ராமபாணம்.

'கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்றன்றே.'

* * *

இடித்து வானில்
கன்னொடு மாரி பெய்யக் கடையுகத் தெழுந்த மேகம்
மின்னொடும் அசனியோடும் வீழ்வதே போல வீழ்ந்தாள்

ஊழிக்காலத்திலே கன்மழை பொழிகின்ற மேகம் இடியோடும் மின்னலோடும் வீழ்வதுபோலத் தாடகை வீழ்ந்தாள்

தலைகள் தோறும்
முடியுடை யரக்கற் கந்நாள் முந்தியுற் பாதமாகப்
படியிடை அற்று வீழ்ந்த வெற்றியம் பதாகை ஒத்தாள்

தலைகள்தோறும் முடியுடை அரக்கன் - இராவணன், தாடகை எந்த நாளில் இறந்துபட்டு வீழ்ந்தாளோ, அந்த நாளை இராவணனுடைய வென்றிக்கொடி அறுந்து கீழே விழுந்த நாள் என்றே சொல்லல் வேண்டும் தாடகை வீழ்ச்சி இராட்சதர்களின் வீழ்ச்சிக்கு ஓர் அறிகுறி; முற்பட்டுத் தோன்றியதொரு உற்பாதம்; அஃதாவது துர்நிமித்தம். வெற்றியம் பதாகை - வெற்றிக்கொடி.

வாசநாண் மலரோன் அன்ன மாமுனி பணிம றுத
காகுலாங் கனகப் பைம்பூட் காகுத்தன் கன்னிப் போரிற்
கூசிவா ளரக்கர் தங்கள் குலத்துயிர் குடிக்க அஞ்சி
ஆசையால் உழலுங் கூற்றுஞ் சுவைசிறி தறிந்த தன்றே

வாச நாண் மலரோன் - பிரமா. பிரமாவை ஒத்த மாமுனி - விசுவாமித்திரர். அவருடை பணியை மறுத காகுத்தன் - இராமன். ககுத்தன் என்பவனுடைய மரபில் வந்தவன் ஆதலால் இராமனுக்குக் காகுத்தன் என்பது மற்றொரு பெயர். காகுத்தன் முதன்முதற் செய்தபோர் ஆகையினால், இந்தப்போர் கன்னிப்போர். அரக்கர் அழிவுக்கு இது அங்குரார்ப்பணம். தாடகை என்கின்ற பெண்ணுடன் நடத்திய போர் என்பதும் கன்னிப்போர் என்பதில் குறிப்புப் பொருள்.

இராவணனுடைய ஆணைக்கு அஞ்சி, அரக்கர்களை அணுகலாற்றாது, அவர்களுடைய உயிரைக் குடித்துச் சுவைப்பதற்கு, வாயூறிக்கொண்டு அலைந்த கூற்றுவனுக்கு, இந்தக் கன்னிப்போர், சிறிதே வாயூறலை நிவிர்த்தி செய்தற்கு வாய்ப்பாய் அமைந்தது. இனிப் பல்லிலே பட்ட கூற்றுவன், சும்மா அஞ்சிக் கிடவான்போலும்!

யாமும்எம் இருக்கை பெற்றேம் உனக்கிடையூறு மில்லைக்
கோமகற் கினிய தெய்வப் படைக்கலங் கொடுத்தி யென்று
மாமுனிக் குரைத்துப் பின்னர் விற்கொண்ட மழைய றுன்மேற்
பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயினாரே.

விண்ணவர்கள் விண்ணின்கண் நின்று, காகுத்தனின் கன்னிப் போரைத் தரிசித்தவர்கள். அவர்களெல்லாம் அரக்கர்கோனாகிய இராவணனால் தத்தம் இருப்பிடங்களை இழந்து அந்தர வாசிகளாய் அலைந்தவர்கள். தாடகை இறந்து வீழ்ந்ததைக் கண்ணுற்றதும்,

யாமும் எம் இருக்கை பெற்றேம்

என்று வாய்சோர்ந்து ஒரு பெருமூச்சு விட்டார்கள். இராவணன் இனி இறப்பது திண்ணம் என்பதுதான் அந்த மூச்சு. இளைப்பு நீக்கத்தில் எழுகின்ற மகிழ்ச்சியின் சிகரம் அந்த மூச்சு. அவர்கள் விசுவாமித்திரரை நோக்கி,

'ஓ முனிவனே, உனக்கும் உன்னையொத்த முனிவர்களுக்கும் யாகாதிகள் செய்வதற்கு இனி எவ்வித இடையூறுஞ் சம்பவியாது. இடையூறுகளுக்கெல்லாம் இடையூறாக இந்தக் கோமகன் அவதரித்திருக்கின்றான். உயிர்களுக்கு இனிமை செய்வனவாகிய தெய்வப் படைகளையெல்லாம் இந்தக் கோமகனுக்கு வழங்குவாயாக!

என்று கூறி,

இந்திர வில்லைத் தாங்கிக் கரிய முகிலொன்று பூமியில் நிற்பது போன்று, நிற்கின்ற, கருணாமூர்த்தியாகிய இராமன் மீது புஷ்பங்களை வருஷித்து வாழ்த்திச் சென்றார்கள்.

**விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே**
**தண்ணெனுங் கான நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்**
**மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய்**
**அண்ணறன் சொல்லே யன்ன படைக்கலம் அருளி னானே.**

தாடகையின் கொடுமையினாலே பாலை நிலமாய் மாறிய மருதநிலம் பழையபடி, தேவர்கள் இராமனை ஆசீர்வதித்துப் பொழிந்த பூமழையினாலே, தண்ணென்று, தண்டலை மயில்கள் ஆடுகின்றதொரு இடமாய் மாறியது. தபோநிதியாகிய விசுவாமித்திரருக்குத் தாடகையாலெய்திய வெப்பம் போய் உள்ளங் குளிர்ந்தது; செய்ந்நன்றி தலை நிமிர்ந்தது. உடனே,

சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசரந் தாங்கி நின்ற ஸ்ரீராமனுக்குச், 'சடையன் வெண்ணெய் அண்ணல்தன் சொல்லேயன்ன', தெய்வப் படைக்கலங்களை யெல்லாம் விண்ணவர் பணித்தவாறு வழங்கினார் விசுவாமித்திரர்.

வெண்ணெய் அண்ணல் ஆகிய சடையன்சொல், முனிவர்கள் சொல்லுக்குச் சற்றேனும் இளைக்காதது. ஆதலினாலேதான் சொல்லொக்குஞ் சுடுசர முடையானுக்குச் சொல்லொக்கும் படைக்கலம் வழங்கப்பட்டது.

'தோழமை என்றவர் சொல்லிய சொல்லொரு சொல் லன்றோ' என்றார் ஒருநாள் குகர். அப்படியானதொரு சொல்லேதான் வெண்ணெய் அண்ணல்தன் சொல். அது அமிர்தமான சொல். உயிர் தப்புதலில்லாத சொல். சொல்லுக்கு உயிராவது, அதன் பொருள். வெண்ணெய் அமிர்தம். சடையன் சொல் அமிர்தம். ஆகவே அது மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தும் ஆயிற்று. விண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து பாற்கடலிலிருந்தது போல, மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து சடையப்ப வள்ளலின் திருநாவிலிருந்தது. அதற்குச் சொல் என்பது பெயர்.

**மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன்**
**வெண்ணெய்**
**அண்ணல்தன் சொல்லே யன்ன படைக்கலம்**

அருளியதனாலே,

அது, விசுவாமித்திர முனிவரின் நன்றியாயன்றிக்

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரின் நன்றிக் குறியு மாயிற்று.

'அரிசிப் பொரியோடு திருவாரூர்' என்பது பாரத நாட்டுப் பழமொழி.

# 28 வழி நடைக் கதை

தாடகையின் பாதாதி கேச வருணனைகளையும், முனிவர்களையெல்லாம் வெறுங் கோதுகள் என்று, அந்தப் புண்ணிய வதி புறத்தே வீசுவது ஆகிய அரிய செயல்களையுங் கேட்டுக் கதையிலே மூழ்கி நீந்திக்கொண்டு வழிநடந்த ஸ்ரீராமன்,

தாடகை இப்பொழுதும் உயிர் வாழ்கின்றாள் என்பதைக் கேட்டதும், அவளைக் கண்ணாலே காணவேணும் என்கின்ற ஆசையினாலே, சிரக்கம்பஞ் செய்து, அந்தப் பொல்லாத தாடகை,

எங்கு உறைவது

என்று வினவும்போது, விசுவாமித்திரர் மிகவும் அச்சம் மேலிட்டு,

இவ்வரை இருப்பது

என்று, தாடகையின் இருப்பிடத்தை மெல்லச் சுட்டிக் காட்டிச் சுட்டிய விரல் மடிக்க முன்னமே,

மூக்கு நுனியில் தோன்றுபவள் போலே,

மைவரை நெருப்பெரிய வந்ததெனத்

தாடகை இடியுங் காற்றும் இருளும் மழையுமாய் எதிரில் தோன்றிய செய்தி,

பெருந் திகிலையும் போக்க முடியாத ஏக்கத்தையுந் தருவதொரு செய்தி என்பது,

எத்தனையோ காலங் கழிந்த பிறகும்.

விசுவாமித்திரர் தாடகையைப்பற்றிச் சொல்ல நேரும் போதெல்லாம்,

ஸ்ரீராம இலக்குமணர்களாகிய சிறுவர்களையும் அழைத்துக்கொண்டு, எனது வேள்வியை ஒருவாறு முடிக்கும் பொருட்டு, அந்த வனத்துக்குள் ஒரு காலைத் தூக்கி வைத்தேன்; மற்றக்காலைத் தூக்கி வைத்தது வைக்குமுன், எவளுக்கு அஞ்சி அஞ்சிக் காலை மெல்லத் தூக்கினேனோ, அவள் - அந்தத்

தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள்

என்று சொல்லுவதிலிருந்து, அவர் நெஞ்சு படபடப்பது நன்கு புலம் ஆகின்றது ;

ஆயினும், திகிலும் ஏக்கமுமாகிய அந்தத்துளக்கம்,

கல்லாப் புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்

போல, முனிவர் நெஞ்சத்தைவிட்டு, அப்பொழுதே பற்றறக் கழன்றுபோய்விட்டது அதற்குக் காரணம், திடீரென்று தாடகை எத்துணை வேகத்தில் தோன்றினளோ, அத்துணை வேகமும் அத்தியற்பமாக, ஸ்ரீராம பாணந் தோன்றியது தெரியாமலே தோன்றி, வருணிக்க முடியாத வேகத்தில் அவளுடைய வைர மார்பைப் பிளந்து, அப்பாலும் வெகு வேகத்திற் பாய்ந்து சென்றதேயாம். இதனாலே, இனி, முனிவர் பெருமானாகிய விசுவாமித்திரருக்குத் தாடகை பற்றிய அச்சம் அணுத்துணையும் நெஞ்சத்தில்லாதே சூனியம் ஆயினும், அவர் அவளைப்பற்றிச் சில சந்தர்ப்பங்களில்,

வனம் புக்கேன் புகாமுன்னம்
தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள்

என்று, ஏங்கி இடி விழுந்து, பெரிதும் பின்வாங்கி வருணிப்பது,

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து

என்றுதான் சொல்லத் தக்கது.

பொருகின்ற ஆட்டுக்கடா, எவ்வளவுக்கு வென்று முன்னேற வேண்டுமோ, அவ்வளவுக்கு வேகத்தைக் கூட்டும் பொருட்டே பின்வாங்கும். அவ்வாறேதான்,

விசுவாமித்திரர் ஏங்கி இடிவிழுந்து, தாடகையை வருணிப்பதெல்லாம், அவ்வளவுக்கு இராமாபணத்தின் வேகத்தை ஒரு அளவுக்காயினும் காட்டுதற்பொருட்டேயாம்

ஒரு சமயத்தில்,

தாங்கரிய பேராற்றல் தாடகையே தலைப்பட்டாள்

என்று பெரியதொரு இராசசபையைக் கதை சொல்லி, 'இனி என்ன விளையுமோ' என்று நடுங்க வைத்த விசுவாமித்திரர், அதே சமயத்தில் அந்தச்சபை முதல்வனாகிய அரசனை நோக்கி,

அலையுருவக் கடலுருவத் தாடகைதன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனல்உமிழ்கட் டாடகைதன் உரமுருவி
மலையுருவி மரம்உருவி மண்ணுருவிற் றொருவாளி,

என்றார்.

'அப்பனே, இதோபார்! அலையடங்கிய கடல்போல் இருக்கின்ற இந்தக் கரிய காளையின் நிலைத்த வலிய அழகிய புயங்களைச் சற்றே உற்றுப்பார்! அந்தப் புயங்களைப்பற்றிச் சொல்லிச் சொற்களின் ஆற்றல்களைக் குறைக்க நான் விரும்பவில்லை. இப்புயங்களை அணைந்து வாழுகின்ற அம்பறாத் தூணியில் அமர்ந்திருக்கின்ற ஒரு அம்பைப்பற்றி மாத்திரம் சொல்லுகின்றேன், உன் செவிகளைத் தூய்மை செய்து கேள்! கொல்லன் உலைமுகத்தக்கினி உறைபோடவும் போதாத ஊழிக்கால அக்கினியைக் கக்குகின்ற கண்களை

யுடைய தாடகையை உன் செவிகள் கேள்விப்பட்டிருக்குமே. இனிச் சற்றும் அச்சமின்றி மிச்சக் கதையைக்கேள். ஒரு நாள், அவளுடைய மார்பை ஊடுருவி, அவ்வளவில் வேகந் தணியாமல் ஊடுருவிய அவ்வளவில் வேகங் கூடி, அவ்வேகத்தைத் தணிக்கும் பொருட்டு, அப்பாலுள்ள மரங்களையெல்லாம் ஊடுருவி, அதனாலுந் தணியாமல், மண்ணுலகையும் ஊடுருவியது ஒரு அம்பு. அந்த அம்பு இவன் புயத்தால் அழகு பெறுகின்ற அம்பறாத் தூணியில் அமர்ந்த அம்புகளுள் ஒரு அம்பு.'

தாடகை கதையால் உயிர்போன சபைக்கு, இப்பொழுதுதான் அந்த அம்பால் உயிர் வந்தது. மூச்சு வெளிப்பட்டது

ஆகவே, இனி, விசுவாமித்திரமுனி,

ஏங்கி இடிவிழுந்து தாடகையை வருணிக்கும்போதெல்லாம், இந்த எடுப்பு, இராமபாண வேகத்தைக் காட்ட எடுக்கும் எடுப்பு என்று எண்ணி, நாம் உயிரை மாய்க்காமல்,

ஸ்ரீ ராமனது, 'சொல்லொக்குங் கடிய வேகச் சுடுசர'த்தின் கடுவேகத்தைக் காண ஆயத்தம் ஆவோம் ஆக.

கதையும் முடியக் கதாநாயகியும் முடிந்த கதை தாடகை கதை. இந்தக் கதையைக் கேட்டு, அரக்கர் குலம் இடிவிழுந்து கண்ணீர் உகுக்க, விசுவாமித்திர முனிவர் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கத், தேவர்கள் பொழிகின்ற புஷ்ப வருஷத்துக்கு ஊடே, அந்தப் பாலை நிலத்தைக் கடந்து, அப்பால் நடக்கின்றார். ஸ்ரீராம இலக்குமணர்கள் ஒரு திருவிளையாட்டாக முனிவரைப் பின் தொடர்கின்றார்கள். தாடகை வதம் அவர்களுக்கு ஒரு திருவிளையாட்டு. மூவரும் நடக்கின்றார்கள். அப்பால் ஒரு பெரிய அரவங் கேட்கின்றது. அரவம் - ஒலி. தாடகை வதங் கேட்டு எழுகின்ற பேரரவம்போலும் அந்த அரவம்! இல்லையேல், விசுவாமித்திரருக்கு எழுந்த ஆனந்தங் கேட்டு எழுகின்ற ஆரவாரமாயும் அந்தப் பேரரவம் இருக்கலாம்.

**இனையன நிகழ்ந்த பின்னர்க் காவதம் இரண்டு சென்றார்**
**அனையவர் கேட்க ஆண்டோர் அரவம்வந் தணுகித் தோன்ற**
**முனைவஈது யாவது என்று முன்னவன் வினவப் பின்னர்**
**வினையற நோற்று நின்ற மேலவன் விளம்ப லுற்றான்.**

*இனையன நிகழ்ந்த பின்னர் :*

*தாடகை இறந்துபட்டதும் தேவர்கள் வாழ்த்தியதும் அவர்கள் விரும்பியவாறு, விசுவாமித்திர முனிவர், 'சடையன் - வெண்ணெய் அண்ணல் - தன் சொல்லே யன்ன' படைக்கலங்கள் வழங்கியதும் ஆகிய இச்சம்பவங்கள் நிகழ்ந்த பிறகு,*

*மூவரும் அப்பாலே இரண்டு காவத தூரம் நடந்து போனார்கள். அவ்வாறு போக, அவ்விடத்தில் அவர்கள் கேட்கும்படி ஒரு போரொலி எழுந்தது அப்பொழுது ஸ்ரீராமன், 'ஈது யாவது ?' என்று, மேலோராகிய விசுவா மித்திர முனிவரை வினவினான். எவ்வித குறையுமின்றி மகிழ்ச்சியில் துளும்புகின்ற விசுவாமித்திரருக்கு, அந்த வினா, (முனிவர்) தம் சுயசரித்திரத்தை இராம லக்குமணர்களுக்குத் தெரிவித்து வைத்தற்கு ஒரு அடிப்படையை அணுகுதற்கும் உபகாரமாய் அமைந்தது.*

# 29 'இரு'

மானச மடுவிற் றேன்றி வருதலாற் சரயு வென்றே
மேன்முறை அமரர் போற்றுப விழுநதி யதனி னேடும்
ஆனகோ மதிவந் தெய்தும் அரவம தென்ன வப்பாற்
போனபின் பவங்கள் தீர்க்கும் புனிதமா நதியை உற்றுர்

'அனையவர் கேட்க ஆண்டு ஓர் அரவம் வந்து அணுகித் தோன்ற முனைவ ஈது யாவது?' என்று ஸ்ரீராமன் விசுவாமித்திர முனிவரை வினவ, விசுவாமித்திரர் கதை தொடங்குகின்றுர்.

'மானச மடு - பிரமதேவருடைய மனசிலே தோன்றிய தொருபொய்கை. அந்தப் பொய்கையிலிருந்து பெருகுவது சரயு. அதுதான் 'இரவிதன் குலத்து எண்ணில் பல் வேந்தர்தப் பரவு நல்லொழுக் கின்படி பூண்டது' என்று புகழ்ந்து கொண்டாடப்படுவது. இந்தச் சரயு, மற்றெரு நதியாகிய கோமதியோடு, ஓரிடத்திற் கலக்கின்றது. அந்த நதி சங்கமத்தாலுண்டான பேரொலியே ஈண்டுக் கேட்டது'

என்று கதை தொடங்கிய விசுவாமித்திரர், கதாபாத்திரங்களாகிய நதிகளின் சங்கமத்தை அணுகியபோது அதனைக் கண்டு களித்துத் தரிக்காமல், அப்பால் விரைந்து செல்வார் ஆயினுர். அப்படி விரைந்து சென்ற விசுவாமித்திரர், அதன்மேல் ஒரு நதியை மிக்க ஆராமையோடு அணுகுகின்றுர். அந்நதி,

பாவங்கள் தீர்க்கும் புனித மாநதி

பாவங்களைக் கழுவித் தீர்க்கின்ற புனிதமும் பெருமையும் வாய்ந்ததொரு நதி. அந்த நதியின் பெயர் கௌசிகை. விசுவாமித்திரருக்கும் கௌசிகர் என்று ஒரு பெயர் உண்டு. கௌசிகை எந்த மரபில் உதித்தாளோ அதே மரபிலே தான் உதித்தார் கௌசிகர். கௌசிகை தமக்கை; கௌசிகர் தம்பி. இருவரும் உடன்பிறந்தவர்கள். கோமதியைத்தான் கௌசிகை என்று சொல்வதுமுண்டு. மானச வாவி சரயு நதிக்கு உற்பத்தித் தானமாய் அமைந்திருப்பது போலக் கௌசிகை நதி கௌசிகரின் சரித்திரக் கதைக்கு உற்பத்தித் தானமாய், வழிநடைக் கதையில், நிலையாப் பிரகாரம் அமைந்து கிடப்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுவோம். ஆக. கௌசிகர் தமது சுயசரிதங் கூறக் கூசுவாராயிற கூசுக. அவர் சரித்திரம் சந்திக்கும்போது, கௌசிகை நதியை மறத்தலாகாது. அது நிற்க,

கௌசிகர் கௌசிகைபற்றிச் சொல்லுகின்றார் :

பிரமதேவருடைய புத்திரன் ஒருவனுக்குக் குசன் என்று பெயர். அவன் நிலவுலகத்தைக் காக்கும் பொருட்டுச் சத்திய உலகத்திலிருந்து வந்தவன். 'குசன்' என்பதற்குப் பூமியில் வாழ்பவன் என்று பொருள். கு - பூமி. பூமி காவலனான அந்தக் குசன் என்பவனுக்கு நால்வர் புதல்வர்கள். நால்வர்களிற் குசநாபன் என்பவன் ஒருவன். அவன் மகோதயம் என்னும் நகரத்தை ஆண்டுகொண்டிருந்தான். அவனுக்கு நூறு புதல்வியர்கள் பிறந்தார்கள். அவர்கள் நற்குண நற்செய்கை வாய்ந்தவர்கள். தந்தை சொன் மிக்க மந்திரம் அறியாதவர்கள். நூறு புதல்வியர்களும் வளர்ந்து மணஞ்செய்யும் பருவத்தை அடைந்தார்கள். ஒரு நாள் அவர்கள், ஒரு அழகான சோலையிலே பூக்கொய்து கொண்டு நிற்கும்போது, வாயுதேவன் அவர்களை அணுகித், தன்னை மணக்குப்படி அவர்களை வேண்டினான் அவர்கள் தந்தையின் உத்தரவுவேண்டும் என்றார்கள். வாயுதேவன் அதற்குக் கோபித்து அவர்களுடைய முதுகை முரித்து விட்டான். நூறு புதல்வியர்களும் கூனிகளாய் மிக்க மனவருத்தத்துடன் மெல்ல மெல்லத் தவழ்ந்து, தமது தந்தையை அணுகி, நடந்ததைச் சொன்னார்கள். தந்தை அவர்களுக்கு ஆறுதல் வசனங் கூறித் தேறுதல் செய்து,

சூளி என்னும் முனிவரின் புதல்வராகிய பிரமதத்தர் என்பவருக்கு, அப்புதல்வியர்கள் அனைவரையும் மணஞ்செய்து வைத்தான். பிரமதத்தர் அப்பெண்களைத் தீண்டிய மாத்திரத்தே, அவர்கள் கூனிமிர்ந்து, மகாலக்குமிகள்போற் பிரகாசித்தார்கள். அவர்கள் சம்பவம் அவ்வாறாகத், தந்தையாகிய குசநாபன், தன் குலத்தை விளக்குதற்கு ஒரு புதல்வனைப் பெற விரும்பிப் புத்திர காமேஷ்டி என்னும் யாகத்தைச் செய்தான். யாகாக்கினியில் ஒரு புதல்வன் உதயஞ்செய்தான். அப்புதல்வனுக்குப் பெயர் காதி காதி வளர்ந்தபின், குசநாபன் தன் அரசுரிமையைக் காதிக்குக் கொடுத்துவிட்டுத் தான் சுவர்க்கம் போயினன் காதி மகோதயத்தை ஆண்டுகொண்டிருந்தான். காதிக்கு இரண்டு குழந்தைகள் உண்டு. ஒன்று ஆண்; மற்றது பெண். பெண் மூத்தவள் ஆண் இளையவன். பெண்ணுக்குக் கௌசிகி என்று பெயர். ஆணுக்குப் பெயர் கௌசிகன். கௌசிகனுக்கு மற்றொரு பெயர் விசுவாமித்திரர், என்று கதையை நடத்தினர் விசுவாமித்திரர். அந்தச் சந்தர்ப்பத்தில், ஸ்ரீராமன் வியப்புச் சுவை மீறிச் சிறிதே திகைத்தான்.

கௌசிகை பாவங்களைக் கழுவுகிறதொரு நதியாம்; அது, கௌசிகராகிய விசுவாமித்திரருடன் பிறந்த சகோதரியாம்; காதி மகாராசாவின் புத்திரியாம்; கௌசிகை நதியின் கதையை எதிரில் நின்று சொல்லுபவர் அந்நதியின் தம்பியாம்.

இப்படியானல், யார்தான் திகைக்காமல் வியக்காமலிருக்க முடியும்!

கதாசிரியராகிய விசுவாமித்திரர், கதை கேட்பவர்களின் மெய்ப்பாட்டை உணர்ந்து கதாபாத்திரமான கௌசிகி, நதியான வரலாற்றைச் சொல்லுவாராயினர்.

'என் தந்தையாகிய காதி மகாராசா, கௌசிகையாகிய தமது புத்திரியைப் பிருகு முனிவரின் புதல்வராகிய இரிசிகர் என்பவருக்கு மணஞ்செய்து வைத்தார். இருவரும் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்தி, இவ்வுல

கத்திற் பெறக்கடவனவாகிய புருஷார்த்தங்களை யெல்லாம் பெறுகிற முறையிற் பெற்றார்கள். அங்ஙனம் பெற்றதன் பேறாக, இரிசிகர் தவவிசேஷத்தால் பிரமலோகத்தை அடைந் தார். அப்பொழுது கௌசிகி கணவனைப் பிரிந்திருக்க ஆற்றாது, தவ விசேஷத்தால் ஒரு நதியாய் மாறி, ஆகா யத்தில் எழுந்து கணவனைத் தொடர்வாள் ஆயினாள். மகா தவத்தரான இரிசிகர், கௌசிகி தம்மைத் தொடர்வது கண்டு, சற்றே தாமதித்து நின்று, பெண்ணே, நீ இந்த நதி வடிவாகவே சிறிது காலம் இருந்து, இந்தப் பூமியில் உள்ளவர்களின் பாவங்களைக் கழுவிப் புண்ணியஞ் செய்து பின்பு வா என்று கற்பித்தார். கற்புத் தெய்வமான கௌசிகி, தன் கணவன் சொற்றிறம்பாது, கௌசிகை நதியாய், இதோ அமர்ந்து பாவங்களைக் கழுவி நடக்கின்றாள்' என்று மிக்க குளிர்ச்சியுடன் கூறி மகிழ்ந்தார் விசுவாமித்திரர்.

எம்முனாள் நங்கை இந்த இருநதி ஆயினாள் என்று
அம்முனி புகலக் கேளா அதிசயம் மிகவுந் தோன்றச்
செம்மலும் இளைய கோவுஞ் சிறிதிடந் தீர்ந்த பின்னர்
மைம்மலி பொழில்யா தென்ன மாதவன் கூறலுற்றான்.

'எம்முனாள் நங்கை இந்த இருநதி ஆயினாள் - எமது முன்பிறந்தவளாகிய கௌசிகி இந்த இருநதி ஆயினாள்' என்பது விசுவாமித்திரர் கூற்று

அன்று கௌசிகி, இன்று 'இரு நதி'

* * *

'இரு நதி' என்பதற்குப் பெருமை பொருந்திய நதி என்று பொருள் சொல்லுவது வழக்கம். அந்த வழக்கை விலகி,

'இரு' என்ற சொல்லைப் பேணிய நதி என்றும் பொருள் கூறலாம்; பொருத்தமான பொருள்.

அகலிகையைக் கணவராகிய முனிவர் கல்லாய் 'இரு' என்றார்; அப்படியே இருந்தாள். அகலிகை பஞ்ச கன்னி கைகளில் ஒருத்தி. பஞ்ச கன்னிகைகள் அகலிகை, தாரை திரௌபதி, சீதை, மந்தோதரி என்பவர்கள். இவர்கள்

தீண்டாத கற்புடைய செழுந்திருக்கள். ஒருவனுலேயே தீண்டப்பட்டு, அந்த ஒருவனைப் பற்றி ஒரகத்திருப்பவர்கள். ஆத்ம நாயகனுலன்றிக் கணவர்களாலும் தீண்டப்படாத அக்கினிகள் அவர்கள். ஆதலினுலே, கன்னிகைகள் என்று அவர்களை நூல்கள் கூறுகின்றன. உலகமாதாவாகிய உமா தேவியாரைக் கன்னிகை என்று சொல்வதுபோலவே, அகலிகை முதலியவர்களையுங் கன்னிகைகள் என்கின்றன நூல்கள் அவர்கள் பெயர்களை உச்சரிப்பதால் பாவ விமோசனம் ஆகுமென்றுங் கூறுவதுண்டு அது நிற்க

அகலிகை கல்லாயிருந்தவாறு, கௌசிகி, நதியாயிருக்கின்ருள். இருத்தலைக் கற்பு என்றும். முல்லை என்றுங் கூறுவர் காத்திருத்தல் என்பது பொருள். கணவன் கற்பித்தவழிக் காத்திருப்பது முல்லை ; அகலிகை கல்லாய்க் காத்திருந்தாள் ; விசுவாமித்திரர் கதை சொல்லும்போதும் காத்திருக்கிருள். கௌசிகி நதியாய்க் காத்திருக்கின்ருள். இருவரும் 'இரு' என்று சொல்லிய சொல்லைப் பேணிய இரு மகளிர்கள் 'இரு' என்பதற்குப் பாத்திரமானவர்கள். அன்பினைந்திணையிற் பேசும் முல்லை மகளிர்கள் இவர்கள்.

* * *

கௌசிகி கதை கௌசிகர் வாயில் கௌசிகை நதியாய்ப் பெருகப் பெருக, இராமனுந் தம்பியும் பருகிப் பருகி, இனிக் கௌசிகர் கதையையும் பருகவேண்டும் என்கின்ற ஆசை வாயில் ஊற ஊற வழி நடக்கின்ருர்கள். கௌசிகர் தம் கதையைத் தாமே கூறக் கூசிப்போலும், கதையை அடியிட நேர்ந்து அடியிட்டவர், அப்பால் ஒன்றும் பேசாமலே நடக்கின்ருர்.

'தங்கள் கதையைத் தாங்களே சொல்லுங்கள்' என்று பெரியவராகிய கௌசிகரைச் சின்னஞ் சிறுவர்கள் எப்படிக் கேட்பது ; மௌனிகளாய்ச் சிறிது தூரம் நடக்கின்ருர்கள். எதிரில் ஒரு அழகான சோலை தோன்றுகின்றது. கௌசிகர் தமது கதையைக் கூருமல், சிறுவர்களின் ஆர்வத்தை மற்ருெரு வழியில் திருப்ப வழி வாய்க்கின்றது.

# 30

# ஆலமர் வித்தின் அருங்குறளாளன்

தங்கணா யகனிற் றெய்வந் தான்பிறி தில்லென் றுன்னும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்
எங்கணுன் மறைக்குந் தேவர் அறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மா லிருந்து மேனாட் செய்தவஞ் செய்த தன்றே.

*கௌசிகை நதியின் கதை கேட்ட இராம இலக்குமணர்களுக்குக் கௌசிகையின் தம்பியாகிய கௌசிகரின் கதையைக் கேட்பதற்கு வாயூறலாம். அது இயற்கை. அந்த இயற்கையைக் கெடாமலும், தாமே தமது கதையைக் கூறுமலும் ஒரு உபாயஞ் செய்கின்றார் கௌசிகராகிய விசுவாமித்திரர். சொல்லிவந்த கௌசிகர் கதையை முடிக்காதவர்போன்று, கௌசிகை போன்ற உத்தமிகள் கதைகளைச் சொல்லப் போகின்றார் என்ற வகையில், இயற்கை நெறி பிறழாமல்,*

தங்கள் நாயகனில் தெய்வம் தான் பிறிது இல் என்று
உன்னும்
மங்கைமார்

*என்று, கௌசிகி போன்ற தெய்வந் தொழாத கற்புடை மகளிரை ஞாபகஞ் செய்கின்றார் விசுவாமித்திரர். அப்பொழுது கதையில் வாயூறிய சிறுவர்கள். கற்புடை மகளிர் பெருமைகளைச் சிந்திக்கின்றார்கள் ; சிந்திக்க வைக்கின்றார் ஆசிரியர் விசுவாமித்திர முனிவர். பிள்ளைகளின் மனத் திரையில்,*

**தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை**

என்ற திருக்குறள் காட்சியளிக்கின்றது. 'தெய்வந் தொழாள்' என்ற தொடரின் கருத்தை அவர்கள் மனம் சூழ்ந்து சிந்திக்கின்றது அத்தொடரின் கருத்தென்ன ?

கற்புடை மகளிர்கள் கணவனுக் கூடாகவே தெய்வத்தைத் தரிசிக்கிறார்கள் ; கணவனே அவர்களுக்குக் குரு ; கணவனே அவர்களுக்குத் தெய்வம். கணவன்பால் தெய்வத்தைக் காணுகிறவர்கள், அத்தெய்வத்துக்குப் புறம்பாக ஒரு தெய்வத்தைக் காண்பதெப்படி ? காணுதற்குரிய தெய்வந் தானே கணவனிடமாகப் பிரகாசிக்கின்றது. அதனாலே கற்புடை மகளிர் கணவனிடமாகவே தெய்வத்தைக் கண்டு வணங்குகிறார்கள். புறம்பாகத் தெய்வந் தொழாமை, உண்மையாகவே தெய்வந் தொழுகின்றார்கள் என்பதற்கு அறிகுறி. 'தெய்வந் தொழாள்' என்றால், பிரத்தியட்சமாகவே தெய்வத்தைக் கண்டு தொழுபவள் என்றுதான் கருத்து.

இங்ஙனமெல்லாம் ஸ்ரீராம இலக்குமணர்களாகிய சிறுவர்களின் சிந்தனை செல்லாநிற்கின்றது. இங்ஙனம் கற்புடை மங்கையர்பாற் செல்லுகின்ற சிந்தனையை,

**ஏ ராம,**

**தெய்வம் பிறிது இல்லென்னும்**
**மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்'**

என்று, மங்கைமார் போன்ற மற்றொன்றில் மெல்ல இறங்க வைக்கின்றார். கதை பண்ண வல்ல ஆசிரிய முனிவர். அதனால், கௌசிகர் கதையைக் கேட்க வாயூறிய அவர்கள் அதனை மறந்து, கற்புடை மங்கைமார் சிந்தைபோன்று, களங்கமில்லாதிருக்கின்ற மற்றொன்றுதான் யாதாயிருக்குமோ என்று சிந்திப்பார் ஆயினார்கள்

கற்புடைமகளிர் சிந்தை போன்று, தூயதாய் அதோ தோன்றுகின்றது, அந்தப் பொழில் என்று எதிரே, தோன்றுகின்றதொரு சோலையைக் காட்டிக்கதை தொடர்கின்றது.

கற்புடை மகளிர்கதை சோலைக் கதையாய் மாறுகின்றது. பஞ்சதந்திரத்திலே நரிக்கதை கிளிக்கதையாய் மாறுவது போலக் கௌசிகை கதை சோலைக் கதையாய்ப் பாய் கின்றது. நதி மூலங்கள் போலே கதை மூலங்களையும் விசாரிக்கக்கூடாது.

எங்கள்நான் மறைக்குந் தேவர் அறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச்
செங்கண்மால் இருந்து மேனுட் செயதவஞ் செய்தது

வேதங்களுக்கும் தேவர்களுக்கும் எட்டாத பெருமை படைத்தவராகிய மகா விஷ்ணுமூர்த்தி பெரிய தவத்தைச் செய்ததனுலே பரிசுத்தம் படைத்தது அந்தச் சோலை. திரு மாலாகிய நாயகனைத் தன்னகத்தே கொண்டமையால், கற்புடை மகளிர்போன்று விளங்குகின்றது அந்தச் சோலை. அந்தச் சோலையின் நாயகன் செங்கண்மால். அந்தத் திருமால்,

ஈரைம்பான் ஊழிக்காலம் இருந்தவம் இயற்றி யிட்டான்

நூறு ஊழிக்காலம் அந்தச் சோலையிலிருந்து அரும் பெருந் தவத்தைச் செய்தருளினுன் திருமால்,

கருதியது அறிதல் தேற்ருும்

வேதங்களாலும் அறிதற்கரிய திருமால், யாரை நினைந்து எதன் பொருட்டுத் தவஞ் செய்தானே, அவன் லீலாவி நோதத்தை யாமா அறிய வல்லோம் என்கின்ருர் விசுவா மித்திர முனிவர். அதனைக் கேட்ட ஸ்ரீராமன், தான் அந்தச் சோலையாய் மாறி, அந்தச் சோலைக்கு நாயகன் எவனே, அவனே தனக்கும் நாயகன் ஆக, தன்னுயகனும் தன் உபாசனு மூர்த்தியும் ஆகிய திருமாலின் திருவிளையாடலைக் கேட்டாலோ என்று ஆசை மீக்கூருவானுயினுன். சோலைக் கதை திருமால் கதை ஆகின்றது.

பரிசுத்தமான அந்தச் சோலையிலே திருமால் தவஞ் செய்துகொண்டிருக்கின்ருன்.

**ஆனவன் இங்குறை கின்றஅந் நாள்வாய்**
**ஊனமில் ஞாலம் ஒடுங்கும் எயிற்றான்**
**ஏனமெ னுந்திறல் மாவலி என்பான்**
**வானமும் வையமும் வௌவுதல் செய்தான்.**

இங்கே இந்தச் சோலையிலே திருமால் தவஞ்செய்து கொண்டிருக்கின்ற காலத்திலே, மகாபலி என்கின்ற அசுரன், தன் தவ விசேஷத்தால், மண்ணுலகையும் விண்ணுலகையும் வென்று தன்வசஞ் செய்வான் ஆயினான். ஒரு காலத்தில் மகாவிஷ்ணுமூர்த்தி ஒரு ஆண் பன்றியின் வடிவுகொண்டு, சமுத்திரத்தில் முழுகிய பூமியைத் தன் கொம்பரொன்றால் எடுத்து எளிதின் ஏந்தி நின்றது போலே, மகாபலியும் எவ்வித சிரமமுமின்றி மண்ணையும் விண்ணையுந் தன்வசஞ் செய்து நின்றான் அவன் தவவலி அப்படியிருந்தது. அதனால் தேவர்களும் முனிவர்களும் அஞ்சி நடுநடுங்கினார்கள். அதனைக் கண்ட மகாபலி இன்னுந் தன் தவவலியைக் கூட்டுதற்கு எண்ணி மேலும் பல தவ வேள்விகளைச் செய்தான். அது கண்டு இந்திராதி தேவர்கள் மேலும் அஞ்சினார்கள் மகாபலி அவ்வளவிலும் அமையாமல், அந்தணர்களை வரித்து, அவர்களுக்கு வேண்டுவன எவையோ அவைகளைத் தங்கு தடையின்றி வழங்கவுந் தலைப்பட்டான் கைம்மாறு கருதா மழை போன்றதொரு வள்ளலுமாயினான் மகாபலி.

அறிவாளியின் வறுமையினும் பார்க்க, அறிவீனனின் செல்வம் உலகத்துக்குப் பெரிய நட்டம் என்கின்றார் திருவள்ளுவர். மகாபலி பெரிய பெரிய புண்ணியங்களைச் செய்வான் ஆயினான். ஆனால் அவனோ அசுரன். அது சுரர்களுக்குப் பெரிய நட்டமாயிருந்தது. சுரர்களாகிய தேவர்கள், மகாபலியின் தவத்தையும் வள்ளன்மையையுஞ் சகிக்காமல், 'சித்தாச்சிரமம்' என்று வழங்குகின்ற இந்தச் சோலையை அடைந்து, திருப்பாற்கடலில் அறிதுயில் செய்வது போல், எல்லாவற்றையும் அறிந்துகொண்டே, தவஞ்செய்து கொண்டிருக்கின்ற காவல் தெய்வமும் கருணை மூர்த்தியுமான திருமாலுக்கு முறையீடு செய்வார் ஆயினார்கள். அப்

பொழுது திருமால், தேவர்களுக்கு இரங்கி, அவர்களுக்கு அபயமும், மகாபலிக்கு அநுக்கிரகமுஞ் செய்யத் திருவுளங் கொண்டருளினார்.

**காலம் நுனித்துணர் காசிபன் என்னும்**
**வாலறி வற்கதி திக்கொரு மகவாய்**
**நீல நிறத்து நெடுந்தகை வந்தோர்**
**ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனுன்.**

**நீல நிறத்து நெடுந்தகை ;**

கற்புடை மகளிர்கள் சிந்தை போன்று பரிசுத்தமாய் விளங்குகின்ற அந்தச் சோலையிலே, பல ஊழிக்காலமாகத் தவஞ்செய்து கொண்டிருந்த கரிய பெரிய திருநெடுமால், அருங்குறள் ஆயினர் ; சின்னஞ் சிறியதொரு வாமனராய் அவதரித்தார். வாமன வடிவம் குறள் வடிவம். காசிப முனிவருக்கு அதிதி வயிற்றில் வாமனராய் அவதரித்தார் அந்தத் திருநெடுமால்.

காசிபர், வாலறிவன் - பரிசுத்தமான தூய அறிவுடையவர். அதனாலே அவர், காலம் நுனித்துணர் காசிபர். முக்காலங்களையும் ஒருங்குணருந் தூய அறிவு படைத்தவர் அவர். அந்த விசேஷத்தினாலே, வருங்கால சம்பவங்களை எண்ணிப்போலும், அவரும் அவர் பத்தினியாகிய அதிதியும் ஆயிரந்தேவ யாண்டு திருநெடுமாலை நினைந்து தவஞ் செய்தார்கள் திருநெடுமால்,

**கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ**
**டிருசுடர் இருபுறத் தேந்தி ஏடலர்த்**
**திருவொடும் பொலியவோர் செம்பொன் குன்றின்மேல்**
**வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.**

நீலவர்ண மேகமானது தன்பால் எண்ணிறந்த செந்தாமரைகள் விரிந்து மலர, இரு புறத்தும் சூரிய சந்திரர்களாகிய இரு சோதிகளைத் தாங்கிக்கொண்டு, அழகியதொரு மின்கொடி படர, ஒரு மாற்றுயர்ந்த செம்பொன் மலையின் மீது தோன்றுவதுபோல, இலக்குமி சமேதராய்ச், சங்கு சக்கரதாரியாய்க் கலுழாழ்வான்மீது எழுந்தருளிக் காட்சியளித்தார் திருநெடுமால்.

காசிபரும் மனைவியும் தமக்குப் புதல்வராய் அவதரித்துத், தேவர்களைப் பாதுகாத்தருள வேண்டும் என்று வேண்டினார்கள். வேண்டுவார்களாகிய அவர்கள் வேண்டியவாறே, அவர்களுக்குப் புத்திரராய்த் திருநெடுமால் அவதரித்தார்

**ஆலமர் வித்தின் அருங்குறள் ஆனான்**

மகாவிஷ்ணுமூர்த்தி.

கற்பாந்த காலத்தில் அறிதுயில் செய்யத்தக்க இலையினைக் கொண்ட பெரிய ஆல விருட்சம், சூக்குமமாய் அடங்கிக் கிடக்கின்றதொரு ஆலம் வித்துப் போலே, மிக நீண்ட திருநெடுமால் தூலமான தோற்றம் அடங்கி, நுண்ணியதும் கண்ணுக்கெட்டாததுமான ஒரு வாமன வடிவத்தைக் கொண்டார் ஆலம்வித்தின் அளவான வடிவம் அந்த வடிவம் அந்த வடிவத்திலே கண் மூக்கு வாய் கை கால் எல்லாம் உண்டு. அத்தியற்புதமான வடிவம் அந்த வடிவம்; வாமன வடிவம்.

# 31 வெள்ளி தடுத்தான்

முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதொர் நாவன் அனற்படு கையன்
அற்புதன் அற்புத ரேயறி யுந்தன்
சிற்பதம் ஒப்பதொர் மெய்க்கொடு சென்றான்.

ஆலம் வித்திலுஞ் சிறிய - காணுதற்கரிய - குறள் வடிவின ராகிய வாமனர் ஒரு பிரமசாரியாய் மாபலிபாற் செல்லு கின்றார். அவருடைய திருமார்பில் முப்புரிநூல் விளங்கு கின்றது. முஞ்சிப் புல்லாலான கயிற்றை அரைஞாணாக அணிந்திருக்கின்றார். அவருடைய நாவில் வேத மந்திரங்கள் தவழுகின்றன. கையில் அக்கினியைத் தாங்கியிருக்கின்றார். இந்த அற்புதமான பிராமண பிரமசரிய வடிவத்தை ஞானிகளே ஒருவாறு அறிய முடியும். சிற்பதம் - ஞான சொரூபம். ஞான சொரூபம் அறிதற்கரியது. இந்த வாமன வடிவம் காணுதற்குரிய தூல சொரூபமேயாயினும், ஞான சொரூபம்போலக் காணுதற்கரிதாயிருக்கின்றது. அப்படிப் பட்ட வடிவத்தோடு, வானமர் மாபலிச் சக்கரவர்த்தியின் வள்ளன்மையைப் பரீக்ஷிப்பவர்போல், அவர்பால் நடந்து செல்லுகின்றார்.

மாபலி வாமனரைக் கண்டதும் இருக்கைவிட்டெழுந்து, அவருடைய அடிகளை வணங்கி, உபசாரமொழி கூறி, அவரை உபசரித்து மகிழுகின்றான் அப்பொழுது வாமனர், வேண்டு வார்க்கு வேண்டுவதை வேண்டியவாறே வழங்குவதால் நீண்டிருக்கின்ற கைகளையுடைய மகாபலியே என்று விளித்து, அவனைப் புகழ்ந்து ஆசீர்வதிக்கின்றார்.

மாபலி,

சிந்தை உவந்துஎதிர் என்செய என்றான் ;
அந்தணன் மூவடி மண்அருள் ; உண்டேல்
வெந்திற லாய்இது வேண்டும் ; எனுமுன்
தந்தனன் என்றனன் ; வெள்ளி தடுத்தான்.

அடியேன் செய்யவேண்டுவதைத் தேவரீர் பணித்தருளல் வேண்டும் என்று வேண்டி நிற்கின்றான் மாபலி.

மூவடி மண் அருள்

மூவடி நிலங் கொடு ; 'இது வேண்டும்', 'நான் இருந்து தவஞ் செய்தற்கு இந்த அளவு கொண்ட நிலம் எனக்கு வேண்டும்' என்றார் வாமனர்.

எனு முன்

மூவடி மண்கொடு என்று கேட்டு வாமனர் வாய்மூட முன்னமே, வள்ளலாகிய மாபலி,

தந்தனன் என்றனன்

இதோ தந்தேன் என்றான். அதே சமயத்தில் அவன் பாலிருந்த குலகுருவாகிய

வெள்ளி தடுத்தான்

வெள்ளி சுக்கிராச்சாரி ; அசுரகுரு.

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்

என்னும் தமிழ் மறையை வெள்ளி பகவான் அறிந்திருந்தும், அறியாதார் போன்று, கொடுப்பதைத் தடுத்தார். அவர் குருவேயாயினும், அவர் செயலை மாபலியாற் பொறுக்க முடியவில்லை.

எடுத்தொரு வருக்கொருவர் ஈவதனின் முன்னந்
தடுப்பது நினக்கழகு தோதகலில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றியொழி யுங்காண்.

ஓ தகுதிப்பாடில்லாத வெள்ளியே! ஒருவருக்கு ஒன்று கொடுக்கும்போது, தடுப்பது உனக்கு அழகாகாது. உன் சுற்றம் ஒழியப்போகின்றது; உன் ஒழிவை என்னால் நினைக்க முடியவில்லை. கொடுப்பதை விலக்குகின்ற கொடியோனே.

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம்

என்ற தெய்வத் திருக்குறளை நீ அறியாயா?

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்னுயி ரேனுங்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்.

நீ நிறத்தாலல்லாமல், அறிவினாலும் வெளிறியிருக்கின்றாய். இப்படிப்பட்ட நீ அந்த அருமைத் திருக்குறளின் ஆழத்தை அறிவதெப்படி! அதன் ஆழத்தை அறியாத உனக்கு.

நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

என்றும் ஒரு திருக்குறள் இருக்கிறது என்று காட்டுவதில் என்ன பயன்!

மேலோர்கள் எல்லாம் தாம் ஒருகால் வள்ளியாராதற் பொருட்டு வாய்க்குந்தோறும் வழங்கிப் பயிலுகின்றார்கள்.

நளன் தமயந்தியின் சுயம்வரத்துக்குச் சென்றவன் - முன்னமே அவள் உள்ளத்தில் இடம்பெற்றவன் - அதே சமயத்தில் இந்திரன் விருப்பைக் குறிப்பாலுணர்ந்து, தமயந்தியிடந் தூது சென்றான்; அவன் முதல் வள்ளல்.

கன்னன் ஆவி பிரியுஞ் சமயத்தில், தன் புண்ணியம் அனைத்தையும் வழங்கினான்; அவன் இடை வள்ளல்.

பாரி முல்லைக்கொடிக்குத் தேரை ஈந்தான்; கடை வள்ளல்.

இவ்வாறு வாய்க்குந்தோறும் வழங்கி வழங்கி மேலோர்கள் வள்ளியர்கள் ஆனார்கள்.

இவ்வாறு வாய்க்குந்தோறும் வழங்கி வழங்கிப் பயிலுவதே யல்லாமல், வழங்குவதில்.

சில எள்ளுவ என் ?

சிலவாயினும் எள்ளக்கடவ அம்சங்கள் என்ன இருக்கின்றன ! ஒன்றும் இல்லையே !

இனிய உயிரைத்தானும் யாசித்துப் பெறுதல் கூடாதே; அதனைக் கொடுக்க நேர்ந்தால் கொடுப்பது நன்றேயன்றோ !

ததீசி முனிவர் இந்திரனுக்கு வச்சிரமாய் உதவும் பொருட்டுத் தமது முதுகு என்பையன்றோ வழங்கினர். வள்ளியர்கள் 'என்பும் உரியர் பிறர்க்கு'.

நீயோ வெள்ளி ! ஆதலினாலேதான், உன் வெளிற்றறிவை விளம்பரஞ் செய்கின்றாய். 'பொன்' ஆனால் இப்படி விளம்பாய் உன் இயல்பு இங்ஙனம் ஆதலினாலேதானே, தேவர்கள் அந்தப் 'பொன்' ஆன வியாழபகவானைத் தங் குலகுருவாகக் கொண்டிருக்கின்றார்கள். நீ அசுரராகிய நமர்களின் குருத்தானே. உன்பால் தவறு இல்லை

என்றிங்ஙனம் 'அறத்திற்றிரியாப் படர்ச்சி' வழிபாடாதலின், அறந்திரிந்த வெள்ளியைக், குருவென்றும் பாராது, மாபலி எள்ளுவானாயினன்

முடியஇம் மொழியெலாம் மொழிந்து மந்திரி
கொடியன்என்று உரைத்தசொல் ஒன்றுங் கொண்டிலன்
அடியொரு மூன்றுநீ அளந்து கொள்கென
நெடியவன் குறியகை நீரின் நீட்டினான்.

வெள்ளி பகவானுக்கு இரண்டு உத்தியோகம்; ஒன்று குலகுருவாகிய உத்தியோகம்; மற்றையது மந்திரி உத்தியோகம் இப்பொழுது பார்த்த உத்தியோகம் மந்திரி உத்தியோகம். மந்திரியை மன்னன் கடியவேண்டிய சந்தர்ப்பத்தில் கடிவது மரபுதானே, அந்த மரபு பற்றி,

இம்மொழியெலாம் முடிய மொழிந்து

கொடிய மந்திரிகளைக் கடிவதற்கு எத்துணைக் கடும் மொழிகள் உண்டோ அத்துணை மொழிகள் முழுவதையும் உபயோகித்து,

மந்திரி கொடியன் என்று

எனது மந்திரி எனக்குக் கொடுமை செய்பவன் என்று இகழ்ந்து,

உரைத்தசொல் ஒன்றுங் கொண்டிலன்

வெள்ளி கொடுப்பதைத் தடுத்துச் சொல்லிய சொல் ஒன்றனையும் மாபலி பொருள்செய்திலன்.

அடியொரு மூன்றும் நீ அளந்து கொள்

வெள்ளியை எள்ளிய அதே சமயத்தில், வாமனமூர்த்தியை நோக்கி, 'நீதானே உனக்கு வேண்டிய, மூன்றடி நிலத்தையும் விரும்பியவாறு அளந்து எடுத்து ஏற்றுக் கொள்' என்றான் மாபலி. அளந்து கொடுத்தல் வள்ளன்மைக்குப் பழுதுபோலும்! 'நீ அளந்து கொள்' என்றான்.

என

என்றிங்ஙனம் மாபலி கூற,

நெடியவன் குறியகை நீரின் நீட்டினான்.

கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்று
இரப்புமோர் ஏருடைத் து.'

கொடுக்கத் தெரிந்தவர்களிடத்திலே இரந்து நிற்றலிலும் ஒரு அழகு இருக்கிறது,

இரத்தலும் ஈதலே போலும்

ஈதல் தெரிந்தவர்களிடத்திலே இரத்தல் ஈதலுக்குச் சமம். ஆகையினால்,

குறியவராகிய வாமனர், புறத்தால் இன்னும் நீளவில்லையாயினும், அகத்தால் நீண்டே விட்டார்; நெடியவராய் விட்டார். அவ்வாறு அகத்தால் நெடியவரான வாமனர், புறத்தாற்குறுகிய தமது சின்னஞ்சிறிய கையை,

நீரின் நீட்டினான்.

தானம் வழங்குகிறவர்கள் தாரைவார்த்து வழங்குவது வழக்காறு. அவ்வாறே, மாபலி வார்க்கும் நீரின்பொருட்டு, அந்நீரைக் கைகளில் ஏற்கும் வகையில், குறிய கைகளை, நெடியவராகப் போகின்ற - நெடியவரான - வாமனர் நீட்டுவாராயினார்.

# 32 கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்

குறியவன் கையில்நீர் விழாமற் குண்டிகை
மறிபட வாமனன் மலர்க்கைத் தர்ப்பையாற்
செறிவது நீக்கிடச் சிதைந்து கண்ணுடைந்து
உறுதுயர்க் கடலிடை ஒதுங்கிப் போயினுன்

இது கம்பராமாயண அச்சுப் புத்தகங்களினின்றும் ஒதுங்கிக் கழித்துவிட்டதொரு பாட்டு. கம்பர் பாடிய பாட்டுக்களையே கழித்துவிடுகின்ற அவசரகாலத்தில், அப்படிக் கழித்த பாவங்களைக் கழுவுகிறதொரு கழுவா யாகக் கம்பர் பாடாததொரு பாட்டு அவர் தலையிற் கட்டி இங்கே காட்டப்படுகிறது. கம்பர் பாடாதொழியினும் இந்த இடத்துக்குப் பொருத்தமானதொரு பாட்டு இந்தப் பாட்டு.

மாபலிச் சக்கரவர்த்தி மூவடி மண்ணை வழங்கியதற்கு அறிகுறியாகத் தாரை வார்ப்பதற்குக் குண்டிகையாகிய கெண்டிச் செம்பை ஏந்தி நிற்கின்றுன். வாமனர் தாரை நீரை ஏற்கும்பொருட்டுக் கைகளை நீட்டுகின்றுர். மாபலி நீர்நிறைந்த செம்பைச் சற்றே சரிக்கின்றுன். கெண்டியி லிருந்து நீர் ஒழுகவில்லை பழைய பத்துச்சத வெள்ளி நாணகம் போல ஏதோ ஒன்று, கெண்டி வாயுட் புகுந்து தடுத்துக் கொண்டது. ஒரு சிறு நீர்த்துளிதானும் கசிய வில்லை. மாபலியைத் தடுத்த வெள்ளி, அவன் கொடையைச் சகியாமல், கெண்டி வாயுட் புகுந்து, தாரை நீரைத் தடுத்துக்கொண்டது. அப்பொழுது வாமனர் தமது

கையிலிருந்த தர்ப்பையொன்றைக் கெண்டி வாயுட் செலுத்தித் தர்ப்பை நுதியால், நீர்த்தடையை நீக்கும் பொருட்டு, குறிவைத்துக் குத்தினார். வெள்ளியின் கண் உடைந்தது. கெண்டி வாயில் நீர் பெருகியது. அந்நீர்ப் பெருக்கு வெள்ளியின் கண்ணீர்ப் பெருக்குமாகலாம். பாவம்! கொடுப்பதைத் தடுத்த குற்றத்தால் வெள்ளிக்குக் கண்ணே சிதைந்துபோயிற்று. வெள்ளிக்கு வந்த தோஷம் அதனோடு தொடர்புபட்ட இந்த உலகத்தையே பாதித்து விட்டது. மனிதர்கள் குருடுபட்டு அலைகிறார்கள். இது சுக்கிர தோஷம். இதனை வைஷ்ணவ ஆழ்வார்களுக்குள்ளே சிறந்தவரான பெரியாழ்வாரே ஒப்புக்கொள்ளுகின்றார்.

> **மிக்க பெருபுகழ் மாவலி வேள்வியில்**
> **தக்கதி தன்றென்று தானம் விலக்கிய**
> **சுக்கிரன் கண்ணைத் துரும்பாற் கிளறிய**
> **சக்கரத் தையன்..........**

என்பது பெரியாழ்வார் திருவாய்மொழி.

* * *

வெள்ளி குருடான கதைபோன்று சனி முடமான கதையும் ஒன்றுண்டு. இராவணன் இந்திரசித்துப் பிறக்கும் போது, கிரகங்களை ஒழுங்கு செய்து, இன்ன இன்ன இடங் களில் இன்னார் இன்னார் இவ்விதம் நிற்கவேண்டும் என்று நிறுத்தி மேற்பார்வை செய்துகொண்டு நின்றான். அப் பொழுது, சிரசு உதயமாகிற சமயம் என்று ஒருத்தி வந்து இராவணனுக்குச் சொன்னாள் அப்பொழுது கிரகங்களை நோக்கி நின்ற இராவணன் சற்றே திரும்பி, அவளை நோக் கினான். அதே சமயத்தில் சனியுந் திரும்பி எங்கேயோ நோக்கியது. அந்தச் சந்தர்ப்பத்தில் இந்திரசித்துப் பிறந் தான். அவனுக்குச் சனி தோஷம். சனியின் பார்வை நன்று யில்லை. இதை இராவணனாற் சகிக்க முடியவில்லை. கையி லிருந்த தண்டால் சனியின் முழந்தாளை மூடஞ்செய்து விட்டான். அதனால் இன்றைய உலகத்தில் எத்தனையோ பேர் முடவுகின்றார்கள். மனிதனுக்குக் கண்சுகம் வேண்டு மானால் வெள்ளி சுகம் வேண்டும்; கால் சுகமாதல் வேண்டில், சனி சுகம் வேண்டும்.

வெள்ளி சனிகளின் கற்பனைக் கதைகள் இருக்க,

கயந்தரு நறும்புனல் கையிற் றீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய உதவி யொப்பவே

மாபலியின் குண்டிகை நீரோ, வெள்ளியின் கண்ணீரோ ஆர் அறிவார், வாமனர் கையில் நீர் சிந்தியது. சிந்தியது சிந்திய அந்தக் கணமே,

குறளன்

என்று, பெற்றவர்கள் கூட இழித்துப் பேசுதற்குரிய வடிவத்தைக் கொண்ட அந்த வாமனர், அடியும் முடியும் அறிதற்கரிய திருநெடுமாலாயினார். வடிவம் நீண்டு சென்றது. குறள் வடிவு கண்டு வியந்தவர்கள், நீண்ட வடிவுகண்டு பயந்தார்கள்.

உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

என்கின்றது திருக்குறள்.

நாம் எப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்கின்றோமோ அவர்களுடைய பெருமை அளவே, உதவியின் அளவாயிருக்கும். சற்பாத்திரத்துக்குதவிய தானப்பொருள் வளருவது போலே, வாமன வடிவம் வளர்ந்துகொண்டே செல்கின்றது. தானம் வழங்கிய மாபலியின் தவ வளர்ச்சியின் நீளம் இதனால் அளக்கத்தக்கது

வாமனரான திருநெடுமால் மண்ணை ஓரடியாக அளந்து, விண்ணையும் அவ்வாறே மற்றோரடியில் அடக்கி, மூன்றாவது அடிக்கு மாபலியின் தலைசிறந்த தலையை இடம் ஆக்கினார். அவன் தலை தாடலையானது எவனுடைய தாளைத் தலைப்பட வேண்டுமோ, அவனுடைய தாளைத் தலைப்பட்டது மாபலியின் தலை. அங்ஙனம் ஆயது மாபலியின் தவம் இருந்தவாறு அவன் வள்ளன்மை இருந்தபடியுமாம்.

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்று தலையின் தலையாய சிறப்பை மறைமுகஞ் செய்து பேசுகின்றது தமிழ்மறை

திருநெடுமாலாய் மாபலி தலையைத் தாடலை செய்த வாமனர் தவஞ் செய்து சித்திகள் பெற்ற இடம் இந்தச் சோலை. அதனால் இது, 'சித்தாச்சிரமம்' எனப்படும், என்று வாமனர் கதையை முற்றுச் செய்து, சித்தாச்சிரமம் ஆன அந்தச் சோலையின் மகிமையை விசுவாமித்திரர் கூறுவார் ஆயினார்.

ஆதலால் அருவினை அறுக்கும் ஆரிய
காதலாற் கண்டவர் பிறவி காண்குறார்
வேதநூன் முறைமையால் வேள்வி முற்றுவேற்கு
ஈதலா தில்லைவே றிருக்கற் பாலதே.

ஆரிய,

எத்துணைப் பெரியோராயினும் பூசிக்கற் பாலனான ஸ்ரீராமனே,

ஆதலால்,

சித்தாச்சிரமம் ஆன இந்தச் சோலையின் மகிமை இங்ஙனம் இருத்தலால்,

அருவினை அறுக்கும்

இந்தச் சோலை தன்னை அடைந்தவர்களுடைய, அறுத்தற்கரிய தீவினைகளையும் அறுக்கும். ஆராமையோடு இந்தச் சோலையைக் காணுகிறவர்கள் பிறவியையே காணார்கள்.

இருக்கற் பாலது

நான் இருந்து யாகஞ் செய்யற் பாலதான ஒரு இடம் இந்த நிலவுலகில் இருந்தால்,

**ஈது அலாது, வேறு இல்லை**

அந்த இடம் இந்த இடமே. இதற்கு ஒப்பானதொரு இடம் பிறிதில்லை.

ஈண்டிருந் தியற்றுவென் யாகம் யானென்று
நீண்டபூம் பழுவத்து நெறியின் எய்திப்பின்
வேண்டுவ கொண்டுதன் வேள்வி மேவினன்
காண்டகு குமரரைக் காவல் ஏவியே.

பழுவம் - சோலை. இராம இலக்குமணர்களைக் காவல் செய்யும்படி கட்டளை செய்து, முனிவர் தாம் கருதிவந்த கருமமாகிய வேள்வியை அந்தச் சோலையிலே செய்யத் தொடங்கினர்.

எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்.

# 33 சரகூடம் சமைத்தான்

மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்.

*விசுவாமித்திர முனிவர், சித்தாச்சிரமம் என்று விதந்து பேசுகின்ற அந்த வனத்திலே தமது வேள்வியை ஆரம்பிக்கின்றார் தசரத குமாரர்களான ஸ்ரீராம இலக்குமணர்கள் கண்ணைக் காக்கின்ற இமைபோலே வேள்வியைக் காக்கின்றார்கள்; கண்மணியான விசுவாமித்திரரிற் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றார்கள்.*

காத்தனர் திரிகின்ற காளை வீரரில்
மூத்தவன் முழுதுணர் முனியை முன்னிநீ
தீத்தொழில் இயற்றுவர் என்ற தீயவர்
ஏத்தருங் குணத்தினாய் வருவதென்று என்றான்.

*காளை வீரர் - இளங்காளைகளான இராம இலக்குமணர்கள் வேள்வியைக் காவல் செய்து உலா வருகின்றார்கள். ஐந்து தினம் இவ்வாறு இராப்பகல் காவல் செய்து ஆறுவது தினமும் ஆயினது என்று முதனூல் பேசுகின்றது. இன்னமும் பகைவர்கள் வந்திலர். அதனாலே, சற்றே பொறுமை இழந்து, போர்த்தினவு கொண்டவனான ஸ்ரீராமன், முற்றுணர்ந்த முனிவர் பெருமானை அணுகி, அந்தக் கொடியவர்கள் எப்பொழுது வருவார்கள் என்று, பொழுது போக்கு முறையிற் கேட்டான்; எப்படியும் இளம்பிள்ளைதானே இவ்வாறு கேட்டான்.*

**வார்த்தைமா றுரைத்திலன் முனிவன் மோனியாய்ப்**
**போர்த்தொழிற் குமரனுந் தொழுது போந்தபின்**
**பார்த்தனன் விசும்பினைப் பருவ மேகம்போல்**
**ஆர்த்தனர் இடித்தனர் அசனி அஞ்சவே**

* * *

**தீயவர் வருவது என்று ?**

*என்று ஸ்ரீராமன் கேட்டபோது,*

**வார்த்தை மாறுரைத்திலன் முனிவன்.**

*விசுவாமித்திரர் கண்கள் விழித்தபடியே, மௌனியாய்ச் சும்மாவிருந்தார் ; பொறிகள் வெளியுலகச் சேட்டையற்று, அடங்கிக் கிடந்தன. மனம் அந்தர்முகப்பட்டது. முனிவர் வழக்கப்பிரகாரம் 'மாறு' உரைத்திலர். மாறு - மறுமொழி*

*ஐம்புலப் போரில் வென்றி யெய்தி அடங்கிய முனிவர் நிலையைப் 'போர்த் தொழிற் குமரன்' ஆகிய ஸ்ரீராமன், அணுகி அறிந்ததும் நாணி மெல்ல விலகி அப்பாற் சென்றான். சென்ற பிறகு, ஆகாயத்தை நிமிர்ந்து நோக்கினான். சூற்கொண்ட பருவகால மேகங்கள், ஆகாயத்தைக் கவிவது போல இராக்கதர்கள் இடி முழக்கத்துடன் முனிவர் வேள்வியை முற்றுகை செய்து வருகின்றார்கள். அப்பொழுது,*

**பவர்சடை அந்தணன் பணித்த தீயவர்**
**இவர்என இலக்குவற் கிராமன் காட்டினான்.**

*பவர் சடை அந்தணன் - விசுவாமித்திரர். பவம் - நெருக்கம்.*

**கண்டஅக் குமரனுங் கடைக்கண் தீயுக**
**விண்டனை நோக்கித்தன் வில்லை நோக்கினான்**
**அண்டர்நா யகஇனிக் காண்டி யீண்டவர்**
**துண்டம்வீழ் வனஎனத் தொழுது சொல்லினான்.**

ஸ்ரீராமன் அரக்கர்களைக் காட்டக் கண்ட குமரனாகிய இலக்குவனுக்குக் கடைக்கண்ணில் நெருப்புப்பொறி எழுந்தது. ஆகாயத்தை நோக்கிய பிறகு, இலக்குவன் தன் வில்லையே நோக்கினான் 'தேவ நாயகனான ஸ்ரீ ராமபிரானே, விண்ணிலே நீ காட்டிய அரக்கர்களை, மண்ணிலே தசைத் துண்டுகளாக இனிக் கண்டுகொண்டு, சற்றே நின்றருள்வாயாக ; அந்தத் திருத்தொண்டை எனக்கு அநுக்கிரகிப்பாயாக' என்று தொழுது வேண்டும் முறையில், இலக்குவன்,

விண்தனை நோக்கித்தன் வில்லை நோக்கினான்.

ஸ்ரீராமன் பணிக்காமலே அரக்கர்களைத் துண்டுசெய்யுந் திருப்பணியை இலக்குவன் பற்றிக்கொண்டான்.

தூமவே லரக்கர்தம் நிணமுஞ் சோரியும்
ஓமவெங் கனலிடை உகுமென் றுன்னியத்
தாமரைக் கண்ணனுஞ் சரங்க ளேகொடு
கோமுனி இருக்கையோர் கூடம் ஆக்கினான்.

தாமரைக் கண்ணன் - ஸ்ரீராமன். தூமவேல் அரக்கர் - புகை எழுகின்ற வேற்படையைத் தாங்கிய இராக்கதர்கள். இலக்குவன் இராக்கதர்களைத் துண்டங்கள் பண்ணுவதனாலே, தசைகளினாலும் உதிர மழையினாலும் பரிசுத்தமான ஓமாக்கினி, அசுத்தம் எய்தாமல் தனது சரங்களினாலே, கோமுனியாகிய விசுவாமித்திரரின் வேள்வி இருக்கையை, மேலே பெரியது ஒரு கூரை செய்து, யாக மண்டபத்தைச் சரமண்டபமாக்கி நின்றான் ஸ்ரீராமன்.

நஞ்சட எழுதலும் நடுங்கி நாண்மதிச்
செஞ்சடைக் கடவுளை யடையுந் தேவர்போல்
வஞ்சனை அரக்கரை வெருவி மாதவர்
அஞ்சன வண்ணநின் அபயம் யாம்என்றார்

இலக்குவன் அசுரர்களை இரத்தமழை செய்ய, இராமன் வேள்வியைச் சரகூடஞ் செய்து காப்பான் ஆயினான். அதனைக் கண்ணுற்று, அரக்கருக்கு அஞ்சிய மகாதவத்தர்கள்,

அஞ்சன வண்ணனாகிய இராமபிரானே, யாமெல்லாம் உனக்கு அடைக்கலம், அடைக்கலம் என்றார்கள். ஸ்ரீராமன், ஆலகாலத்துக்கு அஞ்சிய தேவர்களுக்கு அபயம் அளித்த சிவபெருமான், போலே,

கவித்தனன் கரதலங் கலங்கல் நீரெனச்
செவித்தலம் நிறுத்தினன் சிலையின் தெய்வநாண்;
புவித்தலங் குருதியின் புணரி யாக்கினான்;
குவித்தனன் அரக்கர்தம் சிரத்தின் குன்றமே

'முனிவர்காள் கலங்கன்மின்' என்று, ஸ்ரீ ராமனுடைய கரதலங்கள் அபயஞ் செய்தன. வில்நாண் திருச்செவி வரை இழுத்து நிறுத்தப்பட்டது பாணத்தையோ அதன் வேகத்தையோ வருணித்தல் இயலாது. புவித்தலம் இரத்த சமுத்திரமாய் மாறியது. அரக்கர்கள் தலைகள் மலைகளாய்க் குவிந்தன.

தாடகையின் புதல்வர்கள் மாரீசன் சுபாகு என்று இருவர். அவர்கள் ஸ்ரீராமனை எதிர்த்தார்கள்.

திருமக ணாயகன தெய்வ வாளிதான்
வெருவரு தாடகை பயந்த வீரர்கள்
இருவரில் ஒருவனைக் கடலி னிட்டதங்
கொருவனை அந்தகன் புரத்தில் உய்த்ததே.

மாரீசன் கடலில் ஆழ்ந்தான். சுபாகு யமபுரஞ் சேர்ந்தான் திருமகள் நாயகனாகிய ஸ்ரீராமனது தெய்வ வாளி இங்ஙனஞ் செய்தது.

பிணத்திடை நடந்திவர் பிடிப்பர் ஈண்டென
உணர்த்தினர் ஒருவர்முன் ஒருவர் ஓடினார்

பிண மலைகளில் ஏறி, நம்மை அணுகி, அகப்படுத்தி விடுவார்கள் என்று அஞ்சி, அரக்கர்கள் ஒருவர்முன் ஒருவராய் ஓட்டம் எடுத்தார்கள்.

புனித மாதவர் ஆசியின் பூமழை பொழிந்தார்
அனைய கானத்து மரங்களும் மலர்மழை சொரிந்த
முனியும் அவ்வழி வேள்வியை முறைமையின் முற்றி
இனிய சிந்தையன் இராமனுக் கினையன இசைத்தான.

விசுவாமித்திரர் தொடங்கிய வேள்வி, வேத நெறி பிறழாமல் முற்றியது. முனிவர்கள் பூமழை பொழிந்து ஆசீர்வதித்தார்கள். அவர்கள் ஆணை வழி நிற்கும் ஆச்சிரம மரங்களும் புஷ்பாஞ்சலி செய்தன. விசுவாமித்திரருக்கு மனங் குளிர்ந்தது. அவர் ஸ்ரீராமனை ஆசீர்வதித்துச் சொல்லுகின்றார் :

**பாக்கி யம்எனக் குளதென நினைவுறும் பான்மை**
**போக்கி நிற்கிது பொருளென வுணர்கிலன் புவனம்**
**ஆக்கி மற்றவை அகிலமும் அணிவயிற் றடக்கிக்**
**காக்கு நீயொரு வேள்விகாத் தனையெனும் கருத்தே.**

ஸ்ரீராம,

நிற்கு இது பொருள் என உணர்கிலன்

அரக்கர்களைக் கொன்று வேள்வியைக் காத்த இந்தச் செயல், எனக்குப் பாக்கியத்தை வருவித்திருக்கின்றது. ஆனால், உன் பெருமையை நோக்குமிடத்து இது உனக்கொரு பெரிய காரியம் அன்று. நீயோ உலகம் முழுவதையும் அழகிய வயிற்றுள் அடக்கிக் காக்க வல்ல காவல் தெய்வம்! அற்ப காரியமான இது உனக்கு எம்மாத்திரம்!

எனக்குப் பாக்கியம் உளது என நினைவதேயல்லாமல், அவ்வாறு நினைவுறும் பான்மையைப் போக்கி, இது நிற்கு ஒரு பொருளென உணர்கிலேன் என்று, ஸ்ரீராமனைப் பாராட்டுகின்றார் வேள்வி முற்றி நிற்கின்ற விசுவாமித்திரர்.

# 34 மிதிலை வேள்வியும் காண்டும்

என்று கூறிய பின்னரவ் வெழின்மலர்க் கானத்து
அன்று தான்உறைந் தருந்தவ முனிவரோடிருந்த
குன்று போற்குணத் தானெதிர் கோசலை குரிசில்
இன்று யான்செய்யும் பணியென் கொல் பணியென
இசைத்தான்

'அகில உலகத்தையுங் காக்கைக்குப் பிறந்த நீ, ஒரு வேள்வியைக் காத்தது, அரிய காரியமே யன்று' என்று, ஸ்ரீராமனைப் புகழாமலே புகழ்ந்து கூறி, அதன்பிறகு, அந்தச் சித்தாச்சிரமம் என்கின்ற சோலையிலேதானே, முனிவர்கள் புடைசூழ, மலைபோன்ற உயர்ந்த குணம் படைத்தவரும், மகிழ்வாற் பூரித்து ஒரு தவமலை போன்று விளங்குபவருமான விசுவாமித்திரர் வீற்றிருக்கின்றார். அந்தச் சமயத்தில் ஸ்ரீராமன் விசுவாமித்திரரை வணங்கி, அடியேன் இன்றைத் தினம் தேவரீருக்குச் செய்யவேண்டிய பணியைப் பணித்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தான்.

அரிய யான்சொலின் ஐயநிற் கரியதொன் றில்லை
பெரிய காரிய முளஅவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநாம் எழுகென்று போனார்

ஐய - மகனே

செய்தற் கரியன என்று சிலவற்றை உனக்குச் சொன்னால் அவற்றுள் ஒன்றுதானும் உனக்குச் செய்தற் கரிதாயில்லை. ஆயினும், மிகப்பெரிய காரியங்கள் - நீ செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் - உன்னை எதிர்நோக்கி யிருக்கின்றன.

## அவை முடிப்பது பின்னர்

அந்தப்பெரிய காரியங்கள் உன்னால் முடிவடைய வேண்டியவைகள்; முடிவை அடையும் அவைபற்றி இப்பொழுது நாம் சிந்திக்கவேண்டுவதில்லை. வருங்காலம் வந்து முடிவு எய்தும். நிகழ்காலத்தில் நிகழ்பவைகளை நாம் சிந்திப்போம்.

## மிதிலையர் கோமான் புரியும் வேள்வியுங் காண்டும்

'மிதிலை கோசலம் போன்றது; ஒரு வளநாடு அதன் நகர் அயோத்தி போன்றது. அதற்கு மிதிலாபுரி என்று பெயர். அந்த நகரத்திலிருந்து அரசு புரிகின்றான் ஜனக மகாராஜா. அவன் ஒரு தவச் செல்வன். நாம் இப்பொழுது செய்து முடித்த வேள்வி போன்றதொரு வேள்வியை அவன் செய்துகொண்டிருக்கின்றான். அந்த வேள்வியைத் தரிசித்தற்கு முனிவர்களெல்லாம் அவ்விடஞ் செல்கின்றார்கள்; நாங்களும் இப்பொழுதே செல்லுவோம் நீவிர் இருவீரும் ஜனகன் வேள்வியைக் காண எழுவீராக' என்று கூறி, விசுவாமித்திரர் எழுந்தார் ஸ்ரீராம இலக்குமணர்கள் அவரைத் தொடர்ந்தார்கள். மூவரும் மிதிலைமாநகரை நோக்கி நடக்கின்றார்கள். காடு கழிகின்றது அப்பால் ஒரு நதி பெருகி ஓடுகின்றது. அதன் பெயர் சோணை. அது மகத தேசத்தின் வழியாகப் பெருகி வருதலின் மாகதி எனவும் பெயர்பெறும் அந்த நதிக்கரையில் ஒரு அழகான சோலை மூவரும் அந்தச் சோலையை அடைந்தார்கள் பொழுது அஸ்தமனம் ஆனது. அதனால், அன்றிரவு அந்தச் சோலையில் தங்கினார்கள் ஸ்ரீராமன் வழக்கம்போல் அந்தச் சோலையைப்பற்றி வினவினான். விசுவாமித்திரர்,

'நாம் வேள்வி செய்த சோலை போல இந்தச் சோலையுஞ் சிறப்பு வாய்ந்தது. அந்தச் சோலை காசிபர் இருந்து தவஞ் செய்ததனால் சிறப்பெய்தியது. இந்தச் சோலை காசிபர் மனைவி ஒருத்தி தவஞ்செய்ததனாற் சிறப்பெய்தியது. தக்கனுக்கு நூறு பெண்பிள்ளைகள் அவர்களுள் பதின்மூன்று பெண்களைக் காசிபர் மணந்தார் அந்தப் பதின்மூவருள் இருவர் அதிதி திதி என்பவர்கள். அதிதி தேவர்களைப் பெற்றவள். திதி அசுரர்களைப் பெற்றவள். அதனால் அசுரர்கள்

தைத்தியர் எனவும் படுவர். திதி இருந்து தவஞ் செய்த இடம் இந்தச் சோலே' என்று அந்தச் சோலேயின் சிறப்பைச் சொன்னூர். கதை நீளவில்லே, இராத்திரியைக் கழிப்பதற் கேற்ற கதையாய் அமையவில்லே. ஸ்ரீராமன், திதி ஏன் தவஞ்செய்தாள் ? அவளுக்கு உண்டான குறை என்ன ? என்று கேள்வி கேட்டான். இந்தக் கேள்வி கதையை நீட்டுவதற்கு உபகாரமாய் அமைந்தது, விசுவாமித்திரர் சொல்லுகின்ருர் :

ஒரு நாள் வித்தியாதர மாது ஒருத்தி, இந்த அண்ட கோளத்துக்கு அப்பால் உள்ள வைகுந்த உலகத்துக்குப் போய், அங்கே வீற்றிருந்த மகாலக்குமியைப் புகழ்ந்து பாடிஞள். மகாலக்குமி அவள் பாடலுக்கும் இனிய இசைக்கும் மகிழ்ந்து, தமது அருமைத் திருமுடியில் தரித்திருந்த அழகிய மலர்மாலேயை, அந்த வித்தியாதர மாதருக்கு உபகரித்தருளிஞர். வித்தியாதர மாது அந்த மாலேயைப் பெற்றுத் தனது யாழிலே கட்டிக்கொண்டு, சத்திய உலகத்துக்கு வந்தாள். வைகுந்த உலகத்திலிருந்து, சத்திய உலகத்துக்கு அந்த வித்தியாதர மாது வருவதை அங்கே சென்றிருந்த துருவாச முனிவர் கண்டார். துருவாசர் கோபத்துக்குப் பேர்போனவர். 'கோபமே மிக மிகு கொடிய முனிவன் துருவாசன்' என்று உயர்த்துக் கூறப்படுபவர் துருவாசர். கோபம் மிகுந்தால் தவம் மிகுவது வழக்கம். அது அவர் பெற்ற வரம். அதனுல் அடிக்கடி கோபிப்பது அவருடைய உத்தியோகம் அப்படிப்பட்ட துருவாசர் அந்த வித்தியாதர மாதரைக் கண்டார். கண்டவுடன் மகாலக்குமியின் புகழைப் பாடுபவர் அந்த மாதர் என்பதை அறிந்து, அந்த மாதரை வணங்கி வாழ்த்திஞர். அதனுல் அந்த வித்தியாதர மாதர் மகிழ்ந்து, மகாலக்குமி தனக்கு வழங்கிய மாலேயை, அதன் பகிமையைத் துருவாசருக்கு எடுத்துக்கூறி, அவருக்கு வழங்கிஞள்.

தெய்வ நாயகி சென்னியிற் சூடிய தெரியல்
ஐய யான்பெறப் புரிந்ததெத் தவமென ஆடி
வெய்ய மாமுனி சென்னியிற் சூடியே வினைபோய்
உய்யு மாறுஇது என்று உவந்துவந்து உம்பர்நாடு
அடைந்தான்.

வெய்ய மாமுனி - துருவாச முனிவர். ஐய - அம்மம்ம !

தெய்வங்களுக்கெல்லாந் தலைவியாகிய மகாலக்குமி திருமுடியிற் சூடிய மாலையை யான் பெறுதற்குப் பண்டு செய்துவைத்த தவந்தான் இருந்தவாறு எத்தகையது என வியந்து, அந்த அருமந்த மாலையைச் சிரசிலே தரித்து, ஆனந்தக் கூத்தாடி, இருவினைகள் மாய்ந்து உய்தற்கு வாய்த்த நெறி இது என்று மகிழ்ந்து மகிழ்ந்து, அந்தச் சத்திய உலகத்தினின்றும் நீங்கிச் சுவர்க்க உலகத்துக்கு வந்தார்.

துருவாசர் சுவர்க்கத்துக்கு வந்த சமயத்தில், இந்திரன் ஐராவத யானையின்மீது பவனி வருகின்றான். சூற்கொண்டதொரு மேகம் ஆயிரந் தாமரைகள் தன்பால் மலரக் கோடி சூரியப் பிரகாசத்தோடு, வெள்ளியங் கைலாசகிரிமீது வருவதுபோலப் பவனி வருகின்றான் தேவேந்திரன். அரம்பை மேனகை திலோத்தமை உருப்பசியாகிய அரமகளிர்கள் தேனொழுகப் பாடி ஆடி இந்திரன் எதிர்வருகின்றார்கள். நீல ரத்தின மலைமீது தவழுகின்ற சந்திரிகைகள் போல, இருபுறமும் வெண்சாமரைகள் எழுந்து அசைந்து புரளுகின்றன. மேலே பரிபூரண சந்திரன் ஒப்பில்லாததொரு குடையாய்த் தண்ணிழல் செய்கின்றது. சமுத்திரம் எழுந்து கோஷிப்பது போல வாத்தியங்கள் எழுந்து முழங்குகின்றன. இவ்வாற்றால் உலகை விழுங்குவது போன்றதொரு விழாவணி கண்களுக்கு விருந்து செய்து, துருவாசர் எதிரில் வருகின்றது அதனைக் கண்டதும் துருவாசருக்கு மகிழ்ச்சி பொங்குகின்றது. 'ஆஹா இந்திரன் தவம் இருந்தபடி இது ! இந்திரச் செல்வம் இவனுக்கே தகும் ! தகும் !' என்று முனிவருக்கு ஒரு குளிர்ச்சி எழுகின்றது,

**தனையொவ் வாதவன் மகிழ்ச்சியால் வாசவன் றன்கை**
**வனையும் மாலையை நீட்டலும் தோட்டியால் வாங்கித்**
**துனைவ லத்தயி ராவதத் தெருத்திடை தொடுத்தான்**
**பனைசெய் கையினுற் பறித்ததடிப் படுத்ததப் பகடு.**

தனை ஒவ்வாதவன் - தவத்தால் தமக்குத் தாமே நிகரான துருவாச முனிவர், இந்திரச் செல்வத்தைக் கண்டு, அதனால் தம் மனத்தில் எழுந்த மகிழ்ச்சியினால், அந்த மகிழ்ச்சிக்கு ஓர் பிரதியுபகாரமாகத் தாம் முடியிற் சூடியிருந்த அந்த மாலையை, இந்திரன் பெறும்படி அவன் கைக்கு நீட்டினார். இந்திரன் ஐராவதத்தினின்றும் விரைந்து இறங்கி, முனிவர் பெருமானை வணங்கி, அந்த மாலையை இருகரங்களாலும் பெற்றுத் தலையிற் சூடிக் கொண்டாடி, முனிவரின் ஆசியைப் பெறவேண்டியவன். ஆனால், அந்தச் சமயம் செல்வச் செருக்கில் மூழ்கியிருந்த அதனால், அவன் அப்படிச் செய்ய வில்லை. முனிவர்பெருமான், அதுவும் துருவாசமுனிவர் நீட்டிய மாலையை - வைகுந்த உலகத்திலிருந்து வந்த அந்த மாலையை - இந்திரன் ஐராவத யானையில் இருந்தபடி இருந்து கொண்டு, தன் கையிலிருந்த தோட்டியாகிய அங்குசத்தினால் வாங்கி ஐராவத யானையின் பிடரியிலே அம்மாலையைக் கட்டினான். செல்வப் பைத்தியம் இருந்தபடி அது. அப்படிக் கட்டியபோது ஐராவதம் தேவயானையாயிருந்துந் தன் பிறவிக்குணத்தைச் செய்தே தீர்ந்தது. பனைபோன்ற நீண்ட கையை உயர்த்தி நீட்டி எருத்தத்திற் கட்டிய மாலையைப் பறித்துத், தனது உரல்போன்ற காலின் கீழிட்டுத் தேய்த்தது. அந்த ஆனை, இந்திரன் அறிவுக்குத் தக்கபடி ஆனையும் அந்தக் காரியத்தைச் செய்தது. மகாலக்குமியின் முடியை அலங்கரித்த மாலை, ஐராவதத்தின் அடியில் அகப்படவேண்டியதாயிற்று. அருமையை அறியாத இடத்துச் சம்பவங்களுக்கு இது ஒரு நல்ல திருட்டாந்தம். இதனைத் திருட்டி செய்வதுதான் முடியாத காரியம். நடவாததொன்று நடந்தே விட்டது. அதுவுங் கோபமே மிக மிகு கொடிய முனிவன் துருவாசன் முன்னிலையில் நடந்துவிட்டது. இனி என்ன நிகழுமோ !

கண்ட மாமுனி விழிவழி ஒழுகுவெங் கனலால்
அண்ட கூடமுஞ் சாம்பராய் ஒழியுமென்று அழியா
விண்டு நீங்கினர் விண்ணவர் இருசுடர் மீண்ட
எண்டிசாமுகம இருண்டன சுழன்றதுஎவ் வுலகும்.

* * *

புகையெ ழுந்தன உயிர்தொறும் எயில்பொடித் தவனின்
நகையெ ழுந்தன நிவந்தன புருவம்நன் னுதலின்
சிகைஎ ழுஞ்சுடர் விழியினன் அசனியுந் திகைப்ப
மிகைஎ ழுந்திடு சதமக கேளென வெகுண்டான்.

துருவாச முனிவருடைய கோபத்துக்கு வசனம் இல்லே. வசனத்தில் வருணிப்பதற்கு அது எளிதன்று. துருவாசர் கோபம் தவக்கோபம். தவத்தை வளர்க்கிற கோபம், அவர் கோபம். சர்வ சங்கார மகா உருத்திர மூர்த்தியின் சிரிப்புப் போன்றதொரு சிரிப்பு துருவாசர்பால் எழுந்தது. கண்களி லிருந்து அக்கினிச் சுவாலேகள் அலேமோதின. இடியேறு திடுக்கிட்டது.

'மிகை எழுந்திடு சதமக'

தலேயெடுப்புத் தலேக்குமேலே போன,

ஓ இந்திரனே,

'கேள் என வெகுண்டான்'

கேட்பாயாக என்று, துருவாச முனிவர் துருவாச முனிவர் ஆயினர்.

## 35 கதையும் முடியக் கங்கையைக் கண்டார்

சதமக கேள்

என்று துருவாச முனிவர் இந்திரனை நோக்கி நெருப் பெடுக்கின்றார்.

பூத நாயகன் புவிமகள் நாயகன் பொருவில்
வேத நாயகன் மார்பகத் தினிதுவீற் றிருக்கும்
ஆதி நாயகி விருப்புறு தெரியல்கொண் டணைந்த
மாத ராள்வயின் பெற்றனன் முயன்றமா தவத்தால்

வேத நாயகன் - திருமால் அவன் பூத நாயகன்; புவிமகள் நாயகன். அவனுடைய பொருவில்லாத மார் பகத்திலே, இனிது வீற்றிருக்கின்ற 'ஆதி நாயகி' மகாலக்குமி. அந்த மகாலக்குமி மிக்க விருப்பத்தோடும் சூடும் மாலை - சூடிய மாலை - இந்த மாலை. ஒரு வித்தியாதர மங்கை இலக்குமியைப் பாடியும் ஆடியும் இலக்குமியின் பாதங் களுக்குச் சேவை செய்து. இந்த மாலையை இலக்குமி யிடம் பெற்றாள். அந்த வித்தியாதர மங்கையைப் பணிந்து நான் இந்த மாலையைப் பெற்றேன். நான் பண்டு முயன்று செய்த தவ விசேஷத்தினாலேதான் இந்தப் பேறு பெற்றேன்.

இன்று நின்பெருஞ் செவ்விகண்டு உவகையின் ஈந்த
மன்ற லந்தொடை இகழ்ந்தனை நினதுமா நிதியும்
ஒன்ற லாதபல் வளங்களும் உவரிபுக் கொளிப்பக்
குன்றி நீதுயர் உறுகென உரைத்தனன் கொதித்தே.

துருவாசர் கொதிக்கின்றார். ஆனை மாலையை இடற வில்லை; துருவாசரையே இடறியது போலும்! அப்படியான உணர்ச்சி துருவாசர்பால் கொதித்தது.

சத மக,

இன்றைய தினம் உனது பவனியின் செவ்வியைக் கண்டு மனங் குளிர்ந்து உவகையின் மிகுதியினாலே, உனக்கு ஒரு பரிசிலாக நான் ஈந்த மகத்துவம் வாய்ந்த மாலையை, நீ அவமதித்தாய்; ஐயோ, இனி நீ உய்யுமா றெங்ஙன்! உனது சங்கநிதி பதுமநிதி கற்பகதரு காமதேனு முதலிய வளங்கள் எல்லாம், எந்தப் பாற்சமுத்திரத்தினின்றும் வந்தனவோ, அந்தப் பாற்சமுத்திரத்துக்கு வந்தவாறே சென்று ஒளிக்கக் கடவன நீ இந்தப் பதவி போய் ஒளி மாளக் கடவை. அம்மட்டோ, உய்தியில் துயர்கள் உன்னை உறுவனவாக. என்றிங்ஙனங் கொதித்துச் சாபமிட்டார் துருவாச முனிவர்.

அரம டந்தையர் கற்பகம் நவநிதி அமிர்தம்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கற்
றொருபெ ரும்பொரு ளின்றியே உள்ளன எல்லாம்
வெருவி ஓடின வெண்ணெய்வாழ் கண்ணன்மே வாரின்.

புகையிரதம் விரைந்து ஓடும்போது, வீதியின் இரு மருங்கும் உள்ள மரங்கள் கட்டடங்கள் ஒரு ஒழுங்கில் ஒன்றன்பின் ஒன்றாக ஓடுவதைப் பார்க்கின்றோம். அவை ஓடாமலிருக்க நாம் ஓடுதலைச் செய்துகொண்டு, அவை ஓடுகின்றன என்று கருதுகின்றோம் அவை உண்மையாகவே ஓடுவனவாயின், அந்த ஓட்டம், இந்திரச் செல்வங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடி ஓடி ஒளிப்பதற்கு வாய்ப்பான தொரு உவமானமாயிருக்கும். அரம்பை முதலிய தேவ மாதர்கள் ஒருவர் பின் ஒருவராய் ஓடிப் பாற்சமுத்திரத்தில் மறைகின்றார்கள் கற்பக தருக்கள் ஓடுகின்றன. மகாபதுமம், பதுமம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் ஆகிய ஒன்பது நிதியங்கள், அவற்றுட் பிரதானமான சங்கம் பதுமம் என்கிற நவ (புதுமை) மான நிதியங்கள் யாவையும் ஓடுகின்றன. அமிர்தம், காமதேனு, உச்சை

யிச்சிரவம் என்கின்ற வெள்ளைக் குதிரை, இந்திரன் ஏறியிருந்த ஐராவத யானை முதலிய செல்வங்கள் எல்லாம் ஒரு துகள் தப்பாமல் இந்திரனோடு எவ்வித தொடர்பும் இல்லாதனவாய், அஞ்சி அஞ்சி ஓட்டம் எடுக்கின்றன. வெண்ணெய்க் கண்ணன் போலே, திருவெண்ணெய் நல்லூரில் இரவலர்களுக்கெல்லாம் கண்போன்றவராய் வாழ்ந்த சடையப்பவள்ளலின் பகைவர்கள் ஒருவர் பின் ஒருவராய் ஓட்டம் எடுத்து வனத்தில் மறைவதுபோல, இந்திரச் செல்வம் அனைத்தும் பாற்சமுத்திரத்தில் முழுகி மறைந்தன. இந்திரன் பரம ஏழையாய் இலக்குமியின் மூத்தாளுக்கு இருப்பிடமாய்த் தவித்தான். பிரமா முதலிய தேவர்களும் முனிவர்களும் இந்திரன் நிலைக்கு இரங்கினார்கள். குடையெடுத்துக் குஞ்சரமூர்ந்து வந்த இந்திரன் கதி இங்ஙனம் ஆயிற்று.

**வெஞ்சொன் மாமுனி வெகுளியால் விளைந்தமை விளம்பிக்**
**கஞ்ச நாண்மலர்க் கிழவனுங் கடவுளர் பிறருந்**
**தஞ்ச மில்லைநின் சரணமே சரணெனச் சலியாது**
**அஞ்சல்! அஞ்சல்! என் றுரைத்தனன் உலகெலாம்**
**அளந்தோன்.**

பிரமர் முதலிய தேவர்களெல்லாம் வாமனராய் உலகையெல்லாம் அளந்த திருமாலின் திருவடிகளே தஞ்சம் என்று, திருமாலை அணுகி, துருவாச முனிவரின் சாபத்தைக் கூறி, இந்திரனுக்கு இரங்கவேண்டும் என்று முறையிட்டார்கள். திருமால் அஞ்சற்க! அஞ்சற்க! என்று அபயம் அளித்தார்.

**மத்து மந்தரம் வாசுகி கடைகயிறு அடைதூண்**
**மெத்து சந்திரன் சுராசுரர் வேறுவே றுள்ள**
**கொத்தி ரண்டுபால் வலிப்பவர் ஓடதி கொடுத்துக்**
**கத்து வாரிதி மறுகுற அமிழ்தெழக் கடைமின்.**

மந்தரமலை மத்து; வாசுகி கடைகயிறு; கடைதறி பூரண சந்திரன்; கயிற்றை வலித்துக் கடைபவர்கள் சுராசுரர் (சுரர் - தேவர்; அசுரர் - தேவரல்லாதவர்.) இங்ஙனமாக ஓடதி கொடுத்து அமிழ்தெழக் கடைமின் என்று கட்டளை பிறந்தது. ஓடதி ஒளடதத்துக்குரிய மருத்துப்பூண்டு. பொற்சீந்தில் என்பாரும் உளர்.

அதிதியின் புதல்வர்களாகிய தேவர்களும், திதியின் புதல்வர்களாகிய அசுரர்களும் ஒருங்கு சேர்ந்து, திருமாலின் ஆஞ்ஞை மேற்கொண்டு பாற் சமுத்திரத்தைக் கடைவார் ஆயினார்கள். திருமால் ஆதி கூர்மமாய் மந்தர மலையைத் தமது முதுகில் தாங்கிநின்றார். சென்று மறைந்த செல்வங்களெல்லாம், அந்த ஒழுங்கில் மீண்டு வருவனவாயின. அந்த அந்தச் செல்வம் அந்த அந்த இடத்தை அடைந்தது. இறுதியில் அமிர்த கலசம் எழுந்தது. மிருத்தியுவாகிய மரணத்தை நீக்கி அமரர் ஆதற்குரிய அமிர்தத்தைக் கண்டு, அதனை உண்ணுதற்குச் சுரரும் அசுரரும் வாயூறினார்கள். யுத்தம் உண்டாயிற்று. அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்களின் வேண்டுகையால் திருமால் மோகினி உருவங்கொண்டு தோன்றினார். சூழ்ச்சியை அறியாத அசுரர்கள், அமிர்தத்தை மறந்து மோகினியைத் தொடர்ந்து, தம்முட் பகைகொண்டு பொருது மாண்டார்கள். தேவர்கள் அமிர்தம் உண்டு அமரர்கள் ஆயினார்கள்.

> அந்த வேலையில் திதிபெருந் துயருழந்து அழிவாள்
> வந்து காசிபன் மலரடி வணங்கியென் மைந்தர்
> இந்தி ராதியர் புணர்ப்பினால் இறந்தனர் எனக்கோர்
> மைந்த நீயருள் அவர்தமை மடித்தலுக் கென்றாள்

தைத்தியராகிய அசுரர் ஒருவர் தப்பாமல் யாவரும் மாண்டு மடியத் தாயாகிய திதி, துயருழந்து, காசிபரை அணுகிச் சூழ்ச்சி செய்த இந்திராதி தேவர்களை மடித்தற்கு எனக்கொரு புதல்வனை அநுக்கிரகிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

> என்று கூறலும் மகவு உனக்கு அளித்தனம் இனிநீ
> சென்று பாரிடைப் பருவமோ ராயிரந் திர
> நின்று மாதவம் புரிதியேல் நினைவுமுற் றுதியென்று
> அன்று கூறிடப் புரிந்தனள் அருந்தவம் அனையாள்.

காசிபர் திதியை நோக்கி, 'திதியே உனக்கு யாம் ஒரு மகவை அநுக்கிரகித்தோம். நீ பூமிக்குச் சென்று ஆயிரம் வருஷம் தவஞ் செய். நீ நினைத்தது சித்திக்கும்' என்றார். திதி அவ்வாறே அருந்தவம் புரிவாள் ஆயினாள்.

ஆயது இவ்விடம் அவ்விடம் அவிர்மதி அணிந்த
தூய வன்றனக்கு உமைவயிற் றேன்றிய தொல்லே
வாயு வும்புனற் கங்கையும் பொறுக்கலா வலத்த
சேய் வளர்ந்தருள் சரவண மென்பதுந் தெரித்தான்

ஆயது இவ்விடம்

அந்தத் திதி ஆயிரம் வருஷம் இருந்து தவஞ்செய்த இடம், இப்பொழுது நாம் தங்கியிருக்கும் இடமாகிய இந்தச் சோலே, என்று அத்தச் சோலேயின் பெருமை கூறிய விசுவாமித்திரர், அதற்கயலே அழகு ஒழுகத் தோன்றுகின்ற ஒரு பொய்கையைக் காட்டி, 'இந்தப் பொய்கைக்குச் சரவணப் பொய்கை என்று பெயர். சரவணபவனுகிய திருமுருகன், கார்த்திகைப் பெண்கள் அறுவர் வளர்க்க வளர்ந்த பொய்கை இந்தப் பொய்கை' என்று சோலேயைப்பற்றிச் சொன்னவர், அதற்கயலிலேயுள்ள சரவணப் பொய்கையைப் பற்றியும் சொல்லிக் கதையை முடித்தார். அவர் சொன்ன கதை இராக்கதை. இரவைக் கழிக்க எடுத்த கதை, அந்தக் கதை. கதையும் முடிய இரவும் விடிந்தது. சூரியன் உதயம் ஆயினுன். கடன்களே முடித்துக்கொண்டு மூவரும் புறப்படுகின்றுர்கள். கங்கையை நோக்கி நடக்கின்றுர்கள். கங்கை கண்ணுக்குத் தெரிகிறது.

அங்கு நின்றெழுந்து அயன்முதல் மூவரும் அனேயார்
செங்கண் ஏற்றவன் செறிசடைப் பழுவத்தின் நிறைதேன்
பொங்கு கொன்றையீர்த் தொழுகலாற் பொன்னியைப் பொருவுங்
கங்கை என்னுமக் கரைபொரு திருநதி கண்டார்.

# 36 பகீரதப் பிரயத்தனம்

**கங்கை என்னுமக் கரைபொரு திருநதி கண்டார்**

*ஸ்ரீராமன் இலக்குமணன் விசுவாமித்திரர் ஆகிய மூவரும், வேள்வி நிறைவேற்றியபின், மிதிலையை நோக்கி நடக்கின்றவர்கள், வழியிலே, தெய்வத்தன்மை பொருந்தியதும் கரையைப் பொருது பிரவாகிக்கின்றதுமான கங்கைநதியைத் தரிசித்தார்கள்.*

**இந்த மாநதிக் குற்றுள தகைமைய யாவும்**
**எந்தை கூறுகென் றிராகவன் வினவுற எனையாள்**
**மைந்த நின்றிரு மரபுளான் அயோத்திமா நகர்வாழ்**
**விந்தை சேர்புயன் சகரன்இம் மேதினி புரந்தோன்.**

*ஸ்ரீராமன் இந்த மாநதியின் பெருமைகளை எடுத்துச் சொல்லியருள வேண்டும் என்று பிரார்த்திக்கின்றான். அப்பொழுது விசுவாமித்திரர்,*

**எனை ஆள் மைந்த**

*அன்பு என்கின்ற கயிற்றினாற் கட்டி, என்னை ஆளாமலே ஆளுகின்ற மகனே, என்று விளித்து,*

*'இந்த நதியின் பெருமையைச் சொல்லுவதென்றால், அது உன்னுடைய உயர்ந்த மரபின் பெருமையைத்தான் சொல்லுவதாயிருக்கும்; அயோத்தியில் வாழ்ந்து நிலவுலகை அரசுபுரிந்த உன் மூதாதையர்களான சக்கரவர்த்திகளுள் ஒருவன் சகரன்'*

என்று, கங்கையின் கதையைக் கேட்கச் சகரன் கதையைத் தொடங்குகிருர் விசுவாமித்திரர்.

சகரனுக்கு இருவர் மனைவியர். முதல் மனைவிக்குப் பெயர் கேசினி. அவள் விதர்ப்ப நாட்டிற் பிறந்தவள் ஆகையினுல், விதர்ப்பை எனவும் படுவள். இரண்டாவது மனைவி சுமதி. இவள் கருடனுக்குத் தங்கை. விதர்ப்பை வயிற்றில் பிறந்தவன் அசமஞ்சன். அவனுடைய புதல்வன் அஞ்சுமான். சுமதி வயிற்றிற் பிறந்தவர்கள் அறு பதினுயிரர் புதல்வர்கள். அவர்களுக்குச் சகரர் என்று பெயர். சகரன் புதல்வர் சகரர். அஞ்சுமான் சகரனுக்குப் பௌத்திரன்.

புத்திரப் பேற்ருற் சிறந்த சகரன் ஒரு அசுவமேத யாகஞ் செய்தான். யாகத்துக்குரிய அசுவம் வென்றிச் சின்னங்களுடன், அஞ்சுமானின் மேற்பார்வையில், திக்கு விஜயஞ் செய்தது. இதனை அறிந்த இந்திரன், அந்த அசுவத்தைக் களவு செய்துகொண்டு போய்ப் பாதாள உலகத்திலே தவஞ்செய்துகொண்டிருக்கின்ற கபில முனிவருக்குப் பின்புறத்தில் ஒளித்து வைத்திருந்தான். கபிலர் திருமாலின் அம்சமாயுள்ளவர். மகா தபசி. அவர் கோபித்து நோக்குவாராஞல், எதிரில் நிற்பவர்கள் சாம்பராய் விடுவார்கள். தவம் பிறராற் குழம்பாமல் அவர் பெற்ற வரப்பிரசாதம் அது. அசுவங் களவு போனதை அஞ்சுமான் அறியான். பூவுலகம் முழுவதுந் தேடினுன்; காணவில்லை. தந்தையின் தந்தையான சகரனிடம் வந்து முறையிட்டான். அதனைச் சகரன் அறுபதினுயிரஞ் சகரர்களுக்குஞ் சொன்னுன்.

கேட்ட வேந்தனும் மதலையர்க் கம்மொழி கிளத்தி
வாட்ட மீக்கொளச் சகரர்கள் வடவையின் மறுகி
நாட்டம் வெங்கனல் பொழிதர நானிலந் தடவித்
தோட்டு நுங்கினர் புவியினைப் பாதலந் தோன்ற.

சகரர்கள் வடவாமுகாக்கினி போலச் சீறி, அசுவத்தைத் தேடி எழுந்தார்கள்; பூமி முழுவதுந் தடவினுர்கள்.

புவியினைப் பாதலந் தோன்றத் தோட்டு நுங்கினர்

பூமியிற் காணுமையினல், பாதாளந் தோன்றும்படியாகப் பூமியைத் தோண்டித் தோண்டி உண்டார்கள். பாதாளந் தெரிந்தது. கபில முனிவருக்குப் பின்புறத்தில் அசுவத்தைக் கண்டார்கள். கண்டதும் முனிவர்மேற் சீறி எழுந்தார்கள்.

மூளும் வெஞ்சினத் தரூந்தலன் முனிந்தெரி விழிப்பப்
பூளை சூடிதன் நகையினில் எயில்பொடித் தனபோல்
ஆளும் மைந்தரா றயுதருஞ் சாம்பரா யவிந்தார்
வேள்வி கண்டநல் வேந்தனுக் குரைத்தனர் வேய்கள்.

பூளை சூடி - பூளைப் பூவைச் சூடிய சிவபெருமான். சிவபெருமான் முப்புரத்தை நோக்கிச் சிரித்தவாறு போலக், கபில முனிவர் சகரர்களைச் சினந்து நோக்கினுர். அத்தனை ஆயிரவர் சகரர்களும் சாம்பர் ஆயினர். இதனை அசுவமேத யாகந் தொடங்கிய சகரனுக்கு வேய்கள் சென்று கூறினுர்கள் வேய்கள் ஒற்றர்கள். சகரன் சகரர்களை இழந்து வருந்தினுன்; எடுத்த யாகத்தை முடிக்காமையினுல், அதற்கு மேலும் வருந்தினுன் அதனைக் கண்ட அஞ்சுமான் பாட்டனின் துயரை நீக்கக் கருதிப் பாதாளத்துக்குப் போய்க் கபிலரை வணங்கி வாழ்த்திக் குறையிரந்து நின்றுன். கபிலர் அவன் வேண்டுகைக்கு மகிழ்ந்து, அசுவத்தைக் கொண்டுபோகும்படி கட்டளையிட்டார். சகரன் அசுவங் கிடைக்கப்பெற்று மகிழ்ந்து, அசுவமேதத்தைப் பூர்த்தி செய்து, தேவர்களுக்கு அவியை நல்கினுன். யாகம் பூரணம் எய்தியது. அதன்மேல் தனது அரசுரிமையை அஞ்சுமானுக்குக் கொடுத்துவிட்டுச் சகரன் சுவர்க்கம் புக்கான் சகரர்கள் பூமியைத் தோண்டிய இடங்கள் நீர் பெருகிச் சாகரம் ஆயின. சாகரம் கடல். கடல் சூழ்ந்த உலகை அஞ்சுமான் ஆண்டுகொண்டிருந்தான்.

அஞ்சுமானின் புதல்வன் திலீபன். திலீபன் மகன் பகீரதன். அந்தப் பகிரதனை இந்தப் பாகீரதியாகிய கங்கைக்குத் தந்தையென்றே சொல்லலாம். பகிரதன் அரசுபுரிந்து கொண்டிருக்கின்ற காலத்திலே, முன்னேரான சகரர்கள் கபிலரின் சாபத்தால், நற்கதி பெறுமல், சாம்பர் மலையாய்க் குவிந்து கிடப்பதைக் கேள்விப்பட்டான். அவனுக்குத் தீராத மனக்கவலை உண்டானது.

**கொடிய மாமுனி வெகுளியின் மடிந்தவெங் குரவர்**
**முடிய நீணிர யத்தினில் அழுந்திடு முறைமை**
**கடியு மாறெனக் கருந்தவம் அமைகுறு கருமம்**
**அடிகள் சாற்றுக என்றலும் அந்தணன் அறைவான்.**

*கொடிய மாமுனி - கபிலமுனி. 'கபில முனிவரின் கோபாக்கினியால் வெந்து சாம்பராய் நிரயத்தில் அழுந்து கின்ற எனது முன்னோர், நற்கதிபெற்றுய்யும்படி, அரிய தவத்தை அடியேன் செய்தற்குரிய உபாயங்களை,*

**அடிகள் சாற்றுக என்றலும் அந்தணன் அறைவான்**

*'சுவாமிகள், கூறியருள வேண்டும்' என்று தனது குல குருவாகிய வசிஷ்ட முனிவரைப் பகிரதன் பிரார்த்திக்க, வசிட்ட முனிவர் கூறுகின்றார்.*

**வையம் ஆளுடை மன்னவர் மன்னவ மடிந்தோர்**
**உய்ய நீள்தவம் ஒழிவறு பகலெலாம் ஒருங்கே**
**செய்ய நாண்மலர்க் கிழவனை நோக்கிநீ செய்தி**
**ஐய என்றினிது உரைத்தனன் நவையறு முனிவன்.**

*நவையறு முனிவன் - வசிட்ட முனிவர் 'மன்னர்க்கு மன்னவனாகிய பகிரதனே, உன் மூதாதையர் நற்கதி பெறும் பொருட்டுப் பிரமதேவரை நோக்கி எல்லையில்லாத காலம் தவஞ்செய்வாயாக' என்று கூறியருளினார்.*

*பகிரதன் பதினாயிர வருஷ காலம் பிரமதேவரை நோக்கிக் கடுந்தவஞ் செய்தான். பிரமதேவர் தோன்றி,*

*'பகிரதனே, ஆகாய கங்கையைப் பூமிக்கு வருவித்து அப்புண்ணிய தீர்த்தத்தில் உனது முன்னோரின் சாம்பர் வடிவான என்புகளைப் படியும்படி செய்வாயானால், அவர்கள் நற்கதி பெறுவார்கள்'*

*என்று உபாயங் கூறியருளினார். அங்ஙனம் உபாயங் கூறிய பிரமதேவர், ஆகாய கங்கை பூமிக்கு இறங்குமானால் அதன் வேகத்தை இந்தப் பூமி தாங்கமாட்டாது; அதன் வேகத்தைத் தணித்தருளும் பொருட்டு,*

தோகை பாகனை நோக்கிநீ அருந்தவந் தொடங்கென்று
ஏகி ஞன்உல கனைத்துமெவ் வுயிர்களுமு ஈந்தான்.

'சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்' என்று மற்று மொரு உபாயமுங் கூறினர்.

பகிரதன் சிவபெருமானைத் தியானித்து மற்றும் ஒரு பதினாயிர வருஷம் தவஞ்செய்தான். சிவபெருமான் தோன்றிக் கங்கையின் வேகத்தைத் தணித்தருளுவோம் என்று வரங் கொடுத்தருளினர். பகிரதன் பிறகு ஐயாயிரம் வருஷம் கங்கையை நினைந்து தவஞ்செய்தான். கங்கை ஒரு பெண் வடிவில் தோன்றிப் 'பகிரதனே, சிவபெருமான் உனக்குத் தந்த வரம் விநோதமாயிருக்கின்றது. கங்கை வருமானல் அதன் வேகத்தைத் தணிப்பது அரிது. ஆகையால் இன்னுந் தவஞ் செய்' என்று கூறி மறைந்தது

கரந்தை மத்தமோடு எருக்கலர் கூவிளை கடுக்கை
நிரந்த பொற்சடை நின்மலக் கொழுந்தினை நினையா
அரந்தை யுற்றவன் இரண்டரை ஆயிரம் ஆண்டு
புரிந்து நற்றவம் பொலிதர வரையுறை புனிதன்.

வரையுறை புனிதன் - திருக்கைலாசபதி

எதிர்ந்து நின்னினை வெனௌன இறைஞ்சியெம் பெரும
அதிர்ந்து கங்கைஈ தறைந்தனள் என்றலும் அஞ்சல்
பிதிர்ந்தி டாவகை காத்தும்என் றேகிய பின்னை
முதிர்ந்த மாதவம் இரண்டரை ஆயிரம் முடித்தான்

பகிரதன் மேலும் இரண்டாயிரத்தைந்நூறு வருடம் சிவபெருமானை நோக்கியும் இரண்டாயிரத்தைந்நூறு வருடம் கங்கையை நோக்கியும் தவஞ்செய்தான். இங்ஙனமாக முப்பதினாயிரம் வருஷம் பகிரதன் தவப் பிரயத்தனஞ் செய்தான் பகிரதப் பிரயத்தனத்தினுல், ஒரு நாள், கங்கை பாகீரதி என்று பெயர் பெற்றுச் சுவர்க்கம் முதலிய மேலுல கங்களை அலைத்துக்கொண்டு கீழே இறங்கியது. சிவ பெருமான் தமது சடாமகுடத்தில் அந்தப் பாகீரதியைத் தாங்கியருளினர். பாகீரதி பனித்துளி மாத்திரையாய்

அச்சடையிற் புகுந்து கரந்தது. அதுகண்டு பகிரதன் திகைத்தான். சிவபெருமான் அபயஞ்செய்து, தமது சடா மகுடத்துள் மறைந்த கங்கையில் ஒரு சிறு துளியைப் பூமியில் விட்டு, அதனை அழைத்துச் செல்லும்படி திருவாய்மலர்ந் தருளினர் பகிரதன் வழிகாட்டப் பாகீரதி பிரவாகித்துச் செல்லாநின்றது. பகிரதன் விரைந்து செல்லப் பாகீரதியும் விரைந்து தொடர்ந்து வேகம் அதிகரிப்பதாயிற்று. அதனால் வழியில் சன்னு என்கின்ற தவசிரேட்டர் இயற்றிய வேள்வி யைப் பாகீரதி அழிவுசெய்துவிட்டது சன்னு வெகுண்டு பாகீரதியைத் தமது கையில் அடக்கி, அகத்தியர்போல ஆசமனஞ் செய்துவிட்டார். அது கண்ட பகிரதன், சன்னு முனிவரின் அடிகளில் வீழ்ந்து குறையிரந்தான். சன்னு பகிரதனுக்கு இரங்கிப் பாகீரதியைத் தங் காது வழியாக வெளியிட்டார். அதனால், பாகீரதி சன்னுவுக்குப் புத்திரி யாய்ச் சானவி என்கின்ற பெயரையும் பெற்றது பாகிரதி சானவி என்கின்ற பெயர்களைப் பெற்ற கங்கை, அப்பாற் பெருகி நடந்து, அறுபதினாயிரர் சகரர்களின் சாம்பர் மலையைத் தன்னகத் தடக்கிப் பிரவாகித்தது. சகரர்கள், தேவர்கள் எதிர்கொள்ளப் புண்ணிய லோகஞ் சென்றார்கள். பகிரதன் 'பகீரதப் பிரயத்தனம்' என்ற தொடரை வழங்க வைத்துத் தன் மனோரதம் முற்றி, அயோத்திமா நகரை அடைந்து அரசுவீற்றிருந்தான்.

இவ்வாறு கங்கையின் வரலாறு கூறும் முகமாக, ஸ்ரீராம இலக்குமணர்களின் முன்னோர் வரலாறுகளை விளக்கிப் பகிரதப் பிரயத்தனத்திற் கதை சொல்லி முடித்தார், விசுவாமித்திர முனிவர். இராம இலக்குமணர்கள், பாவங் களைக் கழுவுகிற புண்ணிய தீர்த்தமாகிய கங்காநதியை விழுந்து நமஸ்கரித்தார்கள்.

# 37 மிதிலைப் புறத்து வந்திருத்தார்

கங்கைக் கரையில் விசாலை என்று ஒரு நகரம் இருக்கின்றது. அந்த நகரத்துக்கூடாக, விசுவாமித்திரர் முதலிய மூவருஞ் செல்கின்றார்கள். அப்படிச் செல்கின்றவர்கள்,

> பள்ளி நீங்கிய பங்கயப் பழனநன் றுறை
> வெள்ள வான்கனை கனைவுறு கடைசியர் மிளிர்ந்த
> கள்ள வாள்நெடுங் கண்ணிழல் கயலெனக் கருதா
> அள்ளி நாணுறும் அகன்பணை விதேகநா டடைந்தார்.

விதேக நாடு மிதிலை நாடு, எனவும் படும். மிதிலைமா நகரத்தைத் தன்பாற் கொண்ட நாடு விதேக நாடு. சீதா பிராட்டிக்கு வைதேகி என்றும் ஒரு பெயர் வழங்குவதுண்டு அது விதேகநாட்டால் வந்த பெயர். ஸ்ரீராமலக்குமணர்கள் விதியின் விசேஷத்தால் விசுவாமித்திர முனிவரைத் தொடர்ந்து மிதிலையாகிய விதேக நாட்டுக்கு வந்துவிட்டார்கள், விதேக நாடு 'நாகிளங் கமுகில் வாளை தாவுறு கோசல நாட்'டுக்குச் சற்றேனும் இளைக்காதது.

'தண்டலை மயில்கள்' ஆடுகின்ற கோசல நாட்டு மருத நிலத்திலே

> பண்கள்வாய் மிழற்று மின்சொற் கடைசியர் பரந்து நீண்ட
> கண்கைகான் முகம்வா யொக்குங் களையலாற் களையிலாமை
> உண்கள்வார் கடைவாய் மள்ளர் களைகலா துலோபி நிற்பர்.
> பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர்
> பெற்றால்

என்றிங்ஙனங் கூறுமாறு மள்ளர்கள் களை களைகலாது உலோபி நிற்கின்ற செய்கைகளைப் பார்த்தவர்கள், சற்றே எட்டி, விதேக நாட்டு மள்ளர்களும் அவர் தங் காதற் கடைசியர்களும் உலோபி நில்லாது களை களைகின்ற செய்யுளைப் பார்ப்பார்களாக

**பள்ளி நீங்கிய பங்கயப் பழனநன் றுரை**

அதிகாலையிலே நாரைகள் வயல்களில் உள்ள தாமரைப் பள்ளிகளினின்றுந் துயில் எழுகின்றன. கோசல நாட்டிலே, 'சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால்' அன்னங்களுக்குரிய தாமரைப் பள்ளிகள், விதேக நாட்டில் நாரைகளுக்குரிய பள்ளிகளாயிருக்கின்றன நாரைகள் தாமரைப் பள்ளிகளினின்றுந் துயிலுணர்ந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு

**வெள்ள வான்களை களைவுறு கடைசியர் மிளிர்ந்த**
**கள்ள வாள்நெடுங் கண்ணிழல் கயலெனக் கருதா**
**அள்ளி நாணுறும்**

வயல்கள் தோறும் வெள்ளத்துள் நின்று களை களைகின்ற மள்ளப் பெண்களின் கள்ளங் குடிகொண்ட நீண்ட கண்களின் நிழலைத் தமக்கு இரையாகிப் பிறழ்கின்ற கயல் மீன்கள் என்று கருதி,

**அள்ளி**

கண்ணின் கயல் நிழலை நீருடன் நீண்ட அலகுகளால் அள்ளி.

**நாணுறும்**

இரை வாராமே, முன்னும் முன்னும் அறிந்துவைத்தும், பின்னும் பின்னும் ஏமாந்து போவதை எண்ணி எண்ணிப் பெரிதும் வெட்கம் அடையும்.

சேலுண்ட ஒண்கணார் போலச் செங்காலன்னங்கள் தலையெடுத்துத் திரிகின்ற நாடு கோசலநாடு. அவ்வாறு தலையெடுக்காமல், சேலையே உண்ணுமல் நாரைகளே நாணந் தலைக்கொள்ளுகின்ற நாடு விதேக நாடு இந்நாட்டின்

சிறப்புக், களை களைகின்ற பெண்களின் கண்களோடமைந்து விடவில்லை. அங்கே ஆண்களுங் களை களைகின்றார்கள். ஆண்கள் களைந்ததொரு களை. அவர்கள் காதலைக் களைந்து அவர்களுக்குக் களை செய்வதை நோக்கும்போது, ஆண்கள் 'களைகலாது வாளா உலாவி நிற்றல்தான்' நன்று என்று கூட ஒரு எண்ணந் தோன்றுகின்றது. விதேக நாட்டு மள்ளர்கள் களை களையப்போய், அடாது செய்து பாவம்! படாத பாடு படுகின்றார்கள். அந்தப் பாவத்தைப் பார்ப்பது பாவம்! எனினும் பார்த்துச் சற்றே கண்ணீர் வடிப் போமாக.

**பட்ட வாணுதன் மங்கையர் பார்ப்பெனுந் தூதால்**
**எட்ட ஆதரித் துழல்பவர் இதயங்கள் கொதிப்ப**
**வட்ட நாண்மரை மலரின்மேல் வயலிடை மள்ளர்**
**கட்ட காவியங் கட்கடை கழிப்பன கழனி.**

மள்ளர் வயலிடை கட்ட காவி - மள்ளர்கள் வயல்களிற் களைந்த காவி மலர்கள், வட்ட நாண்மரை மலரின்மேல் அம் கட் கடை - வட்ட வடிவமான அன்றலர்ந்த தாமரைப் புஷ்பங்களின்மீது இடப்பட்டு அழகிய கடைக்கண் போன்று கண் சிமிட்டுகின்றன. அஃதாவது தாமரை மலர்கள், கண் பெற்று மகளிர் முகமாய் மிளிர்கின்றன இந்தச் சந்தர்ப் பத்தில் காவியோடு கூடிய தாமரைகளாகிய மகளிர் முகங் களைத் தம்பக்கலிற் படைத்துக் கொண்ட மள்ளர்கள், தூரத்தே களை களைகின்ற கடைசியர்களின் காதலை ஆதரித் துழல்பவர்களாயு மிருக்கின்றார்கள். அங்ஙனம் ஆதரித்துழல்ப வர்களுக்கு ஒரு சமயம்,

பட்ட வாள் நுதல் மங்கையர் - பட்டத்தை அணிந்த ஒளி பொருந்திய நுதலினையுடைய கடைசியர்களாகிய மங்கையர்கள்.

பார்ப்பு எனுந் தூதால் - மள்ளர்களின் பார்வை என் கின்ற தூதினால்,

எட்ட

சற்றே வசப்பட்டு, மள்ளர்களுக்கு எட்டத்தக்க நிலையை அடைய,

**மரை மலரின்மேற் கட்ட காவியங் கட்கடை கழிப்ப**

அந்த மள்ளர்கள் களைந்து தாமரை மலர்மேல் இட்ட காவிகள் மகளிர் முகத்துக் கடைக்கண்ணுற் சற்றே சிறக் கணித்து, மள்ளர்களின் கண்ணுக்கெட்டிய காதலைக் கைக் கெட்டாதபடி புறச்கணித்து விடுகின்றன களைந்த களைக ளாகிய காவிகள், களையாத தாமரைகளில் உறங்கிக் கிடந்து தம்மைக் களைந்த மள்ளர்களின் காதலையும் களைந்து அவர் களைக் களைக்க வைத்துச் சக்களத்திப் போராட்டம் ஒன்று நடத்திவிடுகின்றன. இப்படிப்பட்ட கழனிகள் விதேக நாட்டுக் கழனிகள்.

**காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த**
**பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டு**

கின்ற கோசல நாட்டுப் பண்ணைகளுக்குச் சிறிதேனும் இளைக்காதவைகள் அவைகள்.

**தூவி யன்னந்தன் னினமென்று நடைகண்டு தொடரும்**
**கூவு மென்குயிற் குதலையர் குடைந்ததண் புனல்வாய்**
**ஓவில் குங்குமச் சுவடுற ஒன்றொடொன் றூடிப்**
**பூவு றங்கினும் புள்ளுறங் காதன பொய்கை.**

மிதிலைநாட்டுக் கழனிகளில் ஆங்காங்குத் தாமரைப் பொய்கைகள் மிளிர்கின்றன. அவற்றுள் ஒரு பொய்கை இது. குயில்போன்ற குதலை மொழியினையுடைய பெண்க ளிடம் நடை பயிலும்பொருட்டு அன்னங்கள் தொடரு கின்றன. பெண்கள் அந்த அன்னங்கள் வாழுகின்ற தாமரைப் பொய்கைகளிற் குடைகின்றார்கள் அதனாற் குங் குமக் குழம்பு நீரிற் பரவ, அன்னம் முதலிய பறவைகள் குங்குமச் சுவ்டு உறுகின்றன. நிற வேறுபாட்டாலும் வேற்று வாசனையினாலும், பறவைகள் தங்களுள் ஊடி, இராப் பொழுதினும் உறங்காது ஒலி செய்கின்றன. இங்ஙனமாசப்

'பூவுறங்கினும் புள்ளுறங் காதன பொய்கை'கள் மிதிலை நாட்டுப் பொய்கைகள்.

இனைய நாட்டினில் இனிதுசென்று இஞ்சிசூழ் மிதிலை
புனையு நீள்கொடிப் புரிசையின் புறத்துவந் திறுத்தார்

இத்துணைச் சிறந்த வளநாடாகிய மிதிலை நாட்டில்,

இனிது சென்று

ஐம்புலங்கட்கும் இனிமை செய்துகொண்டு விசுவாமித்திரரை முன்னிட்டுச் செல்லுகின்றார்கள் இராம இலக்குமணர்கள். அப்படிச் செல்லுகின்றவர்களுக்கு மிதிலைமா நகரத்து மதிலிற் கட்டப்பட்ட அழகிய நீண்டகொடி தோன்றுகின்றது; மதிலுக்கு அண்மையில் வந்துவிட்டார்கள். அங்ஙனம் வந்தவர்கள்,

கனையும் மேட்டுயர் கருங்கல்லோர் வெள்ளிடைக் கண்டார்

மிதிலை மதிலை அணுகுதற் கிடையில், வழியில், ஒரு வெளியில், அற்புதமானதொரு கருங்கல், செறிவு பெற்றதொரு மேடாய் உயர்ந்து நிற்பதைக் கண்டார்கள்.

# 38 காலவண்ணம் இங்குக் கண்டேன்

கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்

*　　　*　　　*

**பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.**

கற்பென்னுந் திண்மை திண்ணிது. அதன் திண்மைக்கு ஒப்புச் சொல்லுதற்கு வைரித்த தொன்று உலகத்தில் இல்லை. கற்புத் திண்மை திண்ணனாரின் அன்புத் திண்மை போன்றது. திண்ணனார் திருமேனி போன்றது கருங்கல் கற்புத் திண்மைக்கு நாமறிந்த உலகில் கருங்கல்லை ஒருவாறு ஒப்புச் சொல்லலாம். மழை வெயில்களைத் தாங்கி இருந்தபடி இருக்கவல்லது கருங்கல். இருத்தல், இருத்தல் நிமித்தம் இவைகளைக் கற்பாகிய முல்லை ஒழுக்கம் என்கின்றது அகத் தமிழிலக்கணம். என்றும் ஒரேபடித்தாய் அசைவு சிறிது மின்றித் திடமாகக் காத்திருப்பது முல்லையாகிய கற்பு; அது எதற்கும் அசையாத கருங்கல் அப்படிப்பட்ட அசையாத கருங்கல்லுத்தானே, அன்றிக் கற்புத் திண்மைதானே எதிரில் தவஞ்செய்வார் நிலையில் ஒரு உருவந் தோன்று கின்றது. மாசில்லாத தூய வெளியிடம் ஒன்றிலேதான் அது தோன்றுகின்றது. அந்தத் தூய வெளியிடம், ஆங்கே சென்ற விசுவாமித்திரர் உள்ளிட்ட மூவரின் தூய இருதய கமலங்கள் தாமோ அன்றி எதிரில் வருவதொரு இடைவெளி வழிதானோ ஆர் அறிவார்! மூவரும்.

கருங்கல் ஓர் வெள்ளிடைக் கண்டார்

ஒரு சமயம அநுமான், நான்,

நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்;
இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப
தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்

என்றான்

அநுமான் தான் ஒருவனாய் இருந்துகொண்டே இலங்கா புரியில் மூன்று பொருள்கள் களிநடம் புரியக் கண்டேன் என்றான். இங்கே காணுகிறவர்கள் மூவராயிருந்துகொண்டே ஒரு பொருள் திண்ணிதாய் எதற்கும் அசைவின்றி நிற்பதைக் கண்டார்கள்

முன்னொருநாள் நளாயினியின் திருநா ஒருதரம் அசைய உலகமே அசையாமல் அப்படியே நின்றது. இன்று இந்தக் கருங்கல் தன் நாவை அசைக்காமையால், உலகம் அசையத் தான் அசையாமல் நிற்கின்றது. நளாயினிக்கும் இந்தத் திண்ணிய கருங்கல்லுக்கும் இவ்வளவே வேறுபாடு

நளாயினி அடுத்த பிறப்பில் ஐவர்கள் தன் தேகத்தைத் தீண்டவும் தான், தீண்டாத கற்பிற் செழுந்திரு வாயினாள் 'ஐம்புலங்கள்போல் ஐவரும் பதிகளாகவும் இன்னும், 'வேறொருவன்' தன் பெருங் கொழுநன் ஆவதற்கு உருகி, அந்த ஒருவனைப் பற்றி, இரண்டகம் இன்றி, ஒரகத்திருப்பாள் ஆயினாள் அந்தத் திரௌபதிக்குச் சற்றும் இளைக்காமலே, எந்தத் திரௌபதிக்குங் கற்பின் திண்மைக்கு முன்மாதிரியாயிருப்பது இந்தத் தவக் கருங்கல். கற்பின் திண்மைக்கு இந்தப் பூமியில் இந்தக் கல்லுக்கு ஒப்பது இந்தக் கல்லே இதற்கு ஒப்பதொன்று காண விரும்பினால், அண்ணாந்து ஆகாயத்தில் வசிட்டருக்கு அயலிடத்தைத் தான் நோக்க வேண்டும். இந்தத் தவக் கருங்கல்லின் கற்பின் திண்மைக்கு ஒப்பது, அருந்ததியின் கற்பின் திண்மை ஒன்றுதான் மகாபாரதத்தில், ஐவரும் பதிகளாகவும் திரௌபதி, 'வசிட்டன் நல்லற மனைவியே அனையாள்' எனக்

கற்பின் திண்மையால் அருந்ததியை ஒக்கின்றாள். இராமாயணத்திலே கற்பின் திண்மைக்கு அருந்ததியை ஒப்புச் சொல்லக்கூடியதொரு வஸ்து இருந்தால் அது இந்தத் தவக்கருங்கல்லுத்தான். முனிவர்கோவுந் தேவர் கோவுமாகிய இருகோக்கள், தன்னைத் தீண்டவும் ஆவுரிஞ்சு கல்போல் தான் எந்தக் கோவையுந் தீண்டாதே. கோக்களின் கோவான ஒரு கோவையேபற்றி, இரண்டகமின்றி, ஓரகத்தே அந்த ஒருவனையே இருத்தி. அசைவின்றி நிற்கின்றது அந்தக் கல். அப்படிப்பட்ட தவப் பெருங் கல்லை, முன்னைத் தவ விசேஷம் போலும, மூவரில் காகுத்தனாகிய ஸ்ரீராமன் தன் கண்கள் நிறையக் கண்டான்.

> **கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ**
> **உண்ட பேதைமை மயக்கற வேறுபட் டுருவங்**
> **கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்**
> **பண்டை வண்ணமாய் நின்றனள்;.........**

> **கண்ட கன்மிசைக் காகுத்தன் கழல்துகள் கதுவ,**
> **பண்டை வண்ணமாய் நின்றனள்.**

ஸ்ரீராமன் எதிரில் அவன் கண்ணிறையக் கண்ட கருங் கல்மீது, அவனுடைய பாத தூளி தீண்டியது தீண்டமுன், அக்கல் பழைமையாகிய ஒரு பெண் வடிவத்தைக் கொண்டு நின்றது.

**மெய்யுணர்பவன்**

மெய்யுணர்வோனாகிய ஒரு தத்துவ ஞானி 'கழல் கூடிய தொப்ப நின்றது.'

ஈசுவரனுடைய திருவடியை அடைந்த நிலையை ஒப்ப, அந்தக் கல்லு மற்றொரு நிலையை அடைந்து நின்றது.

**உண்ட பேதைமை மயக்கற**

தத்துவஞானி தத்துவஞானந் தலைக்கூட, முன் அவனை விழுங்கி நின்ற அறியாமை மயக்கம் கழல் கூடியதால் நீங்க,

வேறுபட்டு உருவங் கொண்டு (நிற்பது) ஒப்ப நின்றனள்

முற்றிலும் வடிவம் வேறுபட்டு, ஈசுவர உருவங் கொண்டு, அத்தத்துவ ஞானி நிற்பதை ஒப்ப, அந்தக் கருங்கல் ஸ்ரீராமன் கழல் துகள் கதுவ, முற்றிலும் வேறுபட்டு நின்றது.

இனி,

மெய்யுணர்பு - ஒரு பக்குவாத்மா மெய்ம்மையாகிய செம் பொருளை உணர்ந்து, அவன் கழல் கூடிய தொப்ப - இறைவன் கழலைத் தலைக்கூடியதை ஒப்ப, கண்ட கல் - ஸ்ரீராமனின் திருநோக்கம் பட்ட கல்லானது, மிசை - தன்பால், காகுத்தன் கழல் துகள் கதுவ - அந்தச் சீராமனின் பாத தூளி தீண்ட, உருவம் வேறுபட்டுக்கொண்டு, நின்றது - தன்னுருவம் வேறுபட்டுக் கழற்றுகள் விசேஷத்தால் ஒரு பெண் வடிவாய் நின்றது.

உண்ட பேதைமை மயக்கற - உலகமானது தன்னை விழுங்கிய பேதமையாகிய மயக்கம் போய் விழிப்படைய,

பண்டை வண்ணமாய் நின்றனள் - உலக மயக்கத்தால் கருங்கல்லாய் நின்றது. இப்பொழுது உலக மயக்கம் நீங்கப் பழையதாகிய பரிசுத்தமான பெண்வடிவாய் நின்றது.

திரௌபதிக்கு ஐம்புலங்கள்போல் ஐவர் பதிகளாவ தெப்படியென்று உலகம் ஒரு காலத்தில் மயக்கமுற்றிருந்தது. திரௌபதியின் ஒன்றான அகத்தில் எவன் ஒருவன் குடி கொண்டிருந்தானோ, அவன் அருஞ் சந்தர்ப்பத்தில் அவள் துகிலை வளர்வித்தும், ஒன்றாத நெல்லிக்கனியை ஒன்றச் செய்தும், உலக மயக்கத்தைத் துகள்செய்தான். அவன் அன்றொருநாட் செய்தவாறே, இன்று காகுத்தனாகிய இராமன், அந்தக் கற்பின் திண்மையாகிய கருங்கல்மீது, 'இருவர் இதன் பதிக ளாவ தெப்படி!' என்றுண்டான உலகத்தின் பேதைமையாகிய மயக்கத்தை,

'அக்கல்லின் அகத்திருப்பவன் யானே. அது ஒருவனைப் பற்றி ஓரகம் உடையது'

என்று தெளிவு செய்வானாய்த், தன் பாதத்தால் அம் மயக்கத்தைத் துகள் செய்தான், ஆயினன்.

* * *

பிராணநாயகனைக் காத்துத் தவமிருப்பது முல்லையொழுக்கம்; அதுதான் கற்பின் திண்மை; கருங்கல்லுத் தன்மை. காத்திருந்தவனது கழல் கூடியவழிப் பரிசன வேதியால் இரும்பு செம்பொன் ஆவதுபோல், அந்தக் கருங்கல் பொன் மயமான பெண்வடிவாயது.

* * *

மாமுனி பணிப்பான்

மகா முனிவராகிய விசுவாமித்திர முனிவர் பெண் வடிவான அந்தக் கருங்கல்லின் வரலாற்றைக் கூறுவாராயினர்.

'ஓ இராமனே, கேட்பாயாக. இந்தப் பெண்ணின் பெயர் அகலிகை. பெண்ணுலகிலே ஐவர் பெண்கள் பஞ்ச கன்னிகைகள் என்று போற்றப்படுகின்றனர்கள். அவர்கள் தீண்டாத கற்புடைய செழுந்திருக்கள். அவர்கள், எவன் என்றும் ஒருவனுயிருக்கின்றனோ அவனையே தீண்டுபவர்கள். கர்ம விசேஷத்தால் தமது தேகத்தைத் தீண்டுங் கணவர்களைத் தீண்டாமலே தீண்டுபவர்கள்; ஒருவனைப் பற்றி ஓரகத்திருப்பவர்கள்; புறநடையானவர்கள். அவர்களுடைய திருநாமத்தை உச்சரிப்பதால் உலகம் பாவத்தைக் கழுவிக்கொள்கிறது. 'அகல்யா திரௌபதா' என்று அப்பஞ்ச கன்னிகைகளின் திருநாமங்கள் தொடங்கும். உலக மாதாவாகிய உமாதேவியை நித்திய கன்னிகை என்பார்கள். அவ்வாறே இவர்களும் கணவர்களோடு கூடிய வழியுங் கணவர்களைக் கூடாத கன்னிகைகளே. அக்கன்னிகைகளில் முதற்கண்வைத் தெண்ணப்படுங் கன்னிகை அகலிகை.

இக்கன்னிகையின் கற்பின் திண்மையை உள்ளபடி அறிந்தவர் கௌதமர்; அவரே இப்பெண்ணின் கணவன் அடுத்தபடி அறியக்கூடியவர்கள் வான்மீகி முதலிய முனி

புங்கவர்களே. திரிலோகங்களில் யார்தான் இக்கற்பின் திண்மையை அறிய வல்லவர்! உலகம் தனக்கு எட்டாததால் அகலிகையை ஐயுற்று மயங்கியது. அம்மயக்கம் உன் கழல் வண்ணத்தால் இன்று துகளாயது; இதற்கு மகிழுகின்ற அறிவுலகத்தில், முதன்மை வாய்ந்தவராய் இருக்கும் ஒருவர் இருந்தால் அவர் கௌதமரேயாவர்'

என்று அப்பெண்ணின் பெருமை பேசி,

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து

என்ற அருமைத் திருக்குறளையும் ஞாபகஞ் செய்தார் விசுவாமித்திரர்.

அதனைக் கேட்ட ஸ்ரீராமன், இன்னமுந் துகளத்தனையா யினும் ஐயம் இருந்தால் அதனையுந் தூளி செய்வானாய்த் தன்னை அகத்தே வணங்கி நின்ற அகலிகையைப் புறத்தே கரகமலங்கள் கூப்பி வணங்குவானாயினன். இந்த நில உலகத்திலே ஸ்ரீராமன் திருக்கரங் கூப்பி வணங்கிய ஒரு நித்திய சுமங்கலி அகலிகை.

அகலிகையை வணங்கி நின்ற ஸ்ரீராமன் கருணைப் பிரவாகத்தைக் கண்ட விசுவாமித்திரர் அகலிகை கதையை அவ்வளவில் நிறுத்தி,

இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்

என்று இராமனைப் புகழ்வார் ஆயினர்.

★

ஆசீர்வாதம் அச்சகம்,
50, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்.
யாழ்ப்பாணம்